உலகத் தமிழாராய்ச்சிக் கருத்தரங்கு

International Seminar of Tamil Studies

கட்டுரைச்சுருக்கம்

Abstracts

T13013

R003L07

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
சென்னை-600 113

உலகத் தமிழாராய்ச்சிக் கருத்தரங்கு

International Seminar of Tamil Studies

கட்டுரைச்சுருக்கம்

Abstracts

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
சென்னை-600 113

மாமண்டூர் நரசமங்கலம் குடைவரைகள்-சில புதிய செய்திகள்

காஞ்சிபுரம் வந்தவாசி நெடுஞ்சாலையில் காஞ்சிபுரத்திலிருந்து பதினொரு கிலோ மீட்டர் தொலைவில் செய்யாறு வட்டத்தில் அமைந்துள்ளது மாமண்டூர். செங்கற்பட்டு மதுராந்தகம் பெருவழியிலுள்ள மாமண்டூரிலிருந்து பிரித்தறியப் படுவதற்காக இதைத் தூசி மாமண்டூர் என்கின்றனர். இம் மாமண்டூரில் சிவன் கோயிலொன்றும் பெருமாள் கோயிலொன்றும் பெருவழிப் பாதையின் வல, இடப் புறங்களில் அமைந்துள்ளன.

மாமண்டூரிலிருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது நரசமங்கலம். பெருவழிப் பாதையின் இடப்புறத்தே நடப்பட்டிருக்கும் ஊர்ப் பெயர் சொல்லும் கல்லுக்கு மேற்கில் பிரியும் மண் சாலை ஊரையடைந்ததும் இரண்டாகப் பிரிகிறது. இடப்பிரிவு வயல்களைச் சுற்றிக் கொண்டு பல்லவர் குடைவரைகள் குடையப்பட்டுள்ள குன்றுத் தொடர் நோக்கிச் செல்கிறது. சரிந்தும் உயர்ந்தும் ஆங்காங்கே தரையைத் தொட்டுச் சமநிலை எய்தியும் நீண்டு கிடக்கும் இக்குன்றுத் தொடரின் வடபுறம் அடுத்தடுத்த நிலையில் இரண்டு குடைவரைகளும், தென்புறம் சற்றுத் தள்ளிய நிலையில் இரண்டு குடைவரைகளும் குடையப்பட்டுள்ளன. மூன்றாம் குடைவரை (வடபுறமிருந்து) அமைந்திருக்கும் குன்றுப் பகுதியின் உச்சியில் ஒரு கட்டுமானக் கோயிலும் அதற்குச் சற்று தள்ளி வடபுறத்தே சிறிய அளவிலான மற்றொரு கட்டுமானக் கோயிலும் உள்ளன.

தென் வடலாக எழுந்து நிற்கும் குன்றுத்தொடரின் பின் புறத்தே பரந்து விரிந்து கிடக்கிறது சித்ரமேகத் தடாகம். முதலாம் மகேந்திரவர்மரால் உருவாக்கப்பட்ட இப்பேரேரி பின்னாளில், கி.பி.1638 இல் வெங்கடப்ப நாயக்கரால் அவர் தந்தை சென்னப்ப நாயக்கரின் நினைவாக விரிவு செய்யப்பட்டுச் 'சென்ன சாகரம்' என்று பெயரிடப்பட்டதையும் கிழக்கில் குன்றையொட்டி மேலும் கரை நீட்டிக்கப் பெற்று வலுப்படுத்தப்பட்டதையும்

சாகரக் கரையிலுள்ள கல்வெட்டுகள் எடுத்துரைக்கின்றன.

இந்நாளைய வருவாய்த்துறைப் பதிவேடுகள் இங்குள்ள நான்கு குடைவரைகளையும் மாமண்டூர், நரசமங்கலம் என்னும் இரண்டு ஊர்களுக்குச் சமமாகப் பங்கிட்டுப் பிரித்தாலும் அந்நாளில் இவை அனைத்துமே நரசிங்கமங்கலத்திற்குள் (இந்நாளைய நரசமங்கலம்) அடைக்கலமாகியிருந்ததை முதலிரண்டு குடைவரைகளிலுள்ள கல்வெட்டுகளும் மலைமேற் கோயிலுள்ள கல்வெட்டுகளும் தெளிவாக்குகின்றன. இருந்த போதும் அறிஞர்கள் இக்குடைவரைகளைப் பற்றி எழுதும் போது ஏனோ இவற்றை மாமண்டூர்க் குடைவரைகள் என்றே சுட்டுகின்றனர்.

மாமண்டூர், நரசமங்கலம் குடைவரைகள் பல வகைகளில் சிறப்புடையவை. பல்லவப் பாண்டியர் குடைவரைகளில் ஒரே குன்றுத் தொடரில் தொடர்ந்தாற்போல் அடுத்தடுத்து நான்கு குடைவரைகள் அமையப் பெற்ற ஒரே இடமாக இப்பகுதியைக் கொள்ளலாம். இந்நான்கு குடைவரைகளும் ஏறத்தாழ சம காலத்தவை என்றாலும் அமைப்பு முறையில் ஒன்றுக்கொன்று மாறுபடுகின்றன. இவற்றுள் மூன்று வழிபாட்டில் இருந்தவை. ஒன்று முழுமையடையாமல் அரை குறையாக நின்று போன பணி. நான்கில் முதலாவதில் மட்டும்தான் ஒரு கருவறை. இரண்டாவதிலும் நான்காவதிலும் மூன்று கருவறைகள். மூன்றாம் குடைவரையோ ஒன்பது கருவறைகளுடன் தமிழகத்தின் தனித்ததொரு அதிசயமாய் நிற்கிறது. இந்தக் குடைவரையின் அமைப்பே அலாதி. பல்லவர் கைவண்ணத்தில் எழுந்த இந்த நான்கையும் கட்டடம், சிற்பம், கல்வெட்டு என்ற தலைப்புகளின் கீழ் ஆராய்ந்தபோது பல புதிய செய்திகள் கிடைக்கப்பெற்றன.

மலை மேலுள்ள கற்றளிகளுள் ஒன்று சிவன் கோயில். மற்றொன்று பைரவர் கோயில். சிவன் கோயிலின் தாங்குதளத்தில் மூன்று கல்வெட்டுகள் உள்ளன. ஊரொன்றை விற்பனை செய்த தகவலை முதற்கல்வெட்டும் அந்த விற்பனைத் தொகையைப் பங்கீடு செய்து கொண்ட விபரத்தை இரண்டாம் கல்வெட்டும் எடுத்துரைக்கின்றன. இவ்விரண்டு

கல்வெட்டுகளையும் இரண்டு வேறுபட்ட கால்கட்டங்களில் படியெடுத்திருக்கும் கல்வெட்டுத் துறையினர் ஒன்றின் பாடத்தையும் மற்றொன்றின் சுருக்கத்தையும் பதிப்பித்து இரண்டுமே அரை குறையான கல்வெட்டுகள் என்று தெரிவித்துள்ளனர். ஆனால் இரண்டுமே முழுமையான கல்வெட்டுகளாகும்.

இக்குடைவரைகள், கற்றளிகள், இங்குள்ள கல்வெட்டுகள் பற்றி எழுதியுள்ள அறிஞர்களின் எழுத்துரைகள் ஒப்பாய்வு செய்யப்பட்டு உண்மை நிலைகள் விரிவாக எடுத்துரைக்கப் பட்டுள்ளன.

அர. அகிலா,

மதிப்புறு கல்வெட்டாய்வர்,

டாக்டர் இரா.கலைக்கோவன்,

இயக்குநர்,

டாக்டர் மா.இராஜமாணிக்கனார்

வரலாற்றாய்வு மையம்,

48, புத்தூர் நெடுஞ்சாலை, திருச்சிராப்பள்ளி -620 017.

காலடி ஓசையிலே குறுங்காப்பியத்தில் சூழலியல் ஆன்மீகம்

கிறித்துவத்துறவி அருள்பணியாளர், ஜான் பிரிட்டோ தமிழில் எழுதியுள்ள தழுவல் குறுங்காப்பியம் 'காலடி ஓசையிலே'. சூழலியல் அறிவியலை இந்நூல் கருப்பொருளாகக் கொண்டுள்ளது; மூல நூல் , 'The Great chief sends word' ஆங்கிலத்தில் அமைந்திருக்கிறது. இதன் ஆசிரியர் பெர்னார்டு ஆபே என்பவரும் ஒரு மலைவாழ் துறவியே. இருவரது படைப்பிலுமே உயிர்ச்சூழல் பிரச்சினையை மனித நேயத்துடன் அணுகியுள்ள மனப்பண்பைக் காண முடிகிறது.

பிரேசில் நாட்டு ரியோ நகரில் சூழலியல் உச்சி மாநாடு

1992இல் நடைபெற்றது. அது முடிந்த பின்னர் அமைந்த பின்புலத்தில் 'காலடி ஓசையிலே' வெளிவந்தது. உயிர்ச் சூழல் வாழ்வுக்குரிய சொந்தமண் பறிக்கப்படுகிறபோது செவ்விந்தியப் பழங்குடித் தலைவரான தளபதி எதிர்ப்புக் காட்டிய நிகழ்வு கி.பி.19 தொடக்கத்தில் வரலாற்றில் இடம் பெற்றது. இதனைப் பதிவு செய்கிற இக்குறுங்காப்பியத்தை ஒரு கலைப் பார்வை நோக்கிலும், சூழல் இறையியல் பார்வை நோக்கிலும், இவ்வாய்வுக்கட்டுரை சமகால மனிதருக்குத் தேவையான கண்ணோட்டமாக முன்வைக்க முயற்சி செய்கிறது.

அமெரிக்காவின் வடமேற்கு எல்லைப்புறக்காடுகளில் சுதந்திர மனிதர்களாக வாழ்ந்தவர்கள் செவ்விந்தியப் பழங்குடியினர். ஆனால் அமெரிக்க எல்லைப் புறங்களில் புதுவழிகளைத் திறப்பதற்காகச் செவ்விந்தியர்கள் வாழ்ந்து வந்த இடங்களை விலைபேசுமாறு அமெரிக்க உள்ளாட்சித்துறை ஆணையர் மேநார்டு ஆணையிட்டார். மூதாதையர் வாழ்ந்த மண்ணைத் தெய்வமாக மதித்து வந்த செவ்விந்திய பழங் குடியினர், தளபதி சீத்தல் அமெரிக்கரின் மண்ணாசைப் பேரத்திற்கு உடன்பட வில்லை.

43 ஆண்டுகள் அந்த மக்களின் தன்னிகரற்ற தளபதியாக இருந்துவந்த அவர் தக்க மறுமொழியை அனுப்புகிறார். அவரது பதிலுரையிலே பழங்குடியினரது வாழ்வின் சாரம் எது? என்கிற தேடலுக்கான விடை இருக்கிறது. அதிலே ஓர் ஆன்மீகம் இழையோடுகிறது. மண்வாசனையுடன் கலந்த கலாச்சாரம் மணக்கிறது.

காலடி ஓசையிலே குறுங்காப்பியப் படைப்பாளர் ஜான் பிரிட்டோ அடிகள் ஒரு கிறித்துவத்துறவி. இதனால், இவரது படைப்பு ''பூமி இறைவனின் கொடை'' என்கிற மேலை ஐரோப் பியச்சமயச் சூழலின் ஆன்மீகப் போக்கும், ''மண்ணே பழங்குடி மனிதருக்குத் தெய்வம்'' என்கிற ஆன்மீக நோக்கும் ஒன்று கலக்கின்ற கலை ஏரியாகப் டாவியம் புது நடை போடுகிறது.

தமிழ்ப் பண்பாட்டுச் சூழலுக்கேற்றபடி படைப்பாளர்

தமிழ்த்தழுவலை ஆக்கியுள்ளார். அவரது கலைத்திறனில் 'காலடி ஓசையிலே' ஒரு மொழிபெயர்ப்பு ஆக்கம் என்கிற எண்ணத்தை ஏற்படுத்துவதே இல்லை. இந்தக் குறுங்காப்பியம், நிகழ்காலத் தலைமுறையும் வருங்காலத் தலைமுறையும் புதிய தடம் காண வேண்டிய சூழலியல் ஆன்மீக நெறியை உருவாக்க முனைகிறது. அனைத்துலக மனிதருக்கும் உரியது இந்தப் பூமி! இதன் வளம்! வளர்ச்சி! பாதுகாப்பு! எல்லாம்.

முனைவர் அ.அந்தோணி குருசு,
தூயவளனார் கல்லூரி,
திருச்சி-620 002

மார்க்கோ போலோ கண்ட தமிழகம்

மார்க்கோ போலோ என்னும் வெனிசு நாட்டு வணிகர் சீன மன்னர் குபிலாய் கானின் அரசுப் பணி தொடர்பாகப் பதின் மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழகத்துக்கு வந்தவர்.

தமிழகத்தில் தாம் கண்டதையும் கேட்டறிந்ததையும் தமது நூலில் குறித்துள்ளார். அவரது குறிப்புகள் அன்றையத் தமிழக மன்னரின் செல்வம், ஆட்சி முறை, சட்டங்கள் போன்ற வற்றையும், தமிழக மக்களின் வாழ்க்கை முறை, தொழில், மூட நம்பிக்கைகள் ஆகியவற்றையும் தெரிவிக்கின்றன.

தென்பாண்டி நாட்டுத் தலையாய தொழிலாகிய முத்துக் குளித்தல் காரணமாக அந்நாட்டில் செல்வம் கொழித்ததையும், முத்துக்குளித்தல் எங்கு எவ்வாறு நடைபெற்றது என்பதையும் அவர் விளக்கியுள்ளார்.

பிராமணர்கள் நேர்மையும் நியாய உணர்வும் மிக்க வணிகர்க ளாகவும் மந்திரம் மாயம் குறி கூறல், சாமுத்திரிகம் முதலிய கலைகளில் வல்லவர்களாகவும் விளங்கியதை அவரது நூல் விளக்குகிறது.

தமிழ் மக்களிடையே அரிசி உணவு உண்ணுதலும் வெற்றிலை மெல்லுதலும் வழக்கில் இருந்தன. ஆனால் மாட்டிறைச்சி உண்ணுதல் பாவமாகக் கருதப்பட்டது. தமிழ் மக்களுள் 'காவி' இனத்தவர் மட்டுமே மாட்டிறைச்சி உண்ணும் வழக்கமுடையவர்கள். அவர்களும் மாட்டினைக் கொல்வ தில்லை. இயற்கையாகவோ விபத்திலோ இறந்த மாடுகளை மட்டுமே அவர்கள் உண்பர். பிற விலங்குகளையும் அன்றைய தமிழர் கொல்வதில்லை. பிறர் கொன்று கொடுத்தால் உண்ணும் வழக்கம் மட்டுமே இருந்தது.

சகுனம், சாத்திரம், சோதிடம் ஆகியவை அன்று மக்களிடையே பரவியிருந்தன.

அன்றைய மாபார் (தமிழ்) நாட்டின் பெரிய, மிகச் சிறந்த துறைமுகமாகக் 'காயல்' விளங்கியது. அரேபியா, பாரசீக நாட்டுத் துறைமுகங்கவிலிருந்து வரும் கப்பல்கள் காயல் துறைமுகத்துக்கு வருவது வழக்கம். எண்ணிறந்த அயல் நாட்டு வணிகர்களும் காயல் துறைமுகத்துக்கு வருவது வழக்கம்.

அன்றைய காயல் துறைமுகம் இன்று 'பழைய காயல்' என்னும் சிற்றூராகச் சுருங்கிவிட்டது. அங்குக் கிடைக்கும் சீன பீங்கான் துண்டுகளும் காசுகளும் சீனா, அரேபியா, ஐரோப்பா ஆகிய நாடுகளுடன் காயல் துறைமுகம் தொடர்பு கொண்டிருந்ததை மெய்ப்பிக்கின்றன.

அமுதன் அடிகள்,
தமிழ் இலக்கிய மையம்,
49, பாரதியார் சாலை,
திருச்சி-620 001.

ஆழ்வார்கள் காட்டும் பண்பாடு

'பண்பாடு' என்பது மக்களது வாழ்க்கை முறையைப் பற்றியது. அது சமுதாயத்தில் வழிவழியாக வழங்கிவரும்

சிந்தனைகளையும், ஒழுகலாறுகளையும், அன்றைய நிலையிலான எண்ணங்களையும் உள்வாங்கிய தொகுப்பாகும். அது வாழ்க்கை பற்றிய உள்ளார்ந்த தகவுகள், நம்பிக்கைகள் முதலிய மாந்தர்நலம் பாதுகாக்க அமைந்த மதிப்பீடுகளை உள்ளடக்கியது. இப்பண்பாடு உயிர் சார் மரபில் வழங்காமல் கற்றல் நிலையில் அமையும் மரபுவழியாக ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லப்படும். இப்பண்பாட்டின் உட்கூறுகளை அறிவதால் மனிதகுலத்தின் வாழ்வியல் அமைவையும், அதற்கான காரணங்களையும் அறியலாம். இப்படிப்பட்ட பண்பாடு, இறையனுபூதியாளர்களாலும், ஆன்றோர்களாலும், சான்றோர்களாலும் எழுத்து வழியாகவும், தொண்டின் மூலமாகவும் வளர அரிய பல கருத்துக்களை முன்வைத்துச் சென்றுள்ளனர். இப்பின்னணியில் பார்க்கும்பொழுது, கி.பி.3 முதல் 9-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் வாழ்ந்த பன்னிரு ஆழ்வார்கள், 'நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம்' என்னும் வைணவ பக்தி இலக்கியத்தின் மூலம் தென்னக 'இறைமைப் பண்பாட்டிற்கு' தக்க அடித்தளம் அமைத்துச் சென்றுள்ளனர். இப்பெருமைமிகு நாலாயிரத் திவ்வியபிரபந்தத்தில் விரவியிருக்கும் அகச்சான்றுகளை ஆராய்வதன் மூலம்,ஆழ்வார்கள் முழுமைபெற்ற பண்பாடு பற்றி கொண்ட கருத்துக்கள் பெறப்படுகின்றன. ஈண்டு அவை சுருக்கமாக ஆராயப் பெறுகின்றன. மக்கள் அன்பின் அடிப்படையில் அமையும் இறைவாழ்க்கை வாழ்ந்தமை,

"எந்தை தந்தை தந்தைதம் மூத்தப்பன் ஏழ்படி கால்தொடங்கி
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம்" (திருமொழி.6)

என்ற அடிகளின் வழி அறியப் பெறுகிறது.

மக்கள் நலத்திற்கு வேண்டிய, அனைவரும் ஏற்கும் செயல்களையே செய்து இல்லாதவர்களுக்கு இருப்பவர்கள் மனமுவந்து 'வருவிருந்து பார்த்து செல்விருந்து ஓம்பும்' நிலையில் ஈயும் பண்புடன் வாழ்ந்தமை,

"செய்யா தனசெய்யோம், தீக்குறளை சென்றோதோம்

ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி

உய்யுமா றெண்ணி யுகந்தேலோ ரெம்பாவாய்''

(திருப்பாவை.2)

என்ற அடிகளால் தெளியப்பெறுகிறது.

சமுதாயம் இறைவனை முன்னிறுத்தி, சான்றோர்களும் ஆன்றோர்களும் ஏற்கும் பொருளாதார வழிமுறைகளைப் பின்பற்றியே செல்வம் ஈட்டி, 'செல்வம் என்பது சிந்தையின் நிறைவு' என்பதன் வழி வாழ்ந்தமை,

''அறிந்தறிந்து வாமனன் அடியினை வணங்கினால்

செறிந்தெழுந்த ஞானமொடு செல்வமும் நிறைந்திடும்''

(திருச்சந்தவிருத்தம். 74)

என்ற அமுதவாக்கால் உணரப்படுகிறது. மனிதர்களிடத்து ஏற்றத்தாழ்வுகள் இல்லாமல் 'இறைவன் முன் அனைவரும் ஓர் குலமே' என்று வாழ்வாங்கு வாழ்ந்தமை,

''இழிகுலத் தவர்களேனும் எம்மடியார்களாகில்

தொழுமின், கொடுமின், கொள்மின்''

(திருமாலை.42)

என்ற நீதிவாக்கால் நினைக்கப்படுகிறது.

சமுதாயம், 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்று தொண்டுள்ளம் கொண்டு மகேசன் தொண்டில் இன்பங்கொண்டு ஒன்றுபட்டமை,

''நும்மைத் தொழுதோம் நுந்தம்பணி செய்திருக்கும் நும்ம்டியோம்

இம்மைக்கின்பம் பெற்றோம்''

(பெரிய திருமொழி.4:9:1)

என்ற அடிகளின் வழி புலனாகிறது.

தீயபயப்பவற்றை ஒதுக்கி நல்லவற்றையே நாடி இறையடி

அடைந்தமை.

"உய்ந்து போந்தென் உலப்பிலாத வெந்தீவினைகள் நாசஞ்
செய்து உன தந்தமில் அடிமை அடைந்தேன்"

(திருவாய்மொழி. 2:6:5)

என்ற அருள்வாக்கால் அறியக்கிடக்கிறது.

பிறர்பொருளை நாடாது, தமது உழைப்பால் பொருள்ஈட்டி மனிதனை மனிதனாக மதித்து உயர்வாழ்க்கையைக் கைக் கொண்டமை,

"நயவேன் பிறர்பொருளை நள்ளேன் கீழாரொடு
உயவேன் உயர்ந்தவரோ டல்லால்"

(முதல் திருவந்தாதி.64)

என்ற பனுவலால் கொள்ளப்படுகிறது.

எம்பெருமான் நினைவு எக்காலமும் இருந்திட, மனைவி மக்களொடு இல்லறம் நடாத்தி அறத்தின்பால் பட்ட வாழ்க் கையே 'வாழ்க்கை' என்ற பேருண்மையைச் சமுதாயத்திற்கு காட்டிச் சென்றமை,

"இல்லறம் இல்லேல் துறவறம்இல்' என்னும்
சொல்லறம் அல்லனவும் சொல்லல்ல-நல்லறம்
ஆவனவும் நால்வேத மாத்தவமும் நாரணனே"

(நான்முகன் திருவந்தாதி.72)

என்ற மெய்யான வாக்கிலிருந்து பெறப்படுகிறது.

ஆக, பன்னிரு ஆழ்வார்கள், அன்பு, அருள், ஈகை, சமநோக்கு, உழைப்பு, இல்லறவாழ்க்கை முதலிய உயர்பண்புகளை உள்ளடக்கியப் பண்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்தனர். இத்தகு பண்பாடு, இன்றைய அறிவியல் வளர்ச்சியால் தடம்பிறழாமல் நிலைநிறுத்தி உயர்நிலைக்கு இட்டுச் செல்ல

ஒவ்வொருவரும் தன்னிலையில் முயலுதல் வேண்டும். அதனால் தனிமனிதன் பண்பட்டுச் சமுதாயம் முழுமைபெறும்.

முனைவர் ஜெ.அரங்கசாமி,
விரிவுரையாளர், தத்துவ மையம்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்-613 005.

பாரதியார் கவிதைகளில் தேசியப் பார்வை

தேசமும் தேசியமும்

நிலவுடைமைச் சமூகத்தில் தேசம்- தேசத்தின் அடையாளங்கள்-மொழி-சமயம்-பண்பாடு. முதலாளியச் சமூக அமைப்பில் தேசம்-தேசியத்தின் தோற்றம், அடையாளங்கள் மொழி, இனம், நிலவியல், பொருளியல், அரசியல், பண்பாட்டியல் அடையாளங்கள். ஐரோப்பாவில் தோன்றிய மறுமலர்ச்சி இயக்கம் சீர்திருத்த இயக்கம்-தொழில் புரட்சி-அரசியல் புரட்சி-தேசிய வரையறைகள்-தேசிய இனங்களின் மீளாக்கம் மறுமலர்ச்சி. பயன்படு பழமை. வல்லரசு நாடுகளில் தேசியம். காலனி நாடுகளில் தேசியம்.

சமயமும் தேசியமும்

விடுதலை இயக்கம்- வங்கத்தில் - ஆரிய சமாஜம் பிரம்ம சமாஜம்-மதச் சீர்திருத்த இயக்கங்களின் சமூகத் தேவை. இந்து மத வழிப்பட்ட தேசியம். வருணாசிரம அடிப்படை-பார்ப்பன சமூகத்தின் நெருக்கடியும் தீர்வும்- மக்களாட்சி மரபு- புதிய வரலாற்று சமூகச் சூழலுக்கேற்ப மாற்றம் தவிர்க்க முடியாதது. மேல்சாதியும் மதச் சீர்திருத்தமும்.

தமிழகச் சூழலில் பாரதியின் தோற்றம்

பாரதி காலச் சமூகச் சவால்களும் எதிர்வினைகளும்- பயன்படு

பழமை-புத்துணர்வுக்குப் பாலமாதல் பார்ப்பனியத்தின் தலைமை-இன வழியில் - மொழி நிலையில்-மதப்பிடியில் அரசியல் களத்தில், பண்பாட்டு தளத்தில், சமஸ்கிருதமய மாக்கலும் பார்ப்பனமயமாக்கலும் சமூக நிகழ்வாதல் காலனி ஏகாதிபத்திய எதிர்ப்பில் சமூக நிகழ்வில் சலனங்கள், ஒற்றுமை யின் தேவை. சாதிமத ஆதிக்க எதிர்ப்பு உள்ளடக்கம். பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல.

இந்தியாவும் பாரதமும்

ஆங்கிலேய ஆட்சியின் நோக்கும்- விடுதலை இயக்கத்தின் போக்கும். பாரதியின் பார்வை மத வழிப்பட்ட பார்வையாகத் தோற்றம் கொள்ளும் சமூகச் சூழல். அடையாளங்கள். ஆரிய இனம், ஆரிய நாடு, ஆரிய பூமி- எல்லைகள்- பழம்பெருமைகள். அந்நிய ஆட்சியை எதிர்க்க ஆரிய அடையாளமே அடிப்படையா தல். மகாபாரதம்-இராமாயணம்-பாஞ்சாலி சபதம்- வேதம்- உபநிடதம் - பாத்திரங்கள் வழியே தேசியப் பார்வையின் தோற்ற மும் வளர்ச்சியும். இந்து மத மறுமலர்ச்சி பாரதம் - பாரத ராணி- பாரத தேவி-பாரத மாதா-பாரத நாடு- பாரத சமுதாயம் - மதச்சார் பும் மதச்சார்பின்மையும் இரட்டைத் தேசியம் - பாரதமும் இந்தியாவும்- மண்ணின் மைந்தர். இதிகாசப் பாத்திரங்கள் வழியே பாரத தேசியம். வேத உபநிடதங்கள் வழியே பாரத தேசியம். பெருந் தெய்வங்கள் மூலம் பாரத தேசியம். கங்கை, காசி - மதச் சடங்குகள் வழியே பாரத தேசியம். புராணங்கள் சாத்திரங்கள்- முன்னோர் வழியே தேசியப் பார்வை முழுமை அடைதல்.

மத வழிப்பட்ட தேசியப் பார்வை

மத வழிப்பட்ட தேசியத்தின் தேவையும் தேவை நிறைவும். மொழி வழிப்பட்ட தேசியத்தின் தேவை. மக்களாட்சி- சமதர்மம்- போன்றவற்றிற்கு மதச் சார்பின்மையும் மொழி இன ஆதிக்கமின்மையும் வழித்தடங்கள் ஆதல். பாரதியின் தேசியப் பார்வை பன்முகத் தன்மை அடைதல். அக முரண்பாடும் புற முரண்பாடும், பாரதியின் அனுபவ தளம் விரிவடைய காங்கிரஸ்

மாநாட்டு படிப்பினைகள் - எதிர்காலப் பார்வை - ஆதிக்கம் அற்ற சூழலே அகண்ட பாரதத்துக்கு அடிப்படையாதல். பாரதியின் தீர்வு.

மதவழிப்பட்ட தேசியம் மொழி வழிப்பட்ட தேசியம் ஆதல்

அரசியல் விடுதலைக்குப்பின் சமூக விடுதலை. அடிப் படைகள். இந்திய தேசியம் வாழ மொழி வழித் தேசியப் பார்வையை முன்மொழிதல். உயிர்ப்பெற்ற தமிழர் பாட்டு-பழையன கழிதல்-மறு விசாரணைகள்- புதிய தீர்ப்புகள். ஒற்றைத் தேசியம் பன்முகத் தேசியமாகப் பரிணாம வளர்ச்சி பெறுதல்.

ப.அரங்கநாதன்,
தமிழ் விரிவுரையாளர்,
அரசு கலைக்கல்லூரி,
கோயம்பத்தூர்-641 018.

தற்கால இலக்கியத்தில் இருகிளைப் போக்குகள்

இந்திய விடுதலைப் போராட்டம்-இந்திய மறுமலர்ச்சியின் ஓரங்கமே தமிழக மறுமலர்ச்சி இயக்கம். முதல் விடுதலைப் போரில் பங்கேற்றவை அனைத்துத் தேசிய இன, சமய, மொழி சார்ந்த மாநிலங்கள். சலுகையும் உரிமையும்- தனித்த நிலையில் சலுகை பொது நிலையில் உரிமை. பகை முரண்பாடு (சாதி மதம்) நட்பு முரண்பாடு ஆதல். செப்பு மொழி பதினெட்டுகளிலும் இந்திய இலக்கியம் விடுதலை என்ற ஒரு சிந்தனையுடன் தோன்றுதல். அனைத்துச் சாதி மத மொழி இன ஒற்றுமை விடுதலைக்கு முன் நிபந்தனை ஆதல்.

இந்திய இலக்கியத்தின் இருவிழிகள் வங்க தேசியமும் தமிழ்த் தேசியமும். ஆளும் அதிகாரக் கருத்தியல் எதிர்கொண்ட புதிய வரலாற்றுச் சூழல்- அதற்குத்தக தன்னை உள்ளும் புறமும்

மாற்றிக் கொள்ள மறுமலர்ச்சி மற்றும் சீர்திருத்தக் கருத்துக்களை ஏற்றல்-புதிய உத்தி-எல்லோரும் இந்துக்கள்-எல்லோரும் இந்தியர். முரண்பாடுகளின் அணுகுமுறைகளில் மாற்றம். சாதிய நிலவுடைமை - ஆதிக்கக் கருத்தியல்- வண்ண ஒழுக்கம். பார்ப்பனர்-பார்ப்பனர் அல்லாதார் தோற்றம். பாரதியின் உட்கிடக்கை.

பேராயக் கட்சியும் சாதிமத முரண்பாட்டு முன்னுரிமைகளும் அம்பேத்கார், பெரியார் பார்ப்பனக் கருத்தியலுக்கு எதிர்ப்பு-தன்மான இயக்கம்- தொடக்க கால விதைகள்-வள்ளலார், பாரதியாரின் முன் நிபந்தனைகள்- துரைத்தனம் நீங்க - அய்யர் ஆதிக்கம் அகல,இந்திய தேசியம் நிலைக்க தமிழ்த் தேசியம் வாழ - பார்ப்பன விடுதலை நிலைக்க பறையர் விடுதலை வாழ-பெண் விடுதலை நிலைக்க ஆண் ஆதிக்கம் அகல-பாரதியும் மக்களாட்சி மரபுகளும் சாதி, வண்ணம், சமயம் - பால் சமத்துவம்- இந்திய இலக்கியம்-மக்களாட்சி இலக்கியம்.

பாரதிக்குப்பின் பேராயக்கட்சி-முரண்பாடுகள்-புதிய பார்ப்பன எதிர்ப்பு இயக்கங்கள் தோன்றுதல். (தென்னிந்திய நல உரிமைச்சங்கம், நீதிக் கட்சி, சுயமரியாதை இயக்கம்) நீதிக் கட்சி அறிக்கை-பார்ப்பனர்-பார்ப்பனர் அல்லாதார் அரசியல் பார்வைகள் கூர்மைப்படுதல். கே.கே.பிள்ளை-பெ.சு.மணி, வ.கீதா, எஸ்.வி.இராசதுரை கருத்துகள். ஹோம் ரூல் இயக்கமும் அன்னிபெசண்டும். பார்ப்பனர் அல்லாதாரின் தமிழ்த் தேசிய அரசியல் சமுதாய வரலாற்று உள்ளடக்கமாதல், இந்திய தேசிய வளர்ச்சி தமிழகத்தில் பின்னடைவு தோன்றுதல்.

ஏட்டறிந்த வரலாற்றில் பார்ப்பனர் பார்ப்பனர் அல்லாதார் பார்வைகள்-படைப்பிலக்கியங்களின் அடிப்படையாதல். ஆளும் கருத்தியலும் எதிர் கருத்தியலும். வைதிகச் சமயக் கொள்கைகளுக்கு எதிராகத் தமிழ்ச் சமணம்- தமிழ் பௌத்தம். இதன்-தொடர்ச்சியாகத் தமிழர் சமயம்-தமிழ்ச்சைவம், தமிழ் வைணவமாக வளர்நிலை அடைதல். வள்ளுவர்- இளங்கோ-சாத்தனார்-சேக்கிழார்-கம்பர்-காட்டும் பொதுமைப் பார்வை-பரிமேல் அழகர் மற்றும் உரை ஆசிரியர்களின் உரைகளில் வெளிப்படும் இரு கிளைப் போக்குகள் தமிழர் படைப்பிலக்கிய

நெறிக்கு எதிரானது பார்ப்பனர் இலக்கிய நெறி. தமிழ்ப் படைப்பிலக்கிய நெறியின் தாக்கத்தால் வடகலை தென்கலை என தமிழ்ப் பார்ப்பனியம் இரு கிளைகளாகப் பிரிதல், வடமொழி வேதத்திற்கு மாற்றாக நாலாயிரத்திவ்வியபிரபந்தம் தமிழ் வேதமாதல்.

இருபதாம் நூற்றாண்டில் பாரதி படைப்புகளில் இருகிளைப் போக்குகளின் அடையாளங்கள். பாரதி தமிழர் இலக்கியக் கோட்பாட்டை (சாதி சமயச் சார்பற்ற கோட்பாட்டை) ஏற்றல். பாரதிதாசன் தமிழ் இலக்கியத்தைத் தமிழ்த்தேசிய இலக்கியம் ஆக்குதல். தொடர்ந்து அண்ணா, புதுமைப்பித்தன், மு.வ. போன்றோர் தமிழர் இலக்கியத்தைப் படைத்தல்.

பார்ப்பனியக் கலை இலக்கியப் படைப்புகளில் சோதனை கள். கல்விப் பரவலும் தமிழ் அதிகாரத்திற்கான இயக்கப் போக்கும்-ஒன்றின் தொடர் விளைவாதல்.

மாறியுள்ள சூழலில் பார்ப்பனப் படைப்பாளிகளின் நிலைப் பாடுகள்-தயக்கமும் மயக்கமும் - பாரதியின் பண்பாட்டு அரசி யலை மறுத்த படைப்பிலக்கிய முயற்சிகள். அரசியல் அற்ற வாழ்வும் படைப்பும். குடும்ப உறவுகள் பற்றிய படைப்புகள். புதுமைப்பித்தனின் ஆளுமை.

சாதிய நிலவுடைமையை எதிர்க்கும் தமிழர் அரசியல் பார்வை-அண்ணாவின் புதினம்-நாடகம்-அரசியல் கடிதங்கள். அண்ணாவின் மறுமலர்ச்சிப் படைப்புகள்-பார்ப்பனிய படைப் புக்கு எதிரான படைப்புகள். மொழியில் அழகும் கவர்ச்சி யும்-உரைநடை இலக்கியத்தில் மக்கள் மனதில் படிந்த தாழ்வு மனப்பான்மையைப் போக்கும் நடை. திராவிடர் இலக்கியம் தமிழ்த்தேசிய இலக்கியம் ஆதல்- மூன்றாம் உலக இலக்கியத் தின் முதல் அடையாளம் தேசிய இனச் சார்பு என்ற உண்மை வெளிப்படுதல்.

பார்ப்பனப் படைப்பாளிகளின் நடுநிலைப் போக்கு- அரசியல் மௌனம்-பார்ப்பனர்களின் பெரும் வணிக

இதழ்களின் போக்கு பொழுதுபோக்கு என்ற உத்தியைப் பின்பற்றி அரசியல் பார்வையை மழுங்கடித்தல். இந்திய தேசியத்தை உயர்த்திப் பிடித்தல். வ.ரா.வும் மணிக்கொடியும், கல்கியும்- கல்கி வாரிசுகளும், திராவிட இயக்க முன்னோட்டிக ளும் சிறு பத்திரிகை இயக்கமும்.

பார்ப்பனப் படைப்பாளிகள் லா.ச.ரா., தி.ஜானகிராமன், அசோகமித்திரன்-சுந்தர ராமசாமி-படைப்புகளில் குடும்பம் மையமாதல் நாடு காணாமல் போதல். எரியும் பிரச்சினைகளை எழுதாமல் தவிர்த்தல்-அந்நியமாதல். தனிமனிதவாதப் படைப்புகள்.

வானம்பாடிகள்-கவிதை, இயக்கம்-தமிழ்க் கவிதைக்குச் சமூக உள்ளடக்கத்தைத் தருதல். எழுத்து கசடதபற கவிதைகள்-உள்முகமான-மௌனவாசிப்புக்கு உரியவை.

தற்கால படைப்புகளில் (நாடகம்) ஜெயந்தன், பிரபஞ்சன், ஞாநி-யின் பங்களிப்புகள் தமிழர் பார்வையை ஆழப்படுத்தியுள்ளன. ந.முத்துசாமியின் எதிர்மறைப் படைப்புகள். இடதுசாரி எழுத்தாளர்களில் பொன்னீலனின் நிலைபாடு மாற்றம் பெற்று வருதல். தமிழ்ப் படைப்பாளிகளின் படைப்புகளில் தமிழர் நோக்கின் ஆளுமை-புதிய பார்ப்பனப் படைப்பாளிகளின் 'கலை கலைக்காக'ப் பார்வை. பெண் விடுதலை, தலித் விடுதலை, தேசிய இன விடுதலை. தமிழ்ப் படைப்பின் அடையாளம் ஆதல். இதற்கு எதிரான படைப்புகள் மற்றொரு கிளையின் படைப்புகள் என ஆய்வாளர் ஏற்றல்-முடிவுரை.

முனைவர் சு.அரங்கராசன்,

(அக்கினி புத்திரன்)

தமிழ் விரிவுரையாளர்,

அரசு கலைக் கல்லூரி,

கோயம்புத்தூர்-641018.

தமிழ் இலக்கிய உருவாக்கத்தில் வானொலி ஊடகத்தின் பங்கு(1938-1952)

படைப்பாளிக்கும், படைப்பு வெளிவரும் ஊடகத்திற்கும் நெருக்கமான உறவு உண்டு. படைப்பு சென்றடைதல் என்பதின் மூலம், படைப்பிற்கான அங்கீகாரம் என்பதை அறிய முடியும். இதில் ஊடகத்திற்கான அரசியல் தன்மை அடங்கியுள்ளது.

தமிழில் புனைகதைகள் உருவாக்கத்திற்கும்-அச்சு ஊடகத்திற்குமான உறவு ஆழமானது. இவ்வகையில் 1930களின் இறுதியில் தமிழகத்தில் செயல்படத் தொடங்கிய வானொலி ஊடகத்திற்கும், தமிழ் இலக்கிய உருவாக்கத்திற்குமான உறவு ஆழமானது. இத்தன்மை இதுவரை மதிப்பீடு செய்யப்பட வில்லை. அப்பணியைச் செய்யும் நோக்கத்துடன் இக்கட்டுரை எழுதப்படுகிறது.

எழுத்தாளர் வ.ரா. அவர்களுக்குப் பலதரப்புகளிலிருந்தும் எழுதப்பட்ட கடிதங்கள், ஆவணப்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திரு.வ.ரா. அவர்களுக்குச் சென்னை, திருச்சி ஆகிய வானொலி நிலையங்களிலிருந்து 1938-1951 முடிய எழுதப்பட்ட கடிதங்கள் கிடைத்துள்ளன. இக்கடிதங்களில் காணப்படும் தகவல்கள், அன்றைய வானொலி ஊடகத்தில் தமிழ் இலக்கியம் தொடர்பாக நடைபெற்றவைகளைக் காட்டுவதாக உள்ளன. இந்த அடிப்படைத் தரவைக் கொண்டு, மேற்குறிப்பிட்ட பொருளில் ஆய்வுக் கட்டுரையை உருவாக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

1930களின் இறுதி முதல் 1950களின் தொடக்கம் வரை தமிழில் சிறப்பான படைப்பிலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டிருந்த படைப்பாளிகள் அனைவரும் வானொலி ஊடகத்தில், தங்கள் படைப்புக்களை ஒலி பரப்பியுள்ளனர். அவை அச்சு வடிவத்திலும் வெளி வந்துள்ளன. நாடகங்கள், சொற்பொழிவுகள், நூல் மதிப்புரைகள் என்ற பல கூறுகளில் அவை ஒலிபரப்பப்பட்டன. இவை தமிழ் இலக்கிய உருவாக்கத்தில் பெறும் இடத்தை

மதிப்பீடு செய்வது அவசியம்.

வ.ரா.முயற்சியால், பல தமிழ்ப் படைப்பாளிகள், வானொலி ஊடகத்தில் பங்கு கொண்டதை அறிய முடிகிறது. (வ.ரா.வுக்கு வந்த கடிதங்களின் குறிப்புகள்) வ.ரா.வும் தொடர்ச்சியாக வானொலி ஊடகத்தைப் பயன்படுத்தி, தனது படைப்புகளை வெளியிட்டார். இந்தப் பின்புலத்தில் வானொலி ஊடக வழியாக நமக்குக் கீழ்க்கண்டவர்களின் படைப்புகள், குறிப்பாக, நாடகங்கள் அச்சு வடிவத்தில் கிடைக்கின்றன.

புதுமைப்பித்தன், அழகிரிசாமி, வல்லிக்கண்ணன், தொ.மு. சி.ரகுநாதன், சி.சு.செல்லப்பா, தி.ஜானகிராமன் போன்ற பலர். மேற்குறித்த காலகட்ட தமிழ் இலக்கிய உருவாக்கத்தில், மேற்குறிப்பிட்ட படைப்பாளிகளின் வானொலி ஊடகப் பங்களிப்பை மதிப்பீடு செய்வது அவசியம். அப்பணி இக்கட்டுரையில் மேற்கொள்ளப்படும்.

முனைவர் வீ.அரசு,

விரிவுரையாளர்,

தமிழ் இலக்கியத்துறை,

சென்னைப் பல்கலைக்கழகம்,

சென்னை-5.

புதை குழிகள்

மனிதனின் இறந்த உடல்களை அடக்கம் செய்கின்ற புதைகுழிகளின் வடிவத்தைக் குறித்து இக்கட்டுரை ஆய்வு செய்கிறது. நூல்கள் முதன்மைத் தரவுகளாகவும், கள ஆய்வுச் செய்திகள் இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் தரப்பட்டுள்ளன. மனிதன் ஓரிடத்தில் நிலையாக வாழத் தொடங்கிய கால முதல் இன்றும் வழக்கிலுள்ள செய்திகள் சில ஒப்பிடப்பட்டுள்ளன. ஆய்வின் சுருக்கம் கருதி 'மெகலித்திக்' என்றழைக்கப்படும் பெருங்கற்கால மனித வாழ்க்கை முறை மட்டும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. தொல்லியல் (Archealogy) தரவுகளை

மானிடவியலோடு ஒப்பிட்டு இன்று வழக்கிலிருக்கும் சமூகப் பிரச்சினையுடன் உறவுப்படுத்துவதே இக்கட்டுரையின் மையமாக அமைகிறது.

பெருங்கற்காலத்தைக் குறித்த வரலாறு கல் அமைப்புகளிலிருந்தும் அவற்றின் அடியிலிருந்த எலும்புக் கூடுகளிலிருந்தும் மற்றும் பிற பொருட்களிலிருந்தும் உயர்த்துணரப் பட்டன. எனவே, இங்குப் பிற தரவுகளைவிட புதைகுழி முக்கியமாகக் கருதப்பட்டதால் அவற்றைக் குறித்த தேவையான பிறநாட்டுச் சான்றுகள் எடுத்தாளப்படுகின்றன.

முந்தைய ஆய்வுகள்

இந்தியாவில் குறிப்பாக வட மாநிலங்களில் அதிகமான பெருங்கற்காலப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தமிழ் நாட்டில் ஒரு சில இடங்களில் மட்டுமே அகழ்வாய்வுகள் நிகழ்த்தப்பட்டன. தொல்லியலாளர்களும், வரலாற்றறிஞர்களும் அகழ்வாய்வில் கிடைத்த தரவுகளை அறிக்கைகளாகச் சமர்ப்பித்துள்ளனர். கிடைத்த தரவுகளைப் பண்பாட்டுடன் இணைத்து அதிகமாக ஆய்வு செய்யப்படவில்லை. இவற்றைக் குறித்த முயற்சிகள் இங்கு விளக்கப்படும்.

ஆவி உலகச் சிந்தனை

உயிருள்ள பொருட்களும், உயிரற்ற பொருட்களும் ஓர் ஆன்மா (Soul) கொண்டிருக்கின்றன என்பதே ஆவி உலகக் கோட்பாட்டின் அடிப்படையாகும் (பிரேசர்). ஆதி மனிதன் இந்தச் சிந்தனையின் அடிப்படையில் உடல் இறந்த பின்பும் உயிர் இறப்பதில்லை என்ற நம்பிக்கையில் பல்வேறு செயல்களை மேற்கொண்டுள்ளான். அவற்றுள் ஒன்றாக இறந்த ஆவி, மீண்டும் தன் இனத்தை அழித்து விடக் கூடாது என்ற பயத்தின் அடிப்படையில் அதிக எடையுள்ள, பாரம்கொண்ட கல்லைப் (பெரிய பாறை) புதை குழியில் வைத்துள்ளான். இந்த கருத்துப் பிரேசரின் கோட்பாட்டடிப்படையில் நின்று விளக்கப்படும்.

திசை பற்றிய கருத்து

சாதிய அமைப்பிற்கு மனுசாஸ்திரம் முக்கியமான நூலாக அமைந்துள்ளது. இன்று இந்தியாவில் குறிப்பாகத் தமிழ் நாட்டில் உள்ள சாதிய அமைப்பு முறை மனித வரலாற்றின் துவக்கத்தில் இருந்திருக்க முடியும். எனினும் பெருங்கற்காலப் புதைகுழிகளின் திசைபெருங்கற்காலப் புதைகுழிகளின் திசைகள் சாதிய அமைப்பைக் குறித்த ஊக, ஐயத்தை ஏற்படுத்துவதாய் அமைந்துள்ளது.

சமகாலத்தில் இருக்கும் சாதிய ஏற்றத்தாழ்வுகள் தமிழ்நாடு முழுவதும் ஒரே சீராக வளர்ந்திருக்க முடியாது. இடத்திற்கு இடம் ஓரளவு வேறுபாட்டுடனேயே பரிணமித்திருக்கும். இவை மட்டுமின்றி வரலாறு மற்றும் தொல்லியலாளர்களின் தரவுகள் போதுமானதாய் இல்லை. குழப்பமுடையதாக உள்ளன என்ற முடிவுகள் மேலும் பல விரிவான ஆய்வுக்கு இட்டுச் செல்கிறது. அவை மட்டுமின்றிப் பெருங்கற்காலப் பண்பாடு மகாராஷ்டிராவிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்தடைந்தது என்றும் மஹாராஷ்டிராவிற்குப் பாரசீகப் பகுதியிலிருந்து பரவியது என்றும் விளக்கப்படும் இடப்பெயர்ச்சிக் கோட்பாடும் காலத்திற்குப் பொருத்தமானதல்ல. இந்தப் பெருங்கற்கால மனிதனின் பண்பாட்டை 20-ஆம் நூற்றாண்டு மனிதனோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது அறிவியலில் முன்னேற்றம் அடைந்திருப்பினும் சடங்கு மற்றும் நம்பிக்கைகளில் கற்கால மனிதனிடமிருந்து அதிக அளவு விடைபெறாமல் இருப்பதையும் அறிய முடிகிறது.

சு.அரிராமன்,

ஆய்வாளர்,

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,

சென்னை-600 113.

இராமலிங்கரின் படைப்புகளில் உயிர் இரக்கக் கொள்கைகள்

1.இராமலிங்கரின் வாழ்வும் பணியும்

பிறப்பு தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டம் மருதூர் (5.10.1823)- தொடக்க நிலையில் சென்னை வாழ்க்கை- இலக்கியங்கள் படைத்தல்-திருவருட்பாப் பாடல்களைப் பாடித் தலவழிபாடு இயற்றல்- இறுதியில் தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டச் சிற்றூர்களைப் புகலிடமாகக் கொள்ளல் -சமரச சுத்த சன்மார்க்க நெறிகளைப் பரப்பி அவற்றை நடைமுறைப் படுத்தல்- நிறுவனங்களை ஏற்படுத்தல் - 1874 இல் மறைந்ததாகக் கூறும் செய்தி.

2. இலக்கியப் படைப்புகள்

திருவருட்பாப் பாடல்கள் - தனிப்பாடல்கள் - உரைநடைகள் வரைதல் - இவை தமக்காகவும் பிறருக்காவும் எழுதப்பெற்றவை - படைப்புகளில் எண்ண வளர்ச்சி நிலைகள்.

3. இராமலிங்கரின் சமரச சுத்த சன்மார்க்கக் கொள்கைகள்

சமரச சுத்த சன்மார்க்கக் கொள்கைகளைத் தாமும் கடைப் பிடித்து ஏனையோர்க்கும் புகட்டல். இவை வருமாறு:

1. சமய மதங்களைக் கண்மூடித் தனமாகப் பின்பற்றாமை

2. இறைவனை ஒளி வடிவில் வழிபடல்

3. ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்தல்

4. மனைவியை இழந்தோர் மறுமணம் செய்து கொள்ளாமை

5. அணிகலன்கள் அணியாமை.

6. பெண்கள் கணவனை இழந்தாலும் மங்கல அணியை கழற்றாமல்அணிந்திருத்தல்.

7. உயிர் இரக்க உணர்வு கொள்ளல்

8. ஒருமைப்பாட்டுணர்வினை வளர்த்துக் கொள்ளல்

9. பெண்களை ஆண்களுக்குச் சமமாகக் கருதல்

4. உயிர் இரக்கக் கொள்கைகள்

இராமலிங்கரின் சமரச சுத்த சன்மார்க்கக் கொள்கைகளில் முதலிடம் வகுத்த நிலை - சொற்பொருள் விளக்கம் வள்ளலாருக்கு முன் உயிர் இரக்க உணர்வுகள் - இராமலிங்கரின் படைப்புகளில் காணப்பெறும் முறைமைகள். தொடக்க நிலை - இடை நிலை - இறுதிநிலை 'ஜீவகாருண்ய ஒழுக்கத்தின்' வழி அறியலாகும் செய்திகள் - உயிர் இரக்க உணர்வின் இன்றியமையாமை.

சமயவாதிகளில் இராமலிங்கர் உயிர் இரக்க உணர்விற்கு அதிக இடம் ஒதுக்கியுள்ளமை - இறை வழிபாட்டினோடு இணைத்துக் கூறும் நிலை - பிற செய்திகள்.

முனைவர் பா.அருள்செல்வி,
5, 25வது தெரு,
தில்லை கங்கா நகர்,
நங்கநல்லூர்,
சென்னை-600 061.

இரும்பு - எஃகுத் தொழில்கள் ஓர் இலக்கியக் கண்ணோட்டம்

மனிதனின் பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சிகளில் உலோகங்களின் கண்டுபிடிப்பு - குறிப்பாக இரும்பு - எஃகு ஆகியவற்றின் கண்டுபிடிப்பு - குறிப்பிட்டதொரு நிகழ்வாகவும் அவனது வாழ்வில் ஏற்பட்ட மிகப்பெரிய மாறுதல்களுக்கு அடிப்படையாகவும் அமைந்துள்ளது எனலாம். இரும்பு - எஃகு ஆகியவற்றின் கண்டு பிடிப்பும் அவற்றின் பயன்பாடும்

பேரரசர்களின் ஆதிக்க வல்லமைக்கும் சமுதாய மாற்றங்களுக்கும் துணை நின்றன. இரும்பின் பயனை அறிந்த மக்கள் தங்களது அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பல கருவிகளைச் செய்து பயன்படுத்தி வரலாயினர்.

அறிவியல் முன்னேற்றம் அடைந்துள்ள தற்காலத்தில் கூட இரும்பு மற்றும் எஃகுத் தொழில்களில் மிகுந்த இன்னல்களும் இடையூறுகளும் ஏற்படுவதைக் காண்கிறோம். பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் இரும்புத் தாதுக்களைச் சேகரித்து உருக்கி இரும்புக் கட்டிகளைத் தயாரித்து அவற்றி னின்றும் பல்வேறு ஆயுதங்கள், கருவிகள் போன்றவற்றைச் செய்யும் அளவிற்கு நுண்மாண் நுழைபுலத்தைப் பெற்றிருந்தனர் என்பதைச் சங்க இலக்கியங்கள் தெளிவு படுத்துகின்றன. சங்க இலக்கியத்தில் இரும்பு - எஃகு தொழில்கள் தொடர்புடைய செய்திகள் இடம் பெறுகின்றன. கொல்லர்கள், இரும்பின் வடிவம், இரும்பின் தன்மை கொல்லர்கள் பயன்படுத்தும் கருவி களாகிய துருத்தி, குறடு, கூடம், பட்டடைக்கல் போன்றவைகள், இரும்பு - எஃகு தொழில்நுட்பங்களாகிய வடித்தல், வார்த்தல், நீரில் அளித்தல், சாணை பிடித்தல், பழுதுபார்த்தல், துரு பிடிக்கா மல் பாதுகாத்தல் போன்றவைகள் பற்றிய பல குறிப்புகள் சங்க இலக்கியத்தில் காணப்படு கின்றன. அவற்றைக் குறித்து விரிவாக ஆய்வதே இக்கட்டு ரையின் நோக்கமாகும்.

முனைவர் வே.சா.அருள்ராஜ்,

முதுநிலை விரிவுரையாளர்,

இந்திய மொழிகள் பள்ளி, தமிழ்ப் பல்கலைக்கழகம்,

தஞ்சாவூர் - 613 005.

சமணக் காப்பியங்களில் சமயப் பூசல் செயற்பாடுகள்

(FUNCTIONS OF RELIGIOUS CONFLICT IN JAIN'S EPICS)

கி.மு.ஆறாம் நூற்றாண்டுகளில் உலகெங்கும் சமயக் கலகம் ஒன்று தோன்றிற்று. அது உலகச் சமயங்கள் பலவற்றிலும் இருந்துவந்த பழமையான சமய முறைமைகளை மீட்டுரு வாக்கம் செய்யக் குரல் எழுப்பியது. புதிய முறையில் சமூகத்தை மறுகட்டமைப்புச் செய்ய முனைந்தது. இதே காலங்களில் இந்தியாவிலும் பழைய சமய முறைமைக்கு மாற்றாக எதிர்ப்பி யக்கம் தோன்றிற்று. இப்புதிய சிந்தனையாளர்கள் இந்தியச் சமூக அமைப்பில் இருந்த சனாதன சமூக அமைப்பினையும் வேள்வி முதலிய சடங்குகளையும் எதிர்த்தனர். அது மட்டுமன்றி அவர்க ளுடைய சிந்தனை சமூக எதிர்ப்பை முன்வைத்தன.

வட இந்தியாவில் தோன்றிய அவைதீகச் சமயங்களான பவுத்த, சமண, ஆசீவக சமயங்கள் பண்டைய வேத சமயங் களில் இருந்த குறைகளை எதிர்த்த ஓர் எதிர்ப்பியக்கமாகும். தென்னகத் தில் கால்கொண்ட இச்சமயங்கள் தத்தமக்குள் பூசலிட்டு வந்தன என்பதைச் சமய வரலாற்றில் அறிகின்றோம். இவ்வடிப்படை யில் சமணத் தமிழ்க் காப்பியங்களான சீவகசிந்தாமணி, நீலகேசி, சூளாமணி, பெருங்கதை, உதயண குமார காவியம், யசோதர காவியம் ஆகியவற்றில் புலனாகும் சமயப் பூசல் செயற்பாட் டினை இக்கட்டுரை வரையறுத்துக்காண முற்படுகின்றது.

சமயவாதமும் சமய நிலை மாற்றமும் (Depate and Conversion) சமயப்பூசல் செயற்பாட்டின் விளைவு எனலாம். வாதம் என்பது புலமையும் திறனும் மிக்கோர் அவைக்களத்தே தன் கருத்தைச் சான்றுகளுடன் காட்டிப் பிறர் கருத்தைத் தக்கவாறு மறுத்து ரைத்து உண்மையை நிலை நிறுத்துவதாகும். இலக்கண விளக்கம்,

''ஏதுவு மேற்கோளும் எடுத்துக் காட்டித்
தன்கோள் நிறீஇப் பிறர்கோள் மறுக்கும்
வன்புடை யோனே வாதி யாவான்''

என்று உரைக்கும். சங்கத் தமிழ்ச் சமூகத்தில் இலக்கிய விழைவின் பொருட்டு நடைபெற்ற இவ்வாதம் காப்பியங்களில் சமய வாதமாக வெளிப்படுகின்றது. பவுத்தக் காப்பியங்களில் நீலகேசியும் சூளாமணியும் சமயவாதம் குறித்துக் கூறும்.

சூளாமணியில் கூத்தாடும் விதூடகன் வழியாக வாதம் செய்யும் முறையையும் வாதில்வெல்லும் முறையையும் சாற்றுகின்றார் ஆசிரியர். அதேபோல் நீலகேசி வைதீக நெறிகளான வேதவாதத்துடனும் சாங்கியத்துடனும் வைசேடிகத் துடனும் சமயவாதம் செய்து மறுத்துரைப்பதோடு அவைதீக சமயங்களான பூதவாதம் பவுத்தம் ஆசீவகம் ஆகியவற்றுடன் வாதிடுகையில் பவுத்தர்களையே பெரிதும் எதிர்க்கின்றாள் என்று அறிய முடிகின்றது. குறிப்பாகச் சமய வாதத்தில் வென்று மாற்றுச் சமயத்தாரைத் தம் சமயத்தில் இணைத்துக் கொள்ளும் சமயநிலை மாற்ற உத்தி முனைப்புடன் கையாளப்பட்டுள்ளது.

ஒரு சமயத்தில் இருந்து பிறிதொரு சமயத்திற்குத் தன்னை மாற்றிக் கொள்வதைச் சமயநிலை மாற்றம் எனலாம். நிலைமாற்றம் (Conversion) என்ற இச் சொல், யூதர் மற்றும் கிருத்தவ மதத்தாரோடு தொடர்புடைய ஒரு சொல்லாகும் எனினும் இந்தியாவைப் பொறுத்த வரை சமண பவுத்த சமயங்கள் தோன்றிய பின் தத்தம் சமயப் பரப்பலுக்குச் சமய நிலை மாற்றத்தினை அடிப்படையான உத்தியாகக் கையாண்ட னர். புத்தர் ஞானோதயம் பெற்றபின் வாரணாசிக்குச் சென்று, பலரைச் சமயநிலைமாற்றம் செய்து இம்முறையைத் தொடங்கி னார் என்பதை இலங்கை மகாவம்சம் குறிப்பிடுகின்றது.

பவுத்த சமயத்தாரைப் போன்றே சமயநிலை மாற்றத்தில் சமண சமயத்தாரும் முனைப்புடன் செயல்பட்டனர். நீலகேசி முழுமையுமே சமயநிலை மாற்றத்தினை நோக்கமாகக் கொண்டு அமைகின்றது. பவுத்த சமயத்தாரைக் கடுமையாக விமர்சித்து

வாதிட்டு அச்சமயத் தலைவர்களை நிலைமாற்றம் செய்து தம் சமயக் கொள்கையினை நிலை நிறுத்துகின்றாள் நீலகேசி. சீவகசிந்தாமணி, சூளாமணி,யசோதரகாவியம், உதயணகுமார காவியம், பெருங்கதை ஆகிய காப்பியங்களிலும் சமயநிலை மாற்றம் குறித்த செய்திகள் உண்டு. கிடைக்கின்ற செய்திகள் அடிப்படையில் சமயநிலை மாற்றத்துக்கான காரணங்களாக,

1. போட்டியிட்டுத் தோல்விகண்டு சமயநிலைமாறல், 2. அறவுரை கேட்டுச் சமயநிலை மாறல், 3. கொலைத்தொழில் மறுத்துச் சமயநிலை மாறல் போன்றவற்றைச் சுட்டலாம்.

வீரா. அழகிரிசாமி,

விரிவுரையாளர், தமிழ்த்துறை,
தியாகராசர் கல்லூரி,
மதுரை- 625 009.

T.V. யின் ஞாயிறு படங்களில் புதிய புலப்பாடுகள்

பொழுது போக்கிற்காகப் படைக்கப்பட்ட சினிமா என்னும் கலைவடிவம், காலங்கடந்த பிறகு மீண்டுமொரு 'புலப் பாட்டை' அறிவித்தது. புதுப்புதுப் புரிதல்களை வெளிப் படுத்துகிற சாதனமாக வானொலியும் தொலைக்காட்சியும் விளங்கின.

தொலைக்காட்சி வராத போது, தேர்தல் முடிவுகளுக்காக நாம் காத்திருந்த முக்கியமான ஊடகம் வானொலி. ஆட்சியில் எம்.ஜி.ஆரா கலைஞரா என்று சந்தேகித்த நேரம் அது.

வானொலியின் முதல் அறிவிப்பு அ.தி.மு.க ஒரு தொகுதியில் வெற்றி என்றது. அதற்கு அடுத்த நிகழ்ச்சி, திரைகானம். அதில் 'வெற்றி மீது வெற்றி வந்து என்னைச் சேரும்' என்ற பாடலே முதற்பாடல். மூன்று கட்சிக் கூட்டணியோடு போட்டியிட்ட

தி.மு.க என்னாயிற்று என்று நினைத்த வேளையில் அதற்கடுத்த பாடல் ''காகித ஓடம் கடல் அலை மீது போவது போல மூவரும் போவோம்'' என்று ஒலிபரப்பப்பட்டது.

எப்போதோ வந்த வெற்றிப்பாடல்களைச் சமூகத்தின் நிகழ்வுகளைப் புலப்படுத்துவதற்காக வானொலி, அன்று இவ் வாறாகச் செயற்பட்டது. டி.வி. என்னும் வெகுஜன ஊடகம் தமிழகத்தை ஆக்ரமிக்கும் இத்தருணத்தில் ஒளிபரப்பும், சினிமாக்களின் வழியாக மேலுஞ்சில புலப்பாட்டை அளித்துக்கொண்டே வருகிறது.

ராஜீவ் காந்தி தமிழ்நாட்டிற்கு வந்தது முதல் மாய்ந்தது வரை, இனி ஆட்சிக்கு வருவது நடிகரா அவரா என்பது முதல் சிபிஐ போலீஸ் -அரஸ்ட் வாரெண்ட் வரை தொலைக்காட்சியின் சினிமா புலப்படுத்திய பிரதிபலிப்புகள், நமக்குப் பிரமிப்பூட்டுகின்றன. இவ்ஆய்வுக்கட்டுரை அவற்றை வரிசைப்படுத்தும்.

முனைவர் ஆர்.கே. அழகேசன்,
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
அமெரிக்கன் கல்லூரி,
மதுரை.

பேராசிரியர் மா.இளையபெருமாளின் மொழி பெயர்ப்புப் பணி

பேராசிரியர் மா.இளையபெருமாள் கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் 1954-இல் ஆராய்ச்சி உதவியாளராகப் பணியில் சேர்ந்து பின்னர் படிப்படியாகத் தமது உழைப்பால் உயர்ந்து அத்துறையிலேயே பேராசிரியராகப் பணியாற்றி 1984 இல் ஓய்வு பெற்றவர்.

ஏறத்தாழ 30 ஆண்டுகள் ஆராய்ச்சி, விமர்சனம், படைப் பிலக்கியம் எனப் பல துறைகளில் உழைத்தவர். இலக்கியம், இலக்கணம், மொழிபெயர்ப்பு, அகராதி போன்ற துறைகளில் கடினமாக

உழைத்து 13 நூல்கள் தமிழ் மலையாள உலகுக்கு அளித்த பெருமைக்குரியவர். தமிழ், ஆங்கில மொழிகளிலுமாக 60 கட்டுரைகள் வெளியிட்டு, சிறந்த ஆய்வாளராகப் போற்றப்படுபவர்.

இப்பேராசிரியரது மொழிபெயர்ப்புப் பணியை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது பேராசிரியர் தமிழிலிருந்து தொல்காப்பியம், நன்னூல், வீரசோழியம், நேமிநாதம் போன்ற இலக்கண நூல்களை மலையாளத்திலும், மலையாளத்திலிருந்து லீலாதிலகம், கேரள பாணினீயம், டாக்டர் ஹெர்மன் குண்டர்ட்டின் மலையாள மொழி இல்க்கணம் (பகுதி 1, 2), அருட்பெருந் திரு நாராயணகுரு அடிகளாரின் தேவாரப் பாடல்கள் போன்றவற்றைத் தமிழிலும் மொழி பெயர்த்து மலையாள, தமிழ் மொழிகளுக்குப் பெரும்பணியாற்றியவர். ஆங்கில மொழியிலிருந்து 'வள்ளத்தோள்' என்ற நூலையும் தமிழில் சிறப்பாக மொழி பெயர்த்து வெளியிட்டவர்.

தமிழ், மலையாள மொழிகளில் இவர் பெயர்த்த மொழி பெயர்ப்பு நூல்களின் தன்மைகள், சிறப்புகள் போன்றவற்றைத் தெளிவாக ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். ஆசிரியர் கையாளும் மொழி பெயர்ப்பு முறைகள், ஆசிரியரின் தனித் தன்மைகள் போன்றனவற்றைக் கண்டறிவதோடு, இம்மொழி பெயர்ப்பு நூல்கள் தமிழ், மலையாள மொழிக்குப் பயன்படும் பாங்கையும் கட்டுரை வெளிக்காட்டி அமையும். மேலும் இக்கட்டுரை பேராசிரியரின் மொழிப்பற்றை ஆய்வுலகுக்கு எடுத்துக்காட்டி, மொழி அறிஞர்களால் அவர் போற்றப்பட வேண்டிய கடப்பாட்டையும் உணர்த்தும்.

முனைவர் சு.அழகேசன்,
தமிழ் விரிவுரையாளர்,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி,
சிவகாசி.

ஆய்வு நோக்கில் கடிதங்கள்

மேலை நாட்டில் தனியொரு இலக்கிய வகையாகக் கடிதங்கள் வளர்ந்து வருகின்றன. பிரான்சு, இங்கிலாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளில் கடிதங்களின் வாயிலாகவே இலக்கியத்தை வளர்த்துள்ளனர். தமிழ் நாட்டைப் பொறுத்த அளவில் கி.பி. 18,19 ஆம் நூற்றாண்டுகளில் தான் தனியொரு இலக்கிய வகையாக இக்கடிதங்கள் உருவாகின.

பிற்காலத்தில் தோன்றிய சீட்டுக்கவிகளுக்கு முன்னோடியாகவும், கடித இலக்கியத்திற்குத் தோற்றுவாயாகவும் பதினொராந் திருமுறையில் அமைந்துள்ள 'திருமுகப்பாசுரம்' எனும் நூல் அமைந்துள்ளது. உரைநடை அறிமுகமான பிறகு கவிதை நடையில் கடிதம் எழுதும் நிலை மெல்ல மெல்ல மறைந்துவிட்டது.

கடிதங்களில் காணப்பெறும் செய்திகளின் அடிப்படையில் இவற்றை வாழ்த்துக் கடிதம், பரிந்துரைக் கடிதம், அழைப்புக் கடிதம் போன்ற பல வகைகளாகப் பிரிக்கலாம். இக்கடிதங்களில் கடிதம் எழுதியவரின் குடும்பச் சூழல், பொருளாதார நிலை, அவர்காலச் சூழல், சமுதாய நிலை போன்றவற்றையும் காண முடிகின்றன. கடிதம் எழுதியவரின் ஆளுமையையும், மிகைப் படுத்தாமல் இயல்பாக எழுதும் நிலையையும் அறியமுடிகின்றன.

இக்கட்டுரையில் அச்சில் வெளிவராமல் கையெழுத்துப் பிரதிகளாக இருக்கின்ற தணிகைமணி வ.சு.செங்கல்வராய பிள்ளை, நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் ஆகியோர் எழுதிய கடிதங்கள் ஆய்வு செய்யப்படுகின்றன.

வெறும் செய்திகள் தானே என்று நினைத்துக் கடிதங்களை ஒதுக்கித் தள்ளிவிடக்கூடாது; அவற்றைப் படித்துப் பார்த்து ஆய்வு செய்தல் வேண்டும்; இவ்வாறு ஆய்வு செய்யின் பல அரிய உண்மைகள் புலப்படக்கூடும் என்பதற்கான சான்றுகள்

இக் கட்டுரையில் கொடுக்கப்படுகின்றன.

முனைவர்.ம.சா.அறிவுடைநம்பி,
முதுநிலை விரிவுரையாளர்,
அரிய கையெழுத்துச் சுவடித்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்- 613 005.

கொடும்பாவி

எதிரியாகக் கருதப்பெறும் ஒருவரை அழகற்ற முறையில் உருவமாக்கி, அவர் மீதான எதிர்ப்பைச் சுட்டப் பலர் முன்னிலையில் அவ்வுருவுக்கு எரியூட்டி நிற்றல் இன்றைய நடைமுறை. இன்னாரின் கொடும்பாவி எனப் பெயர் சூட்டி, மக்கள் நடுவில் அக்கொடிய உருவை இழுத்துவந்து தீயிடுவர். கோரமான வடிவினைக் கொண்ட அவ்வுருவே கொடும்பாவி எனப் பெறுவது.

கொடும்பாவி: சொல்லாய்வு

பொதுவாகப் பாவி என்பதற்குப் பொருளாக நன்மையற்ற செயல்பாடுகள் கொண்டவன் என்று குறிப்பர். இயல்புக்கு மாறாக ஒருவன் செயல்படும்போது, 'அடப்பாவி' என்று குரலெடுப்பது சான்று ஆகும். பாவியா அமையும் அல்லது பாவம் செய்துள்ளவனாகக் கருதப் பெறும் ஒருவனுடைய கொடுமையைச் சித்திரிக்கும் உருவாதலின், 'கொடும்பாவி' எனப் பெயர் வந்தது. பண்டைய இலக்கியங்கள் 'பாவை' என்ற பெயரில் பொம்மைகளைச் சுட்டும். மண்பாவை, மரப்பாவை போல்வன காணலாம். இவ்வடிப்படையில் கொடுமைகளைப் பாவையாகச் சமைத்தமையால் கொடும்பாவை என்பது கொடும்பாவி என்றாயிற்று என்பாரும் உளர்.

எதிரியும் அழிப்பு மனப்பாங்கும்

தமிழரிடையே தம் எதிராளிகளை அழிப்பது முன் நிறுத்தப்

பெறுங்கால் அவ்வெதிரியின் உடைமைகளை அழிப்பது முதன்மைப்படுத்தப்பெறும். சங்ககால 'எரிபரந்தெடுத்தல்' என்ற கூறு கருதத்தக்கது. வயல்களை அழிப்பது, மகளிரின் கூந்தலைச் சிதைப்பது, கோட்டைகளை உருக்குலைப்பது போல்வன கருதப்பெற வேண்டியவை.

பதிற்றுப்பத்தின் குறிப்பொன்று: எதிரிகள் படையெடுத்து வரும்போது அழிவுபெறும் கோட்டை மதிலில் தாம் வென்ற மன்னர்களின் உருவுகளைச் செதுக்கியிருப்பர். தம் எதிரிகளின் உருவுகள் அழியப் பெறுதலைக் கருதிய இப்போக்கைச் சங்ககால மன்னர்கள் கொண்டிருந்தனர்.

இதனுடைய தொடர்ச்சியாகத்தான் தமக்கு எதிரான சட்டங்கள், ஆவணங்கள், இதழ்கள் போன்றவற்றைப் பொது மக்கள் முன்னிலையில் எரிப்பது, கொடிகளை எரிப்பது போன்றவை நிகழ்கின்றன. எதிரிகளின் கொடிய குணங்களை உருவாக்கி, எதிர்ப்பைச் சுட்டும் வண்ணம் உருவ பொம்மையை எரிக்கின்றனர்.

சமயச் சூழல்: இப்பழக்கத்திற்குச் சமயச் சடங்குகள் காரணமாக அமையுமெனலாம். கொடுமைக்காரர்கள் இறைவனால் வெல்லப்படுதல் 'சம்காரம்' ஆகும். சூரசம்காரம் ஒரு சான்று. தொன்மம் ஒன்று திருவிழாவில் கலையாகவும் சடங்காகவும் அமையும்போது குறியீட்டு நிலையிலும், எரிப்பு நிலையிலும் அழிவு சுட்டப் பெறும். காமதகன விழா, சனீஸ்வரன் ஒழிப்பு, கண்ணேறு கழிப்பு, போகிப் பண்டிகை போன்றவை அழிப்பு நிகழ்வுடன் தொடர்புடையவை: இராவணலீலா, தெருக்கூத்தின் துரியோதனின் தொடை முறிப்பு போன்றவையும் கருதத்தக்கவை.

இலக்கியம், சமயம், தொன்மம், நம்பிக்கை போன்ற பல்வேறு கோணங்களில் - எதிராளியின் கொடுமைக் குணங்

களை அழிக்கும் நடைமுறையாக அமையும்- கொடும்பாவி பற்றி ஆய வேண்டிய தேவையுள்ளது.

முனைவர் அ.அறிவுநம்பி,
தமிழியல் துறை,
புதுவைப் பல்கலைக் கழகம்,
புதுச்சேரி-605014.

பாரதியார் கவிதைகள் -நோக்கும் போக்கும்

குறிப்பிட்ட நோக்கத்திற்காகத் தெய்வங்களின் பிறப்பினை-அவதாரத்தினைப் புராணங்கள் எடுத்துரைக்கின்றன. ஆனால் மனிதர்களின் பிறப்பு, பிறந்த பின் அவர்கள் வாழும் வகையி லேயே பிறப்பின் நோக்கம் பொருளுடையதாகின்றது. மனிதர்க ளைப் பொறுத்த வரையில் அவர்களுடைய வாழ்வே பொருளு டையதாகின்றது. பொருளுடைய வாழ்வை மேற் கொண்ட பாரதியின் பிறப்பு நோக்கத்தை அவன் கவிதைகளின் வழிநின்று ஆராய்வதே இவ் ஆய்வுக் கட்டுரையின் போக்காக அமைகின்றது.

கால நிலை, சூழ்நிலை, சமுதாய நிலை என்ற மூன்றும் ஒருவருடைய நோக்கத்திற்கான அடிப்படைக் காரணிகளாகும். இந்நிலையில் நோக்கிய நோக்கம், நோக்கல் நோக்கம் என்ற இரு நிலையில் பாரதியின் நோக்கம் அமைந்துள்ளது.

அன்னியர் ஆட்சி, வறுமைச் சூழல், அடிமை நிலை இம்மூன்றும் பாரதியின் நோக்கத்திற்கு அடிப்படைக் காரணங்களாகின்றன. இக்காரணங்கள் வழி வெளிப்படும் நோக்கம் நிகழ்கால நோக்கு, எதிர்கால நோக்கு என்று இரண்டாக அமைந்து ஒரு பொதுவுடைமைச் சமுதாய நோக்கமாக மின்னி மிளிர்கின்றது.

தேசியம், தாய்நாடு, மொழி, கல்வி, சமுதாய நலம், உணர்வையும் அறிவையும் வளர்த்தல், பெண்மை என்ற பல போக்குகளில் பாரதியின் நோக்கு வெளிப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

இவற்றை ஆழ்ந்து நோக்க

1. தமிழ் மொழிக்குப் புதிய சுவை

2. தமிழுலகிற்குப் புதிய உணர்வு

3. தமிழர்களுக்குப் புதிய உயிர்

என்ற மூன்றில் பாரதியின் அனைத்து நோக்கங்களும் அடங்கியிருத்தல் புலனாகின்றது.

கி.ஆதிநாராயணன்,
தமிழ் விரிவுரையாளர்,
குரு நானக் கல்லூரி, வேளச்சேரி,
சென்னை.

தமிழ் சஞ்சிகை மொழி- ஓர் ஒப்புநோக்கு

தமிழ் நாளிதழ்களில் அன்றாடம் வெளியாகும் செய்திகளில் முக்கியமானவற்றைத் தெரிவு செய்து அவற்றையும் அவற்றுடன் சில பொழுது போக்குச் செய்திகளையும் சிறுகதை, நாவல் போன்ற படைப்பிலக்கியங்களையும் உள்ளடக்கி ஏற்கனவே பல வார, மாத இதழ்கள் தமிழில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. (இத்தகைய பொழுது போக்கு இதழ்களுள் மங்கையர் இதழ்களும் அடங்கும்). இவற்றுடன் சமுதாயத்தில் நிலவும் அரசியல் நிலவரங்களையும் சமுதாய அநீதிகளையும் படம் பிடித்துக்காட்டும் நோக்கத்தில் பல்வேறு அரசியல், சமுதாய இதழ்கள் தோன்றியுள்ளன. இவ்விதழ்கள் தாம் கூறவரும் செய்தியை வெளிப்படுத்த மொழியைக் கருவியாகப் பயன்

படுத்துகின்றன எனறாலும் மொழிப் பயன்பாட்டில் சில உத்திகளைக் கையாள்வதன் மூலம் மொழியைச் சிற்சில விடங்களில் ஒரு கருத்துப்பரிமாற்ற உத்தியாகவே பயன்படுத்து வதைக் காண முடிகிறது. பொழுதுபோக்கு வார இதழ்கள், மகளிர் இதழ்கள், புலனாய்வு இதழ்கள், துணுக்கு இதழ்கள், சினிமா இதழ்கள் எனப் பல்வகை இதழ்கள் வேறுபடுவது போலவே இவ்விதழ் வகைகளுக்கெனவே மொழிப் பயன் பாட்டில் குறிப்பிட்ட வகை முறை இருக்கிறதா அல்லது இவை இவ்வாறு பல்வகைகளாக வேறுபடுவதில் உள்ளடக்கம் தவிர மொழியின் பங்கும் உள்ளதா என்பதை இக்கட்டுரை காண முயலுகிறது.

சமுதாயத்தில் நிலவும் கலாச்சார மாற்றத்தின் விளைவாகத் தமிழ் இதழ்களில் உள்ளடக்க மாற்றம் ஏதும் நிகழ்ந்துள்ளதா? அதன் விளைவாகக் கருத்துப் பரிமாற்றத்தில் மொழிப்பயன்பாடு குறித்த மாற்றம் எவையும் நிகழ்ந்துள்ளனவா என்பதையும் இக்கட்டுரை கண்டறிகிறது.

சான்றாக, அரசியலில் பொதுமக்களுக்குக் கொள்கைப் பிடிப்பின்மை என்ற பொதுவான நிலை, தலித் முன்னேற்றம், பெண்ணியச் சிந்தனைகள், நுகர்வோரியம், விளம்பரமயக்கம், குண்டு வெடிக்கும் அபாயங்கள் போன்ற புதிய உள்ளடக்கக் கருத்து வெளிப்பாட்டிற்கேற்ப மொழி கையாளப்படும் முறைகள் இனங்காணற்குரியன.

பொதுவாக, இவ்விதழ்களுள் சில பேச்சுவழக்குச் சொற்கள், கொச்சை மொழிச் சொற்கள், ஆங்கிலச் சொற்கள் முதலியவற்றை அதிக அளவில் பயன்படுத்துதல் மொழியைத் தாம் விரும்பியபடி திரித்துப்பயன்படுத்தல் முதலியவற்றை மேற்கொள்வதைக் காண முடிகிறது. சான்றாக,

டவுன்லோர்ந்து (ஆ.,வி.22.10.95 ப.1) 'தாட்டி'யான டைரக்டர் (குமுதம் 19.10.95,ப.14) அவ்ளவ்வுதான் (குமுதம்,19.10.95, ப. 14) ''....,நடிகரைப் போல இருக்கிறது'' என்று விட்டு வுடு ரூட் (குமுதம், 26.10.95,ப.77) சொந்தக்காரங்கள்ளாம் (ராஜம், அக்டோபர், '95,ப.11), துடிச்சப்போ (ராஜம், அக் '95, ப.11)

Afterall நாம் இறந்தபின்....(ராஜம், அக், '95,ப.10), இது 'திக்' கான விஷயம், இனி 'லைட்' டாகாது (கல்கண்டு, 26.10.95, ப.11), மந்திரி பரமு ஓ.கே. சொன்னார் கண்ஸ¬ம் சம்மதித்தார் (தராசு, 31.10.95, ப.3) முதலியவற்றைக் குறிப்பிடலாம். இவை போன்ற மொழிமாற்றங்களும் மொழித்திரிபுகளும் இக்கட்டுரையில் இனங்காணப்படும். இம்மொழி மாற்றங்கள் மொழி வளர்ச்சியா, மொழி வீழ்ச்சியா (அழிவா) என்பதையும் இத்தகைய மொழி மாற்றங்களுக்கான சூழல்களும் காரணங்க ளும் எவை எவை என்பதை இக்கட்டுரை ஆராயும்.

முனைவர் அ.ஆலிஸ்,
விரிவுரையாளர்,
தமிழியல் துறை,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சிராப்பள்ளி- 24.

தாமஸ் வந்தார் -ஓர் ஆய்வு

தமிழ் இலக்கிய உலகில் அரிய சாதனைகள் பல புரிந்த பெருமை க.நா.சுப்பிரமணியம் அவர்களுக்கு உண்டு. அவரது முதல் நாவலான 'பொய்த் தேவு' இன்றும் சிறந்த படைப்பாகவே கருதப்படுகிறது. இதற்குப் பின்னுள்ள அறுபது ஆண்டுகளில் அவரது பேனா முனைத் தொட்டுத் துலக்காத தற்காலத் தமிழ் இலக்கியத் துறையே இல்லை எனலாம். அவரெழுதிய கடைசி நாவலான ''தாமஸ் வந்தார்'' தமிழ் நாவல் உலகில் ஒரு மைல் கல்; தமிழ்ச் சமுதாயத்தின் உண்மை நிலையை உலகிற்கு ணர்த்தும் வரலாறு தழுவிய சிந்தனைக் கருவூலம்.

உண்மைகளின் உந்துதலால் முகிழ்த்த இவ்வரிய நாவலை க.நா.சு. இருபத்தொரு நாட்களில் எழுதி முடித்ததாகக் குறிப்பிட்டுள்ளார். இருபத்தைந்து வருடங்களாக மனதில் தேக்கி வைத்த எண்ணங்களை 25 அத்தியாயங்களில் இந்நாவலில்

இடம்பெறச் செய்துள்ளார். 'வள்ளுவரும் தாமசும்' என்ற பெயரில் தொடங்கிய பின்னர் 'தாமஸ் வந்தார்' என்று கதையை மாற்றி அமைத்துள்ளார். இக்கதை எழுத நேர்ந்த சூழலைப் பின்வருமாறு நினைத்துப் பார்க்கிறார்.

''அப்போஸ்தலர்கள் என்று சொல்லப்பட்ட ஏசுவின் பதினொரு சிஷ்யர்களும் உலகைத் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டு உலகின் பல பகுதிகளிலும் கிறிஸ்தவ நற்செய்தியைப் பரப்ப முயன்றார்கள். இது சரித்திர உண்மையாகவே தெரிகிறது. அப்படி இந்தியாவுக்கு வந்த பதினொரு அப்போஸ்தலர்களில் ஒருவரான ஸெயின்ட தாமஸ் என்பவர் திருவள்ளுவரைச் சந்தித்து அவருக்குக் கிறிஸ்தவக் கொள்கைகளை எடுத்துச் சொல்லியிருக்கவும் கூடுமோ? அப்படி நேர்ந்திருக்கக்கூடாது, முடியாது என்று யார் சொல்ல முடியும்?''

''ஸெயின்ட் தாமஸும் திருவள்ளுவரும் சந்தித் திருப்பதற்கான சாத்தியக் கூறுகள் என்னென்ன? நம்புவதற்கு ஒரு ஆதாரம் தேவையில்லையா?'' தேவைதான். அதுவே கற்பனையோடு கதையாக வடிவம் பெற்றுள்ளது.

அப்போஸ்தலர் தாமஸ் என்பவர் முதலில் கி.பி.40 வாக்கில் இந்திய வடமேற்குப் பகுதியில் அரசன் கொண்டாபெர்னஸ் என்பவர் ஆதரவில் கிறிஸ்துவைப் பிரசாரம் செய்ததாகவும், பின்னர் கொண்டாபெர்னஸ் இறந்த பிறகோ அல்லது முடி துறந்த பிறகோ ஆதரவில்லாமல் அப்பகுதியிலிருந்து வெளியேறி, கேரளாவில் மதப் பிரச்சாரம் செய்துவிட்டு, கி.பி.50க்குச் சற்று முன்னோ, பின்னோ, மீனவர்களிடையே மதப்பிரச்சாரம் செய்துகொண்டே அந்த மீனவர்கள் படகிலே இந்தியக் கீழ்க்கரையோரமாக கி.பி. 52, 54,55 சமயத்தில் மைலாப்பூர் கடற்கரை வந்தடைந்ததாகவும், அங்கும் பிரசாரம் செய்து பலரைக் கிறிஸ்தவ மதத்துக்கு மாற்றியதாகவும், கடைசியில் 56,57 க்குப் பின்னால், அனேகமாக 62,63-இல் ஒரு பிராமணனால் கொல்லப் பட்டு, உயிர் துறந்து ''மார்டியர்''பதவி பெற்றதாகவும் கிறிஸ் தவர்களிடையே நிலவும் மரபுக் கதையே, ''தாமஸ் வந்தார்''

என்னும் கற்பனைக் கதையாக உருப்பெற்றிருக்கிறது.

''பிராமணன் ஒருவன் தாமஸைக் கொன்றிருப்பானா என்று கேட்கத் தோன்றலாம் ஒரு சாராருக்கு'' -என்று கூறி, கொன்ற பிராமணனின் மகன் எனப்படும் வாதூலன் என்பவன் கூறு வதைப் போலக் கதையைக் கூறிச் செல்கிறார், ஆசிரியர்.

இந்த நாவலில் கதையை விட கருத்து விளக்கமே அழுத்தம் பெற்றிருக்கிறது. விவிலியச் செய்திகளை நூல் முழுவதும் இடம்பெறச் செய்து, ஒரு யூத வியாபாரிக் குடும்பத்தை இணைத் துக் கதையைக் கற்கண்டுச் சுவையுடன் நடத்திச் செல்கிறார்.

''இந்நாவலை எழுதுவதில் எனக்கு ஒரு பூரணத்துவமும் அமைதியும் ஏற்பட்டுள்ளது. அந்தப் பூரணத்துவமும் அமைதி யும் இந்நாவலின் வாசகர்கள் சிலருக்கேனும் ஏற்படும் என்று நான் நம்புகிறேன்'' என்னும் க.நா.சு.வின் கூற்று உரத்த சிந்தனைக்குரியது. மாபெரும் எண்ணப்புரட்சி இக்கதையினுள் மறைந்து கிடக்கிறது என்பதில் ஐயமில்லை.

திருக்குறளுக்கும் திருமறைக்கும் ஏற்றம் தருகின்ற - இதற்கு நிகரான நாவல் இதுவரைத் தமிழில் வெளியாகவில்லை எனலாம். திருக்குறள் வேண்டும், அதனைவிடத் திருமறையே தேவை என்பதைச் சொல்லாமல் சொல்கிறது இந்தப் புரட்சி கரமான தமிழ் நாவல்.

முனைவர் த.இயேசுதாஸ்,
பேராசிரியர் தலைவர்,
தமிழ்த் துறை,
ஸ்காட் கிறித்தவக் கல்லூரி,
நாகர்கோவில் - 3.

தமிழ்க் கல்வெட்டுகளில் ஸ்த்ரீதனம்

இன்று பரவலாக வழக்கில் உள்ள சீதனம், வரதட்சணை என்ற சொற்கள் அடிப்படையில் வெவ்வேறானவை. முன்னது பெண்ணின் செல்வத்தைக் குறிப்பது. பின்னது திருமணக் காலத்தில் மணமகனுக்கு வழங்கப்படும் கொடையைக் குறிப்பது. பெண் செல்வமாகிய, ஸ்த்ரீதனம் பெரிய புராணத்தில் 'மகள் கொடை' எனப்படுகிறது. ஸ்த்ரீதனம் பற்றிக் குறிக்கும் தர்மசாஸ்திரங்கள் மற்றும் ஸ்மிருதிகள் பெண்ணுக்குரிய எல்லாச் செல்வத்தையும் ஸ்த்ரீதனம் என்று குறிப்பிடாமல் குறிப்பிட்ட சில நிகழ்ச்சிகளின் போது அவளுக்கு அளிக்கப்படும் நிதிகளைச் ஸ்த்ரீதனம் என்கின்றன.

தமிழகக் கல்வெட்டுகள் தொடக்கத்தில் 'அங்கமணி' என்று அழைத்துப் பின்னால் 'ஸ்த்ரீதனம்' என்று குறிப்பிடுகின்றன. பல்லவர், சோழர், காடவர் காலக் கல்வெட்டுகளில் கிடைக்கும் ஸ்த்ரீதனம் பற்றிய குறிப்புகள் பெண்ணின் செல்வத்தில் அவளது கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் உரிய உரிமைகளை உணர்த்துகின்றன. இக்கல்வெட்டுகளில் குறிக்கப்படும் நபர்கள் பிராமணர், வெள்ளாளர், வைஸ்யர் சமூகங்களைச் சேர்ந்தவராவர். இக்கல்வெட்டுகள் ஏறத்தாழப் பரவலாகத் தமிழகத்தின் எல்லா பகுதிகளிலிருந்தும் கிடைப்பவை. இவை நேரிடையாக ஸ்த்ரீதனம் பற்றிக் குறிப்பவையல்ல. கோயில்களுக்குக் கொடையாக நிலங்கள் அல்லது குடிகள் கொடுக்கப்படும்போது, குறிப்பவை. பெண் தெய்வத்திற்கு ஊரார் ஸ்த்ரீதனம் கொடுத்த செய்தி ஒரு கல்வெட்டில் காணப்படுகிறது.

விஜயநகரக் கல்வெட்டுகள் மற்றும் 18,19 ஆம் நூற்றாண்டு ஓலைச் சுவடிகளிலும் செய்திகள் உண்டு .ஆனால் அவை

விரிவாக இவ்வாய்வில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. கி.பி. 9 முதல் 14 முடிய உள்ள நூற்றாண்டுகளில் பெண்களின் செல்வம் பற்றி அறிந்து கொள்ள இவ்வாய்வு தூண்டுகோலாக அமையும்.

சு.இராசகோபால்,
சிறப்புநிலைக் கல்வெட்டாய்வாளர்,
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை,
சென்னை- *113.*

கன்யா சுல்கம்

தனிமனிதனைச் சமூகமயமாக்கும் வாழ்க்கை நிகழ்வுகளில் முதன்மை வகிப்பது திருமணம். மனிதன் குடும்பமாக வாழத் தொடங்கிய காலத்திலிருந்தே அனைத்துச் சமுதாயங்களிலும் பலவகையான திருமண முறைகளும் மணவினைகளும் வழக்கி லிருந்து வந்துள்ளன. தொல்காப்பியத்திலேயே எண்வகை மணங்களைப் பற்றி அறிய முடிகின்றது. வழக்கிலி ருந்து வந்த பெரும்பாலான மண முறைகள் பெண் சமுதாயத் திற்குப் பாதகமாகவே அமைந்து வந்துள்ளன. இக்கட்டுரை, இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை ஆந்திர மாநிலத்தில் வழக்கிலி ருந்த 'கன்யா சுல்கம்' என்ற திருமணமுறை எவ்வாறு ஒரு பெரும் சமுதாயச் சிக்கலாக மாறியது என்பதை அதன் தோற்றம் -அம் முறையால் ஏற்பட்ட சமூக விளைவுகள் போன்றவற்றின் அடிப்படையில் ஆராய முற்படுகின்றது.

விஜயநகர அரசர் ஆனந்தகஜபதி சேகரித்த 'கன்யா சுல்க' மணம் பற்றிய தரவுகள், குரஜாட அப்பாராவின் 'கன்ய சுல்கம்' என்ற நாடகம் ஆகியவை இக்கட்டுரைக்கு முதன்மை தரவுகளா கக் கொள்ளப்படுகின்றன.

ஆய்வின் உள்ளடக்கமாக, கன்யா சுல்கம் பெயர்க் காரணம்- தொலகாப்பியம் கூறும் எண்வகை மணங்களில் ஒன்றான 'ஆசுரம்' என்ற மணமுறைக்கும் கன்யா சுல்கம் மணமுறைக்கும்

உள்ள தொடர்பு - இம்மணமுறையினால் குடும்பத்திலும் சமுதாயத்திலும் ஏற்பட்ட சிக்கல்கள் -அதனால் விளைந்த மாற்றங்கள் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

ஆய்வு முடிவாக, 'கன்யா சுல்க' திருமண முறை வழக்கி லிருந்த கால கட்டத்தில் , பெண்களின் மீதான அடக்கு முறைக ளும், அவர்களை அடிமைப்படுத்திய நிலையும், ஆணாதிக்கச் சமுதாயத்தால் திட்டமிட்டே செயல்படுத் தப்பட்டன என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

வ.இராசரத்தினம்,

விரிவுரையாளர்,

தமிழ்ப்புலம்,

கிராமியப் பல்கலைக்கழகம்,

காந்திகிராமம்.

நடுகல்லில் வெட்சியும் கரந்தையும்

1970 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடுகல் ஆய்வு பெருகி வந்துள்ளது. சில கருத்தரங்குகள் நடைபெற்றுள்ளன. ஆய்வேடுகள் , ஆய்வு நூல்கள், கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

தொண்டை நாட்டில் நடுகற்கள் மிகுதி. கொங்கு நாட்டில் ஓரளவும், பாண்டிய நாட்டில் குறைவாகவும், சோழநாட்டில் மிகவும் குறைவாகவும் காணப்படுகின்றன. பெரும்பாலும் முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்த பாலை நிலத்தில்தான் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

அவை பல்வேறு பெயர்களில் வழங்கப்பெறுகின்றன. இலக்கியம் போன்றவை மேன்மக்கள் பற்றிக் கூறுபவை. நடுகற் கள் நாட்டார் வழக்கு வீரருக்கும் சேவகருக்கும் எடுக்கப் பட்டவை.

முதலில் இறந்த வீரரைப் பதுக்கையில் இட்டனர். மண் மேடிட்டுக் கல் குவிக்கப்பட்டது. பதுக்கைமீது அடையாளத்

திற்கு நீண்ட கற்களை நட்டனர். அவையே பிற்காலத்தில் நடுகற்களாக மாறின.

நடுகல்லைத் தெய்வமாக வணங்கினர். வழிபட்டதன் காரணமாக நன்மை பெற்றனர். குடும்பத்தாரும், உறவினரும், பிறரும், வழிப்போக்கரும் வழிபட்டனர்.

பிற விலங்குகளால் குத்தப்பட்டு, மரணம் அடைந்த வீரர்கட்கு நடுகற்கள் சில எடுக்கப்பட்டாலும் பெரும்பாலான நடுகற்கள் கால்நடை கவர்தல், மீட்டல் தொடர்புடையதாகவே உள்ளன.

நிரை கவர்தலே போரின் தொடக்கமாகக் கருதப்பட்டது. கரந்தை அடங்கிய வெட்சித் திணை குறிஞ்சி என்னும் அகத்திணையின் புறனாகக் கருதப்பட்டது. களவு என்பது இரண்டிற்கும் பொதுவானதாயிற்று. வெட்சி தன்னுறு தொழில், மன்னுறு தொழில் என இரண்டாகக் கூறப்படும். இலக்கிய இலக்கணத்தில் மன்னுறு தொழிலும், நடுகற்களில் தன்னுறு தொழிலும் காணப்படுகின்றன.

ஆநிரை பிறர் அறியாமல் களவில் கொண்டாலும் அவை திருட்டு என்று கூறப்படவில்லை. பேரரசரும், சிற்றரசரும் நிரை கவர்ந்துள்ளனர்.

பல்லவர் கால இலக்கியத்தில் பல்லவர் ஆணையால் நிரை கவரப்பட்டது கூறப்படுகிறது. நடுகல் அமைப்பு மிகவும் சுவையானதாகும். போர்க்களக் காட்சியாகப் பல செதுக்கப் பட்டிருக்கும். அவற்றின் மூலம் அக்கால உடை, ஆயுதம், அணிகலன்கள், தலையலங்காரம் இவற்றை அறிகிறோம். இலக்கியத்தில் நடுகல் வழிபாடும், சடங்குகளும் மிகவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. நடுகல்லே தெய்வம், பிற தெய்வம் இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

பிற நாடுகட்குச் சென்று ஆடுகளைக் கொள்ளையடித்து அவற்றின்மூலம் கோயிலுக்கு விளக்கெரித்துள்ளனர். ஆநிரை கவர்ந்து மீட்ட வீரர்கட்குக் கொண்ட நிலங்கள் வழங்கப்பட்டன.

இலக்கியங்களில் ஆ, ஆன், ஆநிரை, பசு, எருமை என்று கால்நடைகள் கூறப்பட்டாலும் கல்வெட்டுகளில் பெரும்பாலும் 'தொறு' என்ற சொல்லே கால்நடையைக் குறிக்கப் பயன்படுத்தப் படுகிறது. இதைப் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் நிலவி வருகின் றன. தொழு- தொறு ஆயிற்று என்பர்.

முனைவர் செ.இராசு,
தலைவர், கல்வெட்டுத்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்- 5.

ஆங்கில - தமிழ் மொழி பெயர்ப்பில் தொடராக்கச் சிக்கல்கள்

நாம் கடந்த நானூறு ஆண்டுகளுக்கு மேலாக உலகச் செய்திகளைப் பெரும்பாலும் ஆங்கில மொழி வழிதான் பெற்று வருகிறோம். தமிழ் பழமையானதொரு மொழி என்றும், இளமையோடும், உயிரோட்டத்தோடும் இருக்கும் மொழி என்றும், தமிழ் மீது கொண்ட காதலால் நாம் காலந்தோறும் கூறி வந்தாலும், வாழ்வின் நடைமுறையில் அது உண்மையாக இல்லை. பெரும்பான்மையோரிடம் இந்த நிலைமையினைப் பற்றித் தெளிவான கருத்தும் இல்லை.

தமிழ் மொழியினை ஆட்சி மொழியாக்கி, என்றும் இதனை மாறாத இளமையோடு வைத்திருக்க, நாங்கள் வேண்டிய அனைத்தும் செய்கிறோம், செய்வோம் என்று அரசியல் வாக்கு றுதி கொடுத்த பலரது வாழ்வு முற்றி முடிந்து போனதே யொழிய, வாக்குறுதி போற்றப்படவில்லை, காப்பாற்றப் படவில்லை. அப்பணியினைச் செய்ய உண்மையாக ஈடுபடும் போது அறிவியல், தொழில்நுட்ப, வாழ்வியல் நூல்களை ஆங்கிலத் திலிருந்து தமிழில் மொழிபெயர்ப்புச் செய்வதே அதற்குரிய தொரு பெரும் பணியாக அமையும்.

இப்பணி தற்பொழுது ஓரளவு மித வேகத்தில் நடந்து வருகிறது என்பது நாம் அறிந்தது தான். ஆயினும் அறிவியல், தொழில்நுட்ப, வாழ்வியல் நூல்களை, மொழிபெயர்க்கும் போது கருத்துக்குத் தான் முதலிடம் கொடுக்கவேண்டும், மொழியின் கட்டமைப்புப் பற்றிய இலக்கணச் சிந்தனை தேவையில்லை என்று கருதும் போக்கு இங்கு நிலவி வருகிறது. இக்கருத்துச் சரியானது என்று ஏற்றுக்கொள்ள முடியாது. மொழி வழி, ஒரு கருத்தைப் பெறுவதற்காகப் படிப்பில் ஆழ்ந்து ஈடுபடும் ஒருவருக்கு, மொழிக்குரிய இலக்கணக் கட்டமைப்பு சரியாகக் காப்பாற்றப்படாத நிலை, புரிதல் தன்மையினை நேரிடையாகவோ, மறைமுகமாகவோ தடைபடுத்துகிறது.

இதனைத் தவிர்த்து, மொழிக்குரிய சரியான கட்டமைப்பு, மொழி- பெயர்ப்புச் செய்யும் போதும் காப்பாற்றப்பட வேண்டும். இக்கருத்தினை விளக்குவதற்காகப் பள்ளி மேல் நிலை வகுப்பில் பயன்படுத்தப்படும் ஆங்கில- தமிழ் விலங்கியல் பாட நூல்களை எவ்வாறு மொழிபெயர்ப்பு செய்துள்ளனர் என்பதை இக்கட்டுரை ஒப்பிட்டு ஆய்கிறது. ஆங்கில- தமிழ் மொழிபெயர்ப்பின் போது தமிழ்த் தொடர்கள் மரபுக்கு ஏற்றபடி இலக்கண நியதிக்குள் அமைய வேண்டிய தேவையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குகிறது.

முனைவர் ச.இராதாகிருட்டிணன்,
முதுநிலை விரிவுரையாளர்,
மொழிபெயர்ப்புத்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

தமிழ் வழக்காற்றில் காணும் பிழைகள்

சரியும் தவறும் என்னும் கொள்கை -மக்களின் ஏற்புடைமை இயலாமை உணர்வுகள் -சில வடிவங்கள் அனைவராலும் தவறாகக் கையாளப்படுதல் -காலச் சூழலுக்கேற்ப சில வடிவங்களை ஏற்றல்- இருவகைப்பட்ட சொற்களைக்

கையாளல் - வேறு வேறு ஒலியன்களைப் பயன்படுத்துதல் - வேறு வேறு வகையில் எழுத்துகளைக் கையாளல்- எழுத்துப் பிழை, சந்திப்பிழை, சொற்சுருக்கப்பிழை, இவற்றை எழுத்து வழக்கில் மேற்கொள்ளுதல் -சந்தி விதிகளைப் பற்றிய முறையறியாமை - தேவையற்ற இடங்களில் சந்தி எழுத்துகளைச் சேர்த்தல் -பயன்பாடு தெரியாது சந்தி எழுத்துகளை விடுத்தல் - இவைகளால் பிழைகள் தோன்றல் -சொற்குறைப்பு -சொற் பிரிப்பு, திரிபுச் சொற்களைப் பொருளறியாது பயன்படுத்தும் முறை -பேச்சு மொழிச் சொற்களையே எழுத்து வழக்கிலும் கையாளுதல் - இவற்றின் அடிப்படையில் தோன்றும் பிழைகள்- அடிப்படை நெறிமுறைகள் அறியாத சூழலில் இலக்கண அமைப்பு அறியாது பயன்படுத்துதல்.

பூ. இராமசந்திரன்,
தமிழ் விரிவுரையாளர்,
எஸ்.ஐ.வி.இ.டி.கல்லூரி,
சென்னை- 601 302.

பெண் சிறு தெய்வ வழிபாடு- ஆய்வு

தமிழகத்தில் சிறு தெய்வங்களைப் பற்றிய தகவல்களைச் சேகரிக்கும் பணி 1713-இல் பார்த்தலோமியஸ் சீகன்பல்க் என்னும் செருமானியப் பாதிரியாரால் தொடங்கப்பட்டது. தொடர்ந்து 20-ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் தமிழகம் உள்ளிட்ட தென்னிந்தியச் சிறு தெய்வங்களைப் பற்றிய விவரங்களைச் சேகரித்து ஹென்றி ஒயிட்ஹெட், டபிள்யு டி.எல்மோர் ஆகியோர் ஆராய்ந்தனர். 1982-84களில் தமிழ்ப் பல்கலைக்கழக ஊராய்வுத் திட்டத்தில் தஞ்சை, திருச்சி மாவட்டச் சிறுதெய்வங்களைப் பற்றிய விவரங்கள் சேகரிக்கப் பட்டன. 1985-86களில் நெல்லை மாவட்டச் சிறு தெய்வங்கள் பற்றிய விவரங்கள் துளசி, இராமசாமி, ச.கணபதிராமன் ஆகியோரால் சேகரிக்கப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டன.

1992-இல் தே.ஞானசேகரன் மதுரை மாவட்டச் சிறுதெய்வக் கதைகளைச் சேகரித்து ஆராய்ந்தார். இந்த அனைத்து ஆய்வுகளி லும் ஆண் தெய்வங்களைவிடப் பெண் தெய்வங்களே மக்களால் மிகுதியாக வழிபடப்படுகின்றன என்னும் முடிவு கூறப்படுகி றது. இவ்வாறு பெண் சிறு தெய்வங்கள் மிகுதியாகக் காணப்படு வதற்கு என்ன காரணம்? இது குறித்து அறிஞர்கள் கருத்துரைத் துள்ளனரா? ஆம் எனில் அக்கருத்துகள் சரியான வையா? என்பன போன்ற எண்ணங்கள் எழுகின்றன.

மேற்கண்ட வினாக்களுக்கு விடைகாண சிறுதெய்வங்களின் தோற்றம் குறித்த கதைகள் நமக்கு உதவுகின்றன. இத்தகைய கதைகளைப் பலரும் சேகரித்துள்ளனர். ஆயினும் தே.ஞான சேகரன் மதுரை மாவட்டத்தில் சேகரித்துப் பதிப்பித்த 'நாயக்கர் காலம்- நாட்டார் தெய்வக் கதைகள்' என்னும் நூல் இத்தகைய கதைகளை மட்டுமே கொண்ட தனி நூலாகக் காணப்படுகின்றது. அவற்றுள் 82 தெய்வங்களுக்கு இறப்பு குறித்த விவரங்கள் காணப்படுகின்றன. இத் தெய்வத் தோற்றக் கதைகளை அடிப் படையாகக் கொண்டு மேற்சுட்டப்பட்ட வினாக்களுக்கு இக்கட்டுரை விடை காண முயல்கிறது.

மேலே எழுப்பட்ட வினாக்களுக்கு அறிஞர்கள் கூறியுள்ள விளக்கங்கள் பொருத்தமற்றவை என்று இக்கட்டுரை தெளிவு படுத்துகிறது. பாலியல் வன்முறை உள்ளிட்ட ஆணாதிக் கச்சமூக நெறிமுறைகளால் பெண்கள் மிகுதியான பாதிப்புக்குள்ளாகின்ற னர் என்பதை ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட தரவுகள் தெளிவு படுத்துகின்றன. பாதிப்புக்குள்ளான மக்களும் பெண்க ளின் தொகை அதிகமாக இருப்பதே பெண் தெய்வங்கள் ஆண் தெய் வங்களைவிட, அதிகமாக இருப்பதற்கான காரணம் என்னும் கருதுகோளுக்குத் தரவுகள் தம்மை இட்டுச் செல்கின்றன.

முனைவர் ஆறு.இராமநாதன்,
விரிவுரையாளர்,
நாட்டுப்புறவியல் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்-613 005.

தமிழகத்தில் சுடுமண் புகைப்பான்கள்

சங்க காலம் தொட்டுத் தமிழகத்தில் வளர்ந்து வரும் கலைகளில் சுடுமண் கலையும் ஒன்றாகும். சுடுமண் பொருட்கள் சமயம் மற்றும் சமுதாயப் பயன்பாடுகளுக்காகப் பயன்பட்டன. தெய்வங்களின் உருவங்கள் விலங்குகளின் உருவங்கள், அணி கலன்கள் மற்றும் உபயோகப்பொருட்கள் இதனில் அடங்கும். சுடுமண் பொருட்களில் முதன்மையாகக் கிடைத்தவற்றில் சிந்துவெளி பலுஜிஸ்தான், புள்ளி, கொட்டா போன்ற பகுதிகளில் கிடைத்தவற்றைத் தொன்மையானவை யாகச் சொல்லலாம்.

தமிழகத்தில் பெருங்கற்காலத்தைச் சார்ந்த பையம்பள்ளி, குன்னத்தூர், சாறூர் போன்ற இடங்களில் சில மிருகங்களின் சுடுமண் பொம்மைகள் கிடைத்துள்ளதைத் தொன்மை யானதாகக் கருதலாம். காஞ்சிபுரம், திருக்காம்புலியூர், காவிரிப் பூம்பட்டினம், அழகன்குளம், படைவீடு, சேந்தமங்கலம், திருக்கோயிலூர் போன்ற இடங்களிலும் சுடுமண் பொருட்கள் கிடைத்துள்ளன.

பெருங்கற்காலப் புதை குழிகளில் கடத்தூரில் (தர்மபுரி)ஆறு மனித உருவங்கள் -ஈமப் பொருட்களாக கிடைத்துள்ளன. இதனைக் கி.பி. முதல் -இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது எனலாம். இதைப்போன்று தமிழகத்தில் காவிரிப் பூம்பட்டி னம், உறையூர், காஞ்சி, அரிக்கமேடு, திருக்காம்புலியூர் போன்ற இடங்களிலும் கிடைத்துள்ளது.

இவ்வாறு அகழாய்விலும், களஆய்விலும் பிற இடங்களில் சேகரிக்கப்பட்டதைப் போல தமிழகத்திலும் சேகரிக்கப்பட் டுள்ளன. அண்மையில் நிகழ்ந்த அகழாய்வுகளில் புகைப்பிடிக் கும் புகைப்பான்கள் அதிக அளவில் கிடைத்துள்ளன.

இக்கட்டுரையில் சுடுமண் புகைப்பான்களைப் பற்றி விரிவாகச் சொல்லப்படுகிறது.

சங்க இலக்கியங்களில் குறிப்பாக உணர்த்துவன போன்ற சான்றுகள் கிட்டவில்லை. கி.பி.எட்டாம் நூற்றாண்டு தொடங்கி தமிழகத்தில் கி.பி. 17 ஆம் நூற்றாண்டு வரை ஆங்காங்கே நடை பெற்ற அகழாய்விலும் கள ஆய்விலும் சுடுமண் புகைப்பான்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இச் சுடுமண் புகைப்பான்களைப் பல்வேறு வடிவங்களிலும் நன்கு அலங்கரிக் கப்பட்ட நிலையி லும் காணமுடிகிறது. இவற்றை இரண்டு பிரிவாகச் செய்து இணைத்துள்ளனர். புகையிலைகளைக் குமிழ் போன்ற பகுதியில் நிரப்பி ''தீ'' யிட்டுக் குழாய்பகுதியைப் பயன்படுத்திப் புகைப்பார்கள்.

வெ.இராமமூர்த்தி,

அகழாய்வாளர்,

அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை,

தரமணி,சென்னை- 113,

சைவ நெறி

சைவம் என்றால் என்ன? சைவம், சிவனுடன் சம்பந்தமாவது, என்கிறார் திருமூலர். அதாவது சிவப்பரம்பொருளுடன் இரண்டறக் கலந்து தானே சிவமாய், சிவமே தானாய் இருக்கும் நிலையைச் சைவம் எனலாம். சிவமாவதற்கு மேற்கொள்ளும் முயற்சி அல்லது வழிமுறை சைவநெறி எனலாம். குருவருளால் சிவநிலை பெற்ற வடலூர் வள்ளற்பிரான் அவர்கள் என்னையும், நின்னையும் ஓர் உருவாக்கி எனக் குறிப்பிட்டுள்ளார்கள். யார் சிவமாகின்றார்களோ அல்லது சிவநிலைக்கு முயற்சி மேற் கொண்டு அந்நெறியில் ஒழுகுகிறார்களோ அவர்களே சைவர்கள்.

இன்றைக்கு உலகியலில் சைவம் என்பதற்கு முன்னர் கூறிய கருத்திற்கு முற்றிலும் மாறான கருத்து நிலவுகிறது. தாவர உணவினை உண்பவர் அதாவது புலால் உண்ணாதவர் சைவர்

எனக் கூறப்பெறுகின்றனர். சைவ சின்னங்களாகிய திருநீறு, உருத்திராட்சம் முதலியன அணிந்து இருப்பவர் சைவர் என்ற கருத்து நிலவுகிறது. சிவனை வழிபடு கடவுளாகக் கொண்டு பஞ்சாட்சரம் எனும் ஐந்தெழுத்தினை ஓதுபவர் சைவர் என்ற கருத்து ஆதிகாலந்தொட்டு இருக்கிறது. இவையெல்லாம் இன்றியமையாத ஒழுக்க நெறிகளாயினும் புற அடையாளங் களே-புறச்சின்னங்களே. இவை மட்டும் ஒருவரைச் சைவராக ஆக்காது. சிவ நிலைக்கு உயர்த்தாது. திருநீறு, உருத்திராட்சம் இவற்றின் உண்மைப் பொருள் குருவருளால் தெரிய வேண்டும். பஞ்சாட்சர வடிவினனை (ஐந்தெழுத் துக்குரிய அந்த ஆதி மூலத்தை) மெய்க்குருபிரான் நேரில் ''தெரிசினையாகக்'' காட்டக் கண்டு கைக் கொள்ள வேண்டும். கைலாயத்தில் இருக்கும் சிவத்தின் நிலையை, அருளை, தயவை, மெய்க்குரு பிரான் நேரடியாகக் காட்ட வேண்டும். இதனைச் சர்வ வேத நூல்களும் ஒப்புக் கொள்ள வேண்டும். இந்த அசல் நிலை செயல் நிலைக்குக் குருவருளால் உணர்த்தப் பெறாத வரை உண்மை யான சிவத்தைச் சார்ந்து சைவ நெறியில் நிற்க இயலாது.

இறுதியாக ஒரு சொல்: அசையா நிலைக்குச் சிவம் என்று பெயர். எது அசைவற்று நின்று மற்ற அனைத்தையும் அசைத்துக் கொண்டிருக்கிறதோ அதற்குச் சிவம் என்று பெயர். அசையாத சிவம் பெருந்தயவினால் சக்தியாக உருவெடுக்கிற போது அசைவு ஏற்படுகிறது. சிவசக்தி, நாத விந்து, ஒளி ஒலி இவையனைத்தும் ஆதிமூலமாகிய சிவத்தின் வெளிப்பாடே. பிரபஞ்சம் என்று பகரப் பெறுகிற இந்தப் பரவெளி எனும் வெட்டவெளி அசையாதது. ஆனால் இந்தப் பரவெளியாகிய அண்டத்தில் அனைத்தும் அசைகின்றன, சுழல்கின்றன. பல ஆயிரம் மண்டலங்கள் இப்பரவெளியில் உள்ளன. நாம் வாழும் இப்பூமி இருப்பது சூரிய மண்டலத்தில். இச்சூரியக் குடும்பத் தில் ஒன்பது கோள்களும் இருபத்தேழு நட்சத்தி ரங்களும் உள்ளன என்பது நமக்குத் தெரியும். இவை ஒவ்வொன்றும் தன்னைத் தானே சுற்றிக் கொண்டும் தான் சார்ந்திருக்கும் மண்டலத்தை நீள் வட்டப்பாதையில் சுற்றிக் கொண்டும் இருக்கின்றன. இவ்வாறு தான் அசையாமலும், எதனாலும்

பாதிக்கப்படாமலும் இருந்து கொண்டு எல்லாவற்றையும் அசைத்துக் கொண்டும் எல்லாவற்றிலும் தன் ஆளுமையைப் பதித்துக் கொண்டும் இருக்கும் ஒன்றே சிவம். அண்டத்தில் இருப்பது போன்றே பிண்டத்திலும் ஓர் இடம் (அசையா நிலை) இருக்கிறது. குருவருளால் அந்த இடத்தை-ஆதி மூலத்தின் இருப்பை-சிவத்தின் இருப்பை அறிந்து கொண்டு அதில் குடியேறி இருப்பவர் சைவர். இவரே பிறப்பு இறப்பு அற்றவர். பிறவா நிலை எய்தியவர். மரணமிலாப் பெருவாழ்வு பெற்றவரும் இவரே. இருதய கமலத்தில் இருக்கும் சிவத்தைச் சார்ந்து வாழ்வதே சிவநெறி. ஒருவர் சைவநெறியில் வாழ்ந்தாரா? இல்லையா என்பதை அவரின் மரணம் காட்டிவிடும். சைவ முத்திரையோடு இருப்பதை அகப்பேய்ச் சித்தர் பின்வருமாறு கூறுகிறார்.

''சைவம் ஆனதடி-அகப்பேய்!
தானாய் நின்றதடி;
சைவம் இல்லையாகில்-அகப்பேய்
சலம் வரும் கண்டாயே''

நம் இருதயகமலமாகிய உள்ளத்தில் குடியிருக்கும் சிவத்துடன் சம்பந்தம் ஆவதற்குச் சைவம் என்று பெயர். அதற்காக மேற்கொள்ளும் வாழ்க்கை நெறியே (மெய்க்குருபிரானைக் கண்டு அவர் தயவால் காட்டப்பெற்ற சிவத்தை அறிந்து அதனோடு நாள்தோறும் ஒட்டிப் பழகிச் சிவத்தை கைவசமாகப் பெற்றுச் சிவநிலை எய்துதல் - தானே சிவமாகுதல்) சைவ நெறி ஆகும்.

முனைவர் அரங்க.இராமலிங்கம்,
தமிழ் இணைப் பேராசிரியர்,
அஞ்சல் வழிக் கல்வி நிறுவனம்,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை-600 005.

பர்த்ருஹரியின் நீதிசதகம் - நாலிரண்டுடன் ஓர் ஒப்பு நோக்கு

வாழ்வாங்கு வாழ்வதற்கு நம் முன்னோர் சில நெறிமுறைகளை வகுத்திருந்தனர். அறவழியில் செல்லாமல், தறிகெட்டு நெறிகெட்டுச் செல்வோர் மக்கள் மட்டுமன்றி, அரசராகவே இருந்தாலும் அவ்வப்போது அவர்கட்கு அறத்தைப் பற்றி எடுத்துரைத்தும் இடித்துரைத்தும் நெறிப்படுத்தினர். வாழ்க்கைக்கு வேண்டிய வழிமுறைகளை, நீதிகளை, அறநெறியை அறிவுறுத்தினர். அறியாமையால், அந்நியர் படையெடுப்பால் அல்லாத நெறிசென்று அகப்பட்டு அவலமுற்றோர்க்கு வழிகாட்ட ஏழுந்தவைதாம் நீதி இலக்கியங்கள், அவைதாம் திருக்குறள், நாலடியார் போன்ற பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்.

'பழகு தமிழ் சொல்லருமை நாலிரண்டில்' 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்னும் முதுமொழிகளுக்கு ஏற்ப நாலடியாரும், திருக்குறளும் நீதிக் கருத்துக்களை எடுத்துச் சொல்லும்போது நயம்படக் கூறும் பான்மையால் ஏற்றமிகு இலக்கியங்களென எல்லோராலும் போற்றப்பட்டன.

'நீதி' என்பது வடமொழிச் சொல், கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் தான் இச் சொல் தமிழில் இடம் பெற்றிருக்கிறது. 'நீ' என்னும் வினைச் சொல்லடியாகத் தோன்றியது. இவ்வேர்ச் சொல் அடியாக அமையும் நீதி என்னும் பெயர்ச்சொல் இயக்குதல், வழிகாட்டுதல், செயலாட்சி, நடத்தை, தகுதி, மரபொழுங்கு என்று பல பொருள்களை உணர்த்துகிறது.

பலவகையான யாப்பு முறையில் அறநெறிக் கருத்துகளை எடுத்துரைக்கும் நூல்களை நீதிநூல்கள் என வடமொழியாளர் வழங்கியுள்ளனர். நூறு பாடல்கள் கொண்ட நூலைச் சதகம் என வழங்கினர். கி.பி. 7 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவராகிய பர்த்ருஹரி நீதி சதகம், வைராக்கிய சதகம், சிருங்கார

சதகம் என மூன்று நீதி நூல்களை இயற்றியுள்ளார். பர்த்ருஹரியை 'பத்திரகிரி' எனத் தமிழில் வழங்குவதுண்டு. இவருடைய பாடல்கள் கருத்துச் செறிவும் பொருள் நயமும் பெற்றுத் திகழ்கின்றன.

நீதி சதகம் பத்து அதிகாரங்கள் கொண்டது. ஒவ்வோர் அதிகாரத்திலும் பத்துபாடல்கள் உள. நாலடியார், திருக்குறள் போன்ற நீதி இலக்கியங்களில் கூறப்பட்ட கருத்துகளை ஒத்த கருத்துகள் நீதிசதகத்திலும் காணப்படுகின்றன.

அறிவில்லாருக்கு மௌனமே அணி

'அறிவில் முதிர்ந்தவர் கூடிய அவையின் கண்ணே அறிவில்லார் மௌனமே கொண்டிருப்பாராயின் அம்மௌனமே அவருக்கு அணியாகும்' என நீதி சதகம்(4) உரைக்கிறது. இக்கருத்தை

''கல்லாதவரும் நனிநல்லார் கற்றார் முன்

செல்லா திருக்கப்பெறின்'' (குறள் 403) என்றுவள்ளுவர் தெள்ளத் தெளிய உரைத்துள்ளார்.

ஊழ்வினை

'தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்' என்னும் முதுமொழிக்கு ஏற்ப நாம் செய்யும் நல்வினை, தீவினையே நம்மைப் பற்றித் தொடர்வனவாகும். இதனை ஊழ்வினை என்பர். 'ஊழ்வினை உருத்து வந்தூட்டும்' என்றார் இளங்கோ அடிகள். 'நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும், செல்வம் அன்று செய்வினைப் பயனே' என்றியம்புகிறது சங்க இலக்கியம். 'அவரவர் செய்யும் நல்வினைக் கேற்ப செல்வமும், புகழும், இன்பமும் எல்லாம் வாய்க்கும். அதுதான் கன்மநெறி' என நீதி சதகம் (10:8) கூறுகிறது. இதனை நாலடியார்.

''வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை

அளந்தன போக மவரவ ராற்றான்

விளங்காய் திரட்டினா ரில்லைக் -களங்கனிமைக்

காரெனச் செய்தாரு மில்'' (103 நாலடி)

என்று உவமை நயமபட விளக்க, வள்ளுவர்,

''ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று

சூழினும் தான்முந் துறும்.'' என ஊழின் ஆற்றலைப் பற்றிக் கூறுகிறார்.

இவ்வாற்றான் தீவினை, அறியாமை முதலியவற்றால் ஏற்படும் அழிவையும், ஈகை, ஒப்புரவு, கல்வி, சான்றோர் சிறப்பு, வீரத்தின் சிறப்பு முதலியவற்றால் எய்தும் உயர்வையும் பற்றி நாலடியார், திருக்குறள் , நீதி சதகம் முதலிய நீதி இலக்கியங்கள் சுருங்கக் கூறி விளங்க வைக்கின்றன.

முனைவர் க.இலக்குமி நாராயணி,

விரிவுரையாளர்,

தமிழ்த்துறை,

குருநானக் கல்லூரி,

சென்னை- 32.

மொழி வரையறையில் 'னகரத் தொடர் மொழி'

மகரத் தொடர் மொழி மயங்குதல் வரைநத னகரத் தொடர் மொழிகள் ஒன்பது என தொல்காப்பிய நூற்பா- 82 கூறுகின்றது. அத்தொடர்மொழிகள் எசின், செகின், விழன், பயின், குயின், அழன், புழன், கடான், வயான் என்னும் ஒன்பது சொற்களாகும் என உரையாசிரியர்கள் வரையறுத்துக் காட்ட முற்பட்டனர். அவ்வொன்பதும் மயங்காதன எனக் கொள்ளின் பலியன், வலியன் முதலாயினவும் மயங்கப் பெறா என மறுக்க என்று மயிலை நாதர் கூறினார். எனவே தொல்காப்பியர் வரையறுத்துக் கூறிய ஒன்பது சொற்கள் எவை எவை என்னும் நோக்கில்

ஆய்வறிஞர்கள் ஆராயத் தலைப்பட்டனர்.

பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரியார், வே.வேங்கடராஜுலு ரெட்டியார், மா.இளையபெருமாள், எஸ். சுப்பிரமணியன், கி.நாச்சிமுத்து, ச.பாலசுந்தரம் போன்றோர் னகரத் தொடர் மொழிகள் குறித்து ஆராய முற்பட்டவர்களுள் குறிப்பிடத் தக்கவராவர். மகரத் தொடர் மொழி மயங்குதல் வரைந்த னகரத் தொடர்கள் ஒன்பது என தொல்காப்பியர் வரையறுத்துக் கூறியுள்ளார் என்னும் அடிப்படையில் இவர்கள் சிந்தித்துள்ளனர் என்பது இவண் சுட்டிக்காட்டத்தக்கதாகும். எனவே, னகரத் தொடர்மொழிகள் குறித்து ஆய்வறிஞர்களிடையே கருத்து வேறு பாடுகள் நிலவுகின்றன. அச்சொற்களை இனம் காண்பதில் ஏற் பட்ட சிக்கல்களினால் ஒன்பது என்னும் வரையறை தெளிவுபடு மாறில்லை என ச.பாலசுந்தரம் தமது கருத்துரைக்கின்றார்.

னகரத் தொடர் மொழிகள் குறித்து ஆய்வறிஞர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுவதற்குக் காரணம் நூற்பா 82-இல் ஏற்பட்ட சிதைவும் அதன் செப்பமும் நோக்கிச் சிந்திக்காமையே எனலாம். இந்நூற்பாவும் உரையும் சிதைவுற்றுப்பின்னர் செப்பம் செய்யப் பெற்றிருக்க வேண்டும் என்பதற்கு இளம்பூரணர் உரையும் அவர் தம் எடுத்துக்காட்டுகளும் தக்க சான்றுகளாக விளங்குகின்றன என்னும் அடிப்படை நோக்கில் இக்கட்டுரை ஆராய முற்பட்டுள்ளது.

இந்நூற்பாவில் என்பஃது, எனப்படுமஃது போன்ற பாடங்க ளிலிருந்து சிதைவுற்று, பின்னர் ஒன்பஃது என செப்பனிடப் பட்டிருக்கவேண்டும். மேலும் மகரவீற்றுத் தொடர் மொழி மயங்குதல் வரைந்த னகரவீற்றுத் தொடர்மொழிகளின் வரைய றையைத் தொல்காப்பியர் அஃறிணை நோக்கியே குறிப்பிட் டுள்ளார். னகர வீற்றுத் தொடர் மொழிகளை எண்ணிக்கை யளவில் வரையறுத்து அவர் கூறவில்லை என்பதற்கு நன்னூல், முத்துவீரிய நூற்பாக்களும் சான்று பகருகின்றன.

எனவே னகரப் புள்ளியை ஈறாக உடைய தொடர்மொழிகளுள் மகர ஈற்றுத் தொடர்மொழிகளாக மயங்குதலின்று வரையறுக்கப்

பெற்றவை, அஃறிணைப் பெயரிடத்தாகுமன்றி எண்ணிக்கை அளவில் அல்ல் என்னும் உண்மையைத் தக்க சான்றுகளுடன் இவ் ஆய்வுரை நிறுவுகின்றது.

சி.இலட்சுமணன்,
சுவடித்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்-5.

துறை வழக்கு (Register)

பேச்சு, எழுத்து ஆகியன மூலம் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. இப்பேச்சு எழுத்து ஆகியனவற்றை ஒரே மாதிரியாக எல்லோரும் பின்பற்றுவதில்லை. இவ்வேறு பாட்டைக் கண்டறிய உதவுவதே நடையியலாகும். மொழியி யல், இலக்கியத் திறனாய்வு ஆகிய இரு துறைகளும் ஒன்றி ணைந்து உருவானதே நடையியல். நடையியல் விளக்கத்தை (Stylistic Description) மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை

1. நடையியல் கோட்பாடுகள் (Principles of Stylistics)
2. நடையியல் கூறுகள் (Stylistic Features)
3. நடையியல் உத்திகள் (Techniques of Stylistics)

ஒலி தொடங்கி, கருத்தாடல் வரை மொழியமைப்பு பல்வேறு கூறுகளை உள்ளடக்கி அமைகிறது. துறைவழக்கு நடையியல் கூறுகளில் ஒன்றாகும். ஒரு சொல்லோ தொடரோ பயன்படுத்தப் படும் சூழலைப் பொறுத்துத் தனித்த ஒரு பொருள் கொண்டி ருத்தல் துறை வழக்காகும். சான்றாகக் கழகம் என்னும் சொல் அரசியலிலும், இலக்கியத் துறையிலும் மாறுபட்ட பொருள் கொண்டு இயங்குவதைக் கூறலாம்.

தொல்காப்பியர் செய்யுள் ஈட்டச் சொற்களில் குறிப்பிடும் திரிசொல் துறைவழக்குக்கு இணையானது என அறிஞர்கள்

கருதுகின்றனர். துறைவழக்கைக் கண்டறிய மொழி செயல்படும் சூழலைப் பற்றி நாம் அறிந்திருக்கவேண்டிய மூன்று செய்திகள் பின்வருவன.

அவை:

1. துறைவழக்கு பயன்படும் கருத்தாடல் களம்(Field of Discourse)

2. கருத்தாடல் வழிமுறை (Mode of Discourse)

3. கருத்தாடல் பாங்கு (Tenor of Discourse)

என்பன

துறைவழக்கு கிளைமொழியுடன் நெருங்கிய ஒற்றுமைப் போக்கு உடையது. இரண்டையும் வேறுபடுத்திக் காட்டுவது கடினம். சாதி, பொருளாதார வர்க்க பேதங்கள், கல்வி, தொழில், நவநாகரிகச சிறப்புத் தன்மைகள் போன்றவை ஒரு கிளை மொழியின் தன்மையை நிர்ணயிக்கின்றன. துறை வழக்கைச் சூழல் தீர்மானிக்கிறது.

துறைவழக்குக்குச் சான்றாகப் பத்திரிகைத் துறைவழக்கைக் காட்டலாம். நடைமுறை வாழ்வில் வெவ்வேறு பொருளில் வழங்கும் சொற்கள் பத்திரிகையில் வேறொரு பொருளிலும் வழங்கப்படுகின்றன. குறைத்தொடர்கள் பயன்படுத்தும் போக்கு மரியாதை விகுதிகள் பயன்படுத்துவதில் இருக்கும் தனிப்போக்கு ஆகியன பத்திரிகைத் துறைவழக்குக்குச் சான்றுகளாகும்.

புதிய துறைகள் தோன்றத் தோன்றப் புதிய துறைவழக்குகள் பலவும் தோன்றி மொழியில் நிலைபெறும்.

முனைவர் ந.இளங்கோ,
திட்டப்பணி ஆய்வாளர்,
கிறித்தவத் தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்.

பொருண்மை புலப்படுத்தலில் சொல்லல்லாக் குறிகளின் பங்கு

'''குறித்தல்', 'தகவல் தொடர்பு' என்னும் இரண்டு தன்மைகளுக்குள் அடங்கிவிடுகிற யாதொரு செயலும் மொழிஆகி விடுகிறது'' என்று குறிப்பிடுகிறது் குறியியல் (Semiotics). இதனடிப்படையில் உடல்மொழி, விளம்பர மொழி, ஆடை மொழி, கோல மொழி என்றாற்போலக் குறியியலார் மொழியை வகைப்படுத்துகின்றனர். குறியியலின் இந்தக் கொள்கை மூலம் 'மொழிசார்', 'மொழி சாரா' என்ற முன்னைய பகுப்புக்கள் மறு பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டியனவாகின்றன. மேற்காட்டிய கொள்கையின் அடிப்படையில், இலக்கியத்தில் ஆளப்படும் மொழியை 'இலக்கிய மொழி' (Language of literature) என்று அழைக்கலாம்.

இலக்கிய மொழியைச் சொற்குறிகள் (Verbal signs), சொல்லல்லாக் குறிகள் (Non- Verbal signs) என இரண்டாக வகைப் படுத்தலாம். சொற்குறிகள் பற்றிப் பல ஆய்வுகள் விரிவாகவும் ஆழமாகவும் பல பரிமாணங்களில் முன்னரே நிகழ்த்தப் பட்டுள்ளன. சொல்லல்லாக் குறிகள் - குறிப்பாக, சொல்லல்லாக் குறிகளின் ஒருவகையான நிறுத்தற் குறிகள் -பற்றி மிகச் சில கட்டுரைகள் மட்டுமே வெளிவந்துள்ளன. எனவே இலக்கியப் பொருண்மைப் புலப்படுத்தலில் சொல்லல்லாக் குறிகளின் பங்கு பற்றி ஒட்டு மொத்தமாக ஒரு முழுமையான ஆய்வினை மேற்கொள்ள வேண்டியது அவசியாமாகிறது.

கவிதைகளை மட்டுமே முதன்மைத் தரவாய்க் கொள்ளும் இக்கட்டுரை மூன்று பகுதிகளாக அமையும்.

முதற்பகுதியில், 'சொல்லல்லாக் குறிகள்' என்பதற்கான விளக்கம் , வரையறை, இப்பகுப்பின் கீழ் வரும் குறிகள் எவையெவை என்பது பற்றிக் கூறப்படும்.

தமிழ்ப் புதுக்கவிதைகள் மற்றும் நவீன கவிதைகளில்

சொல்லல்லாக் குறிகள் பெருமளவில் ஆளப்படுகின்றன. இக்குறிகளின் பயன்பாட்டுப் பொருத்தத்தையும் தேவையையும் பற்றி இரண்டாம் பகுதியில் காணலாம்.

நவீன தமிழ்க் கவிஞர்கள் இச்சொல்லல்லாக் குறிகளை உத்தியாகவும் கையாளுகின்றனர். குறியீட்டாக்கம், படிமமாக்கல், எதிர்மறைப் பொருண்மை தருதல், பிறமொழிச் சொற்களை வேறுபடுத்திக் காட்டல் போன்ற பல நோக்கங்களில் சொல்லல்லாக் குறிகள் உத்தியாகின்றன. இவை பற்றி இறுதிப் பகுதியில் கூறப்படும்.

மொ.இளம்பரிதி,
ஆய்வாளர்,
தமிழ்ப்புலம்,
கிராமியப் பல்கலைக்கழகம்,
காந்திகிராமம்-624 302.

பாரதியின் பக்திப் பாடல்களில் சமுதாய உணர்வு

நம் தமிழகத்தில் காலந்தோறும் இலக்கியப் படைப்பாளர்கள் பலர் தோன்றித் தமிழ் மொழிக்கும், தமிழ் இலக்கியத்திற்கும், சமுதாயத்திற்கும் அரும்பணிகள் பல ஆற்றியுள்ளனர். அவர்களுள் மகாகவி பாரதியாரும் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

பாரதியார் வாழ்ந்த காலச் சமுதாயத்தில் பாரதநாடு அந்நியர் ஆட்சியில் சிக்குண்டு, அடிமைப்பட்டு, அல்லலுற்றுக் காணப்பட்டது. சமுதாயத்தில் சாதியின் அடிப்படையிலும், பொருளாதார ஏற்றத் தாழ்வுகளின் அடிப்படையிலும், ஆண்-பெண் என்ற பால் வேறுபாடுகளின் அடிப்படையிலும், சமயத்தின் அடிப்படையிலும் மக்களிடையே பல்வேறு ஏற்றத்தாழ்வுகள் நிலவின. பாரதநாடு விடுதலை பெற வேண்டும். தமிழ்ச்சமுதாயமும், பாரத மக்களும் சமத்துவநிலை

அடைந்து உலக அரங்கில் பெருமையுடன் வாழவேண்டும் என்ற பேரவா கொண்டவர் பாரதியார். சமுதாயத்தில் காணப்பெறும் இத்தகைய சீர்கேடுகள் அகன்றால்தான் மக்கள் மனத்தில் ஒற்றுமையும் விடுதலை உணர்வும் பிறக்கும் என உறுதியாக நம்பினார். எனவே, தம் படைப்புகளில் -அவை சமுதாயம் பற்றியதாயினும், சமயம் பற்றியதாயினும், மொழி பற்றியதா யினும், நாடு பற்றியதாயினும், இயற்கை பற்றியதாயினும்- அனைத்திலும் சமுதாய உணர்வு பிரதிபலிக்கும் வகையில் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார். இவ்வகையில் பாரதி யின் பக்திப் பாடல்களில் காணப்பெறும் சமுதாய உணர்வுகளை வெளிப்படுத்தும் நிலையில் இக்கட்டுரை அமைகின்றது.

சமுதாயம் சீராகச் செயல்பட, அது தன்னகத்தே பல்வேறு நிறுவனங்களைக் கொண்டு திகழ்கின்றது. இத்தகைய சமுதாய நிறுவனங்களில் ஒன்றே சமயம் ஆகும். சமயம் வெறும் இறையுணர்வையும், பக்தி நெறியையும், நம்பிக்கைகளையும் மட்டும் கொண்டிராது, அவற்றுடன் சமூக மேம்பாட்டுச் சிந்தனைகளையும், பல்வேறு பண்பாட்டுக் கூறுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளமையைச் சமூகவியலாளர்கள் விளக்குவர்.

சமயம் என்பது மக்களால், மக்களுக்காக, சமுதாய மேம் பாட்டுக்காக உருவாக்கப்பட்டதே என்ற உறுதியான சிந்தனை உடையவர் பாரதியார். எனவே, அவர் தாம் பாடிய பக்திப் பாடல்களிலும் பல்வேறு கோணங்களில் தம் சமுதாய உணர்வு களை வெளிப்படுத்தியுள்ள திறனை அறியமுடிகிறது.

பாரதியின் பக்திப் பாடல்களில் மக்களையும், விலங்குக ளையும், பறவைகளையும், புற்பூண்டுகளையும், கடல், மலை போன்ற இயற்கையையும் தம் உயிர் போல் எண்ணும் ஆன்மநேய ஒருமைப்பாட்டு உணர்வும், மக்களின் அறியா மையை அகற்றக் கல்வி கற்பித்தல், கல்விச் சாலைகள் அமைத் தல், பொருளாதாரத் தாழ்நிலையிலுள்ள மக்களின் வறுமையை ஒழித்தல், பிறர் துயர் துடைத்தல், பெண் விடுதலை வேண்டல்,

நாட்டு விடுதலை வேண்டல், உழைப்பை வலியுறுத்தல், மக்களிடையே நம்பிக்கை ஏற்படுத்தல் போன்ற சமுதாய மேம்பாட்டு உணர்வும், அன்புடைமை, அஞ்சாமை, கவலை கொள்ளாமை, உறுதியுடைமை, நல்ல மனமுடைமை போன்ற தனிமனித மேம்பாட்டு உணர்வும், சமயங்களின் பெயரால் மக்களிடையே பிரிவு மனப்பான்மை ஏற்படக்கூடாது என வலியுறுத்தும் சமய ஒருமைப்பாட்டு உணர்வும் இடம் பெறுதல் இக்கட்டுரையில் விளக்கப்படுகிறது.

தம் வாழ்க்கையின் ஒவ்வொரு நிலைகளிலும் சமுதாய முன்னேற்றம் பற்றியே சிந்தித்துச் செயலாற்றியவர் பாரதியார். எனவேதான், இறைவன் மீது கொண்ட அசைக்க முடியாத பக்தி, இறை நம்பிக்கை, இறைவன் பெருமைகள் ஆகியவற்றை வெளிப்படுத்துவதற்காகத் தாம் பாடிய பக்திப் பாடல்களிலும் சமுதாய உணர்வுகளைப் புலப்படுத்தியுள்ளார் எனலாம். இதன் மூலம் தம் சமுதாய உணர்வை வெளிப்படுத்தியமையுடன், மக்களுக்கும் அத்தகைய சமுதாய உணர்வுகள் தோன்ற வழிவகுத்துள்ளார் எனலாம். முற்கூறியன பற்றிய விளக்கங்களாக இக்கட்டுரை அமைகின்றது.

முனைவர் தா. ஈசுவரப்பிள்ளை
விரிவுரையாளர்,
இலக்கியத்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்- 613 005.

முளைப்பாரிக் கும்மியில் நிகழ்த்துதல் கூறுகள்

ஆடல் கலைகளில் ஒன்றான கும்மி சடங்கியல் சூழலில் ஆடப்பட்டு வந்தது. இந்தக் கும்மி இக்காலத்தில் பொழுது போக்குக்கலையாக மாறி வருகிறது. ஆண்களால் நிகழ்த்தப்

படும் கும்மி ஒயில் கும்மி எனப்படுகிறது. கும்மி, நிகழ்கலை களானகரகாட்டம், பொய்க்கால் குதிரை, தெருக்கூத்து போன்ற கலைகளுள் அடங்கும்.

இக்கட்டுரையின் முதல் பகுதியில் கும்மியின் வரையறையும், பெயர்க்காரணமும் ஆராயப்படுகிறது. பின்னர் கும்மி ஆட்டக் கலையாக உருவாக்கப்பட்ட நிகழ்வினைப் பற்றி விளக்குகிறது. கும்மிக் கலையானது சங்க இலக்கியம் குறிப்பிடும் குரவைக் கூத்திலிருந்து தனியாகக் கிளைத்து வந்ததா என்ற நோக்கிலும் ஆய்வு செய்கிறது.

இரண்டாம் பகுதி இக்கும்மிக்குத் தொடர்புடைய கலைக ளான கோலாட்டம், ஒயில்கும்மி, மற்றும் இலங்கையில் ஆடப் படும் வசந்தன் ஆட்டம் ஆகியவற்றுக்கும் கும்மிக்கும் உள்ள தொடர்பு பற்றி விளக்குகிறது. கும்மி நடைபெறும் சூழல்களான திருவிழா, பூப்புச்சடங்கு, பொங்கல், முளைப்பாரிச்சடங்கு, இராவண்டைபோடுதல், பொழுது போக்குக் கும்மிகள், இவற்றில் உள்ள மாறுபடும் தன்மைகள் விளக்கப்படுகின்றன.

மூன்றாவது பகுதியில் முளைப்பாரிச்சடங்கின் போதுள்ள கும்மியின் நிகழ்த்துதல் கூறுகள் நிகழ்த்துதல் கோட்பாட்டாய் வில் நோக்கப்படுகின்றது. முளைப்பாரிக் கும்மியின் நிகழ்த்து நர்கள், அவர்கள் பயன்படுத்தும் ஒப்பனை முறைகள் மற்றும் உத்திகள் , நிகழ்த்துகளம், பார்வையாளர்கள், ஆட்ட முறைகள், பாடும் பாடல்கள் இசை ஆகியவை இதில் விளக்கப்படுகின்றன.

தி. உமாதேவி,

ஆய்வாளர்,

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,

தரமணி,

சென்னை- 600 113.

தமிழ் இசைக் கலையில் செளராட்டிரர்

தமிழ்நாட்டில் தமிழருடன் இயைந்த வாழ்க்கையினை மேற்கொண்டு, தமிழினைத் தமது இரண்டாவது மொழியாகக் கற்றுவாழும் செளராட்டிரர், தமிழ்க் கலைகளிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டனர். தமிழ் இசைக் கலைக்குத் தொண்டாற்றிய செளராட்டிரர் குறித்து இயம்புவதே கட்டுரையின் நோக்கமாகும்.

செளராட்டிரரில், தமிழ் இசைக் கலைக்கு முன்னோடியாக விளங்கிய சுகந்த தூபதீர்த்தார்ய சுவாமிகள் (1551), ஸ்ரீதியாக ராஜரின் தலையாய சீடராக விளங்கிய ஸ்ரீவேங்கட்ரமண பாகவதர் (1781-1889), கி.பி.19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த குருக்கு சுப்பார்ய சுவாமிகள், மதுரையின் ஆண்டாள் என அழைக் கப்படும் நடன கோபாலநாயகி சுவாமிகள், கீதையின் கருத்து களைத் தமிழில் மொழி பெயர்த்துக் கிளிக் கண்ணிகளாகவும், எளிய பாடல்களாகவும் பாடித் தமிழுக்குச் சேவை செய்த கீதா அஷ்டாவதானி தொ.ரே.பத்மனாபய்யா, பக்திப் பாடல்க ளையும், திரை இசைப் பாடல்களையும் தெள்ளிய தமிழில் பாடி, திரையுலகில் வெற்றிக் கொடி நாட்டிய பின்னணிப் பாடகர் டி.எம்.செளந்தரராஜன், ஏ.எல்.ராகவன் ஆகியோர் தமிழ் இசைக் கலைக்குப் பெருந்தொண்டு ஆற்றியுள்ளது குறித்து ஆய்வதாகக் கட்டுரை அமைகிறது.

முனைவர் ஆ.உமா மகேஸ்வரி,
ஆய்வாளர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி,
சென்னை-600113.

தெருக்கூத்தில் சில பிரச்சினைகள்

நாட்டுப்புற மக்களின் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் வெளிப்படுத்தும் வகையில் அமைந்து விளங்குவன நாட்டுப்புறக் கலைகள். இக்கலைகளில் முத்தமிழும் அமையப் பெற்று முதன்மைக் கலையாகத் திகழ்வது தெருக்கூத்து. தமிழகத்தில் இன்றளவும் மக்களின் செல்வாக்கைப் பெற்று வரும் தெருக் கூத்தின் செயல்பாடுகளிலும் சில பிரச்சினைகள் காணப்படுகின்றன.

தெருக்கூத்தில், கூத்தர்களை உறுதிச் செய்வதற்காக வைக்கப் படும் தாம்பூலத்தில் பிரச்சினை; தாம்பூலத்தைப் பெற்றக் கூத்தர்கள் குறிப்பிட்டபடி கூத்தாட வந்துவிட்டால் அவர்களுக்கு வழங்கப்படும் உணவில் பிரச்சினை; கூத்தர்களுக்குக் கூத்தரங் கம் அமைத்துக் கொடுப்பதில் பிரச்சினை; கூத்தரங்கில் அமைக்கப்படும் ஒளியமைப்பில் பிரச்சினை; கிராம நிர்வாகிகள் கூத்தின் கதையைத் தேர்ந்தெடுப்பதில் பிரச்சினை; கூத்தர்கள் ஒப்பனைப் பொருட்களைக் கொண்டு வருவதில் பிரச்சினை; கூத்திற்கு ஒரு சில கூத்தர்கள் வரவில்லையென்றால், அவர்கள் பொறுப்பை மற்றவர்கள் ஏற்பதில் பிரச்சினை; கூத்தர்களின் ஆடல், பாடல் மற்றும் குரல் வளம் ஆகியவற்றில் பிரச்சினை; கூத்திற்காக வாங்கிய தொகையைக் கூத்தர்கள் பங்கீடு செய்வதில் பிரச்சினை; கூத்தில் நேரடிப் பங்கேற்கும் பார்வையாளர்களும் ஒரு பிரச்சினை என்பன தெருக்கூத்தின் செயல்பாடுகளில் காணப்படும் சிறுசிறு பிரச்சினைகளாகும்.

தெருக்கூத்தில் காணப்படும் மேற்கண்ட பிரச்சினைகள் யாவும் நிரந்தரமான-நிலையான பிரச்சினைகள் அல்ல. இயல்பாகத் தோன்றி இயல்பாக மறைவன. இப்பிரச்சினை

களைப் பற்றிய விளக்கமான ஆய்வும் அவற்றிற்குரிய தீர்வுகளும் இக்கட்டுரையின் விரிவாக்கத்தில் தெளிவாகக் கூறப்பெறு கின்றன.

செ.ஏழுமலை,
தமிழ் விரிவுரையாளா,
சர் தியாகராயர் கல்லூரி,
சென்னை-600 021.

வீட்டுக் கல்வி

ஆங்கிலேயர் ஆட்சியில், தமிழகத்தில், பத்தொன்பதாம் நூற்றாண்டில், பெண்களுக்கிருந்தச் சமூகச் சூழல் காரணமாக எழுந்த, வீட்டுக்கல்வி வகுப்புகளைப் பற்றிய ஆய்வாக இக்கட்டுரை அமைகிறது.

வீட்டுக்கல்வி, உயர்குடிப் பெண்களுக்கென்று ஒதுக்கப் பட்டத் தனியிடங்களில் நடத்தப்பட்டது. வீட்டுக் கல்வி கற்பிப்பவர்கள் பெண்களாக இருக்க வேண்டும் என்று பெற்றோர்களால் வலியுறுத்தப்பட்டது

மூன்று சமயச்சார்பற்ற நிறுவனங்கள் (இந்திய தேசியக்கழகம் இலவச மறைபரப்புத் திருச்சபை, இங்கிலாந்து மறைபரப்புத் திருச்சபை) வீட்டுக் கல்விக்கு விரிவான முயற்சிகள் மேற்கொண்டன. அவற்றின் செயற்பாடுகளும் நல்ல நிலையில் அமைந்தன. அத்துடன், வீட்டுக் கல்வி பற்றிய இந்தியக் கல்விக் குழுவின் பரிந்துரைகளும், 43-ஆம் பிரிவுச் சட்டத்தில் அடங்கிய குறிப்புரைகளும் வீட்டுக் கல்வி வளர்ச்சி பெற உதவுவனவாக அமைந்தன.

வீட்டுக் கல்வி வகுப்புகளுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகைகள் ஏற்புடையத் தன்மை பற்றிய இரு பொதுக் கல்வி

இயக்குநர்களின் (Director of public instruction) கருத்துக்கள் ஏற்புடைத்ததாக இருக்கின்றன.

பெண்களுக்கு வீட்டுக் கல்வியினால் சிறந்த பலன் ஏற்பட்ட தெனலாம். இவ்வீட்டுக் கல்வி வகுப்புகள் தொடர்ந்து நடை பெற்றனவா என்பதைப் பற்றி அறிய முடியவில்லை.

க.கண்மணிபிரியா,

ஆய்வாளர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி,
சென்னை-600 113.

இலக்கிய உளவியலும் கூர்மதித் திறனும்

மனிதனுடைய எண்ணங்கள் தோன்றும் இடம் மூளை ஆகும். மூளையின் இயக்கத்தால் எண்ணிய எண்ணங்கள் திண்ணியதாய் மாறுவதற்கு ஏற்ப உள்மனம், ஆழ்மனம், அடிமனம் என மூளையில் பதிந்து, படிந்து, பதிவாகி, செயலாக்கம் பெறத் தூண்டப்படுகிறது.

இலக்கியம் மனிதனை முழு மனிதனாக்குகிறது; மனிதன் முழுமை பெற, இலக்கிய உளவியல் வழி வகுக்கிறது. அஃது எங்ஙனம் வாய்க்கும்? என்பதை இக்கட்டுரையின் செல்நெறியில் காணலாம்.

பேரரசர்கள் மாதவத்தவர்க்கு அஞ்சி அடி பணிந்து நின்றதைக் காண்கிறோம். மன்பதைக்காக்கும் மன்னன் உயர்ந்தோன் என்றால், மாமுனிவன் அவனினும் மேலோங்கி நின்றதை இலக்கியங்களில் காணலாம்.

ஆளுந்திறத்தால் மன்னவன் உயர்ந்தவன் எனில், ஆன்மீக

ஆளுமைத் தரத்தால் மாதவன் பெரியோன் ஆகிறான்.

தென் தமிழ் இயம்பி இசை கொண்ட அகத்தியனை இராமன் அடிபணிந்தான். ''நின்றவனை வந்த நெடியோன் அடிபணிந் தான்'' இங்கு நின்றவன் குறுமுனி அகத்தியன், நெடியோன் இராமன்.

மேலும், இலக்கியச் செம்பொருள் காண விழையும் போது படைப்பாளர் உளவியலாலும் படைப்பாக்க உளவியலாலும் படிப்பவர் உளவியலாலும் மாந்தர் உயர்நெறி நிற்கும் பெற்றி பெறும் திறத்தை இவ்வுரைக்கண் காணலாம்.

மூளை கூர்மதியைத் தருகிறது; அதுவே உடலின் உறுப்பு களைச் சீர்பட இயக்கிச் சிறப்பு நல்குகிறது. ஆனால், மூளைக்கு நேரடியாக வளந்தர மருந்து இல்லை. ஆயின், மூளைக்கு இலக்கியம், விருந்து படைக்கிறது. இலக்கியம் காட்டும் உளவி யல் மூளைக்கு மருந்தாக-அமுதமாக- விளங்குகிறது. அஃது எங்ஙனம் ஒல்லும் என்பதை இக்கட்டுரை சுட்டுகிறது.

முனைவர் சி.கதிர் மகாதேவன்,
பேராசிரியர், தலைவர்,
ஒப்பிலக்கியத் துறை,
தமிழியல் புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை-625 021.

மோதலும் தீர்வும்

இதழச் சிறுகதை மகளிர், சூழ உள்ள மாந்தரோடு மோதல் விளைகையில் கையாளும் பாதுகாப்பு உத்திகள் (strategies of defence) இக்கட்டுரையின் கண் ஆராயப்படுகின்றன.

0.1 காரன் ஹார்னி கருத்து

மோதல் நேரும்போது தம்மைப் பொருத்தப்பாடுறத் தகவமைத்துக் கொள்ள மாந்தர் சில பாதுகாப்பு உத்திகளை மேற்கொள்ளுவதாக காரன் ஹார்னி என்ற உளவியல் அறிஞர் கூறுவார்.

அவையாவன:

1. மக்களை நோக்கி இயங்குதல் (moving towards people)

2. மக்களுக்கு எதிராக இயங்குதல் (moving Against people)

3. மக்களை விட்டு விலகி இயங்குதல் (moving away from people)

இதழ்ச் சிறுகதை மகளிர் வாழ்வு நிகழ்ச்சிகள் காரன் ஹார்னி கூற்றை உறுதிப்படுத்துகின்றன.

0.2 ஔவை கூற்று:

சங்கப் பெண்பாற் புலவர் ஔவையார் தலைவனைப் பிரிந்த தலைவியின் நிலை பற்றிக் கூறும் கூற்றிலே காரன் ஹார்னி குறிப்பிடும் பாதுகாப்பு உத்திகள் மூன்றும் உள்ளனவாகக் கொள்ள இடமுண்டு.

''முட்டுவேன் கொல் தாக்குவேன்கொல்
யாதேனும் ஓர்பெற்றி மேலிட்டு
ஆஒல் லெனக்கூவு வேன்கொல்?''

எனத் தலைவி தன் நிலைபற்றிக் குறிப்பிடுகிறாள். தன்னைத்தானே முட்டி மோதிக்கொண்டு வாழும் நிலையில் தற்சார்பு அற்றவராய்க் கையற்ற நிலையில் பிறரைச் சார்ந்தும், தனக்குக் குற்றம் இழைத்தவர் மீது பகைமை உணர்ச்சி மிக்கவழி அவரைத் தாக்கியும், இவை இரண்டாலும் பயனில்லை என உணர்ந்தவழி 'ஆஒல்'லெனக் கூவி, உறவுகளைவிட்டு விலகியும் வாழும் தலைவியின் மூவகை நிலை காரன் ஹார்னி கூறும்

மூவகையான பாதுகாப்பு உத்திகளுக்குப் பொருத்தமாக உள்ளது.

1.0 முட்டுவேன் கொல்..

தன்னைத் தானே முட்டி மோதி வருத்திக் கொண்டு, வேதனைக்கு ஆளாகி, தனக்கென்று தனித்துவமின்றிப் பிறரைச் சார்ந்து வாழுவோர் முதல் வகையினர். பிறந்த வீட்டுப் பாசத்தினாலும், உற்ற நண்பர்க்கு உறுதுணையாக விளங்க வேண்டும் என்ற நட்புரிமையாலும், உடல் பூர்வமாகக் கணவனைச் சார்ந்து வாழ்தல் உணர்வு பூர்வமாக நிறைவைத் தரவல்லது என்று கருதுவதாலும் தன்னுடைய தனித்துவத்தை அர்ப்பணித்து விட்டு ஒத்துப்போதலே தக்கது என எண்ணும் மகளிர் பற்றிய சிறுகதைகள் காணப்படுகின்றன.

2.0 தாக்குவேன்கொல்...

பிறரோடு கொண்ட உறவில் மோதல்கள் ஏற்படுகையில் எதிராக இயங்குவோர், தம்மை எதிர்த்தவரைத் தாக்கவும் அஞ்சுவதில்லை. மனைவியை அடக்கியாள எண்ணும் கணவனையும், கணவன்மார் கொடுமையை எதிர்த்துக் குரல் தொடுக்கும் மனைவியையும் சிறுகதைகள் காட்டுகின்றன. இங்ஙனம் மக்களுக்கு எதிராக இயங்கித் தம் மோதலைத் தவிர்த்துக் கொள்ளும் மகளிர் இரண்டாம் வகையினர்.

3.0 'ஆஒல்' லெனக் கூவுவேன் கொல்...

விரக்தியினால் சுய வெறுப்புக்கு (self hate) ஆளாகித் தனக்குத் தானே அந்நியமாகிப் போன (self-Alivated) மகளிர் சமுதாயத்திலிருந்து ஒதுங்கி வாழுகின்றனர்.

'ஆஒல்' எனக் கூவுவதைத் தவிர வேறு வழி அறியாது சமூகத்தில் தனிமைப்பட்டுவிடுகின்றனர்.

ஒத்து இயங்குவோர் சில சூழலில் பொங்கி எழுவதுண்டு; பொங்கி எழுவோர் விலகி வாழ்வதுமுண்டு; விலகி வாழ்ந்தோர் மீண்டும் இணைந்து ஒத்து இயங்குவதுமுண்டு. சூழலைப்

பொறுத்து மேற்கூறியவாறு மூவகையாக இயங்கி மகளிர் தம் மோதலுக்குத் தீர்வு காணுவது சிறுகதைகளில் காணப்படுகிறது.

முனைவர் பி.என்.கமலா,
14/34 பெரிய கருப்பன் தெரு,
சிவகாசி-626189.

ஒரு மானிடவியல் ஆய்வு

பொதுவாகத் தமிழகத்தில் திருமண விழாக்களிலும், காதணி விழாக்களிலும் புதுமனைப் புகுவிழாக்களிலும் உறவினர்களும் நண்பர்களும் கலந்து கொண்டு விழா நடத்தும் குடும்பத்தாரிடம் தமது அன்பளிப்பாக ஒரு குறிப்பிட்ட தொகையை மொய் என்ற பெயரில் கொடுக்கும் பழக்கம் தொன்று தொட்டு இருந்து வருகிறது. மொய்யாக வழங்கப்பட்ட அத்தொகையைப் பெற்றுக் கொண்டவர் அவர்தம் உறவினர் நண்பர் நாளடைவில் நடத்தக்கூடிய திருமண விழா, புதுமனை புகுவிழா, காதணி விழா காலங்களில் மொய் என்ற பெயரில் திரும்பச் செலுத்தும் மரபு வழக்காற்றில் இருந்து வருவதை நாம் அறிவோம். இம்மரபானது உறவினர் நண்பர்கள் குடும்பங்களுக்கிடையே உள்ள நல்லுறவை விளக்கும் ஒரு சமூகப் பண்பாட்டு முக்கியத்துவம் உடைய வழக்காறாகத் தமிழகத்தில் நெடுங்கால மாக இருந்து வருகிறது. இத்தகைய மொய் வழங்கும் பழக்கம் தமிழகத்தில் வெவ்வேறு பகுதிகளில் நாளடைவில் பல்வேறு மாறுதல்களை அடைந்து தற்போது தஞ்சை, புதுக்கோட்டை மாவட்டங்களில் குறிப்பாகப் பட்டுக்கோட்டை, பேராவூரணி, குருவிக்கரம்பை, கீரமங்கலம், சேந்தன்குடி, ஆலங்குடி வட்டார மக்களிடையே சிறப்பாக நடத்தப்படும் மொய் விருந்து விழாக்களாக நடத்தப்படுகின்றன. இத்தகைய மொய் விருந்து விழாக்கள் சமூக பொருளாதார பண்பாட்டு முக்கியத்துவம் உடைய ஒரு புதிய பொருளாதார நிதி உதவி நிறுவனமாகப் பயன்பட்டு வரும் உண்மைகளை மானிடவியல் கள ஆய்வு அடிப்படையில் எழுதப்பட்ட இக்கட்டுரை விளக்குகிறது.

முனைவர். வி.கருப்பையன்,
பேராசிரியர் - தலைவர்,
மானிடவியல் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை -600 005.

தளிச்சேரிக் கல்வெட்டு

தஞ்சாவூர் ராஜராஜீசுவரம் திருக்கோயிலின் வடக்குத் திருச்சுற்று மாளிகை வெளிச் சுவரில் இடம் பெற்றிருக்கும் மிக நீண்ட கல்வெட்டுகளுள் தளிச்சேரிக் கல்வெட்டும் ஒன்றாகும். முதலாம் இராசராசரின் இருபத்தொன்பதாம் ஆட்சியாண்டு வரை மன்னரால், ராஜராஜீசுவரத்திற்குத் தரப்பட்ட நிவந்தக்காரர்கள் மற்றும் சோழ மண்டலத்துத் தளிச்சேரி களிலிருந்து வரவழைக்கப்பட்டு இக்கோயில் தளிச்சேரிகளில் குடியேற்றப்பட்ட தளிச்சேரிப் பெண்டுகள் குறித்த பல அரிய தகவல்களை இக்கல்வெட்டு எடுத்துரைக்கின்றது. 1892 இல் திரு.ஹுல்ஷ் அவர்களால் முதன் முதலாகப் பதிப்பிக்கப்பட்ட இக்கல்வெட்டு, 1969இல் டாக்டர் இரா.நாகசாமி அவர்களாலும், 1985இல் திரு. வே. மகாதேவன் அவர்களாலும் மீண்டும் பதிப்பிக்கப்பட்டது. இம்மறு பதிப்புகள் இரண்டுமே முதற்பதிப்பை அப்படியே பின்பற்றியுள்ளன. ஒரு திருத்தம் கூட இல்லாமல் இவ்விரண்டு மறுபதிப்புகளும் வந்திருப்பதைப் பார்க்கும் போது 1892க்குப் பிறகு தளிச்சேரிக் கல்வெட்டு மீண்டும் படிக்கப்படவே இல்லையோ என்று தோன்றுகிறது. டாக்டர் மா.இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையக் கல்வெட்டாய்வர்கள் தங்கள் கள ஆய்வின் போது இக்கல் வெட்டின்மு ற்துதிப்பில் பல குறிப்பிடத்தக்க குறைகள் இருப்ப தைக் கண்டறிந்துள்ளனர். விட்டுப்போனதாக முதற்பதிப்பு குறிப்பிடும் சில சொற்கள் இருப்பதுடன், தவறாகப் படிக்கப்பட் டுப் 'பதிப்பிக்கப்பட்டிருக்கும் சில சொற்களின் சரியான வடிவங்களும் இம்மறு ஆய்வினால் வெளிச்சத்திற்கு வந்

துள்ளன இப்புதிய கண்டுபிடிப்புகளை அறிமுகப்படுத்து வதுடன், கல்வெட்டின் இருப்பிடம், அமைப்பு, இதன் எழுத்தமைதி, இது தெரிவிக்கும் பயனுள்ள பல செய்திகள் ஆகியவற்றை நிரல்பட விரித்துரைப்பதும் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தளிச்சேரி என்ற சொல்லில் இணைந்துள்ள 'தளி' ,'சேரி' என்னும் இரண்டு சொற்களின் பொருள் விளக்கங்களும் ஆராயப்பட்டுள்ளன. தொல்காப்பியம் தொட்டுப் பதினெண் கீழ்க்கணக்கு இலக்கியங்கள் வரை இவ்வாய்வு நிகழ்த்தப் பட்டுள்ளது. தளிச்சேரிப் பெண்டுகளாய் இக்கல்வெட்டு வெளிப்படுத்தும் நானூறு பெண்களின் பெயர்களும் வரிசைப் படுத்தப்பட்டு வகைப்படுத்தப்பட்டதில், பல அரிய செய்திகள் கிடைத்துள்ளன. பெயர்களின் ஈறு, முன்னொட்டு பின்னொட்டு களின் தன்மை, பெயர் சார்ந்து நிற்கும் ஊர், இறை, கோயில், அரசமரபு என்பன பற்றிய விரிவான ஆய்வு எனப் பல கோணங்க ளில் இப்பெண்டுகளின் பெயர்கள் பகுத்தாயப்பட்டுள்ளன. ராஜராஜீசுவரத்திற்கு வருவதற்கு முன் இவர்கள் வாழ்ந்திருந்த தளிச்சேரிகள் எந்தெந்த ஊர்களில் இருந்தன, எந்தெந்தக் கோயில் களோடு தொடர்புடையனவாய் இருந்தன என்பன போன்ற தகவல்களும் நிரல்படத் தொகுக்கப்பட்டு ஊர்ப்பெயர்களும் கோயில் பெயர்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இத னால் ராஜராஜர் காலத்தில் இருந்து இன்று சுவடழிந்து போய் விட்ட பல கோயில்களின் பெயர்களும், இன்றைய ஊர்கள் சில வற்றின் அன்றைய பெயர்களும் பார்வைக்குக் கிடைத்துள்ளன.

இக்கோயிலுக்கு இராசராசரால் உவந்தளிக்கப்பெற்ற நிவந்தக் காரர்களின் பெயர் வரிசையும் பல பயனுள்ள செய்திகளைத் தருகிறது. நிவந்தம், நிவந்தக்காரர் என்னும் சொற்களின் பொருள் ஆய்வோடு தொடங்கும் இப்பகுதி, இப்பணியாளர்களைப் பணி நோக்கில் பிரித்தறிந்து அறிமுகம் செய்கிறது. கோயில் சார்ந்த பலவகைப் பணிகளை இதனால் அறிய முடிகிறது. பல்வேறு இசைக்கருவிகள் பயன்படுத்தப் பட்ட நிலைமையும், அவற்றுள் சில அபூர்வமான கருவிகளாக இருந்த சூழலும் தெரிய

வந்துள்ளன. பாடவியம், மெராவியம் (? மோர்வியம்) போன்ற மிக அரிய இசைக்கருவிகள் பற்றிய செய்திகள், பிற கோயில் கல்வெட்டுகளிலிருந்து தேடியெடுக்கப்பட்டு இணைக்கப் பட்டுள்ளன.

கோயில் நிவந்தக்காரர்கள் ஒவ்வொருவருக்கும் தரப்பட்ட ஊதியம், அவர்கள் பணியமர்த்தப்பட்டபோது உணர்த்தப்பட்ட விதிமுறைகள், அவ்விதிமுறைகள் ஒழுங்குறப்பின்பற்றப்பட்ட பாங்கு எனக் கல்வெட்டு குறிக்கும் சில செய்திகள் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டு பற்றி வெளிவந்தி ருக்கும் பிற கட்டுரைகளில், ஆசிரியரின் பார்வைக்குக் கிடைத்த கட்டுரைகள் கல்வெட்டுச் செய்திகளுடன் ஒப்பிடப்பட்டு அவற்றிலுள்ள குறைகளும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

டாக்டர். இரா. கலைக்கோவன்,
இயக்குநர்,
டாக்டர் மா.இராசமாணிக்கனார்,
வரலாற்றாய்வு மையம்,
48, புத்தூர் நெடுஞ்சாலை,
திருச்சிராப்பள்ளி- 620 017.

புறநானூறு மகளிர் ஆளுமை

பெண்ணுரிமை சித்தாந்தம் தழைத்தோங்கும் காலத்தில் வாழும் நிலையில் பின்னோக்கிப் பார்க்கும் வகையில் புறநானூற்று மகளிர் ஆளுமை என்னும் தலைப்பு அமைந்துள்ளது. பழங்காலத் தமிழக வரலாற்றினை அறிய உதவுவது சங்க இலக்கியம். பெண்ணியம் பேசும் தற்காலச் சூழலில் புறநானூறு பெண்ணியம் பற்றி என்ன மொழிகின்றது என்பதை ஆய்வதே ஆய்வின் நோக்கமாகும்.

''புறநானூற்றில் பெண்ணியம் ''என்னும் தலைப்பு,

1. பெண்களின் கலவி

2. பெண்களின் வீரம்

3. பெண்களின் அரசியல் அறிவு

4. பெண்களின் கலைத்திறன்

5. பெண்களின் மனநிலை

6. பண்பாடும் பெண்களின் உரிமையும்

என்னும் உட்தலைப்புகளைக் கொண்டு ஆராயப்படுகின்றது.

புறநானூற்றுப் பெண்களை

1. மறக்குடி மகளிர்

2. கல்வி மகளிர்

3. கலை மகளிர்

4. புலவர் மகளிர்

5. அரச மகளிர்

6. பணி மகளிர்

7. தொழிற் மகளிர்

என்று பிரித்துப் பார்க்க வாய்ப்புளளது.

ஈன்றோர் ,பூவிலைப் பெண்டிர், பருத்திப் பெண்டிர், மனைக்கு விளக்கு ,வாணுதல் மகளிர், மங்கல மகளிர்,பாசிழை மகளிர், அரிமதர் மழைக்கண்ணாள், குவளையுண்கண்ணாள், ஒண்டொடி மகளிர், வாலிழை மகளிர், மடமங்கையர், மாணிழை மகளிர், மனையோள், இலங்குவளை மகளிர் என்றெல்லாம் புறநானூற்றில் அழைக்கப்பட்டாலும்,

“கெடுக சிந்தை கடிதிவள் துணிவே

மூதின் மகளி ராத றகுமே”.

என்று போற்றப்படும் செய்தியும் புறநானூற்றிலேயே வருகின்றது.

புறநானூற்று மகளிரின் சமூக நடத்தை, தனியன், சமூகம், பண்பாடு ஆகிய மூன்றினைக் கொண்டது. பண்பாடு என்பது ஒரு சமூகத்துக்கு அல்லது சமூகத்தின் ஒரு பகுதிக்குச் சொந்தமான பங்கு பெற்ற நடத்தைகளையும் நம்பிக்கைகளையும் பருப் பொருளான பொருள்களையும் கொண்டது. பண்பாடு என்பது ஒரு சமூக மரபுரிமையாகக் கருதப்படுகின்றது. மனப்பான் மைகள், நம்பிக்கைகள், அறிவு ஆற்றல் ஆகிய யாவும் பண் பாட்டின் பகுதியாக அமைகின்றன. எனவே புறநானூற்று மகளிர் அவர்கள் வாழ்ந்த காலத்திற்குரிய பண்புகளையும் நம்பிக்கை களையும் கொண்டுள்ளனர்.

புறநானூற்றுப் பெண்களுக்கு, இன,சமுதாய, வகுப்பு, சாதி வேறுபாடுகள் அடிப்படை உந்துதல் ஆகின்றன. அதனால் இப்பெண்களிடையே மன நிலையில், நடத்தையில் வேறுபாடு காணப்படுகின்றன. இவர்களின் மனப்பான்மைகள்,(Attitudes) நம்பிக்கைகள், அறிவு ஆற்றல்கள் ஆகிய யாவும் பண்பாட்டின் பகுதியாக அமைகின்றன.

முனைவர். கஸ்தூரி நாகராஜன்,
பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீ பராசக்தி கல்லூரி,
குற்றாலம்- 627 812.

காப்பு உத்திகளும் படைப்பிலக்கியமும்

இலக்கியமும் உளவியலும்

இலக்கியத்திற்கும் உளவியலுக்கும் உள்ள தொடர்பு தெகார்டே முதல் இன்றைய ரெனெ வெல்லக் வரை காலங்காலமாகப் பேசப்படுவது. இலக்கியப் படைப்பு - அதன் உருவாக்கத்திற்கான உளவியல் காரணிகள் - ஆசிரியரின் உள வெளிப்பாடு- வெளிப்பாட்டின் கொள்கலமாக விளங்கும்

வடிவத்திற்கும் உளவியலுக்கும் உள்ள தொடர்பு -படைப் பாக்கத்தில் உளவாம் உருக்காட்சிகள், குறியீடுகள் போன்ற வற்றிற்கு உளவியல் விளக்கம் காணல் - படைப்பில் காணப் படும் பாத்திரங்களின் நடத்தை மாறுபாடுகளுக்கு உளவியல் கோட்பாடுகளின் அடிப்படையில் விளக்கம் அளித்தல் -படைப்பை ஏற்கும் வாசகனின் உளவியல் மனிதனின் வளர்ச்சிப் படிநிலைகளில் உளவாம் ஒவ்வொரு நிலை பற்றியும் உளவியலார் கூறும் குழந்தை உளவியல், குமரப்பருவத்தினரின் உளவியல், முழுமை அடைந்த வாலிப மனிதனின் உளவியல், முதியோர் உளவியல் ஆகியுவற்றுடன் தனக்கு ஏற்படும் பிரச்சனைகள், போராட்டங்கள் போன்றவற்றைச் சமாளிக்க இயலாது உளம் சமநிலை இழந்தமையால் ஏற்படும் பிறழ்நிலை உளவியல், மனக்கோட்டம் போன்றவை பற்றிய உளவியலாரின் கோட்பாடுகளின் அடிப்படையில் இலக்கியப் படைப்புகளைக் காணல்- என உளவியல் திறனாய்வு இன்று விரிந்து கொண்டே செல்கிறது.

விழைவு நிறைவேற்ற உத்திகள்:

மறுக்கப்பட்டு அமிழ்த்தப்பட்ட ஆசைகளும் ஆசை நிறைவேற்றமும் தான் கனவுகளுக்கும் படைப்பாக்கங்களுக்கும் அடிப்படைக் காரணம் என்பார் ஃபிராய்டு. சமுதாயத் தர நிர்ணயங்கள், பண்பாடு வலியுறுத்தும் கட்டுப்பாடுகள் போன்றவை மனிதனில் இயற்கையாய் எழும் உள எழுச்சிகளையும், இயல்பூக்கங்களையும் உந்துதல்களையும் கட்டுப்படுத்தும் பொழுது அதனால் ஏற்படும் மன அழுத்தத்தை நீக்கிக் கொள்ள மனித மனம் பல்வேறு வழிகளில் முயல்கிறது. அவ்வாறு மன அழுத்தம் நீக்கப்படவில்லையெனில் மனிதனின் உளம் பிறழ வாய்ப்பு ஏற்பட்டு விடும். அவ்வாறு உளம் பிறழாமல் இருக்க மனம் பல்வேறு உத்திகளைக் கடைபிடிக்கிறது. கனவு, பகற்கனவு, படைப்பாக்கம் போன்றவை அவற்றுள் சில. உளச் சமச்சீர் நிலையைக் (Psychological Balance) காக்கக் கடைப்பிடிக்கும் இவ்வுத்திகளைக் காப்பு உத்திகள்(Defence Mechanisms) என்பர் உளவியலார்.

ஆழ்மன உளவியல (Depth Psychology) தற்காப்பு என்னும சொல்லை ஓர் உளவியல் கலைச் சொல்லாகப் பயன்படுத்து கின்றது.

ஒரு மனிதனின் வளர்ச்சிப்படிகளில், ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் எளிதாக நிறைவேறிய அவன்து ஆசைத் துடிப்புகள், பின்னர் வயது வளர்ச்சி காரணமாகத் தவிர்க்கப் படுகின்றன. அவ்வாறு பிறரால் தடுக்கப்படுவதாலோ, ஏதேனும் தண்டனையளிக்கப்படும் என்ற பயமுறுத்ததாலோ அவன் தன்னிச்சையான இயல்பான தடைகள் மூலம் நனவிலி மனதின் செயலாக அந்த துடிப்புகளைத் தவிர்த்துக் கொள்கிறான் அல்லது அவற்றைக் கட்டுப்படுத்திக் கொள்கிறான். இதையே தற்காப்பு என்று கூறுகிறது ஆழ்மன உளவியல்.

இந்தக் கட்டுப்பாடுகளைச் செயல்படுத்த அவன் மேற் கொள்ளும் உத்தியே காப்பு.உத்தி. அவை பல: விருப்பப் புனைவு, பகற்கனவு, பதிலீடு, அடையாளம் காணல்/ பொருத் திக் காணுதல், புறத்தெறிப்பு/ விழைவு ஏற்ற வெளியீடு, காரணம் காட்டல்/ அறிவார்ந்த விளக்கம் தரல், பின்னடைவு, சில கூறு களை மட்டும் மறத்தல், எதிர்மறை மறுப்பு, விழுப்பமுடை மையாக்கல், உண்மையை ஏற்க மறுத்தல், இட மாற்றம், எதிர்ச் செயல் உருவாக்கம், நா பிறழ்ச்சி, அமுத்துதல், புதைத்தல் (sup-pression), மறுத்து மறத்தல், (repression), பின்னோக்கிப் போதல் (regression) என்பன போன்ற பல காப்பு உத்திகள் உள்ளன.

இவை ஒவ்வொன்றுமே மனிதனின் நடத்தை வேறுபாடு களுக்குக் காரணங்களாகின்றன. இவற்றுள் பல படைப்பாக் கத்திற்குக் காரணமாகின்றன. எடுத்துக்கார்ட்டாக, விருப்பப் புனைவு, பகற் கனவு, பதிலீடு, விழைவு ஏற்ற வெளியீடு, விழுப்பமுடைமையாக்கல் ஆகியனவற்றைச் சுட்டலாம். இவையாவும் படைப்பாளரின் உள்வியல் சம்பந்தப்பட்டவை. வேறு சில காப்பு உத்திகள் படைப்பாக்கங்களில் காணப்படும் பாத்திரப் படைப்புகளின் நடத்தை மாறுபாடுகளுக்குக்

காரணமாவதை அறிய முடிகிறது. இவை எவ்வாறு அமைந்துள்ளன என ஒவ்வொரு காப்பு உத்தியாக வரிசைப்படுத்திக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முனைவர் இரா. காஞ்சனா
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

மிகுதிப் பொருள் உருபுகள்

''ஒரு மொழியில், பொருள் தரும் ஆற்றலுள்ள மிகச்சிறிய கூறே உருபு'' என்று மொழியியல் வரையறுக்கிறது. ஓர் உருபு வேறு ஒரு அல்லது பல உருபுகளோடு சேர்ந்து சொற்களை உண்டாக்குகிறது. இதனைச் சொல்லாக்கம் எனலாம். சொல்லாக்கம் பற்றியும் குறிப்பாக உருபுகளின் செயல்திறன் பற்றியும் பல ஆய்வுகள் தமிழில் வந்துள்ளன. ஆனால் இவையெல்லாம் பின்னொட்டாகும் உருபுகள் பற்றி மட்டுமே ஆராய்ந்துள்ளன.

'பின்னொட்டு மொழி' என்று குறிக்கப்படும் தமிழ் மொழியில், சொல்லாக்கத்தில் பின்னொட்டுகளே மிகுதியான பங்கு வகிக்கின்றன என்பது நிறுவப்பட்டுள்ளது. ஆனால் இக்காலத் தமிழில் முன்னொட்டுக்களின் பயன்பாட்டை அதிகம் காணமுடிகிறது. அவற்றுள் ஒருவகை மிகுதிப்பொருள் தரும் இயல்பினவாக உள்ளன. இம் மிகுதிப்பொருள் உருபுகள் பற்றி இதுவரை எந்த ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை. இந்தக் கட்டுரை புது முயற்சியாக அவை பற்றி ஆராய்கிறது.

பேச்சுத்தமிழ், எழுத்துத்தமிழ் இரண்டும் தரவுளாக அமைகின்றன.

இக்காலத் தமிழில் படு, மிக, ரெம்ப, வெகு, அதி, மகா, பயங்கர போன்ற உருபுகள் முன்னொட்டுகளாய் இடம்பெற்று மிகுதிப்பொருள் தருகின்றன. இவை பெயரடை, வினையடையை மிகுவிக்கின்றன.

1. மிகுதிப்பொருள் தரும் முன்னொட்டுக்களைத் தொகுத்தல்

2. தொகுத்தவற்றை அளவையியல் (Logic) நெறிப்படி வகைப்படுத்தல்

3. இவ் உருபுகளின் பன்முகச் செயலாற்றலை ஆராய்தல்.

4. தொல்காப்பியர் கூறும் உரிச்சொற்களுக்கும் மிகுதிப் பொருள் உருபுகளுக்கும் இடையிலான உறவு நிலையைக் காணல்.

ஆகிய பணிகளை இக்கட்டுரை செய்கிறது.

நா.காந்திமதி,
ஆய்வாளர், தமிழ்த்துறை,
காந்திகிராமப் பல்கலைக்கழகம்.

தமிழ்க் கல்வியில் இலக்கணத்தின் பங்கு

மொழியறிவு, மொழிக்கல்வி, மொழிப்பயன்பாட்டிற்கு இலக்கண அமைவுகளின் தேவையினைச் சுட்டுவதாக இக்கட்டுரைப் பொருள் அமைகிறது.

தமிழ் மொழியினைக் கற்போர்- கற்பிப்போர், தமிழறிஞர்கள் இடையே தமிழிலக்கணம் குறித்து, ஒரு தெளிவான கருத்தோட்டத்தினை ஏற்படுத்த முயல்வது இக்கட்டுரையின் நோக்கம். அதாவது தமிழ்மொழியினைக் கற்பதிலும், கற்பித்தலிலும் அடிப்படை ஆதாரமாக அமைவது இலக்கணம் என நிறுவுதல். தமிழியல் துறைகளில், உயர்தர ஆய்வுகள் நிகழ்த்தப்பெறும் ஆய்வுக்களங்களில் தமிழிலக்கணக் கூறுகள் ஆய்வுமுறைகளாகப் பெரிதும் பயன்படும் நுட்பச் சிறப்பினை எடுத்துக்காட்டி உணர்த்த முற்படுதல்.

காலந்தோறும் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப மொழிபெறும் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைவது இலக்கண அடிப் படைகள் என்பதைச் சான்றுகள் தந்து விளக்குதல். தமிழியலில் பல்கிப் பெருகியுள்ள பல்வேறு துறைகளுக்கும் உரிய ஊற்றுக்கண்களைத் தமிழிலக்கணம் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது என்பதைச் சுட்டிக்காட்டுதல், தமிழ்மொழியின் பாதுகாப்பிற்கு முதலில் கருத்தூன்ற வேண்டிய துறை தமிழிலக் கணத்துறை என எடுத்துரைத்தல். அதில் கழிவன வற்றைக் கழித்துக் கவனிக்கத்தக்கனவற்றைக் கருத்தில் கொண்டு பல்துறை தொடர்பான வளர்தமிழைப் பயன்பாட்டுத் தமிழாக நடை முறைப்படுத்த வேண்டுதல்.

கா.காளிதாசன்,
முதுநிலை விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
தியாகராசர் கல்லூரி,
மதுரை -9.

சிலப்பதிகாரத்தில் உருக்காட்சியும் அமைப்பியலும்

சிலப்பதிகாரம் -காப்பியப்படைப்பின் உருவாக்கத்திற்கு உருக்காட்சி (Imagery) காரணமாகவுள்ளது எனக் காண்பது ஆய்வு நோக்கம்.

அமைப்பியல் வடிவம் (Form) கட்டமைப்பு (Structure) இலக்கிய வகை- மையக்கருத்தைக் குறிக்கும் நூலின் வடிவம். அதன் பல உறுப்புக்களின் கூட்டுத்தொகுதி- மனித உடல் அமைப்பு -நூலின் கட்டமைப்பு: உருவம் படைப்பின் உயிர்நாடி - உயிர்ப்பின் ஒருமை (Organic Unity) கோலரிட்ஜ் கருத்து. கவிதையிலுள்ள பலதரப்பட்ட சொற்கள், உருவகங்கள்(Images) முரண்குறிப்பு(irony) முரணுரை(paradox) இவை உண்டாக்கும்

இழுவிசை (tension) கவிதையில் சமநிலையை (equilibrium) ஏற்படுத்துகிறது. சமநிலை கவிதையை முழு அமைப்பாகக் காட்டுகிறது.

வடிவத்தில் கட்டமைப்பு அல்லது இழையோட்டம் கட்டமைப்பு (Matter of arrangement) கட்டமைப்பு நூலின் எலும்புக்கூடு. இழையோட்டம் அதன்மேல் உள்ள போர்வையான தோல்.

இறுதியாக அடையப்பெறும் உள்ளடக்கமே (achived content) வடிவம். மார்க்ஷாரர் கருத்து. உத்திகளைக் கொண்டு தரவு ஒன்றிற்குக் கலைவண்ணம் வழங்கும் திறன் (artful arrangement of a given content) கலைவடிவம் ஆகிறது. தொல்காப்பியர் குறிப்பிடும் 'வனப்பு' பேராசிரியர் உரை.

உருக்காட்சி: அனைத்து வகை உவமை, உருவகம், ஐம்புல உணர்வு, மனவுணர்வு வழி வரும் உருக்காட்சிகள் - கற்பனைச் சித்திரம்(imagenative picture). ஒரு பொருளை அழுத்தமுறத் தெரிவித்தல், தெளிவுபடுத்தல் உயர்வுபடுத்தல் போன்ற செயற்பாடுகள் -வருணனை அல்லது விரித்துரை (Description) பின்னணியாக, குறியீடாக வருதல், துணைவடிவு (Sub Structure) தலைமைக்கருத்து (motif) என்ற நிலைகளில் அமைதல். அமைப்பியல் உறுப்பாக விளங்குதல்.

காப்பியம்: ஒரு கதையிலிருந்து காப்பியத்தை உண்டாக்கும் கவித்திறம். தண்டியலங்காரம் குறிப்பிடும் காப்பியப் பண்புக் கூறுகள், வாழ்த்து, வணக்கம், நாற்பொருள் உரைத்தல், தன்னேரி லாத் தலைவனைப் பெற்றிருத்தல். மலை, கடல், நாடு, நகர், பருவம், இருசுடர்த் தோற்றம் பற்றிய புனைவு, நன்மணம், பொழில்நுகர்தல், புனல் விளைாட்டு, மக்கட்பேறு, புலவியிற் புலத்தல், கலவியிறகலத்தல், மந்திரம், தூது, செலவு, இகல், வென்றிபற்றி விவரித்தல், உட்பிரிவுகள் பெற்றிருத்தல்.

சிலப்பதிகாரம்: காப்பியம்- தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் பெற்றிருத்தல்- பாவிகம் -மூன்று உண்மைகள்

கோவலன், கண்ணகி வரலாறு - கதைச்செய்தி - மூன்று காண்டம், முப்பது காதைகள் ஒவ்வொரு காதையிலும் உருக்காட்சிகள் இடம் பெற்றுள்ளமை. சில காதைகள் உருக்காட்சியாக அமைந்துள்ளமை. இயற்கை, அன்றாட வாழ்க்கை என்ற இரு பிரிவுகளாக உருக்காட்சிகள் உள்ளமை. ஐம்புல உணர்வு, மனவுணர்வு என்பவற்றின் வழி பெறப்பட்ட உருக்காட்சிகள், வருணிப்பு அடைமொழி, முதலியவற்றால் வரும் உருக் காட்சிகள் கண்ணகியின் சிறப்பு, நாடு, நகர், வளம், தத்துவ விளக்கம், இவற்றையும் இவைபோன்ற முக்கியமான பொருள் களையும் சிறப்பிக்கும் வகையில் உருக்காட்சி வரும் திறன்.

1. காட்சிப் புல உருக்காட்சி i, இயற்கை (அ) வானியல் கோள்கள் ஞாயிறு, நிலவு, ii, மேகம், ஆறு, கடல் iii, நெருப்பு, iv, மலை, (ஆ) நிலைத்திணை: i, வித்து, ii, கொடி, iii கொழுந்து, iv, தளிர், v, மலர்

(இ) இயங்குதிணை: i அரி, ii கரி, iii உளியம், iv அரவு, v கயல், vi வண்டு, vii மயில் , viii அன்னம்

II அன்றாட வாழ்க்கை (அ) மக்கள் உரு

i அரசுரு, ii பெண், iii கூத்தர், iv பாகன், v உயிரில்லாயாக்கை, vi கண்மணி, vii கோவலன் உரு

(ஆ) பொருள்கள்: i விளக்கு, ii பொன், iii முத்து, iv பவளம், v விரை , vi ஆரம், vii ஊதுலைக்குருகு, viii வேல், ix வலை, x துடி, xi பாலை, பொதியறை

2. கேள்விப்புல உருக்காட்சி: I இயற்கை : i வானியல் இடி, ii கடல், iii கிளி, iv தும்பி

II அன்றாட வாழ்க்கை, i இசைக்கருவிகள், ஒலி, ii சந்தப்பாடல்கள்: கானல்வரி, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, துன்பமாலை; வஞ்சினமாலை, குன்றக் குரவை, வாழ்த்துக் கதைப்பாடல்கள், iii, பல்வேறு ஒலிகளை அடுக்கிக் கூறும் உத்தி iii நுகர்வுப் புல உருக்காட்சி: அமிழ்து, கரும்பு, தேன், iv நுகர்வுப்

புல உருக்காட்சி, காசறுவிரை, பலவகை மலர்களின் மணம், பத்துத்துவர், ஐந்து விரை, ஓமாலிகையில் ஊறிய நன்னீர், நெய்வாசம், கூந்தல் மணம், குங்குமம், நாவிக்குழம்பு, தேய்வை, மான்மதச்சாந்தம் அட்டிற்புகை, ஆவுதிப்புகை.

v ஊற்றுப்புல உருக்காட்சி: வலம்புரிமுத்து, காந்தள், பாரம், மாலைப்பொழுது, கடற்கரை, வேனில்

vi மனவுணர்வு உருக்காட்சி: i கருத்து, ii பழங்கதை, ஊழ்வினை, செல்லுயிர், வடமீன், செவ்வேள், திருமகள், உத்தரகுரு, காமன், ரதி, இராமன், நளன், கொற்றவை, காளி, அணங்கு

vii அடைமொழி

viii குறியீடு

முனைவர் இரத்தின. கிருட்டிணமூர்த்தி,

தாயகம்,
15, மில் ரோடு,
ஷண்முகபுரம்,
பழனி- 624 602.

அகத்திரட்டு -நூல் அறிமுகம்

தொகுப்பு முயற்சி

தொகைநூல் மரபு தமிழுக்கு உரியது. தனி முயற்சியால் பாடல்கள் இயற்றப்பட்டிருந்தாலும் அவற்றைத் தொகுத்துக் காண்பதில் முன்னோர் இன்பம் கண்டனர். அவ்வாறு தொகுத்துக் காண்பதற்கென்று தணித்த இலக்கியக் கொள்கைகளையும் வகுத்திருந்தனர். செய்தான், செய்வித்தான், இடுகுறி, அளவு, சிறப்பு முதலியவற்றால் ஒரு நூல் பெயர் பெறும் என்று முறைப்படுத்தியிருந்தமையும் நோக்கத்தக்கதாகும்.

சங்க இலக்கியங்களில் பாட்டும் தொகையும் தொகை நூல்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். அந்நூல்களைத் தொகுத்தார் யார்? தொகுப்பித்தார் யார்? என்ற குறிப்புக ளெல்லாம் காணக்கிடைக்கின்றன. தொகை நூல்களில் அடங்கும் இப்பாக்களெல்லாம் வெவ்வேறு பொருண்மைகளில், வெவ்வேறு அடிநிலைகளில், வெவ்வேறு யாப்பு வகைகளில் அமைந்தவையாகும். பொருண்மை கருதியும், அடிநிலை கருதியும், யாப்புவகை கருதியும் தொகைப் படுத்தப்பட்டு அளிக்கப்பெற்றிருப்பதால் அவை இன்று சிறந்த இலக்கியத்தரம் வாய்ந்தனவாகப் போற்றப்படுகின்றன. தொகுப்பு முயற்சி என்பது ஒரு காலத்தில் மட்டும் நடைபெற்றுப் பின் அறுபட்டு விடாமல் தொடர்ந்தும் நடைபெற்று வந்திருக்கின்றது. பேராசிரியர் ச.வையாபுரிப்பிள்ளையின் புறத்திரட்டுப் பதிப்பும், மு.இராகவை யங்காரின் பெருந்தொகைப் பதிப்பும் தொகை நூல் முயற்சியில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளன.

உரை மேற்கோள் பாடல்கள்

மூல நூல்களைப் போலவே அவற்றிற்கெழுந்த உரைகளும் பன்முகச்சிறப்பு கொண்டவையாகும். நம்முடைய இலக்கண நூல்களுக்கும் இலக்கிய நூல்களுக்கும் உரைகள் எழுதப்பட்டி ருக்கவில்லையென்றால், அரிய பல இலக்கியச் செல்வங்களை நாம் இழந்திருப்போம் என்பதில் ஐயமில்லை. குறிப்பாக, இலக்கண நூல்களுக்கு எழுந்த உரைகளின் வாயிலாக மறைந்து போன நூற்றுக்கணக்கான நூல்களைப் பற்றி அறியமுடிகின்றது. அவற்றோடு ஆசிரியர் பெயர் அறியவியலாத பல பாடல்கள் அவ்வுரைகளில் பிணைந்து கிடப்பதையும் காண முடிகின்றது. இப்பாடல்களைத் தொகுத்துச் சிறந்த ஒரு இலக்கியப் படைப் பாக வெளிக்கொணர வேண்டும் என்ற அவாவின் வெளிப்பாடே அகத்திரட்டு என்னும் இந்நூலாகும்.

இந்நூலின் உருவாக்கத்திற்கு இளம்பூரணரின் தொல்காப்பிய உரை, நச்சினார்க்கினியரின் தொல்காப்பிய உரை, பேராசிரியர்

உரை, இறையனார் அகப்பொருளுரை, யாப்பருங்கலவிருத்தி, யாப்பருங்கலக்காரிகையுரை, தமிழ்நெறிவிளக்கம், களவியற் காரிகை, இலக்கண விளக்கம், இலக்கணச் சூடாமணி முதலிய நூல்கள் பயன்பட்டுள்ளன.

புறத்திரட்டு -அகத்திரட்டு

அகத்திரட்டு என்னும் இந்நூலில் 307 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அகத்திரட்டு என்று இந்நூல் பெயர் பெறுவதற்குப் பேராசிரியர் ச.வையாபுரிப்பிள்ளையின் 'புறத்திரட்டு' என்னும் நூலே காரணமாக அமைந்தது. புறப்பாடல்களைத் தொகுத்த நூலாக அந்நூல் அமைந்ததால் அகப்பாடல்களைத்தொகுத்த நூலாக இந்நூல் அமைந்துள்ளது. மு.இராக வையங்காரும், ச.வையாபுரிப்பிள்ளையவர்களும் அகத்தொகுப்பு நூல் ஒன்று வரவேண்டும் என்ற எண்ணத்தை வெளிப்படுத்தியிருந்தமையும் இந்நூலின் எழுச்சிக்கு ஊக்கமாரக அமைந்தது.

அகத்திரட்டு

அகத்திரட்டு என்னும் இந்நூல் இலக்கண உரைகளில் உரையாசிரியர்களால் மேற்கோளாக எடுத்தாளப்பெற்றுள்ள, நூற்பெயரோ ஆசிரியர் பெயரோ, அறியவியலாத, ஆசிரியப் பாவால் அமைந்த,முழுமையான அகப்பாடல்களின் வரன்முறைப் படுத்தப்பெற்ற ஒரு தொகுப்பு நூலாகும்.

உரைகளுள் காணப்படும் பாடல்கள் பல்வேறு யாப்பு வகைகளைச் சார்ந்தனவாய் இருக்கவும், முதன்மையும் தொன் மையும் கருதி ஆசிரியப்பாவால் அமைந்த பாடல்கள் மட்டுமே இத்தொகை நூ ஷி இடம்பெற்றுள்ளன. இத்தொகுப்பில் அடங்கிய உரை மேற்கோள் பாடல்கள் அனைத்தும் சங்கப் பாடல்கள்தாம் என்று கருதும் அளவிற்குக் காணப்படுகின்றன.

இந்நூலுள் அமைந்த 307 பாடல்களும், இலக்கண நூல்களுள் குறிப்பிடப்பட்டுள்ள திணை வகுக்கும் முறையை அடிப்படை யாகக் கொண்டு திணை வகுக்கப்பெற்றுள்ளன. அவ்வகையில் குறிஞ்சி 173, பாலை 51, முல்லை 39, நெய்தல் 26, மருதம் 18 எனப்

பாடல்கள் முறைப்படுத்தப்பட்டுள்ளன.

இப்பாக்களின் கூற்றிற்குரியோராகத் தலைவன், தலைவி, தோழி, பாங்கன், செவிலி, கண்டோர், பரத்தை, ஆயத்தார், நற்றாய், காமக்கிழத்தி, கட்டுவிச்சி முதலிய பதினொருவர் இடம்பெற்றுள்ளனர். பாடல்களின் பொருண்மை கருதித் திணை வகுக்கப்பட்டுள்ளதோடு, உரையாசிரியர்களின் துறை மேற்கோள் தொடர்களே இப்பாடல்களுக்குரிய துறை விளக்கங்களாகத் தரப்பட்டுள்ளன.

பல்வேறு அரசர்களைப் பற்றிய குறிப்புகளும், ஊர் பற்றிய சிறப்புகளும் இப்பாடல்களில் காணப்படுகின்றன. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற புறப்பாடல் தொடர் 'இதுநும் ஊரே யாவரும் கேளிர்' *(183)* என அகப்பாடல் தொடராக இடம் பெற்றுள்ளது. அரிய பல உவமைகளும் இயற்கைப் புனைவுகளும் இப்பாடல்களுள் பொதிந்து காணப்படுகின்றன.

இந்நூல் தொடரடைவு, உரையாசிரியர் நிரலில் பாடல் எண்கள், அடி எண்ணிக்கையில் பாடல்கள், பாவகையில் பாடல்கள், கூற்று வகையில் பாடல்கள், பாடல் முதற்பதிப்பு அகரநிரல் எனும் அரிய பின்னிணைப்புகளுடன் அமைந்துள்ளது.

இந்நூல் இக்கட்டுரையாளரின் பதிப்புப் பணியில் அண்மையில் உருவானதாகும். வெளியீடு: பாண்டியன் பதிப்பகம், என்.சி.9 ஆசிரியர் குடியிருப்பு, தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-5.

முனைவர் சா.கிருட்டிணமூர்த்தி,
முதுநிலை விரிவுரையாளர்,
அறிவியல் தமிழ்த்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்- 613 005.

காடவராயர்

பிற்காலச் சோழப் பேரரசின் ஆட்சிக்காலத்தில் காடவராயர் என்ற சிற்றரசர் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் செல்வாக்குடன் இருந்தனர். கோப்பெருஞ்சிங்கன் என்ற மன்னன் இம்மரபில் வந்தவன். மூன்றாம் இராசராசனைச் சேந்தமங்கலம் சிறையில் வைத்தவன். இம்மன்னன் காடவராயன் என்றும் கச்சிராமன் என்றும் அழைக்கப்படுகிறவன்.

இந்தக் கோப்பெருஞ்சிங்கன் குறித்து திரு எஸ்.ஆர்.பாலசுப் பிரமணியம் தமிழ் நூல் எழுதியுள்ளார். திரு கோவிந்தசாமி ஆங்கிலத்தில் காடவராயர் என்ற தலைப்பில் எழுதி உள்ளார். நூற்றுக்கு மேற்பட்ட கல்வெட்டுகளைக் கொண்ட காடவராயர் ஊர் எது? அவர்களுடைய சந்ததி இப்போது உள்ளதா என்பது குறித்து இதுவரை ஆய்வு செய்யப்படவில்லை. காடவராயர் முதலில் எங்கிருந்து ஆண்டனர் என்பது குறித்தும் அம்மரபின ரின் பரம்பரை இன்றும் விருத்தாசலம் வட்டத்தில் முகாசப் பருர் என்ற ஊரில் இருப்பது குறித்தும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

ச.கிருஷ்ணமூர்த்தி எம்.ஏ,
தொல்லியல் அலுவலர்,
அரசு தொல்பொருள்ஆய்வுத்துறை,
சிதம்பரம் 608 001.

தமிழ் இலக்கியச் செல்நெறிகள் 'சுபமங்களாவில்' வந்த நேர்காணல் வழி சிறப்பாய்வு

நவீனத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் இதழ்களின் பங்கு முக்கியமானதாகும். புதிய இலக்கிய வடிவங்கள், அதனை யொட்டிய திறனாய்வுகள் என்ற நிலையில் இடமளித்து

இலக்கியத்தின் பன்முகங்களைத் தமிழிலும் இடம் பெறச் செய்தவை இதழ்களேயாகும். பாரதியாரின் பத்திரிகைப் பணி தொடங்கி, மணிக்கொடி(1933), சரஸ்வதி(1954), எழுத்து (1959), தாமரை(1959), நடை(1968), வானம்பாடி(1972), கசடதபற(1972) என்று தொடர்ந்து இன்று பல்வேறு சிறு பத்திரிகைகள் இப்பணியை முறையாகச் செய்து வருகின்றன. இன்றைய நிலையில் இலக்கிய வாதிகளின் உளப்பதிவுகள், இலக்கியப் புரிதல்கள், கருத்து மோதல்கள், சிந்தனைத் தெளிவுகள் என்று இலக்கிய வெளிப்பாடுகளின் ஒரு கருவியாக இருக்கும் இதழ்களில் 'சுபமங்களா'வின்பணி கவனிக்கப்படத் தக்கதாகும்.

இக்கட்டுரையில் 1991லிருந்து 1995 வரையில் வெளிவந்த நேர்காணல்களில் பேசப்பட்டக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு, நவீனத்தமிழ் இலக்கியச் செல்நெறிகளை அறிய முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்காலக்கட்டத்தில் சுமார் ஐம்பத்து ஏழு நேர்காணல்கள் அச்சேறியுள்ளன. இவற்றில் திராவிடக் கலாச்சார ஆய்வு நடத்திய ஓர் அமெரிக்கர், இரண்டு இசை வல்லுநர்கள், ஒரு நாட்டியக் கலைஞர், மதப் பிரச்சனைகள் குறித்துக் கருத்து வழங்கிய ஒரு பொறியியலாளர், ஒரு தொழிலதிபர் நீங்கலாக, மற்றவர் யாவரும் நேரடியாகப் படைப்பிலக்கியத்தில் பங்கு கொண்டவர்கள். படைப்பாளிகள், திறனாய்வாளர், நாடகக் கலைஞர், மொழிபெயர்ப்பாளர், பத்திரிகையாளர் என்று வேறுபட்ட தளங்களிலிருந்தும், கன்னடம், மலையாளம், கொங்கணி மொழியில் எழுதியவர்களும், இலங்கையின்தமிழ் இலக்கியவாதிகளும் தங்களுடைய கருத்துகளை நேர்காணலில் பதிவு செய்துள்ளனர். ஒரு நேர்காணல் மட்டும் 'சிகரத்தைத் தொடும் சிறு பத்திரிகைகள்' என்ற தலைப்பில் சிறு பத்திரிகைகளை அறிமுகப்படுத்தி அதனுடைய இலக்கியப் பணிகளை விவரிக்கின்றது.

இந்நேர்காணல்களில் இடம் பெற்றுள்ள இலக்கியவாதிகள் படைப்பு உலகில் ஈடுபட்டிருந்த காலப்பகுதி பல்வேறு காலக்கட்டத்தை உள்ளடக்கிய ஒரு விரிந்த எல்லையைக் கொண்ட காலப்பகுதியாகும். இவர்கள் தாங்கள் கொண்டிருந்த

இலக்கியப் புரிதல்களின் வழி கோட்பாடுகளையும், இயக்கங் களையும் தூக்கிப்பிடித்தனர். இவ்வியக்கங்களின் கோட்பாடு களின் செல்வாக்கினால் படைக்கப்படும் இலக்கிய வடிவங்கள் வேறுபட்ட செல்நெறிகளின் ரீதியில் வெளிவந்தவைகளாக இருக்கின்றன. இதில் ஒரு படைப்பாளியின் இலக்கியப் புரிதல் கள் மென்மேலும் மேம்படும் போது அப்படைப்பாளி தன்னைப் புதியதொரு இயக்கத்தில் மற்றும் கோட்பாட்டில் இணைத்துக் கொண்டு புதிய நெறியில் தன்னுடைய படைப்புகளைக் கொண்டு வருவதும் உண்டு. இது இலக்கியத்தில் தொடர்ந்து நடைபெறும் தொடர் நிலைச் செயலாகவும் அமைகின்றது.இது இல்க்கியப் புரிதல்களில் தெளிவு சேர்ப்பதாகவும் இருக்கின்றது.

பெரும்பான்மையாகப் பேசப்படும் செல்நெறிகளாக விளங் குபவை காந்தியம், மார்க்சியம், திராவிடம், எதார்த்தம், அமைப் பியல், நவீனத்துவம், பின் நவீனத்துவம், பெண்ணியம், தலித்தி யம் என்ற கோட்பாடுகளேயாகும். நேர்காணலில் படைப் பாளிகள் எவ்வாறு தாங்கள் இக்கோட்பாடுகளினால் ஈர்க்கப் பட்டனர் என்ற பின்புலத்தையும் தெளிவுபடுத் தியிருப்பது முக்கியச் செய்தியாகும். சிறு பத்திரிகைகளைச் சார்ந்த படைப் பாளிகளும், திறனாய்வாளர்களும் ஒன்று அல்லது சில குறிப் பிட்ட கோட்பாடுகளில் தங்களை இணைத்துக்கொண்டு ஓர் இயக்கமாக இயங்கி வருகின்றனர். இது குழுமம் மனப்பான் மையை உருவாக்குவதுடன், தாங்கள் தூக்கிப்பிடிக்கும் கோட் பாடே சிறந்தது என்ற இலக்கிய சர்ச்சைகளைத் தோற்று விக்கவும் செய்கின்றது. இதை நேர்காணல்களில் தெரிவிக்கப் பட்ட கருத்துக்கள் வழியாகவும், அந்நேர் காணல்களில் அடுத்தடுத்த இதழ்களில் இடம் பெறும் பதிலுரைகள் வழியாகவும் அறிய முடிகின்றது. இக்கருத்து மோதல்கள் இலக்கியக் கருத்தாக்கங் களை மேலும் மேம்படுத் துவதற்கு ஆக்கப்பூர்வமான களமாக வும் அமைகின்றன. தொண்ணூறுகளின் 'சுபமங்களா' நேர் காணல்கள் நவீன தமிழ் இலக்கியத்தில் 1930 களிலிருந்து இடம் பெற்ற கோட்பாடுகள் மற்றும் இயக்கங்கள் பற்றிய சிந்தனை களை வெளிப்படுத்தியிருந்தாலும், அமைப்பியல், நவீனத்து வம், பின் நவீனத்துவம், பெண்ணியம்,தலித்தியம் ஆகிய

கோட்பாடுகளின் விரிவான விவாதங்களை முன் வைப்பதில் அதிக அக்கறை செலுத்தி இருப்பதைக் காண முடிகின்றது.

எம். கிருஷ்ணன்,
ஆய்வாளர், தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்.

பண்பாட்டு மாற்றத்தில் தகவல் தொடர்புச் சாதனங்கள்

தகவல் தொடர்புச் சாதனங்களில் குறிப்பாக இதழ்கள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் போன்றன மக்களின் பண்பாட்டை மாற்றி வருகின்றன. இம்மாற்றம் மக்களுக்குக் குறைந்த அளவில் நன்மையையும், அதிக அளவில் தீங்கினையும் கொடுக்கின்றன. தீய வழியில் செல்லும் பண்பாட்டு மாற்றத்தினைப் பெரியோர்கள் விரும்பவில்லை. மக்களின் பாரம்பரிய வாழ்க்கை கெட்டுவிடக்கூடாது என்று அஞ்சுகின்றனர். இந்த மாற்றத்தினை எவ்வாறேனும் தடுத்து நிறுத்தவேண்டும் என்று முயற்சி செய்கின்றனர். ஆனால் தகவல் தொடர்புச் சாதனங்களால் பண்பாட்டு மாற்றம் சமுதாய மக்களிடையே வேகமாகப் பரவி வருகின்றது.

பண்பாட்டு மாற்றங்களில் குறிப்பிடத்தக்கன உணவுமுறை, ஆடை அணிகலன்கள் அணிதல், உறைவிடம், திருமணமுறை, மருத்துவ சிகிச்சை முறை, உடல்நலம் பேணுதல், போதைப் பொருட்களைப் பயன்படுத்துதல், வன்முறையில் ஈடுபடுதல் போன்றனவாகும்.

மக்கள் எவ்வகை உணவை உண்ணவேண்டும்? எவ்வகை உணவை உண்ணக்கூடாது என்று தகவல் தொடர்புச் சாதனங்கள் அறிவுறுத்துகின்றன. வெளிநாடுகளில் இருக்கும் இரவுநேர உணவு விடுதிகள் பற்றிய செய்தித் தொகுப்புகளைத் தகவல் தொடர்புச் சாதனங்களில் பார்த்ததன் விளைவாக இந்தியப் பெருநகரங்களில் இரவு நேர உணவு விடுதிகள் அதிக அளவில்

தொடங்கப்பட்டுள்ளன. இது போன்று வெளிநாட்டு குளிர் பானங்கள் அதிக அளவில் விற்கப்பட்டு வருகின்றன. நவீன ஆடை பற்றிய விளம்பரங்கள் தொலைக்காட்சியில் இடம்பெறு வதால் மக்கள் அதனை வாங்க முற்பட்டுள்ளனர். கல்லூரி மாணவர்களிடையே ஜீன்ஸ்பேன்ட்டும், மாணவிகளிடையே மிடி, மேக்ஸி, சுடிதார், பைஜாமா போன்றனவும் பிரபலமாகி வருகின்றன. அகாசி என்ற டென்னிஸ் வீரர் காதணி அணிந்ததைத் தொலைக்காட்சியில் பார்த்ததன் விளைவாகப் பெருநகர இளைஞர்களில் சிலர் காதணிகள் அணிகின்றனர். 'பெமினா' என்ற இதழில் வருகின்ற ஆபரணங்களைப் பற்றிய விளம் பரங்களைப் பார்த்துக் கல்லூரி மாணவிகளும், வசதிப் படைத் தப் பெண்களும் பழைய ஆபரணங்களை அடிக்கடி மாற்றிப் புதிய ஆபரணங்களை அணிகின்றனர். எளிமையாகத் திருமணம் நடத்துகின்ற முறையினைத் தவிர்த்து ஆடம்பரமாகத் திருமணத் தினை நடத்துகின்ற நிலை நிலவுகின்றது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற நிலை மாறி மேற்கத்திய பண்பாட்டு அடிப் படையில் ஒருவரைத் திருமணம் பண்ணுவதும் பின்பு அவரை விவாகரத்து பண்ணுவதும் மக்களிடம் அதிகமாகவே காணப்படுகின்றன. மருத்துவத்துறையிலும் பண்பாட்டு மாற்றம் ஏற்பட்டு வருகின்றது. கேரளாவில் மழைக்காலத்தில் நோயைக் குணப்படுத்தலாம் என்ற செய்தியைப் பத்திரிகைகளில் படித்த ஜெர்மானியர்கள் கேரளாவிற்கு வந்து மருத்துவ சிகிச்சைப் பெற்று வருகின்றார்கள். உடல்நலத்தைப் பேணுகின்ற மருத்துவச் செய்திகளை அதிக அளவில் தகவல் தொடர்புச் சாதனங்கள் வெளியிடுவதால் மக்களிடையே தமது உடலை எவ்வாறு ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று அஞ்சுகின்ற(Fitness fever) நிலையைப் பார்க்க முடிகின்றது. தகவல் தொடர்புச் சாதனங்களில் இடம் பெறுகின்ற போதைப் பொருட்கள் பற்றிய விளம்பரங்களால் போதைப் பொருட்க ளைப் பயன்படுத்துகின்றவர்கள் அதிகரித்து விட்டனர். கல்லூரி மாணவ, மாணவிகளும் இதற்கு அடிமை யாகிவிட்டனர். மேற்கத்திய துப்பாக்கி கலாச் சாரங்களையும், வன்முறைகளை யம், தொலைக்காட் சிகளிலும், திரைப்படங்களிலும் பார்க்கின்ற

தீவிரவாத குணம் உடையவர்கள் மேலும் தீவிரவாதத்திற்கு அடிமையாகி நாடெங்கும் துப்பாக்கி கலாச்சாரத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கின்றனர். வெடி குண்டுகளை வீசி, பொதுச்சொத்து களுக்கு நாசம் விளைவிக்கின்றனர்.

தகவல் தொடர்புச் சாதனங்களால் பெரிய அளவில் பண்பாட்டு மாற்றம் நடந்து கொண்டிருப்பதை யாவராலும் மறுக்க முடியாது. அவற்றுள் நன்மை பயக்கும் பண்பாட்டு மாற்றத்தை அனைவரும் வரவேற்கின்றனர். ஆனால் தீமை பயக்கும் பண்பாட்டு மாற்றத்தை அனைவரும் ஏற்றுக்கொள் வதில்லை. எனவே இத்தீய பண்பாட்டு மாற்றத்திற்குத் துணை போகும் தகவல்தொடர்புச் சாதன நிகழ்ச்சிகளை உடனடியாகத் தடுத்தாக வேண்டும். இதற்குரிய வழிமுறைகள் எவை என ஆராய்தல் அவசியம்.

முனைவர் என்.கிருஷ்ணன்,
விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
தெ.தி.இந்துக்கல்லூரி,
நாகர்கோவில்- 629 002.

நற்றிணையில் காலத்தை வென்ற கருத்துகள்

சங்க நூற்களைப் பயின்று அவற்றிலுள்ள நயங்களையறிதல், மனதிற்கு அளவிலா இன்பந்தரும் அனுபவமாகும். சங்கநூற் புலவர்கள் புனைந்துரையாக யாதொன்றும் கூறாது, நுணுகி ஆய்ந்த நுண்பொருட்களையே, உவமைகளாக்கிக் கூறியிருக்கும் பாங்கு, எக்காலத்திற்கும் பொருந்துவனவாயிருக்கின்றன

''நற்றிணை நல்ல குறுந்தொகை' என்று தொடங்கும் வெண் பாவினால், நற்றிணை எட்டுத் தொகை நூல்களுள் முதற்கண் வைத்துச் சிறப்பிக்கப்பட்டுள்ளது புலனாகின்றது. பாண்டியன்

மாறன் வழுதியினால் தொகுக்கப்பட்டு, ஒன்பதடிச் சிற்றெல்லையும், பன்னிரெண்டடிப் பேரெல்லையும் வாய்ந்த ஆசிரியப்பாக்களால் தொகுக்கப்பட்ட நானூற்றொரு செய்யுட்களைக் கொண்டது நற்றிணை.

அகநானூற்றுப் பாடல்கள் முதற்பொருளையும், குறுந்தொகைப் பாடல்கள் உரிப்பொருளையும் மிகுதியாக வைத்து எழுதப்பட்டுள்ளன என்பதும், நற்றிணைப் பாடல்களோவெனில், சமநிலையில் நின்று முதல், கரு, உரிப் பொருட்களைச் சம அளவில் விரவி, ஆழ்ந்த கருத்துகளை எடுத்துரைக்கின்றன என்பதும் ஆய்வாளர் கருத்து. இவ்வாறு வாழ்வியற் கூறுகள் அனைத்தையும், சமநிலையில் நின்று கூறுவதாலேயே, காலத்திற்குப் பொருந்தும் கருத்துகளைத் தருவதுடன், காலத்தையும் வென்று நிற்கிறது நற்றிணை.

நற்றிணைப் பாடல்கள் பழமையில் புதுமையைக் கூறுவனவாய் அமைந்துள்ளன. தொகுக்கப்பட்ட காலத்திலேயே 'நல்' என்கிற அடைச் சொல்லைப் பெற் றுள்ளது (நல்+திணை) என்னும் சிறப்பு நினைவிற் கொள்ளத்தக்கதாகும். 'நல்' என்றால், 'நன்மை பயப்பது' என்னும் பொருளுண்டு. காலந்தோறும், உலகத்தோடொட்ட ஒழுகும் பண்பினை வளர்ப்பவனாகவும், வழங்குகின்றவனாகவும், மனிதன் எக்காலத்தும் வாழவேண்டும் என்பதை உணர்த்தி எக்காலத்திற்கும், நன்மை பயக்கும் கருத்துக்கள் பலவற்றை, உலகளாவிய பண்பை, நற்றிணை பொருட்சுவை ததும்ப எடுத்துரைக்கின்றது.

சான்றாக,

''முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்'' (நற்றிணை 355), என்பதும் ஒன்றாகும், உண்மையான அன்பு இதயத்தில் குடிகொண்டிருக்குமேயானால், பிறர் செய்யும் பெருந்தீங்குகளையும் மறந்து வாழ்கின்ற நிலை வருதல் வேண்டும். அஃது எளிமையானதன்று ''எதிரேயிருந்து, நண்பனானவன், நஞ்சு வைத்துக் கொடுத்தாலும், நாம் நஞ்சென உணர்ந்ததை அவன் அறிந்தால், அவன் மனம் நடுங்குமே என்று, அவன் மனம் நோகக் கூடாதென்று, அவனுக்காக வருந்தி

அந்நஞ்சையும் உண்பதே நாகரிகம்'' என்று கூறுகிறது நற்றிணை. எக்காலத்தும் மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய உயர்ந்த நெறியை உணர்த்துகிறது இப்பாடல். குறிப்பாக, நம்பிக்கைத் துரோகமும், வஞ்சகமும் மலிந்து கிடக்கும் இக்காலத்திற்கு நற்றிணையின் இக்கருத்தினை நினைவூட்டுவது அவசியமானது.

எட்டுத்தொகை நூல்களுள், 'திணை' என்னும் அடைச்சொல் உடன் இணைந்து பெயர் பெற்றிருப்பது நற்றிணை ஒன்றுதான். அகப்பாடல்களுக்குத் 'திணை' என்னும் அடைச்சொல் சேர்ப்பது மரபு. 'திணை' என்றால் 'ஒழுக்கம்' என்று பொருள். 'அகத் திணை' அல்லது 'அகப்பாடல்கள்' என்றாலே, இல்வாழ்க்கை யில் மட்டுமே நிகழும் காதல், கூடல், ஊடல், பிரிவு போன்ற இல்லற வாழ்க்கை முறைகளைக் கூறும் நூல் என்கிற முடிவுக்கு வந்துவிடுகிறோம். அகப்பாட்டு பொதுவானது. ஒவ்வொரு வரும் எந்நிலையிலும், 'தத்தமக்கு' என்று எண்ணத்தக்க உரிமையுடையது. ஏனென்றால், உணர்வும், அறிவும், செயலும், எக்காலத்தும், எல்லா மனிதரிடத்தும், எப்பொழுதும் பொருந்தி யுள்ளவைகளேயாகும். காலத்திற்கும், இடத்திற்கும், சூழ் நிலைக்கும் ஏற்ப, சிற்சில மாற்றங்கள் இருப்பினும், உணர்ச் சிக்கும் அறிவுக்கும் ஏற்பச் செயல்படுவது மனித இயல்பு. இத்த கைய, உணர்வுகளைச் சித்திரிக்கும் நற்றிணைப் பாடல்கள், பெயர் குறிப்பிடப்படாமல், தலைவன், தலைவி, தோழி, பாங் கன், செவிலி என்று, பொதுவாகச் சுட்டிச் செல்லும் நிலையே, எக்காலத்தும் வாழும் மாந்தர் இயல்புகளைக் குறிப்பிட்டுக் கூறுவதாக அமைந்துள்ளது. ஒப்பாரும், மிக்காரும் இல்லாத தலைமகன், தன் நெஞ்சில் குமையும் உணர்ச்சிப் போராட் டத்தை, இவ்வாறு எடுத்துக் கூறுகிறான்.

''தேய்புரிப் பழங்கயிறு போல
வீவது கொல்என் வருந்திய உடம்பே''

-நற்றிணை 284.

வாழ்க்கைக்குத் தேவையான பொருள் தேட வேண்டு மென்கிறது அறிவு. நெஞ்சமோ, தலைவியுடன் இன்ப வாழ்வு மேற்கொள்ள வேண்டுமென்று விழைகின்றது. அறிவுக்கும்,

நெஞ்சின் ஆசைக்குமிடையே இழுபடும் பகையினால், உடல் அழிந்துவிடுமோ என்றுள்ள நிலையைக் களிற்று யானை இரண்டு, மாறாக நின்று வலிமையுடன் பற்றியீர்த்த, தேய்ந்த புரிகளைக் கொண்ட, பழைய கயிறு போல், உடல் அழிய வேண்டியதுதானோ என எண்ணுகிறான், என்று கூறுகிறது நற்றிணைப் பாடல். உலக அரங்கில், இன்று நாடுகளிடையே, மாநிலங்களிடையே, அங்குள்ள பெருந்தலைவர்களிடையே வீறுடன் மோதிக் கொண்டிருக்கும் உணர்ச்சிப் போராட்டங் களையே இப்பாடல் குறிப்பால் உணர்த்துகிறது. சர்வாதிகார ஆசை, பதவி மோகம் ஒரு புறமாகவும், அவர்களது அறிவாற்றல் செயலாற்றும் திறன் மறுபுறமாகவும் ஈர்க்கவும், இடையே நாடும் மக்களும் அழிந்துவிடுமோ என்கிற இன்றைய நிலை யையே இவ்வரிகள் எடுத்துக் காட்டுகின்றன.

''மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை'' என்று கூறி நற்றிணை போன்ற சங்க நூற்கள் கற்றலைச் சிலர் ஒதுக்கிவிடுவதுமுண்டு. ஆயினும் இக்கால வாழ்க்கையோடு, இறந்தகால வாழ்க்கையை ஒப்பிட்டு நோக்கி இறந்தகால வாழ்க்கை சிறந்திருப்பின், முன்னோர் காண் பித்துள்ள நன்னெறிகளை உணர்ந்து, அந்நெறி நின்று வாழ்வை மேம்படுத்துதல் சிறப்பு.

இன்றைய உலகிற்கு நற்றிணை உணர்த்தும் செய்திகளைக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கம்:

1. காலத்தை வென்று நிலவும் ஒழுக்க நெறி.

2. விலங்கினங்கள், பறவையினங்கள் வாயிலாகச் சுட்டப்படும் வாழ்க்கை நெறி.

3. இயற்கை வாயிலாகச் சுட்டப்படும் உறவு.

4. முடிப்புரை.

முனைவர் கிரேஸ் செல்வராஜ்;

10, ஏழுமலைத் தெரு,
தாம்பரம்-மேற்கு,
சென்னை-600 045.

அறிக அறிவியலில் உரைக்கோவை

தமிழில் அறிவியல் பரவலாக்கப்பட வேண்டியது அவசியமானதாகும். இவ்வறிவியல் பரவலாக்கம் கலைச் சொற்களால் மட்டுமின்றி மொழியமைப்பின் வாயிலாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது. அம்மொழியமைப்பில் உரைக் கோவை முதன்மையாகின்றது. பொதுமக்களிடம் அறிவியல் கல்வி, அறிவியல் அறிவு, அறிவியல் நோக்கு, அறிவியல் உணர்வை ஏற்படுத்துவதில் இதழ்களே பெரும்பங்கு வகிக் கின்றன. அவ்விதழ்களுள், அறிக அறிவியல் எனும் இதழின் உரைக் கோவை அமைப்பு குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

உரைக்கோவையை (Discourse) 'கருத்தாடல்' என்று தெய்வசுந்தரமும், மேரிரோஸ்லினும் குறிப்பிடுகின்றார்கள். உரைக்கோவை என்பது கருத்துப் பரிமாற்றத்தை நிறைவு செய்யப் பயன்படுத்தப்படும் உத்தி என்கிறார் கருணாகரன். இவ்வுரைக் கோவை, அறிவியல் கருத்தை வெளிப்படுத்துவதாக அமையுமாயின் 'அறிவியல் உரைக்கோவை' (Scientific discourse) என்று அழைக்கப்பெறும். தமிழில் அறிவியலை வெளிப்படுத் தும் பொழுது மொழியமைப்பு, கருத்துரு செயல்பாடுகள், கருத்துரு உத்திகள் என்று அமைகின்றன.

'அறிக அறிவியல்' இதழின் உரைக்கோவையில் மொழிய மைப்பு மற்றும் மொழிக் கூறுகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை,

1. கருத்துரு செயல்பாடுகள்

2. கருத்துரு உத்திகள்

என்ற அடிப்படையில் இக்கட்டுரை ஆராய்கின்றது.

சௌ.கீதா,
ஆய்வாளர்,
கிராமியப் பல்கலைக் கழகம்,
காந்திகிராமம்.

செவ்வியல் நாடகப் பிரதிகளும் நாட்டுப்புற நாடகங்களும்

இந்தியா மற்றும் குறிப்பாகத் தமிழக நாடகப் பிரதிகளின் தன்மையை வாய்மொழி இலக்கிய நாடகங்களிலிருந்து செவ்வியல் நாடகப் பிரதிகள் கொண்டிருக்கும் தன்மைகளை இங்கு அறியலாம்.

நமது இந்திய செவ்வியல் நாடகப் பிரதிகள் இறையியல் சார்ந்தவை. இவற்றில் புராண இதிகாச இணைவுகள் அமையும். மகாபாரதம், இராமாயணம் போன்றவைகளின் தொடர்பு ஏதோ ஒரு வகையில் இருக்கும்.

நகைச் சுவைக் கூறுகள் அதிகம் கொண்டிருந்த நாட்டுப்புற மக்கள் அரங்கிலிருந்து விலகியிருந்து காலப் போக்கில் செவ்வியல் நாடகப் பிரதிகளை ஏற்றுக் கொண்டிருக்கலாம்.

செவ்வியல் நாடகப் பிரதிகளின் உத்திமுறைகள் காலப்போக்கில் நாட்டுப்புற நிகழ்த்துக் கலை வடிவங்களில் அண்ணாவிமார்கள், வாத்தியார்கள், ஓலைச் சுவடிகள் போன்ற வழிமுறைகளில் பலதரப்பட்ட மக்களின் நாடக மேடைகளுக்குச் சென்றன. மன்னர் செல்வாக்குகள் அழிந்துபட்ட பின் நீண்ட நாட்கள் செவ்வியல் நாடகப்பிரதிகள் நிற்க இயலாது போயின.

செவ்வியல் நாடகப் பிரதிகளின் செல்வாக்கு குறிப்பாகத் தமிழகத்தில் கீர்த்தனை நாடகப் பிரதிகளிலும் அதன் பின் வந்த தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகப் பிரதிகளிலும் ஏற்பட்டன.

ஐரோப்பிய நாடகங்களை ஒப்பிடும்போது இந்தியச் செவ்வியல் நாடகப் பிரதிகள் குறுகிய புராணக்கதைக் கட்டுக்கோப்பையே பின்பற்றி உலகியல் சார்ந்த கருத்துக்கள் கொண்ட கதைகள், சம்பவங்கள் பிரதிகளாக்கப்படவில்லை.

உலகியல் சார்ந்த பரந்த ஆழமான எதார்த்த சிந்தனைகளை

இந்தியச் செவ்வியல் நாடகப் பிரதிகளில் காண்பது அரிதாகி விட்டது. நமது இந்திய நாடகப் பிரதிகள் அறிவுக்கோ, ஆய்வுக்கோ, கேள்விக்கோ, பழைய மரபுகள் ஒழுக்கக் கற்பிதங்கள் போன்றவைகளை விமர்சிக்கத் தக்க வகையில் அமைவதில்லை.

உலகியல் சார்ந்த உலகாயதப் பிரச்சினைகளைப் பேசுபவையாக நாட்டுப்புற நாடகங்கள் அமையும். புராண இதிகாச இணைவுகள் நாட்டுப்புற நாடகங்களில் இடம் பெறினும் மக்கள் சார்ந்த கருத்துக்கள் முன்னுக்கு நிறுத்தப்பட்டு நாடகங்கள் அமையும். இந்தியா மற்றும் தமிழக நாடகப் பிரதிகள் அனைத்திலும் அதிகார உற்பத்திக் களன்கள் இருந்து வந்துள்ளன. செவ்வியல் இலக்கணக் கூறுகள் அதிகம் கொண்ட நாடகப் பிரதிகளில் சாமானியப்பட்ட மக்களின் வாழ்க்கை ஆங்காங்கு அடக்கி வெளிப்படக் காண முடிகிறது.

இன்றைய தமிழ் நாடகப் பிரதிகளில்

1. கதை/நிகழ்ச்சி கொண்டு நாடகப் பிரதிகள் தயாரிக்கப் படுதல்.

2. தான் கருதியுள்ள காட்சி வடிவங்களுக்கேற்ப தொழில் நுட்பங்களை மனதிற்கொண்டு நாடகப் பிரதிகள் தயாரிக்கப்படுதல்.

எனும் போக்குகளுடன் மேலை நாட்டு இசங்கள் உள்வாங்கப்பட்ட நிலையில் பிரதிகள் தயாரிக்கப்படுகின்றன.

செவ்வியல் இலக்கணம் மீறிய நிகழ்த்துக் கலை வடிவங்களுக்கான முயற்சிகளில் நாடகங்கள் பிரதிகளைப் படைக்காமலும் நிகழ்த்தப் பெறலாம். தலித் அரங்கியலில் இது போன்றது சாத்தியப்படும்.

முனைவர் கே.ஏ.குணசேகரன்,

துறைத் தலைவர் பொறுப்பு,
தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் நிகழ்கலைப் பள்ளி,
புதுவைப் பல்கலைக் கழகம், புதுவை-605014.

வாணிகச் சொற்கள்

வாணிகம் என்பது தமிழரின் முக்கியமான தொழில்களுள் ஒன்று. இத்தொழில் அடிப்படையில் பல சொற்களைத் தமிழ் இலக்கியப் பரப்பில் காண முடிகின்றது. இக்கட்டுரையுள் தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு, நிகண்டு, அகராதி, தமிழ் லெக்சிகன் ஆகியவற்றிலுள்ள வாணிகச் சொற்கள் எடுத்து ஆயப்பெறுகிறது.

பணி என்ற சொல்லுக்குத் தமிழ் லெக்சிகன் சுட்டும் பொருள்களுள் ஒன்று Trade என்பதாகும். Trade என்ற சொல்லுக்கு ஒரு தொழில் துறையினர், ஒரு தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் தொகுதி, தனி மனிதர் வாழ்க்கைத் தொழில், வாணிகம், வாணிகக் கொடுக்கல் வாங்கல், வாணிகப் பண்ட மாற்று ஆகிய பல பொருள்களை அகராதி சுட்டுகின்றது. தொடக்க காலத்தில் உமணர் உப்பை உற்பத்தி செய்து அவர்களே விற்றிருக்கின்றனர். தொடக்க காலத்தில் உற்பத்தியும் வாணிகமும் ஒருவரே செய்ததாகத் தெரிகிறது. இலக்கியத்தில் ''மாற்று'' என்ற சொல் வாணிகத்தைக் குறிக்கிறது. இச்சொல் ''பண்ட மாற்று'' என்ற குறுகிய பொருளைத் தர வாய்ப்புள்ளது. வாணிகத்தின் எல்லாக் கூறுகளையும் உட்படுத்துகின்ற நிலையில் வாணிகம் என்ற சொல் அமைந்துள்ளது. வாணிகம் என்ற சொல்லின் மூலம் Vanijya என்றும், இச்சொல்லுக்குப் பொருள் வியாபாரம் என்றும் தமிழ் லெக்சிகன் தெரிவிக்கிறது.

வாணிகம் என்ற சொல்லைத் தொல்காப்பியம், திருக்குறள், ஏலாதி ஆகிய நூல்கள் சுட்டுகின்றன. புறநானூறு வாணிகன் என்ற சொல்லைக் குறிப்பிடுகிறது. வாணிகன் என்னும் சொல் உறையூர் இளம் பொன் வாணிகனார், காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் ஆகிய புலவர் பெயர்களில் இணைப்பாக இடம் பெற்றுள்ளது.

வாணிகரின் தலைமைப் பண்பு, தொழில் அறிவற்றின் அடிப்படையிலும் பிற காரணங்களின் அடிப்படையிலும் பல

பெயர் வாணிகர்க்கு இருந்தன என்று தமிழ் லெக்சிகன் மூலம் அறிய முடிகின்றது. இப்பெயர்களைத் தொகுத்துச் சொல் அமைப்பு அடிப்படையிலும் வாணிகச் சார்பு அடிப்படையிலும் எண்ணலாம். இப்பெயர்களைப் பதினெட்டு வகையாக அமைக்கலாம். உரிச் சொல் நிகண்டு, பிங்கல நிகண்டு போன்ற நிகண்டுகள் வாணிகர்க்கு முப்பத்தேழு பெயர் இருந்ததைத் தெரிவிக்கின்றது.

பல்வேறு தொழில்களைச் செய்த வாணிகர்க்கு அத் தொழிலின் அடிப்படையில் அமைந்த பெயர்களைத் தமிழ் லெக்சிகன் சுட்டுகிறது. அதில் இடம் பெறும் வாணிகச் சொற்களையும் அவற்றின் பொருளையும் எண்ணும்போது அக்கால மக்கள் வாணிகம் செய்த முறை, வகை போன்றவற்றை அறிய முடிகிறது. முற்காலத்தில் வாணிகக் குழுவினர் தமிழ் நாட்டிலும் பாரத நாட்டிலும் பன்னாடுகளிலும் வாணிகம் செய்தனர். பன்னாட்டு வாணிகர், பாரத நாட்டு வாணிகர் ஆகியோர் பழந்தமிழகத்திற்கு வந்து வாணிகம் செய்தனர். பண்டைய தமிழ் நாட்டு வாணிகர் வாணிகம் செய்த பொருட்கள், அவ்வாணிகம் செய்ய உறுதுணையாகப் பயன்படுத்திய பொருட்கள் ஆகியவற்றை அறிய முடிகின்றது. இச்சொற்கள் வாணிகரின் வாழ்க்கையைப் பற்றி அறிவிக்கிறது. ஆண்களும், பெண்களும் முற்காலத்தில் வாணிகம் செய்தனர். வாணிகர் அக்காலத்தில் செல்வ நிலையில் பல தரத்தினராக இருந்ததும் தெரிகிறது. அக்காலத்தில் வாணிகத்தில் சிறந்தோர்க்கு அரசன் பட்டம் வழங்கினான். தமிழ் லெக்சிகன் சுட்டுகின்ற வாணிகச் சொற்கள், வாணிகர் பெயர்கள் போன்றவற்றில் பெரும் பாலான்வை வடசொற்களாக இருக்கின்றன. இது இன்னொரு பண்பாட்டின் தாக்கத்தைக் காட்டுகிறது.

முனைவர் ஐ.குமுதினி,

எண்66/1பஜனைக்கோயில் தெரு,

பள்ளிப்பட்டு, சென்னை-113.

7

சேரநாடும் வஞ்சிமாநகரமும்

சேரநாட்டின் ஆள்நிலமும் அதன் தலைநகரும் எவையென இலக்கியத்தின் வழி நின்றும் அறிஞர்களின் கருத்தினின்றும் நிறுவப்பட்டுள்ளன. மேற்குத் தொடர்ச்சி மலைக்கு மேற்கேயும் அரபிக் கடலுக்குக் கிழக்கேயும் அமைந்த நிலப்பகுதி சேரநாட்டின் ஆள்நிலம் ஆகும். இந்நிலப்பகுதி, தென்பாண்டி நாடு, வேணாடு, குட்ட நாடு, குட நாடு, பூழி, நாடு, கற்கா நாடு என ஆறு பிரிவுகளாகப் பிரிந்துள்ளது. சேரர்கள்தம் வலிமையால் கொங்கு நாட்டையும், கொண்கானநாட்டையும் ஆட்படுத்தி ஆண்டு வந்தனர்.

சேரநாட்டின் தலைநகரம் வஞ்சியா, கருவூரா என்பதும், அது, சேரநாடெனும் கேரள நாட்டில் உள்ளதா அல்லது கொங்கு நாடெனும் திருச்சி மாவட்டத்திலுள்ளதா என்பதும் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. சேரநாட்டின் தலைநகரம் வஞ்சி மாநகரம் ஆகும். அது, சேரநாடெனும் கேரள நாட்டில் உள்ளது. கொங்குநாடும் சேரநாட்டின் ஆளுமைக்கு வந்தபிறகு கொங்கு நாட்டுக் கருவூலம் சேரர்களின் தலைநகரமாகியது. சேரர் வஞ்சி தண்பொருநைக் கரையில் அமைந்துள்ளது. கொங்கு நாட்டுக் கருவூர் ஆன்பொருநைக் கரையில் அமைந்துள்ளது. வஞ்சிக்குக் கருவூர் என்ற பெயரும் கருவூர்க்கு வஞ்சியென்ற பெயரும் வழங்கப்பட்டுள்ளன.

சேரநாடு, கொங்கு நாடு இரண்டும் தனித்தனி நாடுகளாக இருந்துள்ளன. சேரநாட்டைச் சேர மரபினரும், கொங்கு நாட்டைக் கொங்கர் எனும் குறுநில மன்னரும் பின்னர்ச் சேரரின் இளைய மரபினர் எனும் பொறையரும் ஆண்டு வந்துள்ளனர். சேரநாட்டின் தலைநகரமாய் முதலில் வஞ்சியும் பிறகு கருவூரும் அமைந்து, அதற்கு இருநகரங்கள் இருந்துள்ளன.

முனைவர். ச.குருசாமி, எம்.ஏ., பி.எச்.டி.,
தமிழ்த்துறை,
பச்சையப்பன் கல்லூரி,
சென்னை.

சங்க இலக்கியங்களில் அறக் கோட்பாடுகள்

அகமும் புறமுமாகிய பாடுபொருள்களில் அமைந்த பண்டைச் சங்க இலக்கியங்களில் வாழ்வியல் அறக் கோட்பாடுகள் பலவும் வரலாற்றுக் களங்களூடே வளமுறக் காணப்படுகின்றன. ஈதலறம், காதலறம், வாழ்தலறம், அரசியலறம், போரறம், புலமையறம் போன்ற பல்வேறு அறங்கள் குறித்த கோட்பாடுகள் அவ்விலக்கியப் பாடல்களில் பரவலாகப் படிந்துள்ளன.

ஈதலின் இன்றியமையாமை, எதிர் நோக்கமில்லாத ஈகை, தப்பாத ஈகை, விளம்பாத ஈகை, குறையாத ஈகை, குறிப்பறிந்த ஈகை, கொடைமட ஈகை, தகுதி நோக்காத ஈகை, தன் உயர்வுக்கேற்ப உவந்தளிக்கும் பேரீகை, நாள்தோறும் கொடுக்கும் நயப்பாட்டு ஈகை போன்றவை ஈதலறக் கோட்பாடுகளாக எடுத்துப்பாடப் பெறுகின்றன.

எதிர்பாராத நிலைகளில் ஏற்படும் தீங்குகளிலிருந்து தம்மைக் காத்து அளிப்பவனையே கணவனாகக் கருதி மகளிர் கற்புக்கடம் பூண்பதும், பிறவிதோறும் தம் காதலுறவு தொடர வேண்டுமென்று அவர்கள் விரும்புவதும், மனைவியின் பிரியாமல் வாழ்வதே மாண்பெனக் கணவன் கருதுவதும், காதலர் இருவருள் ஒவ்வொருவரும் மற்றவர் நலத்தை நாடுவதும் கணவன் இறக்க நேர்ந்தால் அவன் பிரிவை ஆற்றாமல் மனைவி தானும் இறப்பதும், மனைவி முன்னிறந்தால் அவளுடன் தன்னுயிரும் ஒருங்கு மாளவில்லையே எனக் கணவன் நொந்து, பின் வாழ்வை வெறுப்பதும் துறப்பதும் காதலறங்களாகக் காணப்படுகின்றன.

வாழ்தல் வேண்டிப் பொய் கூறாமல் மெய் கூறுவதும், உலகம் சிறிதெனச் சோம்பாமல் பெரிதே உலகம் பேணுநர் பலரென்று ஊக்கமுறுவதும், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்', 'எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே' என்றெல்லாம் பரந்த உள்ளம் பகர்வதும் வாழ்தலறங்களாய் வருகின்றன.

நமர் பிறர் எனப்பாராத நடுவு நிலைமையும் வழிபடுவோரை அறிதலும் பழிகூறுவோரைத் தெளிவதும், தவறு புரிந்தோரை ஒறுப்பதும், தவறுணர்ந்தோரை அருள்வதும், கொடியோரைக் கண்டித்துச் செவ்வியோரை வாழ்விப்பதும் முறை வேண்டு வோர்க்குப் பதன் எளியோர்னாவதும் இன்சொலனாவதும் போன்றவை அரசியலறங்கள் ஆகின்றன.

பகைவர் பழித்துப் பேசிய நிலையில் வஞ்சினங் கூறுகின்ற மானமும், அறிவித்தபின்னரே போர் தொடங்கும் ஆற்றலும் இறுதிவரை போருடற்றி வெற்றி தோல்வி காணாத நிலையில் போரை விலக்கி மீளாமல் தொடர்ந்து போரிட்டுத் தொகை நிலையாக மாள்வதும், மார்பில் பாய்ந்த வேலாயினும் அது முதுகினை ஊடுருவுமாயின் அதனையும் புறப்புண்ணாக நாணி வடக்கிருந்து உயிர் நீத்தலும் போன்றவை போர் அறங்களாய்ப் புலனாகின்றன.

பரிசில் வாழ்க்கையுடையராயினும் அப்பரிசிலை வேண்டிப் பெறுவதில் தம் மானம் தாழாத தகைமையும் பரிசில்தரும் புரவலரின் செல்வ நிலையை மதியாமல் வண்மை நிலையை மதிக்கும் மாண்பும், பெருமிதம் குன்றாத பீடும், கொடுப் போரை ஏத்திக் கொடாதோரைப் பழித்து மீள்வதோடு, பின் அவரை யாருமே பாடாமல் ஒதுக்கும் கட்டுப்பாடும், அரசர் பிழைபடும் போது அவர்க்கு அறிவுறுத்தலும், அரசியல் நெறியுரைத்தலும் போன்றவை புலவர்தம் புலமையறங்களாய்ப் போதருகின்றன.

இவ்வாறு சங்க இலக்கியங்களில் அறக் கோட்பாடுகள் பலவும் பரவலாக அறியவருகின்றன. பிற்கால அறநூல்களுக்கு அடியூற்றுகளாய் அவை அமைந்துள்ளன.

முனைவர் வ.குருநாதன்,
முதுநிலை விரிவுரையாளர்,
இலக்கியத்துறை,
தமிழ்ப் பல் ணலக்கழகம்,
தஞ்சாவூர்-613 005

தமிழர் தம் படைமாட்சிக் கொள்கைகள்

பண்டைய தமிழர்களின் வாழ்க்கை நெறியும், படை தோன்றிய காரணமும் விளக்கப்பெறுகின்றன.

படையின் உண்மைத் தன்மை-படை எடுப்பதற்கா நோக்கம்-படையின் ஆக்கப் பூர்வமான செயல்பாடுகள் படையின் அறச்செய்ல்கள் - படையின் மாட்சிமைப் பட்ட செயல்கள் பகை நாட்டில் அழிவுக் குரியவைகளாகக் கருத பட்டு அவைகளை மட்டும் அழித்துப் பகைவரி செருக்கழிப்பது - நிகரற்ற பகைவர் மீது படை எடாமை - பன அமைப்பு ஒருவன் ஒருவனைத் தாக்கும் தன்மையில் நின்றது படையின் இலக்கு.

இவற்றைத் திருக்குறள், தொல்காப்பியம், புறப்பொரு வெண்பாமாலை, புறநானூறு ஆகிய கருவி நூல்களை கொண்டு ஆய்வது.

1. குறள் காட்டும் பேராண்மைப் படைமாட்சியாக அமைத

''பேராண்மை என்ப தறுகண் ஒன்றுற்றக்கால்

ஊராண்மை மற்றதன் எஃகு'' *(குறள் 773)*

2. புறப்பொருள் வெண்பாமாலையில் படை மாட்சி.

''அழிகுநர் புறக் கொடை அயில் வாளோச்சாக்

கழிதறுகண்மை காதலித் துரைத்தன்று''

கொளுமட்டும் (பு.வெ.மா.வ.

3. தொல்காப்பியத்தில் படை மாட்சிக் கொள்கை.

பல்படை ஒருவர்க்கு உடைதலின், மற்றவன்

ஒள்வாள் வீசிய நூலிலும்'' *(தொல். புறத். 23 - 24)*

மா.கோவிந்தசா

ஆய்வா

தமிழ்த்து

சென்னை

தமிழாங்கிலத் தட்டச்சுப்பொறி

அறிவியலின் வளர்ச்சிக்கேற்பத் தட்டச்சுப் பொறியை இருமொழிகளில் வடிவமைத்தல் இன்றையத் தேவையாகிறது. ஆங்கிலத் தட்டச்சுப் பொறியிலும் தமிழ்த் தட்டச்சுப் பொறியிலும் முறையே 46 விசைகள் உள்ளன. தமிழ் எழுத்துகள் 247யையும் உருவாக்க 131 வரிவடிவங்கள் தேவைப்படுகின்றன. இந்த 131 வரிவடிவங்களைத் தமிழ்த் தட்டச்சுப் பொறியில் உருவாக்க 31 விசைகள் தேவைப்படுகின்றன. அதே போல்,ஆங்கில எழுத்துகள் 26 யையும் உருவாக்க 26 வரிவடிவங்கள் தேவைப்படுகின்றன. இதில் சிறிய எழுத்து பெரிய எழுத்து என்று பார்க்கும் போது மேலும் 26 ஆங்கில வரிவடிவங்கள் தேவைப்படுகின்றன. ஆக 26 ஆங்கில எழுத்துகளை உருவாக்க 52 வரிவடிவங்கள் தேவைப்படுகின்றன. இந்த 52 வரிவடிவங்களை ஆங்கிலத் தட்டச்சுப் பொறியில் உருவாக்க 26 விசைகள் தேவைப்படுகின்றன. எழுத்துகளின் (வரிவடிவங்களின்) எண்ணிக்கைக்கேற்ப விசைப்பலகையில் அமைக்கப்பெறும் விசைகள் மாறுபடுவதில்லை. இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டு தனித்தனியாக இருக்கும் தமிழ்த் தட்டச்சுப் பொறியையும் ஆங்கிலத் தட்டச்சுப் பொறியையும் இணைத்துத் தமிழாங்கிலத் தட்டச்சுப் பொறியை வடிவமைத்துக் காண்பதே இவண் நோக்கமாகும்.

தமிழ்த் தட்டச்சுப் பொறியில் உள்ள தேவையற்ற சில விசைகளையும் ஆங்கிலத் தட்டச்சுப் பொறியில் உள்ள தேவையற்ற சில விசைகளையும் நீக்கிவிட்டு இன்றைய அறிவியல் வளர்ச்சிக்குத் தேவையான குறியீடுகளைச் சேர்த்துத் தமிழாங்கிலத் தட்டச்சுப் பொறியின் விசைப்பலகை ஒன்று வடிவமைக்கப் பெற்றுள்ளது.

தமிழாங்கிலத் தட்டச்சுப் பொறியின் மூலம் இரண்டு தட்டச்சுப் பொறிகளில் வைத்து நிறைவு செய்யப்பெற வேண்டிய ஒரு வாசகத்தை ஒரே தட்டச்சுப்பொறி கொண்டு நிறைவு செய்யலாம். இதனால் தட்டச்சு இயக்குபவருக்கு

நேரமும் இடமும் குறையும். தமிழ்த் தட்டச்சுப் பொறியில் இருந்து ஆங்கிலத் தட்டச்சுப் பொறிக்குத் தாள் மாற்றி வைக்கும் போது ஏற்படும் வரிச்சீர்மை கெடாது. இரண்டு தட்டச்சுப் பொறிகள் ஒரே தட்டச்சுப் பொறியாகிறது. தட்டச்சுப் பொறியின் முதலீடும் இவ்விருமொழித் தட்டச்சுப் பொறியினால் குறைகிறது.

தமிழாங்கிலத் தட்டச்சுப் பொறியைப் போலவே இந்திய மொழிகள் அனைத்திற்கும் இருமொழித் தட்டச்சுப் பொறிகளை உருவாக்குவதற்கு இந்தத் தமிழாங்கிலத் தட்டச்சுப் பொறியின் வடிவமைப்பு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கும் என்பது திண்ணம்.

மோ.கோ.கோவைமணி,
ஆய்வு உதவியாளர்,
ஓலைச்சுவடித்துறை,
தமிழ்ப்பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்-613 005.

சொலவடைகள்

நாட்டுப்புற இலக்கியங்களுள் வாய்மொழி இலக்கியம் (Oral Literature) என்பது ஒரு வகையாகும். நாட்டுப்புற மக்களின் மனதில் பிறந்து வாய்வழி வருவன வாய்மொழி இலக்கியங் களாகும். அம்மக்கள் முன்னோர்கள் பாடியதை, பேசியதை நினைவில் கொண்டு, தாமும் பாடிப்பேசி வருகிறார்கள். வாய்மொழி இலக்கியங்களுள் 'சொலவடை' என்பது ஒருவகை யாகும். சொலவடைகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

வாய்மொழி இலக்கியங்களில் நிலைத்த அமைப்பை உடையன (Fixed phrase game) மாறிச் செல்லும் அமைப்பை உடையன (free phrase game) என்று இருவகைகளை

நாட்டுப்புற இயலார் குறிப்பிடுகின்றனர். மனப்பாடம் செய்யப் படாமல் தம்மனம் விரும்பியவாறு எடுத்துச் சொல்லும் இலக்கியம் மாறிவரும் அமைப்புடைய வகையைச் சேர்ந்த தாகும். சொலவடை இவ்வகையினுள் அடங்கும்.

சொலவடை என்பது மக்களின் அனுபவ வெளிப்பாடாக அமைகிறது. அந்தந்த நேரத்தில் காணப்படும் மன உணர்வுக்கு ஏற்பவும், நிகழும் செயல்களுக்குப் பொருந்தும் வகையிலும் சொலவடைகள் சொல்லப்படுகின்றன. சொலவடைகள் ஒரு கருத்தை அதற்கு இணையான ஒப்புமையுடன் விளக்கமாக உரைக்கின்றன. பாமரமக்கள் சொலவடைகளை மிகுதியாகப் பயன்படுத்துகின்றனர். இவற்றைச் 'சொலவம்' என்றும் அவர் கள் குறிப்பதுண்டு மக்களின் உரையாடல்களில், உழைக் கும் இடங்களில் (கழனிகளில்,காடுகளில்) உல்லாசப் பேச்சுக்களில், அதி தீவிரமான சண்டைகளில், அங்கலாய்ப்புகளில் சொல வடைகள் ஊற்றுப்பெருக் கெடுக்கின்றன. சொல வடை உவமை போலப் பயன்பட்டுக் கூற்றை விவரமாக எடுத்துரைக்கிறது.

சொலவடைகள் பழமொழிகளினின்று வேறுபட்டன. பழமொழிகள் ஓரோவழி திரிபு வடிவங்களைப் பெறுகின்றன எனினும் அவை நிலைத்த அமைப்புடைய வாய்மொழி இலக்கியங்கள் ஆகும். சொலவடைகள், கூறும் நபர், வாழிடம், சமூகச் சூழ்நிலை இவற்றிற்கேற்ப மாறி வரும் தன்மையன. இந்த அடிப்படை வேறுபாட்டால் சொலவடைகள் பழமொழி களிலிருந்து வித்தியாசப்படுகின்றன. மேனாட்டில் பழ மொழியும், சொலவடையும் வேறுபடுத்திப் பார்க்கப்படுகிறது. பழமொழிகள் அறிவுரை போன்று அமையும். சொலவடைகள் அப்போதைய அனுபவ எதிரொலிகள். அப்போதைய நிகழ்வின் சொல்லுருவங்கள்.

ஆய்வதற்கான சொலவடைகள் தென்காசிப் பகுதியிலுள்ள கிராமப்புறங்களில் தொகுக்கப்பட்டன. கள ஆய்வில் பெறும் சொலவடைகள் முதன்மை ஆதாரங்களாக அமைகின்றன.

சொலவடை விளக்கம், சூழல்கள், மன உணர்வுகள்,

பழக்கவழக்கங்கள், வாழிடங்கள், இனங்கள் போன்றவற்றின் அடிப்படையில் பிறக்கும், பல்வேறு வகைச் சொலவடைகள், சொலவடைகளில் புலப்படும் தொனிகள், கிராமப்புற மக்களின் தொழிலுக்கும், சொலவடைகளுக்குமுள்ள தொடர்புகள், பழமொழிக்கும் சொலவடைக்கும் உள்ள வேறுபாடுகள் ஆகியனவற்றை இக்கட்டுரை ஆராய்கிறது.

முனைவர். வி.சசிகலா,

தமிழ்த்துறை விரிவுரையாளர்,
ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி,
குற்றாலம்.

பாட்டினில் தகவல் வெளிப்பாடு
(Communication in Poetry)

தகவல் தொடர்பின்றி மண்ணுலக இயக்கம் என்பது மிக அரிதான செயலாகும். ஆறறிவு படைத்த மனித குலமாயினும் சரி; ஐந்தறிவு கொண்ட உயிரினங்களாயினும் சரி; அவை, தகவல் தொடர்பு மூலமே இயங்கி வருகின்றன. விண்ணுலக இயற்கையும் கூட இதற்கு விதிவிலக்கு அல்ல. அவற்றிற் கிடையே தகவல் பரிமாற்றம் இல்லையெனினும், அவை நமக்குத் தகவல் தருவதில்லையா? கறுத்துக் கனத்த மேகமும், அதிர்ந்து முழங்கும் இடியும், வெட்டி மின்னும் மின்னலும் மழை கொட்டப் போகின்றது எனும் தகவலை நமக்குத் தருகின்றன அல்லவா? சொற்கள் ஏதுமின்றி இங்குத் தகவல் வெளிப்படுகின்றது தானே? இங்ஙனமான சொல் அல்லாத் தொடர்பும், அகத் தொடர்புமே இக்கட்டுரையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. ஏறக்குறைய இருபத்தைந்து நூற்றாண் டுகளின் வரலாறுடைய, தமிழ் இலக்கியப் பாடல்கள் ஆய்வுக் களமாகக் கொள்ளப்பட்டுள்ளன. கட்டுரைச் சுருக்கத்திற்கென கம்பராமாயணப் பாடல்கள் மட்டுமே இங்குச் சான்றுகளாகக் காட்டப்பட்டுள்ளன.

சொல் அல்லாத தொடர்பு (Non-Verbal Communication)

ஆதி மனிதன், தான் இருக்குமிடத்தைத் தன்னைச் சேர்ந்தவர்களுக்குத் தெரிவிக்க, கூவி ஒலியெழுப்பினான். அபாய எச்சரிக்கை, உணவு கிடைக்குமிடம் பற்றிய குறிப்பு என்றிப்படி அனைத்திற்கும் அவ்வவற்றிற்கு ஏற்றாற்போல் ஒலியெழுப்பித் தொலைவில் இருப்போர்க்குத். தகவலைத் தெரிவித்தான். அதன் பின்னர், அருகில் இருப்போரிடம் கண் அசைவினாலும், அங்க அசைவுகளாலும் அதாவது சமிக்ஞை களாலும், குறியீடுகளாலும் தகவல்கள் பரிமாறிக் கொள்ளப் பட்டன. வாய்மொழி இல்லாது நடந்த இத் தொடர்புதான் சொல் அல்லாத் தொடர்பு எனப்படுகின்றது. இத் தொடர்பில் பேசப் பயன்படும் மொழி, 'மௌன மொழி' (Silent language) அல்லது 'உடல் மொழி' (body language) ஆகும். முக பாவனை (facial expression) கண் அசைவு (eye movement) தோரணை, (posture), உடை (dress), ஒப்பனை (cosmetics), குரல் வளம் (voice qualities), சிரித்தல் (laughing) மற்றும் கொட்டாவி விடுதல் (yawning) எனுமிவற்றைச் சொல் அல்லாத் தொடர்பிற்கான மௌன மொழியாகக் கூறுகிறார், எட்வின் எமரி. அஹூஜாவும், சாப்ராவும் 'குறியீடு' எனக் குறிப்பிடு கின்றனர். கண்ணுக்குத் தெரியாத ஒன்றின் கண்ணுக்குத் தெரிந்த அடையாளமே ((sign) குறியீடு (symbol) என்கின்றனர். அதாவது குறியீடானது அபிநயம் (gesture), ஒலி (sound), பொருள் (object) எதுவாகயி ருந்தாலும் யாருக்கு அக் குறியீட்டின் மூலம் தகவல் அனுப்பப் படுகின்றதோ அவருக்கு அல்லது அச் சமுதாயத்திற்கு அக் குறியீட்டிற்கான பொருளை அது உணர்த்தினால்தான் சிறப்பு டைத்தாயிருக்கும்.

எட்வின் எமரி கூறியுள்ள கண் அசைவு மற்றும் தோரணை பாலகாண்டத்தின் தாடகை வதைப் படலத்தில் தகவல் தொடர்பினை நிகழ்த்துகின்றன. முகபாவனை, அயோத்தியா காண்டத்தின் தைலம் ஆட்டும் படலத்தில் தகவலைத் தெரிவிக்கின்றது. அஹூஜா மற்றும் சாப்ரா குறிப்பிட்டுள்ள குறியீட்டினைப் பள்ளி அடைப் படலத்தில் காணமுடிகின்றது.

அகத் தொடர்பு

சொற்கள் இன்றி நடைபெறக்கூடிய அகத் தொடர்பினை 'உள்மனத் தொடர்பு' (Intrapersonal communication) என்பர். அதாவது ஒருவர் தனக்குத் தானே கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்வது உள்மனத் தொடர்பு எனப்படும். கோசலை தனக்குத் தானே கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளும் வாய்ப்பினைக் கம்பன் நல்கியுள்ளார்.

மேற்கண்ட கம்பராமாயணப் பாடல்களில் கருத்து வெளிப்பாட்டிற்குப் பாத்திரங்களிடையே சொற்கள் பரிமாறப் படவில்லை. இத்தகைய தகவல் வெளிப்பாட்டினைச் சங்க இலக்கியம், நீதி இலக்கியம், பக்தி இலக்கியம் மற்றும் காப்பிய இலக்கியப் பாட்டுக்களிலும் காணலாம் என்பதைப் 'பாட்டினில் தகவல் வெளிப்பாடு' எனும் இக்கட்டுரை ஆய்ந்துரைக்கின்றது.

டாக்டர் சிவ.சசிரேகா,

முதுநிலை விரிவுரையாளர்,
தொடர்பியல் துறை,
தமிழியற் பள்ளி,
மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்,
மதுரை-625 021.

கணியான் கூத்து: நிகழ்த்துதல் மற்றும் செயற்பாட்டுக் கோட்பாட்டாய்வு

நெல்லை, குமரி மாவட்டங்களில் கணியான் கூத்து கணியான் என்னும் பிற்படுத்தப்பட்டச் சாதியினரால் சுடலை மாடன் போன்ற சாமிக் கோவில்களிலும் இசக்கி போன்ற அம்மன் கோவில்களில் பெரும் பான்மையாகவும், பூப்பு, திருமணம் போன்ற வீட்டு விழாக்களிலும் நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

நிகழ்த்துதல் கோட்பாட்டின்படி இக்கலையானது கோவில்களில் நிகழ்த்தப்படும் முறை குழு-களம்- பாடல்-இசை-ஆடல் ஆகிய நிலைகளில் ஆராயப்பட்டுள்ளது.

சிறு தெய்வ வழிபாட்டில் நிகழ்த்தப்படும் இக்கூத்து கட்டமைப்புச் செயற்பாட்டியல் கோட்பாட்டு அடிப்படையில் பேயாட்டு, கைவெட்டு, திரளை வீச்சு போன்ற சடங்கு நிலைகளில் நிகழ்த்தப்படுவதை, இதில் கணியான் சாதியினரும் வழிபாட்டுக் குழுவினரும் ஏற்றுக்கொள்ளும் பங்களிப்புகளை ஆய்கிறது.

கலை ரீதியில் இக்கூத்து சீரழிவதும் சடங்கு ரீதியில் சிதைவதும் உற்று நோக்கல் நேர்காணல் போன்றவற்றால் ஆய்ந்துரைக்கப்படுகின்றன.

முனைவர் சு.சண்முகசுந்தரம்,
தலைவர் தமிழ்த்துறை;
தூய ஜோசப் கல்லூரி,
பெங்களூர்-20.

அண்டகுடையான் கிராமத் தேவேந்திரகுல வேளாளர் சமய-சமுதாய நிலை

கும்பகோணம்-நாச்சியார்கோயில் சாலையில் சாக்கோட்டைக்குக் கிழக்கே தோராயமாக நான்கு கிலோ மீட்டர் தொலைவில் அண்டகுடையான் என்னும் சிற்றூர் அமைந்துள்ளது. அங்குள்ள மூன்று தெருக்களில் தேவேந்திரகுல வேளாளர் வகுப்பைச் சார்ந்த 73 குடும்பத்தினர் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் சமய-சமுதாய நிலையை விளக்குவதே இக்கட்டுரையாகும்.

அ.சமய நிலை

அவ்வூரில் வாழும் தேவேந்திரகுல வேளாளர்கள் மூன்று பிரிவினர்களாக அமைந்துள்ளனர். அவர்கள் வாழ்வில் நாட்டுப்புறச் சமயம் பெரும்பங்கு வகிப்பதால் நாட்டுப்புறத் தெய்வங்களின் அடிப்படையில் அப்பிரிவுகள் காணப் படுகின்றன. அய்யானாரைக் குல தெய்வமாகக் கொண்டவர்கள் ஒரு பிரிவினராகவும், மற்ற இரு பிரிவினரும் வீரனார், பெத்தண்ணனைக் குல தெய்வங்களாகக் கொண்டவர்களாகவும் உள்ளனர்.

அவர்களில் ஒரு கூட்டத்தினருக்குரிய குலதெய்வமாக விளங்கும் அய்யனார், அவ்வூரிலிருந்து நாச்சியார்கோயில் செல்லும் வழியில் நான்கு கிலோமீட்டர் தொலைவில் கருடச்சேரி அருகே பாதரக்குடியில் கோயில் கொண்டுள்ளார். அங்கு சென்று மக்கள் அய்யனாரை வழிபட்டு வருகின்றனர்.

வீரனார் என்ற பெயரில் விளங்கும் தெய்வத்தை மதுரை வீரன் என்றும் குறிப்பிடுகின்றனர். அண்டகுடையான் கீழத் தெருவில் காணப்படும் ஒதியன் மரத்தை வீரன் சாமியாகக் கருதி வழிபட்டு வருகின்றனர். அச்சிற்றூரில் மரபுவழிபாட்டின் எச்ச நிலையை இன்றும் காணமுடிகிறது.

பெத்தண்ணன் சாமியைக் குலதெய்வமாகக் கொண்டவர்கள் திருவாரூருக்குத் தெற்கே நான்கு கிலோமீட்டர் தொலைவிலுள்ள சாணாபுரம் என்னும் ஊரில் கோயில் கொண்டுள்ள பெத்தண்ணன் சாமியை வழிபட்டு வருகின்றனர். வீட்டில் குடும்ப உறுப்பினர்கள் எவருக்கேனும் நோய்வந்தால் அல்லது திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் வந்தால் பெத்தண்ணனைக் குல தெய்வமாகக் கொண்டோர் சாணாபுரம் சென்று வழிபட்டு வருகின்றனர். அவ்வூரிலுள்ள பெத்தண்ணன் பிரிவினர் தனிக் குடும்பமாகவோ அல்லது பலர் சேர்ந்தோ இறைவனை வழிபடச் சாணாபுரம் சென்றுவருகின்றனர்.

அண்டகுடையான் தேவேந்திரகுல வேளாளரிடையே இறந்தோரை வழிபடும் வழக்கமும் காணப்படுகிறது. வீட்டில்

ஆண்-பெண் குழந்தைகள் இறந்தால், திருமணமான பின்பு ஆண்-பெண் இறந்தால், முதியவர்கள் இறந்தால் அவர்களை வீட்டில் தெய்வங்களாக வைத்து வழிபடும் வழக்கம் உள்ளது.

அவ்வூரில் குடியானவர்கள் வசிக்கும் மேலத் தெருவில் மகாமாரியம்மன் கோயில் அமைந்துள்ளது. மக்கள் ஊர்த்தெய்வமாக மகாமாரியம்மனை வழிபட்டு வருகின்றனர்.

மக்கள், ஊருக்குப்புறம்பாக அமைப்புற்று விளங்கும் கொடைகாளி, அய்யனார் தெய்வங்களை எல்லைத் தெய்வங்களாகக் கருதி வழிபட்டு வருகின்றனர்.

ஆ. சமுதாய நிலை

அம்மக்கள் கல்வி நிலையில் மிகவும் பின்தங்கியுள்ளனர். அவர்களில் மூன்று தலைமுறையினரில் முதல் தலைமுறையினர் பெரும் கல்வி கற்கவில்லை. இரண்டாம் தலைமுறையினர் வறுமை காரணமாகப் பள்ளிப்படிப்பை இடையில் முடித்து விட்டு வயல் வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். மூன்றாம் தலைமுறையைச் சார்ந்தவர்களே இக்காலத்தில் ஒழுங்காகக் கல்வி கற்று வருகின்றனர்.

அண்டகுடையான் தேவேந்திரகுல வேளாளர்கள் பொருளாதாரத்தில் நலிவடைந்த நிலையில் வாழ்க்கை நடத்தி வருகின்றனர். அவ்வூர் குடியானவர்களின் வயல்களில்வேலை செய்து அதில் ஈட்டும் பொருளைக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

சமுதாய நிலையில் அவர்கள் மற்ற சாதியினருக்கு இணையாக மதிப்புடன் கருதப்படவில்லை. அவ்வூரில் குடியானவர்கள் தெருவிலுள்ள மகாமாரியம்மன் வழிபாட்டிலும், தீமிதித் திருவிழாவிலும் அம்மக்கள் புறக்கணிக்கப்படுகின்றனர்.

தமிழகத்தின் சிற்றூர்களில் காணப்படும் தீண்டாமையை ஒழிப்பதற்கு அரசு பழமையான சட்டங்களை அகற்றிப் புதுச்சட்டங்களைத் தோற்றுவித்துச் செயல்பட்டால்தான் புதிய சமுதாயத்தைத் தோற்றுவிக்க முடியும் என்பதை எடுத்துக் கூறும்

வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

முனைவர் ஆ.சண்முகம்,
நாட்டுப்புறவியல் துறை,
தமிழ்ப்பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

கணிப்பொறித் தமிழ் விசைப்பலகை அமைப்புகள்: ஓர் ஒப்பாய்வு

கணிப்பொறியின் பயன்பாடு இன்று பலவாறு பெருகி வளர்ந்துள்ளது. இவற்றில் சொல் தொகுப்பான்கள்(Wordprocessors), மொழி ஆய்வுகள்(Language Research), மொழி கற்பித்தல் (Languge Teaching) முதலியனவும் அடங்கும். எவ்வொரு பயன்பாட்டிற்கும் கணிப்பொறிக்குள் தரவுகள் உள்ளீடு செய்யப்பட வேண்டும். உள்ளீடு செய்யும் பணியில் விசைப் பலகைகள்(Keyboards) பெரும் பங்கு வகிக்கிறது.

பல்வேறு மொழிகளுக்கான விசைப்பலகைகள் அல்லது அமைப்புகள் (Layouts) கணிப்பொறியில் உருவாக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கணிப்பொறி விசைப் பலகைகள் தட்டச்சுப் பொறியில் உள்ளது போலவே முதலில் அமைக்கப்பட்டன. ஆங்கில விசைப்பலகைகள் இதற்கு எடுத்துக்காட்டு ஆகும். இந்தியாவில் தேவநாகரி, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் பிற மொழிகளுக்கும் விசைப்பலகை அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்திய மொழிகளுக்குக் கணிப்பொறி விசைப்பலகை அமைப்புகள் உருவாக்குவதில் சில சிக்கல்கள் எழுந்துள்ளன. இந்திய மொழிகளில் ஒலியியல் மற்றும் தட்டச்சு அடிப்படையில் சிறுசிறு சாவி (Keys) மாற்றங்களுடன் விசைப்பலகைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இது போன்ற அமைப்புகளில் எளிதாகவும், திறம்படவும், அதிக வேகமாக உள்ளீடு செய்ய உகந்த பொதுவான ஒன்று எது என முடிவு செய்து அதை ஏற்க

வேண்டும். இனி தயாரிக்கப்படும் மென்பொருள்கள்(Software) மற்றும் வன்பொருள்களில் (Hardware) அந்த வகை விசைப் பலகை அமைப்பையே இறுதியாகக் கொள்ள வேண்டும். இதனால் தமிழில் பொது விசைப்பலகை கணிப்பொறிக்கு உருப்பெற்று பழகியவர்களும் கற்பவர்களும் எளிதாக உள்ளீடு செய்ய துணைபுரியும்.

இக்கட்டுரையில் சில சொல் தொகுப்புச் சாதனங்கள், தரவுகளை ஆய்வு செய்தல் (Data Processing), கணிப்பொறிவழி பதிப்பித்தல் (Desk Top Publishing) பணிகளுக்காக உருவாக்கப் பட்டுள்ள தமிழ் விசைப்பலகைகளை ஒப்பாய்வு செய்து புள்ளி விபரங்களுடன் எந்த விசைப்பலகை அமைப்பு அதிக ப்யன் உடையது என ஆராயப்பட்டுள்ளது.

ப.சதாசிவம்,
முதுநிலை விரிவுரையாளர்,
கணிப்பொறி அறிவியல் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்-613 001.

தமிழர் பண்பாட்டில் சேவல் கட்டு

வரலாற்றில் சேவல்-சேவல் கட்டின் தொன்மை-இலக்கியம் காட்டும் சேவல்-பல்லவர் கால நடுகல்லில் சேவல்- கல் வெட்டுகளில் கோழிப் போர்-கலைப் படைப்புகளில் (சிற்பம், படிமம், ஓவியம், மரச்சிற்பம்) சேவல்-நாட்டுப்புற இலக்கியங் களில் சேவல்-சண்டைச் சேவலின் சிறப்பு வகைகள் -நிறமும் பெயரும்-சேவல் கட்டு வகைகள் - வெப்போர் சேவலும் கத்தி கட்டு சேவலும்-சண்டைச் சேவலைத் தயார் செய்யும் முறை - நீவிவிடுதல் - பயிற்சி அளித்தல் - சேவலுக்கு அளிக்கப்படும் சிறப்புத் தீவனங்கள் - சேவல் போருக்கு நாள் குறித்தல் - அரசன் காணுதல் - பஞ்சாயத்தார் நியமித்தல் - சேவலை வளர்க்கும் சேவற் கட்டிகள் - சண்டைக்கு முன் ஜதை போடுதல் - சேவற்

களத்தின் விதிமுறைகள் - சேவல் சண்டை விடுதல் - இடைவெளியில் இளைப்பாற விடுதல் - பிடியும் அடியும் - வெற்றி தோல்வி நிச்சயித்தல் - சண்டைச் சேவலுக்கு வழங்கப்படும் விருதுப் பெயர்கள் - வெற்றி வாகை சூடிய சேவலுக்குப் பரிசு அளித்தல்.

தமிழ் நாட்டில் சேவல் சண்டை நடக்கும் இடங்கள் - சேவல் கட்டு வளர்த்த மன்னனும் மக்களும் - முடிவுரை.

மா.சந்திரமூர்த்தி, எம்.ஏ.,

பதிவு அலுவலர்,

தொல்பொருள் ஆய்வுத்துறை,

தமிழ்நாடு அரசு, சென்னை-113.

தொன்மமும் உளவியலும்

இந்நூற்றாண்டில் அறிவுத் துறைகளின் போக்கில் எந்தவொரு துறையும் பிறிதொரு துறையின் நிழற்படாமல் இருந்ததில்லை. அவ்வகையில் தொன்மவியலும் உளவியலும் எவ்வகையில் தொடர்புடையதாகின்றன என்பதும்,

உளவியலறிஞர்களான பிராய்டும் (Freúd) யுங்கும் (C.G.Jung) வெளியிட்ட புதிய சிந்தனைகள் தொன்மங்களோடு எவ்விதம் இணைகின்றன என்பதும்,

அவ்வுளவியற்சிந்தனைகள் இலக்கியத்திறனாய்வில் ஏற்படுத்திய புதிய சீர்மைகளையும், இலக்கியப் படைப்பில் ஏற்படுத்திய, படைப்பாக்க முறைமைகளையும் சுட்டும் விதத்திலும்,

1. பிராய்டின் உளவியல் பகுப்பாய்வில் (Psychoanalysis) இடம் பெறும் ஒடிபஸ் (Odepus), எலக்ட்ரா (Electra) சிக்கல்கள்.

2. யுங் கூறும் சமுதாயம் சார்ந்த கூட்டு நனவிலி மனவுணர்வுகளான (Collected unconscious) மூலப்படிவங்கள் (Archetypes) என்ற இருநோக்கில் இலக்கியத்தைத் திறனாய்வதும் கட்டுரையின் நோக்கம்.

சு.சந்திரா எம்.ஏ., எம்.ஃபில்.,
ஆய்வாளர் (யு.ஜி.சி-முதுநிலை)
ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்பள்ளி,
ம.கா.பல்கலை.மதுரை.

விடுதலைக்குப் பிந்திய மலேசியத் தமிழ் நாவல்களில் தோட்டப்புறத் தமிழ்ச் சமுதாயம்

மலேசியத் தமிழர்களுள் பெரும்பான்மையினர் தோட்டத் தொழிலாளர்களே ஆவர். இவர்களின் வாழ்விடமாயுள்ளது தோட்டப்புறங்களே. இவர்களது வாழ்க்கை நிலையும் அதனை ஒட்டிய பிரச்சினைகளும் நகர்ப்புற தமிழர்களிலிருந்து மாறுபட்டே உள்ளன. காலனித்துவ ஆட்சியில் தோட்டப்புற மக்கள் நகர்ப்புறத்திலிருந்தும் வெளியுலகத் தொடர் புகளிலிருந்தும் பிரித்தே வைக்கப்பட்டிருந்தனர்.

தங்களின் உடலுழைப்பால் நாட்டை மேம்பாடடையச் செய்த இத்தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. அன்றாட வாழ்வில் இவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் பல. இப்பிரச்சி னைகளால் பல்வேறு பாதிப்புகளுக்கு ஆளாகி வருந்தினர்.

விடுதலைக்குப் பின் நாவல் எழுதியவர்களுள் பலர் தோட்டப்புறங்களைப் பின்னணியாகக் கொண்டு நாவல்கள் எழுதியுள்ளனர். இந்நாவலாசிரியர்கள் மலேசியத் தோட்டப் புறத் தமிழ்ச்சமுதாயத்தையும் அவர் தம் வாழ்வியல்

பிரச்சினைகளையும் தம் படைப்புகளில் பதித்து வைத்துள்ளனர். தோட்டப் புறத் தமிழ்ச் சமுதாயம் எதிர்நோக்கிய வாழ்வியல் பிரச்சினைகளாகப் பின் வருவனவற்றை விடுதலைக்குப் பிந்திய மலேசியத் தமிழ் நாவல்கள் காட்டுகின்றன. அவை:.

அ. ஜப்பானியர் ஆட்சியில் அடைந்த இன்னல்கள்.

ஆ. தோட்ட நிர்வாகத்தினரின் அடக்குமுறையும் அச்சுறுத் தல்களும்.

இ.கங்காணிமார்கள் ஏற்படுத்திய தொல்லைகள்

ஈ.தோட்டத்துண்டாடலால் விளைந்த தீமைகள்

உ. ஒற்றுமையின்மை, விழிப்புணர்ச்சியின்மை ஆகியவற் றால் விளைந்த தீமைகள்.

ஊ.மதுப்பழக்கத்தினால் விளைந்த கேடுகள்.

எ.சாதிப்பிரச்சினை ஏற்படுத்திய துன்பங்கள்.

ஏ. காதல் தொடர்பான பிரச்சினைகள்.

ஐ. சந்தேகம் விளைவித்தத் தீமைகள்

ஒ. தனிமனிதப் போராட்டங்கள்.

எனவே, விடுதலைக்குப்பின் வெளிவந்த மலேசியத் தமிழ் நாவல்களில் தோட்டப்புறத் தமிழ்ச்சமுதாயம் எவ்வாறு காட்டப்பட்டுள்ளது என்பதனையும் அச்சமுதாயம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஒவ்வொன்றும் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்பதனையும் விளக்குவதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கங்களாகும். இதனால் மலேசியத் தோட்டப்புறத் தமிழ்ச் சமுதாயத்தை நன்கு விளங்கிக் கொள்ள முடியும்.

முனைவர் வே.சபாபதி,

மலாயாப் பல்கலைக்கழகம்,
கோலாலம்பூர்.

தமிழர் தம் அறம் பொருள் இன்ப- கொள்கைகள்

தமிழகத்துச் சிந்தனை வரலாறு, உயர்நிலைக் குறிக் கோள்களை முறையான - முடிநிலை; பரிணாம வளர்ச்சி நோக்கில் கொண்டுள்ளமையை அறிய முடிகிறது. அதன் வரலாற்றில் அறம், பொருள், இன்பம் ஆகியன பற்றிய கொள்கை விளக்கங்களைத் தெளியும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

''சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல''

என்ற புறநானூற்றுப் (31) பாடல், அறத்தின் வழிப்படு வனவாக, பொருளையும் இன்பத்தையும் சுட்டுகின்றது.

பொருள் வழியில், அறம் இன்பம் இரண்டும் எய்தப் பெறுவனவாகும் என்றவாறு,

''வடுவிலா வையத்து மன்னிய மூன்றின்
நடுவணது எய்த இருதலையும் எய்தும்''

என்ற நாலடியார் (114) பாடல் தெரிவிக்கின்றது.

''இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை''

(களவியல்-1)

என்பது தொல்காப்பியம். இது, இன்பத்தை முதன்மைப் படுத்தி அதன்வழி பொருள், அறம் ஆகியனவற்றை அமைத்துக் காட்டுகின்றது.

தெரியும் முறையியல்

அறம், பொருள், இன்பம் மூன்றைத் தனித்தனி, முதன்மைப் படுத்தி, நூல்கள் காட்டியவாறு, வகை நிலையில் உணர்ந்தாலும்

''அறம் பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறம் தெரிந்து தேறப்படும்''

(குறட்பா-501)

என்ற திருவள்ளுவர் கூற்றினடிப்படையில், 'தெரிந்து தெளிதல்' மூலமாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

தெளிவியல்

''அருளிற் பிறக்கும் அறநெறி யெல்லாம்
பொருளிற் பிறந்து விடும்''

என்ற நான்மணிக்கடிகை (5) ' அமைப்பில், தெரிவு செய்யப்பட்ட 'அற நெறி' யினையும்,

'அருள் என்னும் அன்பு ஈன்குழவி பொருள் என்னும்
செல்வச் செவிலியால் உண்டு''

(குறள்-757)

என்ற குறட்பா அமைப்பில் தெளிவுபடுத்தப்பட்ட 'பொருள் புரக்குந் தன்மையையும்,

''எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான் அமர்ந்து வருஉம் மேவற்று ஆகும்''

(தொல்-பொருளியல்-27)

என்ற 'இன்ப' அடிப்படையையும் முடிவு செய்யலாம்.

சா. சரவணன் எம்.ஏ.,
ஆய்வாளர், சைவ சிந்தாந்தத் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை-5

காப்பியங்களில் உலக ஒருமைப்பாடு

தமிழனுடைய உள்ளம் விரிவுடையது. எனவே அவன் 'உலகம்' என்ற சொல்லை மிகுதியாகக் கையாளுகிறான்.

உலகம் என்ற சொல்லுக்குப் பல்வேறு பொருட்கள் உள்ளன. உலகைப் பற்றிய கற்பனை செய்திகளும் சரியான செய்திகளும் நூலில் இடம் பெற்றுள்ளன.

உலகம் என்ற சொல் காப்பியங்களில் ஆங்காங்கே இடம் பெற்றிருக்கின்றன. சமயத்துறையில் உலக ஒருமைப்பாடு இடம் பெற்றுள்ளதை நூல்கள் வாயிலாக அறியமுடிகிறது. பல சமய நூல்கள் 'உலகம்' என்று தொடங்குகின்றன.

வணிக நிலையிலும் உலக ஒருமைப்பாடு உணர முடிகிறது.

முனைவர் சரளா இராசகோபாலன்,

விரிவுரையாளர்,

தமிழ்த்துறை, இராணி மேரிக் கல்லூரி,

சென்னை-5.

தமிழ் நாட்டுப்புறப் பாடல்களில் மனித நேயம்

மடியில் கண்விழித்து மரணத்தில் கண் மூடும் வரை மனிதனோடு நாட்டுப்புறப்பாடல்கள் கலந்துள்ளன. அவை விண்ணையும் மண்ணையும் விரித்துப் பாடுகின்றன. மலைகளும், பொழில்களும் அதில் நிழலாடுகின்றன. மாறுபடும் பருவங்கள் வேறுபாடு பண்ணிக் கூறுபடும் கோணங்களில் கோலக்காட்சி அளிக்கின்றன. அனைத்திற்கும் மேலாக மனித மனங்கள் படம் பிடித்துக் காட்டப்படுகின்றன. இத்தகைய நாட்டுப்புறப் பாடல்களில் மனித நேயம் வெளிப்படும் தன்மை குறித்து ஆய்வதே இக்கட்டுரை நோக்கம்.

மனித நேயம்

மனம் உடையவன் மனிதன், மன இயல்புபடி விலங்கி லிருந்து வேறுபட்டு வாழ்பவன் மனிதன், உள்ளக்கட்டுக் கோப்புக்குள் வாழ்பவன் மனிதன் , என்றெல்லாம் அகராதிகள் மனிதனைப்பற்றிக் கூறுகின்றன. இந்த மனிதனிடமுள்ள நேசத்தை எடுத்துரைக்க இயலாது. சுருங்கக்கூறின் எல்லா உயிர்களிடத்தும் அன்பு கொள்ளுதல் மனித உணர்வுகளை மதித்து நடத்தல் பிற உயிரினங்களிலிருந்து வேறுபட்ட மனித இயல்புகளோடு வாழ்தல் என்று கூறலாம்.

நாட்டுப்புறப் பாடல்களில் மனித நேயம்

இத்தகைய மனித நேயம் உணர்வுகளின் வெளிப்பாடாகப் பாடப்படுகின்றன என்பதைக் கண்டறியும் முதல் முயற்சி ஆய்வாக இக்கட்டுரை அமைகிறது. இக்கட்டுரை கீழ்வரும்

1. சமூக நோக்கில் மனித நேயம்

2. குடும்ப நோக்கில் மனித நேயம்

3. தனிமனித நோக்கில் மனித நேயம்

என்னும் மூன்று பிரிவுகளின்கீழ் அமைந்துள்ளது. இக்கட்டு ரைக்கு எடுத்துக் கொண்ட பாடல்களில் சில கள ஆய்வினாலும் ஒரு சில ஏட்டில் வெளிவந்துள்ள வற்றினின்றும் சேகரிக்கப் பெற்றன.

சமூக நோக்கில் மனித நேயம்

கூடி வாழும் மக்களுள் ஏற்றத்தாழ்வுகளும் உழைப்பவனை உண்பவன் ஏய்ப்பதுமாகப் பல மாறுபாடுகள் காணப்படு கின்றன. இவை போன்ற செய்திகள் பாடல்களில் குறிப்பாக வெளிப்படும் தன்மை பற்றி இப்பகுதி ஆய்கிறது.

குடும்ப நோக்கில் மனித நேயம்

ஒவ்வொரு மனிதனும் பிற மனிதனை மதித்து நடத்தல் தேவைப்படுகிறது. எனவே மனிதர்களுக்கு மனித நேய

உணர்வுகள் வேண்டும் என்பது பாடல்கள் வழி இப்பகுதியில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

நாட்டுப்புறப் பாடல்கள் மனித நேய உணர்வுகளை வெளிப்படையாக மக்களுக்கு எடுத்துரைக்கவில்லை என்றாலும் உள் பொருளாகவும் குறிப்புப் பொருளாகவும் வெளிப்படுவதை இக்கட்டுரை வழி அறியலாம்.

முனைவர் மு.சற்குணவதி,

முதுநிலை ஆய்வாளர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை-600 005.

சங்க இலக்கியத்தில் சில பண்பாடுகள்

"பண்பாடு" ஒரு விளக்கம்:

"பண்பு" என்ற சொல்லடியாகப் பிறந்தமை: பண்படு, பண்படுதல், பண்படுத்தல், பண்பாடு, பண்புடைமை. "பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகல்" (கலி:நெய்:16:7) "பெருமை சான்றாண்மைகளில் தாம் வழுவாது நின்றே எல்லா இயல்புகளும் அறிந்து ஒத்து ஒழுகுதல்" (திருக்குறள்- பண்புடைமை, பரி.உரை) மற்றும் கலைக்களஞ்சியம், பிரித்தானியா கலைக்களஞ்சியம், அமெரிக்கக் கலைக் களஞ்சியம், தெ.பொ.மீ. கூறும் கருத்துக்கள்-

சங்க இலக்கியம்:

எட்டுத் தொகை, பத்துப்பாட்டு நூல்களில் ஆங்காங்குக் காணப்படும் பண்பாடு பற்றிய கருத்துக்கள்.

நற்றிணையில்:

புன்னைமரத்தையும் தன் தமக்கையாகக் கருதிக் காதலனுடன்

களிப்புக் கொள்ளத் தலைவி நாணங் கொள்ளுதல் (172) முதலாயின.

குறுந்தொகையில்:

ஆண்குரங்கு இறந்துபட அதன் மந்தி, அதன் குட்டியைக் குரங்குக் கூட்டத்திடம் ஒப்படைத்து விட்டு உயிரை மாய்த்தல் என்பதைக் காட்டித் தலைவியின் நிலை கூறல் (குறுந்.6). 'அறத்தொடு நிலை, என்னும் பண்பாடு (குறுந்.23) முதலாயின.

ஐங்குறுநூற்றில்:

தோழிக்குத் தலைவி நயமாகக் கூறும் நாகரிகப் பண்பு. உள்ளுறை, இறைச்சி வாயிலாக உணர்த்தும் நாகரிகப் பண்பாடு.

பதிற்றுப்பத்தில்:

செல்வக் கடுங்கோ வாழியாதனைப் புலவர் பாராட்டுதல்: ''தொல் கடனிறுத்த வெல்போர் அண்ணல்'' (7ஆம் பத்து)

பரிபாடலில்:

''நான்மறைக் கேள்வி நவில் குரல் எடுப்ப ஏம இன்துயில் எழுவர்''(பரி:மதுரை)

கலித்தொகையில்:

தன் கண்ணீர்க்கடலால் கனைதுளி வீசுமாறு மேகத்தைத் தலைவி வேண்டல். (நெய்தற்:கலி:28)

அகநானூற்றில்:

செய்த தவற்றுக்காகச் செவிலி வருந்துதல் (145); அறநெறியில் இல்வாழ்க்கை, பிறன் கடைச் செல்லாச் செல்வம் (155) முதலாயின.

புறத்தில்:

மனைவியின் மகப்பேற்றுக்காக உதவச் செல்லும் ஒருவனின்

பண்பு (82) முதலாயின.

பத்துப்பாட்டில் :

''பெற்ற பெருவளன் பெறாஅர்க்கு அறிவுறுத்தும்'' பண்பு-ஆற்றுப்படை நூல்கள் முதலியன.

பயன்படும் நூல்கள்:

கலைக்களஞ்சியம்-தொகுதி 6: பிரித்தானியா கலைக் களஞ்சியம் தொகுதி 20: அமெரிக்கன் கலைக்களஞ்சியம் தொகுதி 8: சங்க இலக்கியம்: பாட்டும் தொகையும்; தெ.பொ.மீ.யின் ''தமிழும் பிற பண்பாடும்'', அ.தட்சிணா மூர்த்தியின் ''தமிழர் நாகரிகமும் பண்பாடும்'' இன்னும் பல.

முனைவர் ச.சாம்பசிவனார்,
சிறப்பு நிலைப் பேராசிரியர்,
சைவ சித்தாந்தத் துறை,
ம.கா.பல்கலைக்கழகம்,
மதுரை-625 021.

புனைகதைகளில் இளையோர் உளவியல் (Adolescent Psychology)

மனித வளர்ச்சியில் குழந்தைப் பருவம் (Childhood), இளையோர் பருவம்(Adolesence Age),வாலிபப் பருவம் (Adulthood),நடுத்தர வயதினர் பருவம் (Middle Age)முதியோர் பருவம்(Old Age)என்று பருவம் மற்றும் வயது அடிப்படையில் பல வளர்ச்சிப் படி நிலைகள் உள்ளன. உளவியல் பகுப்பாய்வில் (Psycho Analysis)உளவியலார் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு பருவத்திலும் மனித வளர்ச்சியில் ஏற்படும் மாற்றங்களையும் அவற்றிற்கான அடிப்படைக் காரணங்களையும் கண்டு தெளிவு படுத்தியுள்ளனர். அவற்றுள் இளையோர் உளவியல் குறித்த

உளவியலார் கருத்துகளையும், இக்காலப் படைப்புக்களில் இளையோர் உளவியல் பண்புகள் அமைந்துள்ள தன்மையினையும் எடுத்துக்காட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1. இளையோர் பருவம் (Adolescent Age)

குழந்தைப் பருவத்திலிருந்து பருவ வயதிற்கு உள்ளத்தாலும், உடலாலும், மாறுகின்ற நிலை அல்லது பருவம் இளையோர் பருவம் ஆகும். அடலசன்ஸ் (Adolescence) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு வளர்தல் அல்லது முதிர்ச்சியை நோக்கிய வளர்ச்சி என்பது அகராதிப் பொருளாகும். இப்பருவம் பாலியல் வளர்ச்சி, பாலியல் உணர்விற்குரிய மாற்றங்களைக் குறிக்கும் ஆரம்ப நிலையிலிருந்து தொடங்குகிறது. முறைப்படி பாலியல் வளர்ச்சியை (Sexual Meturity) அடையும் பொழுது இப்பருவம் முடிகிறது.

எனவே, முந்தைய கால மக்களிடை பாலின மாற்றமும் (Puberty) இளையோர் பருவமும் ஒன்றாகக் கருதப்பட்டது. மேலும் ஒரு குழந்தை இனப்பெருக்கத்திற்குத் தயாராகும் நிலைதான் இளையோர் பருவம் என்றும் விளக்குவர். தற்பொழுது இப்பருவம் குழந்தைப் பருவத்திலிருந்து உடலியல் (Psyology) உளவியல் (Psycology) உணர்வு நிலை (Feelings) சமூக நிலை (society) சார்ந்த வளர்ச்சிப்படி நிலை மாற்றங்களையும் குறிக்கிறது. தனி ஒருவனுடைய உடலியல் சார் சமூக அந்தஸ்து மாற்றத்திற்குரிய காலம் இளையோர் பருவமாகும் (time of transition in the bio-social states of Individual) என்பர்.

இக்காலம் தனி ஒருவன் மற்றவர்களுடன் வைத்துக்கொள்ளும் பழக்க வழக்கங்கள், முதன்மை நிலை பொறுப்புக்கள், கடமைகள் முதலியவற்றிலுள்ள மாற்றங்களைக் குறிக்கும் பருவமாகும். இம்மாற்றங்கள் பெற்றோர், தான், ஒப்பார் மற்றும் மற்றவர்களுடன் கொண்டுள்ள மனநிலைகளின் (attitudes) அடிப்படையில் நிகழ்கின்றன. இவ்வாறு ஏற்படும் மாற்றங்களைக் கொண்டு ஜி.ஸ்டேன்லி ஹால் (G. Stanley Hall) இப்பருவத்தை உணர்ச்சியின் உச்ச நிலைக் காலம் (Period of Heightened

emotionality)என்கிறார்.

2. இளையோர் பருவப் பிரிவுகளும் காலமும்

இவ்இளையோர் பருவத்தை முந்தைய இளையோர் பருவம் (Early adolesence)பிந்தைய இளையோர் பருவம் (Late adolesence) என்று உளவியலார் பகுத்து விளக்குகின்றனர்.

3.இளையோர் பருவக் குண நலன்கள்

டுவெல்(Duwell)என்ற உளவியலறிஞர், இளையோர் பருவத்திற்குரியதாக மூன்று அடிப்படைப் பண்புகளைக் குறிப்பிடுகின்றார். அவை 1.தெளிவற்ற அல்லது இரண்டுங் கெட்டான் மனநிலை (Vague attitude) 2.மாறும் அல்லது மாற்றத்திற்குரிய மன நிலை, 3. தீவிர உணர்ச்சி வயப்பட்ட தன்மை வாய்ந்த மனநிலை என்பனவாகும்.

4. இளையோர் பருவ மாற்றத்திற்குரிய பிரச்சினைகளும் தீர்வுகளும்

இளையோர் பருவம் வளர்ச்சியும் முதிர்ச்சியும் மாறிய அக்கறைகளும் கொண்ட பருவமாதலின் அவற்றுடன், உள்ளார்ந்த தன்மையுடைய பல தொல்லைகளுமிருக்கும். இளையோர் முதியோர்களால் பல சமயங்களில் தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறார்கள். அத்துடன் அவனுக்கே அவன் பல சமயங்களில் ஒரு புதிராகத் தென்படுகிறான். மேலும் உடலியல் தோற்றம், உடல்நலம், போன்ற பல பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டியிருக்கிறது. இப்பிரச்சினைகளை இளையோர் கள் வளர்கின்ற பருவத்தின் அடிப்படையில் ஆராய வேண்டும் என்கிறார் மார்க்ரட் சமோன்.

5. இளையோர் உளவியல் கொள்கைகள்

உளவியலார் மேற்குறிப்பிட்ட இளையோர் பருவ மாற்றங்களுக்குரிய காரணங்களினடிப்படையில் சில உளவியல் கொள்கைகளை வகுத்துள்ளனர். அவை 1. இல்லச்சிக்கலும்

இளையோர் உளவியல் மதிப்பும், 2. ஒப்பார் உறவு, 3. பால் உணர்வு, 4. சமுதாய நிறுவனம், 5. கல்வி நிறுவனம், 6. தொழில் நிறுவனம், 7. இளமையில் குற்றநடத்தை, 8. ஆளுமை போன்றவை குறிப்பிடத்தக்கன.

மேற்குறிப்பிட்டவற்றுள் இல்லச் சிக்கல், குற்ற நடத்தை, கல்வி நிறுவனம், சமூகப் பொருத்தப்பாடு, பால் உணர்வு போன்ற கொள்கையினடிப்படையில் புதினங்களில் வெளிப்படும் (சிவசங்கரி, ராஜம் கிருஷ்ணன், பாலகுமாரன், மாலன் முதலியோர் படைப்புக்களில்) இளையோர் உளவியல் பிரச்சினைகளையும் அவற்றிற்கான அடிப்படைக் காரணங்களையும் தீர்வுகளையும் வெளிக்கொணர இக்கட்டுரை முயலுகிறது.

முனைவர் செ.சாரதாம்பாள்,
முதுநிலை விரிவுரையாளர்,
ஒப்பிலக்கியத்துறை,
தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை-625 021.

தமிழ் பலபொருள் சொற்களின் தோற்றமும் வகைப்பாடும்

'சொற்பொருள்', மானிடவியல், தத்துவம், உளவியல், புள்ளியல், மொழியியல் போன்ற பல்வேறு துறை அறிஞர்களால் அவ்அவ் துறைகளின் தன்மைக்கு ஏற்பப் பல்நிலைகளில் விளக்கப்பட்டுள்ளது. இவ்விளக்கங்களுக்கிடையே ஒருமித்த கருத்தைக் காண இயலவில்லை. சொல்லுக்கும் பொருளுக்கும் இடைப்பட்ட உறவு பற்றி மொழியியலாளர்களிடையே பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. மரபு இலக்கணத்தார் சொல்லமைப்பு, சொல் வகைப்பாடு, சொற்பொருள் என்ற

மூன்று நிலைகளில் பொருளுக்கு விளக்கம் அளித்துள்ளனர். மொழியின் வளர்ச்சிக்கும் நெகிழ்வுத் தன்மைக்கும் சிறந்த எடுத்துக்காட்டாய்த் திகழ்வன பலபொருள் சொற்களாகும்.

சொல் முதலில் ஒருபொருளில் கையாளப்படுகின்றது. பின்னர்க் காலப்போக்கில் மொழி மற்றும் சமுதாயத்தின் சூழலுக்கு ஏற்பவும் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சிக்கு ஏற்பவும் பலபொருள்களைப் பெற்று விரிவு பெறுகின்றது. சொல் மொழி ஒருங்கிலிருந்து சற்று விலகிப் பயன்படுத்தப்படும்பொழுது பல புதிய பொருள்களைப் பெறு கின்றது. இப்பொருள்கள் முதலில் தற்காலிகமாகப் பயன்படுத் தப் பெற்றுப்பின் நாளடைவில், நிலைபெற்று மொழி ஒருங்கின் கூறுகளாக அமைகின்றன. இவ்வாறு பல்கிப் பெருகியுள்ள பொருள் தன்மையே பலபொருள் தன்மையாகும். பலபொருள் தன்மையுடைய சொற்கள் பலபொருள் சொற்களாகும்.

ஒரு சொல்லுக்குரிய அனைத்துப் பொருள்களும் குறிப்பிட்ட ஒரு காலக்கட்டத்தில் தோன்றியவையோ அல்லது இலக்கியத் தில் குறிப்பிட்ட ஒரு நூலில் தோன்றியவையோ அல்ல. மொழி வளர்ச்சியின் பல்வேறு காலக்கட்டங்களில் தோன்றி வளர்ந்தவை யாகும். சொல்லுக்குரிய பொருள்கள், அவற்றின் தோற்றம், வரவு எண்ணிக்கை, பயன்பாடு, ஒவ்வொன்றிற்கும் இடையேயுள்ள உறவு என்பனவற்றின் அடிப்படையில் பல வகைகளாகக் காணப்படுகின்றன. எனினும் பல பொருள் சொற்களின் வகைப் பாட்டிற்குப் பெரும்பாலும் அவை தோற்றம் பெற்றக் காரணங் களே அடிப்படையாக அமைகின்றன. தமிழில் பலபொருள் தோற்றத்திற்கு மொழி வரலாறு, மொழிச் சூழல், சமுதாயச் சூழல் என்பன முக்கிய காரணங்களாய்க் கருதப்படுகின்றன. இக்கட்டுரையில்,

தமிழ் பலபொருள் சொற்கள் குறித்து, மரபு இலக்கணங்கள், மொழியியல் அறிஞர்கள் இடையே காணப்படும் கருத்துக்கள் விரிவாக ஆராயப்பெற்றுள்ளன.

தமிழில் பல பொருள் சொற்கள் தோன்றுவதற்குரிய காரணங்களும் சூழல்களும் எடுத்துக் காட்டுகளுடன் விளக்கப் பெற்றுள்ளன.

பல பொருள் சொற்களின் வகைகளாக அடிப்படைப் பொருள், நேர்பொருள், தலைமைப் பொருள், சிறப்புப் பொருள், அணிநயப் பொருள், குறிப்புப் பொருள், தழுவு பொருள் என்பன இலக்கிய சான்றுகளுடன் விரிவாகத் தரப்பெற்றுள்ளன.

இக்கட்டுரை மூலம் தமிழ்ச் சொற்களின் வளர்ச்சியைப் பொது நிலையிலும், பல பொருள் சொற்களின் அமைப்பைச் சிறப்பாக வும் அறிந்து கொள்ள இயலும்.

முனைவர் எச்.சித்திரபுத்திரன்,
விரிவுரையாளர்,
தொகுப்பியல் துறை,
தமிழ்ப்பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்-5.

ஆய்தம்-மறுபரிசீலனை

தொல்காப்பியத்தில் இடம் பெறும் அஃது, இஃது, பஃது என்ற சொற்களில் இடம் பெறும் முப்பாற்புள்ளி ஆய்தம் என்ற தனி எழுத்தாகாது. இம்முப்பாற்புள்ளி குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் ஆகிய மூன்றுக்கும் உரிய புள்ளிகள் என்ற பேராசிரியர் கருத்தே ஏற்புடையதாகும். டாக்டர் இரா.கோதண்டராமன் அஃது, இஃது, எஃகு என்ற சொற்களின் வேர்ச் சொற்களாக அய், இய், எய் என்பனவற்றைக் கொண்டுள்ளார். இக்கருத்தினடிப்படையில் அஃது, இஃது, எஃகு போன்ற ஆய்தம் இடம் பெறும் சொற்களை ஆராயின் இச்சொற்களில் இடம் பெறும் ஆய்தத்தை இகரக் குறியீடாகவே கொள்ள இடந்தருகிறது. தொல்காப்பியத்தில் யகரமும், முப்பாற்புள்ளியும் எதுகையாக இடம் பெறுவதை இக்கண் ணோட்டத்தில் நோக்குதல் வேண்டும். இவ்வாறு நோக்கின்

தொல்காப்பியத்தில் இடம் பெறும் ஆய்தம் தொடர்பான நூற்பாக்கள் மறுபரிசிலனைக்குரியவையாகும். தமிழகத்தில் இன்றுவரை கிடைத்துள்ள தமிழிக் (தமிழ்-பிராமி) கல்வெட்டுக் களில் காணப்படும் முப்பாற்புள்ளிக் குறியீடு இகரத்தைக் குறிப்பது என்பது இவண் வலியுறுத்தப்படுகிறது.

டாக்டர் அ.சீநிவாசன்,
இணைப்பேராசிரியர் -தலைவர்,
தமிழியற்புலம்,
மதுரைக்காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை.

தமிழ்க் கவிதையியலும் சிற்பக் கலையும்

தமிழ்க் கவிதையின் அழகியல் பற்றிச் சிந்திக்கும்போது பிற கலைகளின் அழகியல் பற்றியும் சிந்திப்பது அவசியம் ஆகும். ஒரு சமூகத்தின் அழகியல் அச்சமூகத்தில் பயிலப்படும் கலைகள் அனைத்திலும் அடிநாதமாக ஓடிக் கொண்டிருக்கும். கலைகளின் தன்மைக் கேற்ப அழகியலின் வெளிப்பாடு மாறலாமே ஒழிய அழகியலின் அடிப்படையில் பெரிய வேறுபாடு இருக்காது.

தமிழ்க் கவிதையியல் பற்றிச் சிந்திக்கும்போது அது, சிற்பக் கலையுடன் கொண்டுள்ள தொடர்பு கவனத்தில் கொள்ள வேண்டியதாக உள்ளது. தமிழ்க் கவிதை இயலுக்கும் சிற்பக் கலைக்கும் இடையே உள்ள தொடர்பு இருவகைப்பட்டதாகும்.

1. கவிதையில் கூறப்படும் உவமைகளையே சிற்ப நூலாரும் கூறுதல்.

2. பாட்டியல் நூல்களில் கூறப்படும் பொருத்தம் பற்றிய செய்திகளில் பல சிற்ப நூல்களிலும் காணப்படுதல்

இவற்றில் முதலாவதாகக் கூறப்பட்ட கருத்து அழகியல் பற்றியதாகும். இரண்டாவதாகக் கூறப்பட்ட கருத்து, படைப்பு

என்ற வினை நிகழ்ச்சியின் போதுபின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகளாக இரண்டு நூல்களிலும் கூறப்படுவதாகும். இந்த இரண்டு அடிப்படைகளிலும் நோக்கும்போது தமிழ்க் கவிதையியல், சிற்பக் கலையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது என்பதை அறியலாம்.

இரா.சீனிவாசன்,

ஆய்வாளர்,
தமிழ் இலக்கியத் துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை-5

சங்கச் சமூகமும் கற்புக் கருத்தாக்கமும்

சங்க இலக்கியத் தரவுகளில் இடம் பெறும் கருத்துக்கள் சமூகவியலார் நோக்கில் ஆராயப்படுகின்றன.

தொல்காப்பியத்தில் கற்பின் பொருளும் தோற்றத்திற்கான காரணங்களும் கூறப்படுகின்றன. சங்க இலக்கிய ஆட்சிகளில் இது பதிந்திருந்தாலும் கற்பின் பொருண்மை விரிவடைந் திருப்பதையும் காணமுடிகிறது.

சங்கச் சமூகத்தின் செயற்பாட்டுவிதிகளில் ஒழுக்கக் கோட்பாடு தலைமை சான்றது. இதனைச் செயற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டிருந்த நம்பிக்கைகள் மக்களிடம் நன்கு வேரூன்றி இருந்துள்ளது- 'ஒழுக்கக் கோட்பாடும் இயற்கையின் இயக்கமும் பின்னிப் பிணைந்தவை' என்பதே அந்த நம்பிக்கையின் ஆணிவேர். இதில் பல்வேறு முரண்பாடுகள் காணப்படுகின்றன. இவற்றில் ஒன்றான கற்புக் கருத்துச் சங்க காலத்திலேயே வழிபாட்டு நிலையை நோக்கி வளர்ச்சி

அடைந்திருக்கிறது. இதற்குத் தந்தை வழிமுறை-நிலவுடைமைச் சமூகம் ஆகியவை அடிப்படைக் காரணங்கள்.

முனைவர் மு.சுதர்சன்,
ஆய்வாளர், இலக்கியப்புலம்,
புதுவை மொழியியல் பண்பாட்டு,
ஆராய்ச்சி நிறுவனம்,
புதுச்சேரி-1.

குந்தவை வளநாட்டில் (ஏழுமலையான்) வடக்குமலையான் வழிபாடு

குந்தவை வளநாடு இராசராச சோழன் ஆட்சிக் காலத்தில் பிரிக்கப்பட்ட வளநாடுகளில் ஒன்றாகும். இவ்வளநாட்டில் பயணக்கோட்டை, நார்த்தேவன் குடிக்காடு, சின்னப்புலி குடிக் காடு, சடையார்கோவில், துறையுண்டார்கோட்டை, அருமலைக் கோட்டை, ஆர்சுத்திப்பட்டு, வடக்குநத்தம், அரசப்பட்டு, மூர்த்தியாம்பாள்புரம் என்ற பத்து ஊர்கள் உள்ளன. இது தஞ்சாவூருக்குக் கிழக்கே 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வளநாட்டில் பெரும்பான்மை கள்ளரின மக்களும் அவர்களைச் சார்ந்து நச்சர், கொல்லர், வண்ணார், பரியாரி, வலையர், பறையர் முதலானவர்களும் இடம் பெற்றுள்ளனர். வேளாண்மைத் தொழிலை மேற்கொண்டுள்ள இவர்கள் அசைவ உணவினை உண்ணும் பழக்கம் உள்ளவர்கள்.

விளக்கச்சி அம்மன், வேணிநாதர், நாட்டு எல்லைகளில் உள்ள ஐயனார்கள், மற்றும் தத்தம் குலதெய்வங்கள் முதலானவற்றிற்கு ஆடு, கோழி வெட்டி வழிபாடு மேற்கொள்ளும் வழக்கம் கொண்டுள்ளார்கள்.

ஆண்டில் பதினொரு (11) திங்கள் இவ்வழிபாட்டு முறை யினை மேற்கொண்டு வரும் இம்மக்களில் ஒரு சிலர் புரட்டாசித்

திங்கள் மட்டும் வடக்குமலையான் வழிபாட்டினை மேற்கொள் கின்றனர். அத்திங்கள் முழுவதும் விரதம் கடைபிடிக்கின்றனர். இவ்விரத வழிபாட்டிற்காக அவர்களால் மேற்கொள்ளப்படும் நடைமுறை பழக்கங்கள் எல்லோராலும் பின்பற்ற முடியாதன வாக இருக்கின்றன. பொருள் வசதி உள்ளவர்களாலும் செல்வாக்கு உள்ளவர்களாலுமே செயல்படுத்தப் படுவனவாக உள்ளன.

நடைமுறைகள்

ஆவணித் திங்கள் கடைசிவாரமே வீடுகளைச் சுத்தம் செய்து அனைத்துத் துணிகளையும் நனைப்பர். பயன்படுத்தி வந்த பாத்திரங்களைத் தவிர்த்துப் புதிய பாத்திரங்களைப் பயன் படுத்துவர். அசைவ உணவினை முற்றிலும் தவிர்ப்பர். பறையர் களுக்கு உணவிடுவதும், துக்கக் காரியங்களுக்குச் செல்வதும் விரதம் மேற்கொள்ளாதவர் வீட்டிற்குள் செல்வதும், வெளியில் சென்று வந்தால் குளிக்காமல், அணிந்திருக்கும் துணிகளை நனைக்காமல் வீட்டினுள் வருவதும், விரதம் மேற்கொள்ளா தவர்களைத் தம் வீட்டிற்குள் அனுமதிப்பதும் அவர்களிடம் பொருள் பரிமாற்றம் கொள்வதுமாகச் செயல்கள் அனைத்தும் முற்றிலும் தவிர்க்கப்படும். பாயில் படுப்பதும் கணவன் மனைவி சேர்ந்திருப்பதும் தவிர்க்கப்படுகிறது.

வழிபாடு-தளியல்

புரட்டாசித் திங்கள்களில் வரும் சனிக்கிழமைகள்தோறும் வீட்டார் அனைவரும் எண்ணெய் தேய்த்துக் குளிப்பர். இராமக்கட்டியினால் நெற்றியிலும், மார்பிலும் இரண்டு கைகளிலும் நாமம் போட்டுக் கொள்வர். சாமி கும்பிடும் இடத்தில் சமைத்த மதிய உணவினை வைத்துச் சாம்பிராணிப் புகையிட்டுக் குடும்பத்தார்கள் அனைவரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிடுவர். மூன்றாவது சனிக்கிழமை அல்லது அவர்களுக் கேற்ற ஒரு சனிக்கிழமையில் சாமி கும்பிடும் இடத்தில் உள்ள சுவற்றில் அனுமார், தேர் படத்தினைப் பச்சிலையால் வரைவர். அனுமாருக்கு வடைமாலை போடுவர். பொங்கல் துள்ளுமாவு, மதிய உணவு வகைகள், பழ வகைகள் முதலானவற்றைப்

பல்லயமாகப் போடுவர். தாதர் வந்து வடக்கு மலையானுக்குச் சாம்பிராணி, சூடம் கொளுத்திக் கும்பிடச் செய்வார். அனைவருக்கும் உணவு பரிமாறப்படும். இதற்குத் தளியல் போடுதல் என்று பெயர்.

வழிபாட்டின் தோற்றம்

பல தலைமுறையாகத் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகின்றது. தொடக்கக் காலத்தில் இராமாயணம் நாடகம் நடத்துபவர்களாலும் இராமர் வேடம் போடுபவர்களாலும் இவ்விரதம் கடைபிடிக்கப்பட்டு வந்திருக்கிறது. பின்னர் இராமேசுவரம், திருப்பதி சென்று வந்தவர்களாலும் அவர்களது சந்ததியினர்களாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பயன்

இவ்விரதம் சிறப்பாக குழந்தைப் பேற்றிற்காகவும் மேலும் செல்வநிலை உயர வேண்டும் என்ற நிலையிலும் மேற்கொள் ளப்படுவதாக இம்மக்கள் நம்பிக்கைக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வழிபாடு தளியல் போடுதல், புரட்டாசி விரதம் பிடித்தல், வடக்குமலையான் வழிபாடு, ஏழுமலையான் வழிபாடு என்றெல்லாம் சொல்லப்படுகின்றது.

முனைவர் சி.சுந்தரேசன்,
நாடகக் களஞ்சியம்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

கொங்கு நாட்டுப்புறக் கதைகளில் சமூகம்

நாட்டுப்புறக் கதைகள் வாய்மொழியாக மக்கள் மத்தியில் வழங்கப்பட்டு வருவன. ஒவ்வொரு சமூகச் சூழலுக்கும்,

வட்டாரத்திற்கும் ஏற்பக் கதைகள் வழங்கி வருகின்றன. கொங்கு நாட்டில் எண்ணற்ற நாட்டுப்புறக் கதைகள் வழங்கி வருகின்றன. இக்கதைகளைத் தொகுத்தும், வகைப்படுத்தியும் ஆராயும் போது கொங்கு நாட்டின் சமூக அமைப்பு, உறவு முறைகள், பழக்க வழக்கங்கள் ஆகியனவற்றை அறிய முடிகிறது. தொல்காப்பியர் நாட்டுப்புறக் கதைகளை இரு வகைகளாக வகைப்படுத்திக் (Tale Types) கூறியுள்ளார். அவையாவன: 1. பொருளில்லாத கட்டுக்கதைகள். 2. பொருளுள்ள நகைச் சுவைக்கதைகள்.

சமூகச் சார்பு நிலைகள் உறவுகள், பண்பாட்டு முறைகள், நீதிக் கருத்துக்கள் ஆகியனவற்றைப் புலப்படுத்தும் கதைகளைப் பொருளுள்ள நகைச்சுவைக் கதைகள் என்ற பிரிவில் அடக்கலாம்.

ஆய்வு எல்லை

கோவை, பெரியார், அண்ணா ஆகிய மாவட்டங்களில் திரட்டப்பட்ட நாட்டுப்புறக் கதைகள் மட்டுமே இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

ஆய்வு அணுகுமுறை

நாட்டுப்புறக் கதைகளில் அமைந்துள்ள சமூக அமைப்பு முறைகளை ஆராய சமூகவியல் அணுகுமுறை இவ்வாய்வில் பொருத்திப் பார்க்கப்படுகிறது. நாட்டுப்புறக் கதைக்கு அடிப்படையாய் அமைவது செயல் (function) தான். கதைச் செயல் வழி சமூகம், உறவு முறைகள் பற்றி ஆராய பிராப்பின் அணுகுமுறை (Propp Method)... கையாளப்படுகிறது. கொங்கு நாட்டில் வழங்கி வரும் கதைகள் பிற வட்டாரங்களிலும் ஒன்று போலவும், வேறுபாடுகளுடனும் வழங்கி வருகின்றன. இத்தகைய கதைகள் பற்றி ஆராய வரலாற்று நிலவியல் முறை (Historical Geographical Method)... கையாளப்படுகிறது.

கதை வகைகளும் ஆய்வும்: (Classification of Tales and Analysis)

கள ஆய்வில் திரட்டப்பட்ட நாட்டுப்புறக் கதைகளைப் பின்

வருமாறு வகைப்படுத்தி ஆராயலாம்:

1. கணவன்-மனைவி இணை பற்றிய கதைகள்

2. மாமியார்-மருமகள் இணை பற்றிய கதைகள்

3. அண்ணன்- தங்கை இணை பற்றிய கதைகள்

4. அண்ணன்- தம்பி இணை பற்றிய கதைகள்

5. மூடர் பற்றிய கதைகள்.

ஆய்வு முடிவுகள்

கொங்கு நாட்டில் வழங்கி வரும் கதைகள் கொங்கு நாட்டுக் கிராமப்புற சமூக அமைப்பு, உறவு முறைகள், கூட்டுக் குடும்பச் சூழல், சாதி ஏற்றத்தாழ்வுகள் ஆகியனவற்றைப் புலப் படுத்துகின்றன.

நகைச்சுவை உணர்வுடன் அறக்கருத்துக்களையும் எடுத்துரைக்கின்றன.

நாட்டுப்புற வாழ்க்கை முறைகளை அறிந்துகொள்ள இக்கதைகள் பெரிதும் துணை புரிகின்றன.

டாக்டர். பெ.சுப்பிரமணியன்,
தேர்வு நிலை விரிவுரையாளர்,
தமிழ்த்துறை-உயர் ஆய்வு மையம்,
அருள் மிகு பழனியாண்டவர் கலை-
பண்பாட்டுக் கல்லூரி,
பழனி-624 601.

ஒப்பிலக்கிய நோக்கில் மொழி பெயர்ப்பு

உலக இலக்கியம் என்பது பொதுமை அறக் கருத்துக்களைக் கொண்டதாகும். புதிய இலக்கியம் மலர மொழி பெயர்ப்பு துணை புரிகிறது. தற்காலச் சூழலில் ஒரு நாட்டின் பண்பாட்டுச் செல்வங்கள் உலக மக்களின் பொதுமை சொத்தாக மாறுவதற்கு மொழி பெயர்ப்பு துணை செய்கிறது. இன்று படைப்பிலக்கியம் போன்றே மொழி பெயர்ப்பு தனி கலைத்துறையாக வளர்ந்துள்ளது.

மொழி பெயர்ப்பு வழியில் இலக்கியங்களை உய்த்துணரும் வாசகர்கள் மூல நூலின் மொழியை அறியாதவர்கள், மொர்ழி பயிலும் மாணவர்கள், கற்று மொழியை மறந்தவர்கள், மூல மொழி நூலில் புலமை பெற்றவர்கள் என்று நான்கு நிலையைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். உலக இலக்கியம், பொதுமை இலக்கியம், இலக்கியம், ஒப்பிலக்கிய நோக்கில் மொழி பெயர்ப்பு அமைந்துள்ளமையை இக்கட்டுரையில் காணலாம்.

பெ.சுப்பிரமணியன்
ஆய்வாளர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி,
சென்னை-*113*.

விடுதலைக்குப் பின் தமிழ்ப் புதினங்களில் அரசியல் நோக்கு

புதின இலக்கியப் படைப்பு-குடும்ப-சமூக-வரலாறு-வட்டாரம்-வர்க்கம்-அரசியல் முதலிய சிக்கல்களை மையமாக வைத்து வளர்ந்துள்ளன. இப்புதினப் படைப்பில் அரசியல் பின்னணியாகவும், உத்தியாகவும், களமாகவும், கருத்தாகவும் படைக்கப்பட்டுள்ளது. விடுதலைக்குப் பின்னுள்ள அரசியல்

நோக்கு நிலைகளை ஆராய

1. அகிலனின் - பால்மரக்காட்டினிலே

2. அண்ணாவின்- சந்திரோதயம்

3. சின்னப்ப பாரதியின் -சங்கம்

4. நா.பார்த்தசாரதியின் - மூலக்கனல்

5. இந்திராபார்த்தசாரதியின் - வேர்ப்பற்று

ஆகிய ஐந்து புதினங்களின் தரவுகள் இக்கட்டுரையில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தேசிய நோக்கு

தமிழ்ப் புதினங்களில் விடுதலைக்குமுன் நாட்டுப்பற்று என்னும் நோக்கில் ஆங்கில எதிர்ப்பை ஏற்படுத்த தேசிய உணர்வு, காந்தியச் சிந்தனைகள் புதினங்களின் கருப்பொருளாகவும்-பின்னணிகளாகவும் படைக்கப்பட்டுள்ளன. இப்படைப்பு முயற்சிகளின் ஈடுபட்டோர் பலர்.

விடுதலைக்குப்பின் படைக்கப்பட்ட புதினங்களில் தேசிய நோக்கும், காந்தியமும் சமூகச் சிக்கல்களின் தீர்வுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்தோடு தேசிய இயக்கத்திலிருந்து உருவான காங்கிரசு கட்சியின் சிதைவும், தியாகச் சரிவும் ஜெகசிற்பியன், நா.பார்த்தசாரதி, இந்திராபார்த்தசாரதி முதலியோரின் புதினங்களில் விமர்சன எதார்த்தப் போக்கில் விவரிக்கப்பட்டுள்ளன. தேசிய நோக்குநிலையை ஆராய அகிலனின், 'பால்மரக்காட்டினிலே' என்னும் புதினம் ஆராயப்பட்டுள்ளது.

திராவிட இயக்கச் சீர்திருத்தப் போக்கு

தமிழ்ப் புதினங்களில் வ.ரா.வின் சுந்தரி முதல் பல

புதினங்களில் சீர்திருத்தம், பெண் முன்னேற்றம் ஒரு பகுதியாகப் படைக்கப்பட்டன. ஆனால் பெரியாரின் சுயமரியாதை இயக்க வளர்ச்சியில் மூடபழக்க எதிர்ப்பு, புராண எதிர்ப்பு, சாதி எதிர்ப்பு, பெண் முன்னேற்றம், விதவை மறுமணம், குழந்தை மண எதிர்ப்பு, பொருந்தாமண எதிர்ப்பு போன்றவை காரணமாகப் பகுத்தறிவு நோக்கில் விமர்சனம் செய்யப்பட்டன. இந்த இயக்கத்தின் சார்பில் புதினங்களைப் படைத்த அண்ணா, கலைஞர், ஏ.வி.பி.ஆசைத்தம்பி, டி.கே.சீனிவாசன்-தென்னரசு போன்றோர் அரசியல் கொள்கை விளக்கங்களைக் காட்டிலும் சமுதாயச் சீர்திருத்தத்தையே மையப்புள்ளியாகப் படைத்து உள்ளனர்.

இந்த நோக்குநிலையை அடையாளப்படுத்த அண்ணாவின் சந்திரோதயம் ஆராயப்பட்டுள்ளது.

மார்க்சிய இயக்க நோக்கு

விடுதலைக்குப்பின் ஏற்பட்ட மேற்கத்திய இயக்கமும், புதுமையாக்கமும், தொழிலிய ஆக்கமும் சமூக வாழ்வில் பல மாற்றங்களை ஏற்படுத்தின. தேசிய இயக்கம், திராவிட இயக்கம் பரவலின் போது தமிழக அரசியலில் மார்க்சியக் கொள்கையும்-கட்சியும் உதயமாயின. அத்தோடு விடுதலைக்குப்பின் ஏற்பட்ட சமூக, அரசியல், பொருளாதார ஏமாற்றங்கள் மார்க்சிய இயக்கத்தைத் தேட வைத்தன. குறிப்பாகத் தொழிலாளர்களின் உரிமைக்குக் குரல் கொடுத்துப் போராடத் தொடங்கியது மார்க்சிய இயக்கம். இந்த இயக்கம் பொருளாதாரச் சமத்துவத்துக்காகப் போராடியது. இச்சூழலில் உருவான புதினங்களில் 1957-இல் தோன்றிய ரகுநாதனின் பஞ்சும் பசியும் குறிப்பிடத்தக்க முதல் மார்க்சிய புதினம். இதில் நெசவாளர்கள் போராட்டம் மார்க்சிய ரீதியாக அணிதிரள்கிறது. இதையடுத்துச் செல்வராஜின் மலரும் சருகும், தேநீர், பொன்னீலனின் கரிசல், இ.பா. வின் குருதிப்புனல், சின்னப்ப பாரதியின் தாகம், சங்கம், பூமணியின் பிறகு, வெக்கை, இமயவனின் விளைநிலம் முதலிய வர்க்கப் போராட்டப் புதினங்கள் சோசலிச எதார்த்தப் புதினங்களாகத்

தோன்றின. இம்மார்க்சிய இயக்க நோக்கு நிலைக்குச் சின்னப்ப பாரதியின் 'சங்கம்' ஆராயப்படுகிறது.

சமகால அரசியல் விமர்சனப் போக்கு

நா.பா.வின் நெஞ்சக்கனல், மூலக்கனல் முதலான நாவல்களிலும், இ.பா.வின் காலவெள்ளம், தந்திரபூமி, சுதந்திர பூமி புதினங்களிலும் சமகால அரசியல் கட்சிகள் விமர்சிக்கப் பட்டுள்ளன. இந்நோக்கு நிலையை ஆராய நா.பா.வின் மூலக்கனலும், இ.பா.வின் வேர்ப்பற்றும் ஆராயப்பட்டுள்ளன.

கட்டுரையின் முடிவில் தேசிய, திராவிட, மார்க்சிய நோக்கு பற்றிய மதிப்பீடும், சமகால அரசியல் நாவல்களின் மதிப்பீடும் முடிவுகளாக எழுதப்பட உள்ளன. இந்நோக்கு நிலைகளைப் பிற இந்திய மொழி நாவல்களோடு ஒப்பிட்டு ஆராயக் களங்கள் உள்ளன.

டாக்டர் பெ.சுபாசுசந்திரபோசு,
தமிழ்ப்பேராசிரியர்,
தமிழாய்வுத் துறை,
பிஷப் ஹீபர் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி-620 017.

ஊழ்வினையும் தனிமனிதச் சிதைவும்

ஒருவன் முற்பிறப்பில் செய்த வினை அதன் தன்மைக்கேற்ப அடுத்த பிறவியில் அவனைத் தொடர்ந்து வந்து பயனளிக்கும். இந்த நிகழ்வு ''ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்'' என்று கூறப்படுகின்றது. ஊழ்வினை எனப்படும் விதி ஒவ்வொரு தனிமனிதன் வாழ்விலும் பல சிதைவுகளை ஏற்படுத்துகின்றது. தனி மனிதனும், விதியும் போராடும் போராட்டமாக வாழ்க்கை அமைகின்றது. ஊழ் என்பது முன்னைப் பிறப்பினை நம்புவார்

இன்றைய நிகழ்ச்சியினுக்கும், நாமே பொறுப்பு என்பதனை விளக்கும் முறை எனவும் கூறுவர். இவ்வாறு ஊழ் வினையானது தனிமனித வாழ்வினை எவ்வாறு சிதைக்கின்றது என்பதை இக்கட்டுரையில் காண்போம். இக்கட்டுரையின் எல்லையாக சிலம்பு, மேகலை, சீவகசிந்தாமணி போன்ற இலக்கியங்கள் அமைந்துள்ளன.

இளங்கோவின் ஊழ்வினைக் கோட்பாடு தனிமனிதனை எவ்வாறு சிதைக்கின்றது:

1. கோவலன்

சிலம்பின் கதைத் தலைவனான கோவலன் தன் வாழ்வில் பல அவலங்களை அடைகின்றான். சிறப்பு மிகுந்த வாணிகக் குடியில் பிறந்த அவன் தனது செல்வங்களை எல்லாம் இழக்கின்றான்.

''சலம்புணர்க் கொள்கை சலதியோடு ஆடி
இலம்தரு வான் பொருள் குன்றம் தொலைத்த
இலம்பாடு நாணுத்தரும்''

என்று தன்னை வெறுத்துக் கூறுகிறான் கோவலன்.

கண்ணகி

கோவலனைக் கணவனாகப் பெற்றதால் கண்ணகியின் வாழ்வையும் ஊழ்வினை சிதைக்கின்றது. பாண்டியன் நெடுஞ் செழியன் பாண்டிமாதேவி போன்றவர்களும் கோவலனின் ஊழ்வினைத் தொடர்பாக எவ்வாறு இறக்கின்றனர் என்றக் கருத்துகளை விளக்கமாகக் காணலாம்.

சிந்தாமணியில் ஊழ்வினை, தனிமனித சிதைவிற்கு எவ்வாறு காரணமாகின்றது:

சீவகன்

சீவகன் முற்பிறப்பில் மன்னன் பவணமாதேவனுக்கும், அரசிசயமதிக்கும் குமரனான அசோதரன் என்ற பெயரைக் கொண்டு பிறந்தான். குளத்தில் சேர்ந்திருந்த இரு அன்னப்

பார்ப்பைப் பிரித்த ஊழ்வினையின் காரணமாக மறுபிறப்பில் அவன் வாழ்வில் பல சிதைவுகள் ஏற்படுகின்றன என்பதை விளக்கும் பகுதியாகக் கட்டுரையின் அடுத்தப் பகுதி அமைகின்றது.

மணிமேகலைக் காப்பியத்தில் ஊழ்வினை ஏற்படுத்தும் தனிமனிதச் சிதைவு:

காயசண்டிகை

விருச்சிக முனிவன் உண்பதற்கு வைத்திருந்த நாவல் கனியைச் சிதைத்த காரணத்தால்

> **''இட்டது ஆற்றாக் கட்டு அழல் கடும்பசிப்**
> **பட்டேன், என்தன் பழவினைப் பயத்தால்**
> **அன்னை கேள் நீ ஆர் உயிர் மருத்துவ**
> **துன்னிய என்நோய் துடைப்பாய்''**

(காதை 17, வரி 13-16)

என்ற காயசண்டிகை கூற்றால், அவள் ஈறாறாண்டுகள் பசி நோயால் துன்பப்பட்டாள் என்று அறிகிறோம். அவளது அந்த சிதைவிற்குக் காரணம் அவளது ஊழ்வினையே என்றக் கருத்தை விளக்கும் பகுதியாக இக்கட்டுரையின் அடுத்த பகுதி அமைகின்றது.

உதயணன்

பழம்பிறப்பில் இராகுலன் என்ற பெயரை உடைய உதயணன், காலம் தாழ்ந்து வந்த சமையல்காரன் பயந்து தடுமாறி, பாத்திரம் சிதையும் படி விழ, அவனைச் சினந்து தனது வாளால் வெட்டினான். அதனால் அப்பிறப்பில் திட்டிவிடத்தால் இறந்தான். மறுபிறப்பிலே உதயகுமாரனாகப் பிறந்து காஞ்சனன் வாளுக்கு இரையரனான். அவனது ஊழ்வினை தான் உதயகுமாரனின் அரிய உயிரை உண்டது. இத்தீவினை உன்னை விட்டு ஒழியாது, நீ செல்லும் இடத்திற்கு எல்லாம் வந்து துன்புறுத்தும் என்று பதுமைத் தெய்வம் கூறியதாக அறிகிறோம்.

கோவலனது இனிய இல்லற வாழ்வில் சிக்கல் ஏற்பட்டதற்கும், தனது பதியாகிய புகாரைவிட்டு நீங்கி மதுரை சென்றதற்கும், அங்கு அவன் கள்வன் எனக் கருதி கொலைப்பட்டதற்கும் காரணம் அவனது ஊழ்வினையே.

சிந்தாமணியில், சீவகன், தனது தாய், தந்தையையும், எட்டு அழகிய மனைவியரையும் பிரிந்து துறவு மேற்கொண்டதற்குக் காரணம் அவனது பழவினையே ஆகும்.

மேகலையில், காயசண்டிகை ஆறா பசிப்பிணி கொண்டு வாடியதற்குக் காரணம் அவளது தீவினையே. உதயணன் வாளால் வெட்டப்பட்டு இறந்ததற்குக் காரணம் அவனது ஊழ்வினையே. எனவே தனிமனிதனின் வாழ்க்கைச் சிதைவிற்கு ஊழ்வினை காரணமாகின்றது என்று அறிகிறோம்.

ப.சுலோச்சனா,

ஆய்வு மாணவி,

ஸ்ரீ பராசக்தி கல்லூரி,

குற்றாலம்.

தொன்னூல்விளக்கம்-பாடவேறுபாடுகள்

தொன்னூல் விளக்கம்-ஐந்திலக்கண நூல் ஓலைச் சுவடிகள் உள்ள நூலகங்கள், சுவடி எண்கள் வேதகிரி முதலியார் பதிப்பு *(1898)* மெக்கன்சி பதிப்பு *(1891)* இவற்றில் செய்யப்பட்ட மாற்றங்களையும், சேர்ப்புகளையும் சுட்டுதல், அமிர்தநாதர் *(1864)* பதிப்பில் செய்யப்பட்ட மாற்றங்களையும் கோடிட்டுக் காட்டுதல், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம், சென்னைக் கீழ்த்திசைச் சுவடியகம், உ.வே.சா. நூலகம், திருப்பதி வேங்கடேசுவராப் பல்கலைக்கழகம், செம்பனூர் ஓலைச் சுவடியகம், இவற்றில் உள்ளச் சுவடிகளில் உள்ள ஒற்றுமை, வேற்றுமை இவற்றுடன் பதிப்பு நூற்கள் வேறுபடுவதை ஆய்வு செய்தல்.

நூற்பாக்களில் பாடவேறுபாடுகள்

தஞ்சைப் பல்கலைக்கழகச் சுவடியும், உ.வே.சா. நூலகச் சுவடியும், கீழ்த்திசை நூலகச் சுவ்டியும், கூறும் தொடர்களுடன் முதல் பதிப்பு மாறுபடும் தன்மையைச் சான்றுடன் விளக்கி, அதனால் இலக்கண ஆய்வுகளில் அறிஞர்கள் பிழைபட உணர்ந்துள்ளச் செய்திகளைக் கோடிட்டுக் காட்டுதல். ''நீட்டல், சுழித்தல், குறின்மெய் இருபுள்ளி'' நூற்பாக் கருத்துடன் அறிஞர்கள் முரண்படுவதைச் சுட்டி,எகர, ஏகார, ஒகர, ஓகார மாற்றங்கள் குறித்த வீரமாமுனிவரின் 'ஷ' மாற்றம் பற்றியக் கருத்தினையும் கோடிட்டுக் காட்டுதல், நூற்பாக்களில் சுவடிகள் வேறுபடும் இடங்களையும், பதிப்புகள் வேறுபடும் இடங்களையும் சான்றுகளுடன் பட்டியல் செய்தல்.

உரையில் பாட வேறுபாடுகள்

வீரமாமுனிவர் படைத்த உரையில் முதல் பதிப்பாசிரியர் செய்த மாற்றங்களைச் சான்றுகளுடன் தருதல் - உரையாசிரியர் வீரமாமுனிவரே என்பதை நிறுவுதல் -தன்மை,படர்க்கை இடங்களில் எழுதப்பட்ட உரைக்கு ஓலைச் சுவடிகளில் உள்ளத் தன்மையைக் கூறி ஆய்வு அறிஞர்கள் தந்துள்ள கருத்துக்களின் மெய்மை, அல்லாதனவற்றை விளக்குதல்.

மேற்கோள்களில் பாடவேறுபாடுகள்

தொன்னூல் விளக்கம் பதிப்பில் உள்ள மேற்கோள்களுக்கும் ஓலைச் சுவடியில் உள்ளவற்றிற்கும் உள்ள வேறுபாடுகளைச் சுட்டுதல் -மேற்கோள்களில் உள்ள சிறப்பை விளக்குதல் -யாப்பதிகாரத்தைப் பின்பற்றிச் செய்யுளிலக்கணம் என்ற நூல் படைக்கப்பட்டுள்ளதைச் சான்றுடன் கூறுதல், இரண்டிலும் உள்ள மேற்கோள்களை ஒப்பிடுதல்.

வீரமாமுனிவரின் இந்நூல் தனிச்சிறப்புடனும், புதிய இலக்கணக் கொள்கைகளைத் தருவதாகவும், அமைந்துள்ளதைச்

சான்றுகளுடன் தந்து அவை பாட வேறுபாடுகளால் மறைக் கப்பட்டத் தன்மையை விளக்குதல்.

முனைவர் இ.சூசை,
விரிவுரையாளர்,
தமிழாய்வுத் துறை,
தூயவளனார் தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சி-620 002.

தற்காலக்குறள் நூல்கள்

திருக்குறளின் தாக்கம் அதன்பின் தோன்றிய இலக்கியங்களில் பல்வேறு வகைகளில் நிகழ்ந்துள்ளது. கருத்தும் தொடரும் மட்டுமின்றி, அதன் வடிவமான குறள் வெண்பா யாப்பும் பெருமதிப்பைப் பெற்றுள்ளது. அதனால் தற்காலத்தில் குறள் வெண்பா இலக்கியங்கள் பல தோன்றியுள்ளன. குறள் வெண்பா யாப்பில் முழுமையாக அமையும் இலக்கியங்கள் மட்டுமின்றி ஒன்றே முக்கால் அடிவரை மட்டும் கொண்டு குறள் எனும் பெயர்ப் பெற்றவையும் உண்டு.

திருக்குறளின் அறக் கருத்துக்களைச் சில கூறுகின்றன. இன்றைய சூழலுக்கேற்ற கருத்துக்களைக் கூறும் குறள் வெண்பா என்ற வடிவத்தைச் சில எடுத்தாள்கின்றன. திருக்குறளின் கருத்துகள் பரவலாக எடுத்தாளப்பட்டுள்ளன. சில இடங்களில் அதன் தொடரும் சில இடங்களில் அதன் அசை அமைப்பும் கூட அப்படியே கையாளப்பட்டுள்ளன. தற்காலக் குறள் இலக் கியங்கள் சில திருக்குறளை ஒட்டிய அதிகார முறைமையைக் கொண்டு அமைகின்றன.

தற்காலக் கருத்தை எடுத்தாள்வதாகப் பல புதிய குறள் இலக்கியங்கள் அமைகின்றன. சமுதாய மறுமலர்ச்சியையும் முறையற்ற சமுதாய நம்பிக்கைகளைச் சாடுவதாகவும் பொதுவு டைமைக் கருத்துக்களை முன்னிறுத்துவதாகவும் அமைகின்றன

புதுக் குறள்கள். சில இவற்றிலிருந்து மாறுபட்டுத் தனிப்பட்ட துறை சார்ந்த கருத்துக்களை முன்னிறுத்தும் குறள் இலக்கியங்களாய் அமைந்துள்ளன. வள்ளுவரின் கருத்துக்கு முரண்பட்ட கருத்துகள் சில தற்காலக் குறள்களில் அமைந்துள்ளன.

தமிழ் மொழி ஈடுபாடு பரவலாகத் தற்காலக் குறள் நூல்களில் காணப்படுகிறது. முதல் குறளும் ஈற்றுக் குறளும் தமிழ் நெடுங்கணக்கின் முதல் ஈற்று எழுத்துகளைக் கொண்டு திருக்குறளில் அமைந்துள்ளது போல் சாமி சிதம்பரனாரின் புதுக்குறள் போன்றன அமைந்துள்ளன. தமிழ் மொழியை மட்டுமே முன்னிறுத்தும் வ.சுப.மாணிக்கனாரின் மாணிக்கக் குறள் அமைகின்றது. மற்ற பல குறள் இலக்கியங்களும் மறைமுகமாகவோ நேரடியாகவோ தமிழ்ப்பற்றை வெளிப்படுத்தி நிற்கின்றன. திருக்குறளின் தாக்கத்தைப் பலவாறாகக் கொண்டு இன்றைய சூழலுக்கும் தேவைக்கும் ஏற்ப புதுக்குறள் இலக்கியங்கள் தோன்றியுள்ளன.

ச.செயசீலன்,
ஆய்வாளர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி,
சென்னை-600 113.

இனவரைவியலில் பின்-நவீனத்துவப்போக்குகள்

முன்பெல்லாம் இனவரைவியலார் தாங்கள் ஆய்வு செய்த களத்திலிருந்து திரும்பி வந்த பிறகு அவர்களது குறிப்புக்களை வைத்து அவர்கள் உற்று நோக்கிய அயற்பண்பாடுகளின் விசித்திரமான மரபுகளைப் பற்றி எழுதினர். இப்போது எல்லாத் துறைகளின் அறிஞர்களும் என்ன எழுதப்படுகிறது என்பது

எவ்வளவு முக்கியமோ அதே அளவுக்கு அவை எவ்வாறு எழுதப்பட்டுள்ளன என்பதும் முக்கியமானது என உணரத் தலைப்பட்டுள்ளனர். அதாவது இப்போதெல்லாம் மானிடவியல் பனுவல்கள் வெறுமனே தகவல்களின் தொகுப்புக்களாக மட்டுமே பார்க்கப்படுவதில்லை. தரவுகள் எழுதப்பட்டிருக்கும் வாத முறை (discussive process) பல்வேறு விதமான கேள்விகட்கு உட்படுத்தப்படுகின்றன. குரல், பாணி, கேட்போர் போன்ற புலப்பாட்டுச் சிக்கல்களே அக்கேள்விகளாகும்.

இந்தக் கட்டுரை பண்பாடுகளைப் பற்றி எழுத்ப்பட்ட கதையாடல் மரபுகளை அளவீடு செய்வதுடன் அவை எழுதப்பட்டுள்ள பாங்குகளின் பலங்களையும் பலவீனங்களையும் பகுப்பாய்வு செய்கிறது. மானிடவியல் படைப்புக்களின் இலக்கிய மற்றும் வாதமுறை இயல்புகளின் மீது அண்மையில் வெளிவந்துள்ள பல நூல்கள் கவனஞ் செலுத்தியுள்ளன. அவைகளுள் முக்கியமானவை ஜேம்ஸ் கிளிஃபோர்டும், ஜார்ஜ் மார்க்குசும் எழுதிய பண்பாட்டை எழுதுதல் (Writing Culture) மற்றும் கினிஃபோர்ட் கீர்ட்சினுடைய பணிகளும் வாழ்வுகளும் மானிடவியலன் ஆக்கியோனாக (Works and Lives: The Anthropologist as Author) முதலில் செவ்வியல் இனவரைவியல் பற்றியும் அதன் பிறகு தவறுகளை உணர்ந்து கொண்ட பங்கேற்று உற்று நோக்கல் நிலையில் எழுதப்பட்டவை பற்றியும் அதைத் தொடர்ந்து மனதில் பதிகிற விதத்தில் அலங்கார நடையுடன் எழுதப்பட்டவை பற்றியும் விரிவாக எடுத்துரைக்கப்படும். இந்தக் கட்டுரை மானிடவியலைப் பனுவல் (text) என்ற நிலையில் பார்க்கர்விட்டாலும் நவீனத்துவக் காலகட்டம் (modernist period) என்று அழைக்கப்படும் இந்த நூற்றாண்டின் முதல் பாதியில் எழுதப்பட்ட மானிடவியல் நூல்களின் வாதமுறை பற்றி விவாதிக்கும். அதாவது தொடக்க கால இலக்கிய நடை, பின்பு கோட்பாட்டுத் திறனாய்வு முறையில் எழுதப்பட்ட நடை ஆகியவற்றை இந்தக் கட்டுரை விளக்கும்.

களப்பணி ஆய்வு முடிவுகளை வெளிப்படுத்தும் புலப்பாட்டு முறைகளையும் விளக்கிக் காட்ட இந்தக் கட்டுரை முயலும். இது

நாள் வரை மானிடவியல் தனது தனித்தன்மை வாய்ந்த மற்ற(other)பண்பாடுகளைப் பற்றிப் படித்தல் என்பதை அண்மைக்கால மானிடவியல் எழுத்துக்கள் கேள்விக் குள்ளாக்கி யுள்ளன. எனவே பண்பாடுகளைப் 'பிரதிநிதித் துவப்படுத்துதல்' (Representation) என்பதும் அவற்றை உள்ளுணர்ந்து, வகைமைப்படுத்தி வெளிப்படுத்தலும் என்ற இதுநாள் வரை மானிடவியல் தனக்கே உரிய குணாம்சங்கள் என்று உரிமை பாராட்டி வந்தவை இப்போது ஆட்டங் கண்டுள்ளன. மானிட வியலர்களின் பணிகளில், அதிகமான தாக்கத்தை இலக்கிய வியல் கோட்பாடுகள் உருவாக்கி வருகின்றன. எட்வர்ட் செய்த் அவர்களின் 'கீழையுலக' (Orientalism) என்ற நூல் மற்ற பண்பாடு களைப் பற்றிப் படிப்பதின் பயன்களையும் பயனற்றவை களையும் விளக்கியுள்ளன.

இறுதியாக இந்த நூற்றாண்டின் பண்பாடு மற்றும் இலக்கியப் போக்குகளில் மானிடவியல் வகித்த முக்கிய பங்கு பற்றியும் இக்கட்டுரை விளக்கும்.

முனைவர் ஆ.செல்லபெருமாள்,

விரிவுரையாளர்,

நாட்டார் வழக்காற்றியல்துறை,

தூய சவேரியர் கல்லூரி,

பாளையங்கோட்டை-627 002.

இரட்சண்ய யாத்திரிகத்தில் பாத்திரங்கள்

இன்று கிடைக்கின்ற கிறிஸ்தவத் தமிழ்க் காப்பியங்கள் பன்னிரண்டனுள், எச்.ஏ.கிருஷ்ணபிள்ளை இயற்றிய இரட் சண்ய யாத்திரிகம் பாடல் எண்ணிக்கையில் பெரிய காப்பிய மாகும். வடிவத்தில் கம்பராமாயணத்தையும் வண்ணத்தில் விவிலியத் தையும் கொண்டு மிளிர்கிறது. காப்பியக் கவிஞனே

இரட்சண்ய யாத்திரிகத்திற்குத் தலைவனாகிறான். எனவே இது ஓர் அனுபவக் காப்பியம். தமிழில் தோன்றிய ஒரே ஒரு முற்றுருவகக் காப்பியம். 'பில்கிரிம்ஸ் புரோகிரஸ்' என்ற ஆங்கில நாவலைத் தழுவி படைக்கப்பட்ட ஆன்மிகக் காப்பியம்.

காப்பியத்தில் பாத்திரப் படைப்பு

பொதுவாக, காப்பியத்தில் பாத்திரங்களின் இன்றியமை யாமையும் அவற்றுள்ளும் கிருஷ்ணபிள்ளை பாத்திரங்களைப் படைத்துக் கொள்வதில் கையாளும் தனிச் சிறப்பும் முதற்கண் கூறப்பெறுகின்றன. கிருஷ்ணபிள்ளை பாத்திரங்களை அறிமுகம் செய்தல், இருவகை நோக்கத்திற்கு அவற்றைப் படைத்தல், காப்பிய மாந்தர் பகுப்பு (தலைமை, இணை, துணை,) காப்பிய ஓட்டத்தில் இப்பாத்திரங்களின் பங்கு முதலியன ஆயப் பெறுகின்றன.

தலைமைப் பாத்திரம்

தலைமைப் பாத்திரத்தின் விளக்கம், மூவகைப் பகுப்பு, இரட்சண்ய யாத்திரிகத்தின் தலைமைப் பாத்திரத்தின் பன்முகப் பண்புகள், முதற்பகுதியாக விளக்கப் பெறுகின்றன. பின் பிற காப்பியங்களிலிருந்து இக்காப்பியத் தலைவன் எவ்வாறு வேறுபடுகிறான் என்பதும், இறுதியில் காப்பியக் கவிஞனே யாத்திரிகத் தலைவன் என்பதும் நிறுவப் பெறுகின்றன.

இணைப் பாத்திரங்கள்

இரட்சண்ய யாத்திரிகத்தில் இணைப் பாத்திரங்களின் இன்றி யமையாமை இப்பகுப்பில் முதற்கண் சுட்டப் பெறுகின்றது. இணைப் பாத்திரங்கள் யாவும் யாத்திரிகளுக்கு நன்மை செய்யும் பாத்திரங்களே. தலைமைப் பாத்திரத்தை வழி நடத்துவதிலும், அதனோடு பயணம் செய்வதிலும் இவற்றின் பங்கும் பாங்கும் தெளிவுபடுத்தப் பெறுகின்றன. மூலநூல் பாத்திரப் படைப் பிலிருந்து இவை எவ்வாறு அழுத்தம் பெறுகின்றன என்பதும் விளக்கப்படுகின்றது.

துணைப்பாத்திரங்கள்

காப்பியத்தில் துணைப் பாத்திரங்களின் இன்றியமையாமை, மூல நூல் பாத்திரங்களைத் தமிழ்ப் பாத்திரங்களாகப் படைத்தல், பாத்திரங்களைப் படைப்பதில் விவிலியம் உள்ளிட்ட பிற இலக்கியச் செல்வாக்கு, மூலநூல் பாத்திரங்களுக்குப் பெயரிடுதல், பெயரிடாமல் கொள்ளுதல், மூலநூல் பாத்திரங்களை நீக்குதல், அவற்றின் காரணம், கதையமைப்பை மாற்றும் பாத்திரங்கள், மூவகைப் பாகுபாடு (நன்மை பயக்கும் பாத்திரங்கள்,தீமை பயக்கும் பாத்திரங்கள், இடைநிலைப் பாத்திரங்கள்) முதலியன யாவும் இப்பகுதியில் விளக்கம் பெறுகின்றன.

இக்கட்டுரை விளக்கமுறையிலும் ஒப்பாய்வு முறையிலும் அணுகப் பெறுகிறது.

பல்வேறு பாத்திரங்களைப் படைத்துக் கொண்டதன் பயன் யாது என்பதும் தமிழ்க் காப்பியத்தலைமைப் பாத்திரத்திற்குக் கிருஷ்ணப்பிள்ளை எவ்வாறு வழிகாட்டுகிறார் என்பதும் இக்காப்பியப் பாத்திரங்களின் அடிப்படையில் எவ்வெவ்வாறு பிற ஆய்வுகளை மேற்கொள்ளலாம் என்பதும் சுட்டப் பெறுகின்றன.

முனைவர் தே.செல்லையா,
விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
ஊரீசு கல்லூரி,
வேலூர்.

பாடவேறுபாடும் மூலபாட ஆய்வும்

18-ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் சீகன் பால்கு ஐயர் தமிழில் அச்சுமுறையைக் கொணர்ந்தார். அதற்கு முன்பு நூல்கள் ஏட்டிலேயே (பனை ஓலைகளிலேயே) இடம்பெற்றிருந்தன.

அச்சு வடிவம் பெறுவதற்கு முன்பு ஏட்டு வடிவில் இருந்த மூலபாடங்களில் சிலவோ பலவோ பல்வேறு வடிவ மாற்றம் பெற்றிருத்தல் இயல்பு. படைப்பு ஒன்றில் ஓர் எழுத்துக்கோ, ஒரு சொல்லுக்கோ, ஒரு தொடருக்கோ பதிலாக வேறு எழுத்தோ, சொல்லோ தொடரோ வந்து, பொருள் மாறியோ மாறாமலோ பயின்று வருவது பாடவேறுபாடாகும்.

நூலாசிரியன் பயன்படுத்திய மொழி அமைப்பில் அமைந்த சொல்லாட்சிகள் 'மூலபாடங்கள்' (Original Texts)எனக் குறிக்கப்படும். இச்சொல்லாட்சிகளுக்கு இணையாக அவற்றின் இடத்தில் பிற்காலத்தில் நுழைந்த பொருளுடைய அல்லது பொருளற்ற சொற்கள் பாடவேறுபாடுகள் (Variations) எனப்படும். மூலபாடத்திலிருந்து பொருளாலும் வடிவாலும் வேறுபட்டு அமையும் காரணத்தால் இவை பாடவேறுபாடுகள் எனப்பட்டன.

19-ஆம் நூற்றாண்டில் தான் இந்தியாவில் மூலபாட ஆய்வு தெளிவான வடிவம் பெற்றது என அ.விநாயகமூர்த்தி அவர்கள் குறிப்பிடுவார். இத்துறையில் ஈடுபட்டுச் சிறந்த தொண்டாற்றும் பல ஆய்வு நிலையங்கள் இன்று உள்ளன. எடுத்துக்காட்டாக பண்டார்க்கர் கீழ்த்திசை ஆராய்ச்சி நிலையம், சென்னை கீழ்த்திசைச்சுவடிகள் நூல் நிலையம், அடையாறு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், அண்ணாமலைப் பல்கலைகழகம், தஞ்சாவூர் சரசுவதிமகால் நூல்நிலையம், மதுரைத் தமிழ்ச் சங்கம், திருவான்மியூர் உ.வே.சா.நூல் நிலையம், திருவான்மியூர் ஆசியக் கல்வி நிலையம், கேரளப் பல்கலைக்கழகக் கீழ்த்திசைச் சுவடிக் காப்பகம் போன்ற நிறுவனங்களைக் குறிப்பிடலாம். மேலும் உ.வே.சாமிநாதையர், வையாபுரி பிள்ளை போன்றோர்களும் ஏராளமான நூற்களைப் பதிப்பித்துள்ளனர். பாடவேறுபாட்டு ஆய்வின் முன்னோடியர் இளம்பூரணர், சேனாவரையர் போன்ற உரையாசிரியர்கள் ஆவர்.

பாடவேறுபாடு தோன்றக் காரணங்கள்

ஏடு பார்த்து நகல் எடுத்தல், தங்கள் கொள்கைகளுக்கேற்பப் பாடங்களைத் திருத்துதல் ஆகியன பாடவேறுபாடு தோன்றக் காரணங்களாகும். ஏடு எழுதுவோர், படி எடுப்போர், சுவைஞர், பதிப்போர் என்னும் நால்வரும் பாடவேறுபாடுகள் எழுவதற் குரிய காரணங்களில் தொடர்பு கொண்டவர்களாவர்.

பாடவேறுபாடுகளை வகைப்படுத்துதல்

1. எழுதும்போது ஏற்படும் பிழையால் நம்மை அறியாமல் அமைவன.

தாமே அமைவன என்றும்

2. பாடங்களைத் திருத்தும் முயற்சியால் நாம் அறிந்தே அமைப்பன-

தீர்மானித்து அமைப்பன என்றும் இரண்டு வகைப்படும்.

பாடவேறுபாடு காண்பதன் நோக்கம்

பல பதிப்புகள் வெளிவந்தாலும் சிறந்த நூல்களுக்குச் செம்பதிப்பு வரவில்லை. பாடவேறுபாட்டு ஆய்வால் படைப்பிலக்கியத்தின் முழுவடிவைக் காண இயலும்.

மூலபாட ஆய்வு

மூலபாட ஆய்வு என்பது படைப்பாளன் படைத்த பாடத்திற்கும் அதைப் பதிப்பிக்கின்றவர்கள் அது இன்ன தாகத்தான் இருக்க வேண்டும் என்று கருதிப் பதிப்பிக்கின்ற பாடத்திற்கும் இடையில் உள்ள தொடர்பை ஆராய்வதாகும்.

மூலபாடங்களைத் தெளிவு செய்தல்

பலவகையான பாடவேறுபாடுகளை ஆராய்ந்து பொருத்த மும் சிறப்பும் கண்டு இதுவே நூலாசிரியர் கருதிய மூலபாடம் எனத் துணிய வேண்டும். மூலபாடங்களைத் தெரிவு செய்வதில் மிகமுக்கியமானது பொருள்நோக்கு ஆகும்.

கிடைக்கப்பெறும் சுவடிகளைத் தொகுத்து ஒன்றோடொன்று ஒப்பிட்டுப் பார்த்து, அவற்றுள் தெளிவான ஒன்றை அடிப்படைச் சுவடியாகக் கொள்ள வேண்டும். அது கருது நிலைச்சுவடி ஆகும். அதனோடு பிற சுவடிகளை ஒப்பிட்டுப் பாடவேறுபாடுகளைக் காண வேண்டும்.

முனைவர் சு.செல்லையாபிள்ளை எம்.ஏ.,
விரிவுரையாளர்,
தமிழ்க்கலை - ஆய்வகம்,
தெ.தி.இந்துக் கல்லூரி,
நாகர்கோயில்-629 002.

தந்திரிமார்கள்

இலக்கியம் மற்றும் கல்வெட்டுக்களில் காணப்படும் சொற்களில் பல இன்றும் மறைந்தும், திரிந்தும் வழக்கில் இருந்து வருகின்றன. அவ்விதச் சொற்களில் தந்திரிமார்கள் என்பதும் ஒன்று. இன்றைய வழக்கில் சூழ்ச்சிகள் மந்திரங்கள் செய்யும் திறன் பெற்றவர்கள் தந்திரி, தந்திரக்காரர் என்ற ழைக்கப்படுகின்றனர். ஆனால் தந்திரிமார்கள் என்ற சொல் நேரடியாக வழக்கில் இல்லை. வரலாற்றில் இச் சொல் பெற்ற இடம் யாது இதன் பொருள் என்னவாக வழங்கியது என்பதே இக் கட்டுரையின் நோக்கம்.

தந்திரி என்ற சொல் சமஸ்கிருதச் சொல் ஆகும். தந்திரி என்பது போர்ப் படையைக் குறிக்கவும் பயன் படுத்தப் பட்டுள்ளது. தந்துவர் என்போர் நெசவாளர், தந்திரி என்போர் சாஸ்திரங்கள் கற்றவர், அமைச்சர், தந்திரக்காரர்,'படைத் தலைவர் என்று வெவ்வேறு கருத்துக்களில் அழைக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் நிகண்டுகள் தந்திரிமார்கள் பற்றிக் குறிப்பிடும் பொழுது, மந்திரி தந்திரி, ஏனாதி என்கின்றது. இலக்கியங்களில்

பெருங்கதை தந்திரியைச் சேனைப்படை என்கின்றது. சிலப்பதி காரத்தில் தந்திரி என்பதற்குத் தவறாகப் பொருள் கொண்டுள் ளனர் அதுவும் சிறந்த திறமை மிக்கவர் என்ற பொருளே அமைகின்றது.

கம்பராமாயணத்தில் ''தந்திரம் உற்ற சேனை தரைப்பட'' என்று சேனைப்படையை வலியுறுத்துகின்றது. பெரிய புராணத்தில் கோட்புலி நாயனார் தந்திரியராய் நின்று படை நடத்திச் சென்றதைக் காண முடிகின்றது.

கல்வெட்டுகளில் மெய்க்கீர்த்தியில் தந்திரிவாரியம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து குலோத்துங்கச் சோழன் முதல் காணப்படுகின்றது. பாண்டியர் கல்வெட்டில் தந்திரி கணக்கு என்றும் கையாளப்பட்டுள்ளது. புதுக்கோட்டை கல்வெட்டில் தந்திரிகளுக்கு ஆசிரியம் வழங்கப்பட்டதை அறிகிறோம். தந்திரிமார்கள் கோயில் நிர்வாகத்துடன் இணைந்து பெரிய பொறுப்புக்களைப் பெற்றுப் பணிபுரிந்து வந்துள்ள மையைக் காண முடிகின்றது.

விசயநகரக் கல்வெட்டுக்களில் அதிக அளவு தந்திரிமார்கள் பற்றிக் காணப்படுகின்றது. போர்ப்படை என்றும், சில இடங்க ளில் சமுதாய அடிப்படையிலும் இப்பெயர் வழங்கப்பட் டுள்ளதை அறியமுடிகிறது. தந்திரிமார்களுக்கு ஒரு கால கட்டத்தில் பிற இனத்தவர்களுடன் சேர்த்து வரிச் சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன.

பதினெட்டுப் பற்று நாட்டாரும் தந்திரிமாரும் என்று காணப்படுகின்றது. இது தந்திரிமார்கள் பெற்ற உயர்வை குறிக்கின்றது.

எனவே தந்திரிமார்கள் என்பவர்கள் பாதுகாப்பு தரும் வலியுடையவர்களாகவும் நிலங்கள் மற்றும் ஊர்களின் வரி வருவாய்களைத் துய்ப்பவர்களாகவும் காணப்படுகின்றனர். சோழர்கள் காலத்தில் போர்களின் காரணமாகக் கிடைத்த செல்வத்தைக் கொண்டு படையைச் சேர்த்தவர்கள் நிலத்தை

விலைக்கு வாங்கி நிலவுடைமைக் காரர்களாக ஆனார்கள். இந்தப் போக்கு வளர்ச்சி பெற்றுத் தங்களின் வலிவாற்றலின் காரணமாகப் படையைச் சேர்ந்தவர்கள் அவ்வப்பகுதிகளில் வரி வருவாய்களைத் துய்ப்பவர்களாக மாறியுள்ளனர் என்பதும் நாம் அறிய முடிகின்றது.

தந்திரிமார்கள் ஓர் ஊரின் உயர்ந்த அந்தஸ்தை பெற்றுச் சபையோர்க்கு இணையாக வளர்ந்து தனி இனமாகவும் உருப் பெற்றனர். இன்றளவில் தந்திரிமார்கள் என்ற சொல் வழக்கொழிந்து விட்டது. எனினும் கேரளப் பகுதியில் உள்ள கோயில்களில் உள்ள தலைமைப் பூசாரியைத் தந்திரிமார்கள் என்ற சொல்லைப் பயன்படுத்தியே அழைக்கின்றனர். பொது வழக்கில் சூழ்ச்சி மற்றும் திறமை பெற்றவர்களைக் குறிப்பதாக நிலவி வருகின்றது.

ச.செல்வராஜ்,

தே.நி.தொல்லியல் அலுவலர்,
அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை,
தரமணி, சென்னை-113.

சென்னைத் தொலைக்காட்சித் தமிழ் விளம்பரங்கள்: மக்கள் தொடர்பியல் கொள்கை ஆய்வு

இன்றைய சமுதாயத்தில் பெரும் செல்வாக்கைப் பெற் றிருப்பது, தொடர்பியல் கருவிகளில் ஒன்றான தொலைக் காட்சியாகும். தொலைக்காட்சி இன்றைய வளர்ச்சியில், துணைக் கோள் மூலம் ஒளி,ஒலி பரப்பின் வழி விரிவாக்கம் பெற்று வருகிறது. எனவே, இந்தச் சூழலில், அரசுத்துறை நிறுவனமான சென்னைத் தொலைக் காட்சியில் முக்கியப்பங்கு கொண்டுள்ள தமிழ் விளம்பரங்கள் குறித்து ஆய்வு மேற்கொள் வது அவசியமாகிறது.

1. விளம்பரங்கள், நோக்கங்கள், எதிர்பார்ப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் சமூக ஏற்பு நிலையை எதிர் கொண்டுள்ளன.

2. விளம்பரங்கள், சமூகப் பொறுப்புரிமை கொண்டுள்ளன.

3. விளம்பரங்கள் சமூக மாற்றத்தை உருவாக்கக் கூடியன.

4. விளம்பரங்களின் மொழி அமைப்பும் பயன்பாடும் சமூகத்தில் அதன் ஆளுமையை வெளிக்காட்டவல்லன.

5. விளம்பரங்களின் மொழியமைப்பு எதிர்கால மொழித் திட்டமிடுதலுக்கும் செம்மைப்படுத்துவதற்கும் உரிய பணிகளை மேற்கொள்ள வழிவகுக்கிறது.

மேற்கண்ட நிலைகள் மக்களுக்கும் மக்கள் தொடர்பு வாயிலான தொலைக்காட்சிக்கும் உள்ள உறவு நிலைகளை வெளிக்காட்டும். இதற்குத் தொடர்பியல் கொள்கைகள் உறுதுணை புரிகின்றன. இவற்றைச் சென்னைத் தொலைக் காட்சியில் ஒளிபரப்பாகியுள்ள தமிழ் விளம்பரங்கள் உணர்த்துகின்றன. தொடர்பியல் கொள்கைகளைத் தமிழ் விளம்பரங்கள் தம்மகத்தே கொண்டுள்ள நிலையை எடுத்துக் காட்டவும், தமிழ் விளம்பரங்களைத் தரமுடையதாக்கத்தக்க உத்தி முறைகளை அமைக்கவும் இவ்வாய்வு உதவுகின்றது.

இதன்மூலம் தமிழ் விளம்பரங்களின் நோக்கம், மக்களின் ஏற்பு நிலையில் விளம்பரங்களின் தரமும் அறிய வகை செய்கிறது . இது சமூக வளர்ச்சிக்குப் படிநிலையாக அமைகிறது. விளம்பரங்களில் கலைச் சொல் பயன்பாட்டின் மூலம் மொழியை வளம்மிக்கதாகப் பயன்படுத்த உறுதுணை புரியும்.

இ.சேனாவரையன்,
ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
பாரதியார் பல்கலைக்கழகம்,
கோவை-46.

கருத்துப் புலப்பாட்டியல்: பட்டிமன்றம்

தோற்றமும் வளர்ச்சியும்

பண்டிதர்களிடமும் மடங்களிலும் பதுங்கிக் கிடந்த இலக்கியங்களைப் பாமரர்களின் வீட்டு வாசல்களில் இழுத்துக் கொண்டுவந்த இலக்கியக் கலைதான் பட்டிமன்றம்.

அனல் வாதம் புனல் வாதங்களால் தம்தம் சமயக் கருத்துகளை மக்கள் நடுவில் பரப்பிய புத்த, சமணச் சான்றோர்கள்,தங்கள் முன் ஒரு நாவல் கிளையை நட்டு நாவலோ நாவல் என முழங்கி வாதப் பிரதி வாதங்களைத் தொடங்கினர்.

சமயத் தருக்க வாதங்களுக்கு அன்று பயன்பட்ட பட்டிமன்றம் இன்று சமுதாய, அரசியல், திரைப்பட, இலக்கியச் செய்திகளைத் தெருவிலே வாழும் ஏழைகளுக்கும், தெருவை அறியாத வளமனை வாழ் செல்வந்தர்களுக்கும் கொண்டு சேர்க்கிறது.

சிலம்பு, மணிமேகலை, கலிங்கத்துப்பரணி, பள்ளு, குறவஞ்சி, கீர்த்தனை, இலாவணி, எரிந்த கட்சி, எரியாத கட்சி போன்றவற்றில் பட்டிமன்றச் செய்திகள் உள்ளன. ஏசல், சம்வாதம், தருக்கம், தமிழ் வசனம் போன்றவை பட்டிமன்ற விரிவே. பாரதியார் 'தராசு' என்ற கட்டுரைப் பகுதியில் 'தர்க்க சித்தாந்தம் ஒரு கட்சி சொல்லி, அதற்குப் பிரதி கட்சி சொல்லி அங்குத் தீர்ப்புக் காண்பதே தராசின் நோக்கம், என்று கூறுகிறார்.

பேசு பொருள்

காலந் தோறும் கவிதைகளின் பாடு பொருள் மாறியது போன்று பட்டிமன்றத்திலும் பேசு பொருள் மாறிவந்துள்ளது. பட்டி மண்டபமாகச் சமய நிறை குறைகளை ஏசலில் நிந்தாஸ் துதியாக, இறைவனின் புகழை, தருக்க உரையாடலாக, புராணப் பாத்திரங்களை எரிந்த எரியாகக் கட்சியாக, மன்மதனை

விவாதப் பொருளாக்கிய பட்டிமன்றம், 1.குடும்பப் பட்டி மன்றம், 2. சமுதாயப்பட்டிமன்றம், 3. அரசியல் பட்டிமன்றம், 4. அறிவியல் பட்டிமன்றம், 5. திரைப்படப் பட்டிமன்றம், 6. காதல் பட்டிமன்றம், 7. தேர்தல் பட்டிமன்றம், 8. உண்மைப் பட்டிமன்றம், 9. இசைப்பட்டி மன்றம் என விரிந்துள்ளது.

அமைப்பு

கவிதைகளின் பாடு பொருள் மாறியதற்கேற்ப, கவி அமைப்பும் மாறியதைப் போன்று பட்டி மன்றத்திலும் மாற்றம் ஏற்பட்டது. 1. வேடமிட்ட நிகழ்ச்சி, 2. இவர்கள் சந்தித்தால், 3. விசாரணை மன்றம், 4. வழக்காடு மன்றம், 5. சுழலும் சொல்லரங்கம் எனப் பலவாறாகப் பட்டிமன்றம் பல்வேறு உருவமெடுத்துள்ளது.

பேசும் முறை

பேசு பொருள் மாறியதற்கேற்ப பேசும் முறையில் மாற்றம் ஏற்பட்டது. இலக்கியங்களைப் பற்றிப் பேசுகையில் கட்டளைத் தமிழிலும், சமுதாயப் பட்டி மன்றத்தில் பேச்சுத் தமிழிலும், திரைப்படத் திறனாய்வில் இசைத் தமிழ் விரவியும், குடும்பப் பட்டிமன்றத்தில் நகைச்சுவை நிரப்பியும் பேசப் பெறுகிறது.

நகைச்சுவை

இப்பொழுதெல்லாம் செய்திகளை விட நகைச்சுவைக்கே முக்கியத்துவம் தரப்பெறுகிறது. முப்பது ஆண்டுகளுக்கு முன்பு நகைச்சுவையுடன் பட்டிமன்றத்தில் ஒருவர் பேசினால் அவ்ரது பேச்சு ஆழமில்லை எனவும்வெண்மை எனவும் ஒதுக்கப் பட்டது. இப்போது நகைச்சுவை கலவாத பேச்சினை யாரும் விரும்புவரோ என்பது ஐயமே.

கேட்டு மனங் கொள்ளும் பேச்சு, கேட்டுக் கை தட்டும் பேச்சு, கேட்டு ஆரவாரிக்கும் பேச்சு என்ற மூவகைப் பேச்சிலும் நகைச்சுவை மூன்றாவது வகையது. குடும்பச் செய்திகளும் திரைச் செய்திகளும் பட்டி மன்றத்தில் அலசப்பட்டதும் அது

பொழுது போக்குக் கருவியாகி விட்டது. ஆகவே அதற்கு நகைச்சுவைப் போர்வை தேவைப்படுகிறது.

தரம் தாழ்வு

பட்டிமன்றம் தரம் தாழ்ந்து விட்டதென்ற குற்றச் சாட்டும் உண்டு.

1. மேடையில் ஓரளவு பேசத் தெரிந்தோரும் பேச வந்து விடுவதால், 2. துணுக்குத் தோரணமாகப் பட்டிமன்றம் ஆகிவிட்டதால், 3. நகைச்சுவைக்கே முக்கியத்துவம் நல்குவதால், 4. பொழுது போக்குக் கருவியாகச் சிலர் இதைப் பயன் படுத்துவதால், 5. தனி நபர் துதியும் தாக்குதலும் இருப்பதால், 6. மித மிஞ்சிய பாடலும் தொடர்பற்ற கதைகளும் கூறலால், 7. சொன்னவற்றையே சொல்லிச் சலிப்படையச் செய்வதால், 8. தொண்டாகத் தொடங்கிய பட்டிமன்றம் தொழிலாகி விட்டதால் பட்டிமன்றம் தரம் தாழ்ந்து விட்டது என்று குறை கூறுவர்.

எந்தக் கலைக்கும் சொல்லப்படும் குறை இதுவே. எட்டு வயது முதல் எண்பது வயது வரை உள்ளோரைத் திரைப்படம் நிறைவு படுத்த பல்வேறு உத்திகளைக் கடைபிடிப்பது போலவே பட்டிமன்றமும் பல உத்திகளைப் புதிது புதிதாகக் கொண்டு வருகிறது.

பட்டிமன்றம் எனும் கலை, அதன் பயன்பாடு கருதிப் பாதுகாக்கப் பெற வேண்டிய ஒரு பழைய தமிழ்க் கலையாகும்.

முனைவர் பூ.சொல்விளங்கும் பெருமாள்,

தலைவர், தமிழ்த்துறை,

வெள்ளச்சாமி நாடார் கல்லூரி,

சிவகாசி.

தமிழில் இரட்டை வழக்கும் தற்கால இலக்கியங்களும்

தமிழ் இரட்டை வழக்கு உள்ள மொழி (இருநிலை மொழி) என்பதும் அந்த இரட்டை வழக்குகளான பேச்சுத் தமிழையும், எழுத்துத் தமிழையும் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் சமூக மொழியியல் விதிகளுக்கு ஏற்பப் பயன்படுத்தக் கற்றிருக்கிறார்கள் என்பதும் இன்றைய மொழியியல் உண்மைகள். (Ferguson, 1959, Pillai, 1960). படிப்பறிவு பெறாதவர்களது பேச்சு நடையில் வட்டார, சாதிக் கூறுகள் பொதுவாக மிகுந்து காணப்படுவதும் படிப்பறிவு பெற்ற தாய் மொழியாளர்கள் பேச்சில் வட்டார, சாதிக் கூறுகள் நீங்கிய பொதுப் பேச்சு தமிழ் நடை ஒன்று பயன்படுவதும் இன்றைய தமிழ்ச் சமூகத்தில் காணக் கிடைக்கும் சில மொழியியல் உண்மைகளாகும். (Annamalai, 1976. V.Gnanasundaram, 1980).

தமிழின் தற்கால இலக்கியங்களான புதினங்கள், சிறு கதைகளில் கதை சொல்லலுக்கு எழுத்துத் தமிழும், (பாத்திர) உரையாடலுக்குப் பேச்சுத் தமிழும் பயன்பாட்டில் உள்ளன என்ற ஒரு விதியைப் பொதுவாகக் கூறுவர். நுணுகி ஆராயும் போது இரட்டை வழக்குகளான எழுத்துத் தமிழும், பேச்சுத் தமிழும் குறிப்பாகப் புதினங்களில் வேறுபட்ட பல நிலைகளில் பயன்பாட்டில் உள்ளது புலப்படும்.

இக்கட்டுரை, சமுதாய மொழியியல் நோக்கில் இப்பயன் பாடுகளை, வகைப்படுத்துவதோடு, இக்காலத் தமிழின் போக்குகளை அதாவது பேச்சு மொழி, எழுத்து மொழி இவைக ளில் நிகழ்ந்து கொண்டிருக்கும் மாற்றங்களையும் புலப்படுத்த முயல்கிறது.

புதினங்களைப் பொறுத்தவரையில் உரையாடலில் பயன்படும் எழுத்துத் தமிழ் வரலாற்றுப் புதினங்க்ளில் உள்ள பாத்திரங்களையும் இலட்சிய எழுத்தாளர்களது புதினங்களில் உள்ள இலட்சியக் கதை மாந்தர்களையும் அடையாளம்

காட்டவே, பெரிதும் பயன்படுகிறது என்பதும் உரையாடலில் காணப்படும் பேச்சுத் தமிழ், தமிழ்ப் புதினங்களில் சமூக நிலைகளில் எவரையெல்லாம் அடையாளம் காட்டப்பயன்படு கின்றன என்பதும் இக்கட்டுரை ஆராயும் இன்னொரு பொருளாகும்.

தமிழின் இரட்டை வழக்குகள் பற்றிய தமிழ்ச் சமூகத்தின் பொதுவான மனப்போக்கும் (Attitude) மதிப்பீடு (Evaluation) இக்கட்டுரையில் ஆராயப்படும் வேறொரு பொருளாகும்.

இக்கட்டுரைப் பொருள் குறித்து ஏற்கெனவே நடை பெற்றுள்ள சில ஆய்வுகளின் முடிவுகளும் இக்கட்டுரையில் விவாதிக்கப்படும் *(இ.முத்தையா, 1980).*

முனைவர். வ.ஞானசுந்தரம்,

பேராசிரியர் மற்றும் துணை இயக்குநர்,
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்,
மைசூர்-570 006.

திருச்சிற்றம்பலக் கோவையாரில் கல்வி நலம்

ஆரணம், ஆகமம், காமநன்னூல், எழுத்து என்று பலவாறு சிறப்பிக்கப்படுவது 'திருச் சிற்றம்பலக் கோவையார்' .ஞான நெறி யில் நின்று காதலின் கடவுள் தன்மையை விளக்குவது, தெரியாதனவற்றைத் தெளிவு செய்வது. 'ஓதற் பிரிவில்' ''கல்வி நலம் கூறல்'' என்பது ஒரு துறையாகும். கல்வி நலன்களைப் பொது-சிறப்பு எனப் பகுக்கலாம். தலைமக்கள் கல்வியும் நலனும் பெற்று மணம் புரிய மட்டும் அமைந்தது பொது நிலை. மணம் புணர்ந்த பின்னர் தலைமகன் மேலும் கற்று நலம்கொளல் சிறப்பு நிலையாகும். இவ்விரண்டையும் ''கற்க கசடற *கு.391)* கற்றதனால் ஆயபயன்*(கு.2)*'' என்னும் இரு குறளில் வைத்து விளக்கம் காண்பதே இக்கட்டுரை.

மாணிக்கவாசகர் திருவாசகத்துள் 'தண்ணார்த் தமிழ்' என்று சிறப்பித்துரைப்பர். அதனையே கோவையாருள் 'தெய்வ ஒண்தீந்தமிழ்' என்று சுட்டுவர். கோவையாருள் காட்டப்படும் தமிழ், இறைவன் கூடலில் தமிழ்ச்சங்கத்து ஆய்ந்த தமிழ் என்பர். 'சிறைவான் புனல்தில்லை (பா.20)' என்னும் பாங்கன் கூற்றுப் பாடலில் இயற்றமிழ் இசைத்தமிழ் இணைத்துக் கூறப்படுகிறது. 'கல்வி மிகு பாங்கன்' என்று பாராட்டப்படு கிறான். தமிழ் ''தீந்தமிழ்'' ''ஒன்றிய தமிழ்'' ''தெய்வம் ஆய்ந்த தமிழ்'' என்று சுட்டப்படுவதைக் கருத்தில் கொள்ளல் வேண்டும். தமிழ் மொழியேனும் ஆவில் அறியும் தீவிய தன்மையில் இன்ப அன்பும், ஒள்ளிய தன்மையில் ஒழுக்கமும் தெய்வத் தன்மையில் அருளும் புலப்பட்டிருத்தலை ஓர்ந்து காணலாம்.

கற்க வேண்டியவற்றைக் கசடறக் கற்றலும் அக்கல்விக்கேற்ப நிற்றலும் ஆகிய இரண்டுமே கல்வி. பாங்கன், தலைமகளை இடித்துரைக்கிறான். அதுபோதும் கற்ற கல்வியும் கற்ற நிலையில் நின்று செய்யும் நல்வினையும் வாழ்வில் நலன் தருதற்குரியன. ஆனால் அவை நலன் தரவில்லையே என்று தலைமகன் தளருகிறான். பின்னர் அவனே, தலைப்பகு கால்பினுக்கும் தளரேன்; சித்தம் பித்தன் என்று மலைத்தறி வாரில்லை; யாரையும் தேற்றுவேன் என்துணையும் என்று கல்விபால் விளையும் நலன்களைத் தொகுத்துரைக்கின்றான். தளர்ச்சி வந்துழி ஊன்றுகோல் போல் உதவும் தன்மையது கல்வியல்லவா?

தோழி, தலைவனிடம் நின் கல்வியின் சிறப்பினைக் கருதி, தலைமகளை உனக்குத்தர அவள் பெற்றோர் விரும்பலாம் எனக் கூறுகையில் கல்வி நலன் புலனாகிறது. மணம் புணர்ந்த தலை மகனோ மேன்மேலும் கற்க விரும்புகிறான். கற்றலின் பயன் கடவுளை வணங்குதலே என்று அறிந்தவன். ஆதலின் ''சீரளவில்லா திகழ்திரு கல்வி...'' (பா.308) எனும் பாடலில் கல்வியினால் விளையும் நலனும் இறைவன் திருவடியை இடையறாது நினை வார் நலனும் ஒரு நிலையென தலைமகன் தோழிக்குக் கூறுகின்றான்.

இத்தலைமகன் தில்லையம்பலத்தான் கழல் வைத்து, கைப்போதுகள் கூப்ப கற்றவன். தில்லைத் தொல்லோனைக் குருமுகத்தால் கற்று அறிந்தவன். அவ்வறிவால் அவன் குழல் தொழுதலாலே அவன் தொல்சீர் அறியமுடியும் எனும் உண்மை உணர்ந்தவன். ஆதலால் கல்வியினைச் செம்பொன்வரை என்று தெய் ஒண் தீந்தமிழின் நலம் புலப்பட உருவகித்தார். செம்பொன் வரை என்றான் கல்வியைத் தூய்மையும் பெருமையும் கலங்காதுடைமைப்பற்றி. கற்றதின் மேலும் கற்க நினைக்கின் றானாதலின் 'ஆரளவில்லா அளவு சென்றார்' என்றார். மேலும் கல்வி நலத்தை ''வீதலுற்றார்...'' (பா.309) என்ற தீந்தமிழ்ச் செய்யுளால் வெளிப்படுத்துகின்றார்.

இறைவன் திருவடிக்கண் காதல் வைத்தவர் பெறும் நன்மையெல்லாம் கல்வி தரும் என்ற உணர்வினால் ''ஓதலுற்றாரையுற்று உணர்தலுற பிரிந்து போகிறான்'' தெய்வ ஒண்தீந்தமிழை அதன் நீர்மையறிந்து பயில்கின்றவர் அத்தமிழின் வடிவினராவார். இவ்வுண்மையினை ஒள்ளிய தீந்தமிழின் தெய்வ வடிவாள் எனும் ஞான உலா தொடர் மடந்தை என்ற பெண்ணின் மேல் வைத்து விளக்கும். இங்ஙனம் ஓயாது ஓதி ஓதி அருள்வுணர்வு பெற்றவன் தெய்வமணம் கமழ வாழ்வதைக் ''காரணி கற்பகம்'' (பா.400) என்ற கோவையாரின் இறுதிச் செய்யுள் விளக்கும். கல்வியினை உணர்த்துந்திறன் ஓதுதலும் கற்பித்தலுமே, இவ்விரண்டினையும் கோவையாருள் காணலாம்.

நுண்ணிய கல்வியன் எனவே கற்றவர்க்கு நல்ல உசாத் துணையன் ஆகிறான். இசையுணர்வாலும் கெழுதகைமை யாலும் பாணர்க்குச் சுற்றமாகின்றான். கல்வியின் முடிந்த பயன் 'தற்றிண்டு...(கு.356)'' என்ற குறளின்படி; தில்லை. சிவனடிக்குத் தாரணிகொன்றையனாக வாழ்கிறான். கற்றதனால் ஆய பயன்...என்ற குறளை உணர்ந்தவனாய் நெடிது இனிது வாழ்கின்றான்.

ப.சு.ஞானப்பூங்கோதை,
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
தவத்திரு சாந்தலிங்க அடிகளார்,
கலை அறிவியல் தமிழ்க்கல்லூரி,
பேரூர், கோவை-10.

சங்க இலக்கியத்தில் மனவுலகப் படைப்புகள்

மனம் உள்ளவன் மனிதன். மனித மனம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு உலகம் எனலாம். மனித மனம் தனக்கெனச் சிலவற்றைப் படைத்துக் கொள்கிறது. அப்படைப்பு மனித மனம் உணர்ந்தவைகளாக உள்ளன. மனித மனம் உணர்ந்தவை உலகில் இல்லாதவைகளாகவும் இருக்கலாம்.

தனிமனிதப் படைப்பு எனும் பொழுது அதனை ஓர் எடுத்துக் காட்டின் மூலம் விளக்கலாம். கனவில் புலியைக் கண்டு பயந்த மனித மனம் கனவிலிருந்து விழித்து எழுந்தப் பின்னரும் சில நிமிடங்களுக்கு அந்தத் தாக்கத்திலேயே இருக்கிறது. புலியை நேரில் கண்டது போலவே மனித உடல் நடுங்குகிறது. அந்த நேரத்து அழுகையும் உண்மையே. இல்லாத ஒன்று நடைபெறாத ஒன்று மனித மனத்தின் படைப்பாக அமைகிறது.

இதனைப் போன்று சமுதாயமும் சில படைப்புகளைப் படைத்துக் கொள்கிறது. சமுதாயத்தில் காணும் மனவுலகப் படைப்புகள் சமுதாயத்தின் கண்ணாடியாக அமையும் இலக்கியங்களிலும் இடம் பெறுகின்றன. சங்க இலக்கியப் பாடல்களிலும் அக்காலச் சமுதாயத்தினரின் மனவுலகப் படைப்புகள் காணப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றை எடுத்து ஆய்ந்து அறிமுகப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். கருத்து, நிகழ்வு என்ற இருவகையில் சங்க இலக்கியங்களில் காணும் மனவுலகப் படைப்புகளைக் கருத்தளவில் ஆய்வது இக்கட்டுரையின் பொருளாகும்.

வா.ஞானாம்பிகை,

ஆய்வாளர்

தமிழிலக்கியத்துறை,

சென்னைப்பல்கலைக்கழகம்

மெரினா வளாகம்

சென்னை-600 005.

மணிமேகலைக் காப்பியத்தின் முப்பெரும் குறுக்கீடுகள்

கணிகைகுல இளம் பெண்ணொருத்தி துறவு கொண்டாள் என்பது காப்பியத்தின் சுருக்கமான கதை.

கந்த சாலியின் கழிபெரு வித்தோர்

வெந்துகு வெங்களர் வீழ்வது போன்மென

அறத்தின் வித்தாங்காகிய வுன்னையோர்

திறம்படற் கேதுவாய்ச் சேயிழை செய்தேன்

என்று மணிமேகலையிடம் மணிமேகலா தெய்வம் கூறியதே மணிமேகலைக் காப்பியத்தின் அடிப்படைக் கதைப் போக்கு. கணிகைப் பெண்ணொருத்தி தன் மரபிற்கு மாறாகத் தவம் மேற்கொள்ளலும், அதற்கு இடையூறுகள் வருதலும், அவை நல்வினையாலும் தெய்வத் துணையாலும் நீங்குதலும், பின்னர் பவத்திறம் அறுகென அவள் நோற்றலும் காப்பியத்தின் கதை.

மணிமேகலையின் தவ வாழ்க்கையில் ஏற்பட்ட குறுக்கீடுகள் மூன்று. அவை குலக்குறுக்கீடு, புறக்குறுக்கீடு, உணர்வுக் குறுக்கீடு என்பன. சித்திராபதியும் அவளுடைய குலக் கொள்கையும் குலக்குறுக்கீடு. உதயகுமரன் மணிமேகலையை அடைய பின் தொடர்தல் புறக்குறுக்கீடு. மணிமேகலையின் உள்ளம் அவளை அறியாமல் உதயகுமரனிடம் செல்லுதலும், தவ உணர்வு அதனைத் தடுத்து நிறுத்துதலும், பழம்பிறப்பு உணர்ந்ததும் அவள் உதயகுமரனை முற்பிறப்புக் கணவன் என்ற உணர்வில் பார்ப்பதும், அவன் இறந்த போது 'காதல' என்று அழுதவாறு அவன் உடலைத் தொட நெருங்குதலும், கந்திற் பாவை அவளைத் தடுத்தலும் அவள் மனப்போராட்டமாகிய உணர்வுக் குறுக்கீடு. மூன்று குறுக்கீடுகளும் உதயகுமரனை மையமாக வைத்து அமைவன. உதயகுமரன் இறந்ததும் இக்குறுக்கீடுகள் முடிவடைகின்றன. அதோடு காப்பியக்

கதையும் முடிவடைகிறது. அதன் பின்னர் மணிமேகலையின் தொண்டு வாழ்வும் சமய வாழ்வும் சிறக்கின்றன.

முனைவர் ஒய்.டென்னிசன்,
தமிழாய்வுத்துறைத் தலைவர்,
பிஷப் ஹீபர் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி-620 017.

தஞ்சை வேதநாயக சாஸ்திரியாரின் இலக்கியக் கொள்கைகள் (பெத்லகேங் குறவஞ்சி அடிப்படையில்)

தஞ்சை வேதநாயக சாஸ்திரியாரின் (1774-1864) நூற்றுக்கும் மேற்பட்ட இலக்கியப் படைப்புகள் தமிழிலக்கிய வரலாற்றில் இன்றியமையாத இடத்தினைப் பெறுகின்றன. நிலவுடைமைச் சமூக அமைப்பு சிதைந்து முதலாளித்துவமும் மேற்கத்திய நாகரிகமும் செல்வாக்குப் பெறும் ஒரு நிலைமாறுபட்ட காலத்தில் வாழ்ந்தவர் வேதநாயக சாஸ்திரியார். இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞன் பாரதிக்கு வழிவகுத்துக் கொடுத்தவர் என க.கைலாசபதியால் குறிப்பிடப்படுபவர். கிறித்தவ அருட்கவிஞராக விளங்கும் வேதநாயக சாஸ்திரியாரின் படைப்புகள் கலை நோக்கிலும், இலக்கியப் போக்கிலும், சமூகப் பார்வையிலும் தன்னிகரற்று விளங்குகின்றன. தமிழ் பக்தி இலக்கிய மரபையொட்டி எழுந்த கிறித்தவ இலக்கியப் படைப்புகளில் இவரது படைப்புகள் தலைமை பெற்று விளங்குகின்றன.

இக்கட்டுரை வேதநாயக சாஸ்திரியாரின் குறிப்பிடத்தக்க படைப்புகளில் ஒன்றாகிய 'பெத்லகேங் குறவஞ்சி'யை அடிப் படையாகக் கொண்டு, அவர்தம் இலக்கியக் கொள்கைகளைக் கண்டறிய முற்படுகிறது. வேதநாயக சாஸ்திரியாரின் படைப் புகளில் மேலோங்கி நிற்கும் முற்றுருவகப் பாங்கு, நாயக-நாயகி

பாவம், பண்பாட்டுப் பின்புலங்களை அமைத்தல், விவிலிய-வரலாற்றுச் செய்திகளைச் செறிவாகக் கையாளுதல். பொதுமக்களை மையமிட்டுப் படைத்தல் ஆகிய பண்புகளைக் கண்டறியும் நோக்குடன் பெத்லகேங் குறவஞ்சி அணுகப்படுகிறது.

வழக்கிலிருந்த சிற்றிலக்கிய வடிவங்களைத் தேவையான மாற்றங்களோடும் கலைநோக்கோடும் கையாளுதல்; எபிரெய தமிழிலக்கிய மரபுக்குட்பட்டு நாயக-நாயகி பாவம் முதலிய பக்தி இலக்கிய மரபுகளைப் பின்பற்றுதல்; பாத்திரப்படைப்பில் கிறித்து நெறிக்குப் பொருந்தாத வருணனைகளைத் தவிர்த்தல்; இந்துக் கடவுளர் பெயர்களைக் கிறித்துவுக்குப் பயன்படுத்துதல்; சம கால மொழி பற்றிய நோக்கு நிலையையொட்டி வடமொழிச் சொல்லாட்சிகளைக் கையாளுதல்; இலக்கிய வடிவத்தெரிவும், இசையும், எளிமையும் பொது மக்களை மையமிட்டதாக அமைந்திருத்தல் முதலிய கொள்கைகளை வேத நாயக சாஸ்திரியார் தம் இலக்கியப் படைப்புகளின் அடிப்படைகளாகக் கொண்டிருந்தார் என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.

ப.டேவிட் பிரபாகர்,
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
சென்னைக் கிறித்தவக் கல்லூரி,
சென்னை-600 059.

ஞானவாசிட்டத்தில் பெண்மை

ஞானவாசிட்டம் ஒரு உபபுராண நூல். அதில் பல தத்துவச் சிந்தனைகள் காணப்பட்டாலும் இக்கால வாழ்க்கைச் சிந்தனைகளும் பல உள்ளன. ஆசிரியர் ஆளவந்தார் அவற்றை நடைமுறை எடுத்துக்காட்டுடன் வெளிப்படுத்தியுள்ளதைக் காண முடிகிறது. பெண்ணியத்தின் இக்கால நடைமுறைப் பாங்கினையும் நூலில் காணமுடிகிறது. அவற்றை ஆசிரியர் கையாண்டுள்ள முறையில் வகைப்படுத்தி விளக்குவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

ஆசிரியர் இராமனுக்கு அறிவுரை கூறுவதற்கு உரிய களன் அமைப்பதற்குப் பயன்படுத்திய உத்திகளில் ஒன்று பெண்ணிய சிந்தனையாகும்.

இராமன் தன் வைராக்கிய நிலைக்கு வரக்காரணமாக இருந்தவற்றுள் பெண்களின் நிலையும் ஒன்றாகும்.

இராமனின் வாயிலாகவே பெண்களின் இழிவுநிலையை விளக்கியிருப்பது ஆசிரியரின் தனித்தன்மை என்றுகூடக் கூறலாம்.

எ.டு: *'மாமடஞ் செறிந்த நெஞ்சின் மனிதராம் புட்பிடிக்கக்*
காமனாம் வேடன் வீசும் வலையொப்பர் கருங்கண் மாதர்'
(வைராக்கியப் பிரகரணம், 96.1,2)

இராமன் பெண்களைத் தவறாகப் புரிந்து கொண்டுவிட்டான் என அறிந்த விசுவாமித்திரர் அதன் காரணத்தை,

''பொருள்களெலாம் பொருளன்றாங் கடியமன
மகங்காரத்தின் பொருட்டே யாகும்'' (வைரா. 118.1) என கூறுகிறார்.

இராமனது இந்த நிலையை மாற்ற விசுவாமித்திர வசிட் டர்கள் பல கதைகளைக் கூறிப் பெண்மையைப் பெருமைப் படுத்திக் கூறியுள்ளதை நூலில் காணமுடிகிறது.

பெண்கள் காமப்பொருட்கள்தான் என்பதை, சுகர்கதை, வஞ்சவிந்திரன் கதை, சுக்கிரன் கதை, சகித்துவசன் கதைகளில் விளக்கியுள்ளார். இந்தக் கருத்தைக் கூறிய ஆசிரியர் அந்தப் பெண்களால் ஏற்படும் சிறப்பையும் பெருமைகளையும் விளக்கியுள்ளார்.

1. பெண்களாலும் தவம் இருந்து இறைவன் காட்சிபெற்று தேவையானவற்றைப் பெறவும் சீவன் முத்தாக் வாழவும் முடியும் என (லீலைகதை, கற்கடிகதை, சிகித்துவன் கதை) குறிப்பிட்டுள்ளார்.

2. பெண்களால் அடுத்தவர்களுக்கும் அறிவுரை கூற முடியும் (சூடாலை)

3. பெண்களே குழந்தையின் முதல் ஆசிரியர் (தாசூரன் க்தை)

4. பெண்களும் அரசாட்சி செய்ய முடியும் (சூடாலை)

5. பெண்களை எளிதில் வசப்படுத்த முடியாது (சித்தன் கதை)

இவை மட்டுமன்றிப் பெண்மனம், தாய்ப்பாசம், உண்மையான மனைவியார் நிலை, அவள் கடமை என்ன என்பன பற்றியும், கணவன் பிரிவை எந்தப் பெண்ணும் ஏற்றுக் கொள்ள மாட்டாள், தம் சுற்றத்தார்க்கு ஏற்பட்ட களங்கம் தமக்கே ஏற்பட்டதாகக் கருதி அதற்காக இறக்கவும் துணிவார்கள், தன்னம்பிக்கை உடையவர்கள், குழந்தைப் பேறு பெண்களுக்கு முக்கியமான ஒன்று என்பன போன்ற பல பெண்ணிய சிந்தனைகளை நூல் முழுக்கக் காணமுடிகிறது.

மேலும் இரண்டு மனைவிகள் உள்ளதாகக் (வைரா.100) கூறும் சிந்தனை இருந்திருப்பதால் பலதாரமுறை அக்காலத்திலும் இருந்திருக்கிறது என அறியமுடிகிறது.

பெண்மை பற்றிய கருத்துகள் பல நூல் முழுமையாகப் பரவி இருப்பதிலிருந்து பெண்ணிய கருத்தை வலியுறுத்த வேண்டும் என்பதற்காகவும் அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதற்காகவும் இந்நூல் அமைந்துள்ளது எனலாம். இராமனின் வெறுப்பு அகங்காரத்தால், மயக்கத்தால், இளமை வேகத்தால் ஏற்பட்டது என விசுவாமித்திரர் வழி குறிப்பிட்டிருப்பது ஒரு உத்தியாகும். அவற்றை முயற்சியால் மாற்றமுடியும் என்பதற்கு நூலில் குறிப்பிட்டிருக்கும் செய்திகள் இந்தக் காலக்கட்ட இளைஞர்களுக்கும் சிறந்த ஒரு பாடமாகும். வாழ்க்கையின் இன்றியமையாத கூறுகளில் ஒன்று பெண். ஞானவாசிட்டத்தில் குறிப்பிட்டுள்ள பெண்மை கருத்துகளை இக்கால பெண்கள் கடைபிடித்தால் சமுதாயம் முழுமை பெறும். வள்ளுவன்

கூறுவதுபோல் (குறள்.55) நாட்டில் மழைபெய்து சிறப்புடன் எல்லா நலனையும் பெற முடியும் என்பதில் ஐயமில்லை.

டாக்டர் சு.தங்கத்துரை,

விரிவுரையாளர், தமிழ்த்துறை,

திருகொளஞ்சியப்பர்,

அரசு கலைக்கல்லூரி,

விருத்தாசலம்- 606 001.

தமிழ்நூல்களில் கல்வி உளவியல் கூறுகள்

மேற்கத்தியக் கல்வி, பண்பாடு, கல்வி நோக்கம் முதலியன மனித குலத்தை நீண்ட கால வாழ்விற்கு அழைத்துச் செல்ல உறுதுணையாக இல்லை. நவீன உற்பத்திக் கோட்பாடுகளால் அது ஒரு புறம் உலகத்தின் கனிவளங்களையெல்லாம் சூறையாடி வருகிறது. மறுபுறம் மன வளத்தையும் நசித்து வருகிறது. இக் கோட்பாடுகளையே அது நவீன கல்வியின், கல்வி உளவியலின் உள்ளீடாகக் கொண்டுள்ளது. இத்தருணத்தில் இந்தியத் துணைக் கண்டத்தில் பாரம்பரியம் மிக்க குடிகள் கண்ட பழைய கல்வி, கல்வியின் நோக்கங்கள் ஆகியவற்றில் தேவையானவற்றை அடையாளம் கண்டு புதுப்பித்தல் தேவையாகிறது. அந்த வகையில் கல்வியின் நோக்கம், கற்றல் விதிகள் தமிழ் நூல்களில், நவீன கல்வி உளவியலுக்கு வழிகாட்டும் வகையில் எங்கெங்கு பொதிந்துள்ளன என ஆராய்ந்தறிவதே இக்கட்டுரையின் விழைவு.

கல்வியின் நோக்கம்:

கல்வியின் நோக்கம் ஒவ்வொரு தனிமனிதனின் வளர்ச்சி யையும் கருத்தில் கொண்டதாக அமைவது. அக்கல்வி கொண்டு அத்தனிமனிதனின் நிலையான வளர்ச்சியும், சமூகத்தின் நிலை யான வளர்ச்சியும் பிரிக்கவொண்ணா வகையில் அமைக்கப்

படுதல் வேண்டும். அக்கூறுகள் நவீன கல்வி உளவியலில் எப்படி உள்ளது? பழந்தமிழர் தம் கருதுகோள் அதற்கு வழிகாட்டும் விதத்தில் எங்ஙனம் அமைந்துள்ளது என்று ஆராய்ந்தறிதல்.

கற்றல்:

இந்த நூற்றாண்டில் முன் எப்போதும் இல்லாத வகையில் ஆசிரியர்கள் மீது மக்களும், மாணவர்களும் கொண்டிருந்த மரியாதை வேகமாக வீழ்ந்து வருகிறது. இந்நிலையில் கற்றல், கற்பித்தலில் புதிய சிக்கல்கள் தோன்றியுள்ளன. அதைத் தமிழர் தம் கற்றல் கோட்பாடு கொண்டு தீர்வு காண முயலல்.

நம் முன்னோர்கள் வாழ்வியலின் பல கூறுகளுக்கு உலகம் வியக்கும் வண்ணம் நெறி கண்டிருந்தனர். அந்நெறிகளில் கல்வி உளவியலும் ஒன்று. இன்றைய சமூகத்தின் இயல்பிழந்தச் சூழலுக்கு அடிப்படைக் காரணம் இன்றைய கல்வி முறையே. இக்கல்விமுறை மேற்கத்திய நாடுகளின் கண்டுபிடிப்பு. அது எல்லாவற்றையும் வணிகநோக்குடன் காணும் இயல்பு கொண்டது. ஆனால் தமிழர்தம் கல்வி நோக்கமும், கற்றல் தன்மையும் மக்களை நோக்கியது. மக்கள் நலத்தையும் உலக நலத்தையும் விழைவது. கற்றலில் ஏற்பட்டுள்ள புதிய சிக்கலுக்கு, நவீன கல்வி உளவியலுக்கே வழிகாட்டும் திறன் கொண்டது தமிழர்கல்விக் கோட்பாடு எனத் தெளியலாம்.

கி.தட்சணாமூர்த்தி,

ஆய்வாளர்,

தமிழ்த்துறை,

மாநிலக்கல்லூரி, சென்னை-5.

இனவிளக்கவியல்: பழையதும், புதியதும்

இனவிளக்கவியல் (Ethnography) என்பதற்கு மிகச் சுருக்கமான வரையறை, ஒரு பண்பாட்டின் அல்லது சமூகத்தின் வாழ்க்கை முறையை விரித்துரைத்தல் எனலாம். இது மானிடவியலின் கோட்பாட்டு மற்றும் ஆய்வுமுறை வளர்ச்சி களுக்குக் களனாக அமைகிறது. பண்பாடு அல்லது சமூக மானிட வியலின் ஆய்வாளர்கள் தத்தம் ஆய்வுகளை ஒரு பண்பாட்டின் விளக்கவுரை வடிவில் அமைக்கவில்லையாயினும், வழி முறையில் அதனைத்தான் பயன் படுத்துகின்றனர். பத்தொன் பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும், 'இனவிளக்கவியல்' பல்வேறு மனித இனப்பண்பாடுகளின் அல்லது ஒரு குறிப்பிட்ட பண்பாட்டின் வரலாற்றினை மறுகட்டமைப்புச் செய்யும் முயற்சியினையே மேற்கொண்டிருந்தது. எனவே, இந்நோக்கம் ஆய்வுக்கு எடுத் திருக்கும் இனமக்களிடம் ஏற்படுத்த வேண்டிய நெருக்கத்தினை முக்கியப்படுத்தவில்லை. ஆய்வு 'தகவல் - கொடுப்பவர்' என்கிற தனி நபரினையே முற்றிலுமாய்ச் சார்ந்திருந்தது. இதனைத் தொடர்ந்து வந்த காலங்களில் ஒரு பண்பாட்டின் அல்லது சமூகத்தின் நிகழ்காலம் குறித்த ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டு வளர்ச்சியடைந்தன. இந்நோக்கிற்குக் கள ஆய்வின் புதிய உத்தியாகப் 'பங்குகொண்டு -உற்றறிதல்' பெரு மளவில் பயன்படுத்தப்பட்டது. இது ஆய்வாளரை ஆயப்படும் மக்கள் குழுவில் ஒருவராக அடையாளம் காணும்படி நெருக்கியது. மேலும் ஆய்வாளரை அக்குழுவின் அன்றாட வாழ்க்கையில் மூழ்கும்படி நிர்ப்பந்தித்தது. மானிடவியல் ஆய்வில் இவ்வளர்ச்சிப் பாதையில் கேர்ட்பாடுகளைக் கூர்மைப்படுத்துதலும், ஆய்வுமுறையைச் செம்மைப்படுத்து தலும் ஒரே நேரத்தில் நடைபெற்றது.

தற்போது மீண்டும் இனவிளக்கவியல் குறித்த தீவிரமான விமர்சனங்கள் சில முக்கியமான கேள்விகளைக் குறிப்பாய்,

பிரதி உருவாக்கும் விதம் பற்றி முன் வைக்கிறது. இக்கட்டுரை இனவிளக்கவியலின் வளர்ச்சியையும், தற்போதைய சிக்கல்களையும் புரிந்து கொள்ள முயற்சிக்கிறது.

முனைவர் பெ.தமிழ் ஒளி,
விரிவுரையாளர், மானிடவியல் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்.
சென்னை- 600 005.

நாச்சியார் திருமொழியில் அகப்பொருள் மெய்ப்பாடுகள்

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்துள் நாச்சியார் என்னும் ஆண்டாளின் படைப்புகளான திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆகியவற்றுள் நாச்சியார் திருமொழியில் பயின்று வந்துள்ள அகப்பொருள் மெய்ப்பாடுகள் மட்டும் இக்கட்டுரையில் சுட்டப் பெற்றுள்ளன.

தொல்காப்பியப் பொருளதிகார மெய்ப்பாட்டியலில் அகப்பொருளுக்கேயுரிய மெய்ப்பாடுகளும் அகப்பொருளுக்கும் புறப்பொருளுக்கும் உரிய மெய்ப்பாடுகளும் இடம் பெற்றுள்ளன. அகப்பொருள் மெய்ப்பாடுகளுள்ளும் களவிற்குரியன -கற்பிற்குரியன எனவும் அன்பினைந்திணை, பெருந்திணை, கைக்கிளைக்குரியன எனவும் வேறு பிரித்துச் சுட்டுவதில் உரையாசிரியர்கள் இளம் பூரணர், பேராசிரியர் முதலியோர் கருத்து வேறுபடுகின்றனர்.

அக்கருத்துவேறுபாடுகள் ஒருபுறமிருப்ப, கருத்து விளக்கங்கள் பெறுவதற்கு மட்டும் அவ்வுரையாசிரியர் தம் உரைகள் பயன்கொள்ளப்பட்டும் தொல்காப்பிய நூற்பாக்கள் வழி நாச்சியார் திருமொழியில் அமைந்துள்ள அகப்பொருள் மெய்ப்பாடுகள் பொருத்தமுற எடுத்துக்காட்டப்பெறுகின்றன.

'மனனழிந்தவிடத்து நிகழும் மெய்ப்பாடுகளாக அமைபவை'

நாச்சியார் திருமொழியில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவையாக அமைந்துள்ள திறமும் இந்த ஆய்வுக் கட்டுரைவழி பெறப் பட்டுள்ளது.

ப.தாமரைக்கண்ணன்,
ஆய்வாளர்,
தமிழிலக்கியத் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
மெரினா வளாகம்,
சென்னை- 600 005.

இலக்கண உருவாக்க அடிப்படையில் வீரசோழியமும் சித்தச் சங்கரவாவும்

உலகில் தோன்றி வளர்ந்து அழியும் கலைகள் யாவும் ஏதேனும் ஒரு தேவையை நிறைவு செய்வனவே. அவ்வகையில் இலக்கிய, இலக்கண உருவாக்கத்திற்கும் கற்றலுக்கும் குறிப்பிட்ட தேவை இருந்துள்ளது. இத்தேவை காலந்தோறும் மாறுபட்டு வந்திருப்பதை இலக்கிய, இலக்கண வரலாறுகள் தெளிவாக்குகின்றன. குறிப்பாக இலக்கண உருவாக்கம் மொழி இலக்கியம் கற்றலை அடியொற்றியது என்பர்.

வீரசோழியம் கி.பி.11-ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கண மரபில் மாறுபட்ட சிந்தனை உருவாக்கத்திற்கு வித்திட்ட இலக்கண நூல். இதனால் தமிழ் மொழியில் இரண்டாம் இலக்கண மரபைத் தோற்றுவித்ததாகவும் கருதுவர். தொல்காப்பியம் தமிழ் மொழியையும் இலக்கியங்களையும் கற்கத் துணை நின்றது. வீரசோழியம் அயல் மொழியினர் குறிப்பாக ஆரிய மொழியினர் தமிழ் மொழியைக் கற்க எழுதப் பெற்றது என்பர். இத்தேவையை நிறைவேற்றும் வகையில் வீரசோழியம், தமிழ் இலக்கணக் கூறுகளைச் சமஸ்கிருத இலக்கணக் கூறுகளின் அடிப்படையில் 'புடைமாற்றம்'

செய்துள்ளது என்பர். வீரசோழிய எழுத்து, சொல் அதிகாரங்களை அடிப்படையாகக் கொண்டு புடைமாற்று ஒப்புமை இலக்கணமே வீரசோழிய இலக்கணக் கோட்பாடு என்றும் விளக்குவர். இக்கருத்து வீரசோழிய செய்யுள், அணி அதிகாரங்களின் அடிப்படையில் முழுமையாக ஏற்றுக்கொள்ள இயலுமா என்பது இங்கு வினா. அதாவது வீரசோழிய இலக்கண உருவாக்கத்திற்கு மேலும் ஒரு காரணம் இருந்திருக்கவேண்டும். வேறு ஒரு தேவையை நிறைவு செய்ய உருவாக்கப்பெற்று இருக்க வேண்டும். இதை வீரசோழிய செய்யுள், அணி அதிகாரக் கருத்துக்கள் வலியுறுத்தும் வண்ணம் அமைந்துள்ளன.

கி.பி.13-ஆம் நூற்றாண்டில் சிங்கள மொழியில் எழுதப்பெற்ற முதல் இலக்கண நூல் சித்தச்சங்கரவா. இந்நூலுக்கு வீரசோழிய இலக்கணம் மாதிரியாக அமைந்துள்ளது. சிங்களமொழி இலக்கணக் கூறுகளை விளக்க வீரசோழியத்தை முன் மாதிரியாகத் தெரிவு செய்ததால் சித்தச்சங்கரவா இலக்கண உருவாக்கமும், வீரசோழிய இலக்கண உருவாக்கமும் ஒரு குறிப்பிட்ட தேவையை நிறைவு செய்வனவாக இருக்கலாம். இதை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம்.

முனைவர் இரா.தாமோதரன் (எ) அறவேந்தன்,
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
ஜெ.ஜெ.கலை, அறிவியல் கல்லூரி,
புதுக்கோட்டை-622 404.

திருமுனைப்பாடி நாட்டில் கலைகளின் தோற்றமும் வளர்ச்சியும்

திருமுனைப்பாடி நாடு -தென் பெண்ணை ஆற்றுக்கும், கெடிலம் ஆற்றுக்கும் இடைப்பட்ட பகுதி- மேற்கே 'மிலாடு' முதல் கிழக்கே 'திருவதிகை' வரை பரவியிருந்துள்ளது. இன்றைய திருக்கோயிலூர், தென்னார்க்காடு வள்ளலார் மாவட்

டங்களை உள்ளடக்கியது.

வரலாற்றுக்கு முந்தையகாலம் -ஜம்பையில் கிடைத்துள்ள புதிய கற்கால, பெருங்கற்கால கருவிகள், அதியமான் கல்வெட்டு - கீழ்வாலை பெருங்கற்கால ஓவியங்கள் (சிந்து வெளியில் கிடைத்துள்ள குறியீடுகளை ஒத்துள்ளது) - உடையாநத்தம் விசிறிப்பாறை -சேந்தமங்கலம் அகழாய்வில் கிடைத்துள்ள சுடுமண் உருவங்கள், ரோமானிய பானை ஓடுகள்.

வரலாற்றுக்காலம்: சங்ககாலச் சோழர்கள் -மலையமான் திருமுடிக்காரி- சோழிய ஏனாதி திருக்கண்ணன் திருமுடிக்காரி- பல்லவர்கள் - பிற்காலச் சோழர்கள் முதலாம் பராந்தகன் முதல் -மூன்றாம் இராசேந்திரன் -பாண்டியர்கள் -காடவராயர், விஜயநகரர், சம்புவராயர், செஞ்சி நாயக்கர் வரை.

கலைகள்: மரம், சுதை, கருங்கல் உலோகம் ஆகியவற்றால் செய்யப்பெற்றவை -சேந்தமங்கலம், திருக்கோயிலூர், திருவதிகையில் கிடைத்த சுதை உருவங்கள் - கோயில்கள், அவற்றில் உள்ள கலைப் பொருட்கள் - உதிரிச் சிற்பங்கள் - அண்மைக்காலக் கண்டுபிடிப்புகள்.

கு.தாமோதரன்,
துணை இயக்குநர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை,
தரமணி- சென்னை- *113.*

தமிழ்ப் புனைகதைகளில் பிறழ்நிலை உளவியல்

பிறழ்நிலை உளவியல் என்ற பிரிவு உளவியற் கல்வியில் மிக இன்றியமையாத இடத்தினைப் பெறுகின்றது. மனிதர்களுள் இயல்புத் தன்மையினர், உயர்ந்தோர், பிறழ்ந்த இயல்பினர் என்ற மூன்று பிரிவினர் காணப்படுவதைப் பிறழ்நிலை உளவியல் சுட்டிக்காட்டுகின்றது. மனித இயல்புகளை உள்ளவாறே சித்திரிக்கவும் சிக்கல்களுக்கான காரணங்களை ஆராயவும் முயற்சி

செய்கின்ற இன்றைய இலக்கியங்களான புதினம், சிறுகதை போன்றவை பிறழ்ந்த மன இயல்பு கொண்ட மனிதர்களையும் இலக்கியப்பாடு பொருளாகக் கொண்டிருக்கின்றன. நூறாண்டு கால வரலாற்றினைக் கொண்டிருக்கும் தமிழ் நாவல், சிறுகதை இலக்கியத்தில் பிறழ்ந்த மன நிலையுடைய மனிதர்கள் பலர் கதைமாந்தர்களாகப் படைக்கப்பட்டிருக்கின்றனர். இந்திரா பார்த்தசாரதி, ஜெய காந்தன், அசோகமித்திரன், நீல.பத்ம நாபன், கோபிகிருஷ்ணன், அழகிய சிங்கர் முதலான பல படைப் பாளிகளின் நாவல், சிறுகதைகளில் இத்தகைய பிறழ்நிலை உளவியல் சித்திரிப்புக்கள் இடம் பெற்றிருக்கின்றன.

i) கவலை நிலை, அமைதியின்மை, அச்ச உணர்வு, உள்விறைப்பு உணர்ச்சி, (tension) முதலிய பண்புகள் கொண்ட உளவழி நரம்பு நோயாளிகள் (Psychoneuroses), ii) மனிதனின் ஆளுமைச் சிதைவுக்குக் காரணமாக அமைகின்ற உளப்பிணியா ளர்கள், iii) ஆற்றல் குறைவு என்னும் பண்பினை விளக்கும் உளத்திறன் குறைந்த மாந்தர்கள், iv) சமூக எதிர்ச் செயல்களில் ஈடுபடும் மனநிலை கொண்ட மனிதர்கள் -என்ற நிலைகளில் காணப்படும் பிறழ்நிலை மாந்தர்கள் தமிழ்ப் புனைகதைகளில் எங்ஙனம் சித்திரிக்கப் பட்டிருக்கின்றனர் என்ற பாங்கினை ஆராய்வது இக்கட்டு ரையின் நோக்கமாகும்.

நவீன இலக்கியங்கள் மனிதனின் ஆழ்மனத்தின் நுட்பங்களை வெளிக்கொணரும் பான்மையில் அமைந்திருக்கின்றன என்ற கருதுகோளை நிறுவுவதற்கும், உளவியலுக்கும் இலக்கியத் திற்கும் உள்ள தொடர்பினை விளக்குவதற்கும் இத்தகைய ஆய்வுகள் பயன்படுகின்றன. இக்கட்டுரை அந்தத் தடத்தில் செல்கின்றது.

முனைவர் ம.திருமலை,

இணைப் பேராசிரியர்,
ஒப்பிலக்கியத்துறை,
தமிழியற் பள்ளி,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை- 21.

ஆலயங்களில் தேவரடியார்கள்

சோழர்காலத்தில் நடனமகளிர் இறைவனுக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டு கோயில்களில் தங்கள் கலையை வெளிப்படுத்தி வந்தனர். இவ்வாறு கோயில்களில் ஆடியும், தொண்டு செய்தும் வந்த நடனமகளிர்களைத் தேவரடியார்கள் என்று குறிப்பிட்டனர். இத் தேவரடியார்களைப் பற்றிய ஆய்வாக இக்கட்டுரை அமைகிறது. தஞ்சாவூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் இன்று வசித்து வருகின்ற தேவரடியார்களை நேரில் கண்டு நேர்க்காணலின் மூலம் அறிந்த செய்திகளைக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

தேவரடியார்கள் கோயிற் பூசைகளில் பங்கேற்றார்களா என்பதையும், கோயில்களில் இவர்கள் செய்து வந்த தொண்டு என்ன என்பதையும், இவர்களுக்கும் கோயிலுக்கும் இருந்து வந்த உறவு நிலை என்ன என்பதையும் முதலில் இக்கட்டுரை விளக்குகிறது.

அடுத்து, கோயில்களில் நடைபெற்ற விழாக்களைப் பற்றியும், அந்த விழாக்காலங்களில் தேவரடியார்கள் நடனம் ஆடினார்கள்ா என்றும், எங்கு நடனம் ஆடினார்கள், எந்த வகையான நடனம் ஆடினார்கள் என்றும் விளக்குகிறது.

இறுதியாகக் கோயில்களில் ஆடும் பொழுது சமூகத்தில் இவர்களுக்கிருந்த நிலையைப் பற்றியும், கோயிலில் இவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மதிப்பைப் பற்றியும், கோயிலின் மூலம் இவர்களுக்குக் கிடைத்த மானியம் பற்றியும் விளக்குகிறது.

நர்மதா,

ஆய்வாளர்,

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,

தரமணி- சென்னை- 600 113.

சூளாமணிக் காப்பியத்தின் களமும் கட்டமைப்பும்

காப்பியநிலைபேறு- களமும் கட்டுக்கோப்பும் -சூளாமணி -காப்பிய விளக்கம் -வரலாறு

கதைப்போக்கு

சூளாமணியின் கதைப்போக்கு - பயாபதி காப்பியத்தின் முதலும் முடிவுமாகத் திகழ்தல் - காப்பிய இறுதி துறவும் முத்தியுமாக அமைதல் -பயாபதி சூளாமணியாகத் திகழ்தல்.

சுருக்கச் செய்திகள்

நாட்டுச் சருக்கம் முதலாக முத்திச் சருக்கம் ஈறாகச் சருக்கச் செய்திகள் காப்பியத்திற்குக் களன்களாக அமைதல்.

மண்ணுலகும் விண்ணுலகும்

காப்பியம், மண்ணுலகையும் வித்தியாதர உலகையும் உறவு கொள்ளச் செய்கிறது. வித்தியாதர உலகு மண்ணுலக ஆட்சிக்குக் கட்டுப்படுகின்றது; மணவினைத் தொடர்பு கொண்டு, சுற்றம் தழுவுகின்றது. பூவுலகத் திவிட்டன் திருமாலாக மாற்றப் படுகின்றான்; வாசுதேவன் என்ற பட்டமும் பெறுகிறான்.

அரசு அமைப்பு

அரசு எந்திரம் - அமைச்சர் - படைத்தலைவா -தூதர் சிறப்புக் கள் - அரசர் அமைச்சர் உறவு - பயாபதி, சடிமன்னன் அரசவை நடைமுறைகள்- மன்னர்கள், மதிவல்லோர் சொற்கேட்டல் - அரசவைக்கும் மேலான நிமித்திகனின் செல்வாக்கு-பயாபதி நாட்டு வரிச்சலுகை.

குலப் பெருமையும் வீரமும்

பயாபதி, சடிமன்னன் குடிப்பெருமை விளக்கம்- அச்சுவ கண்டன் மானிடரை எள்ளி விஞ்சையரைப் புகழ்தல் - திவிட்டன் குடிப்பெருமையை அமைதியாக நிலைநிறுத்தல் - திவிட்டன்

சிங்கத்தைக் கொல்லுதல் - கோடிக்குன்றத்தைப் பெயர்த்துச் சுமந்தமை தலைமகன் தகுதியை நிலைநிறுத்திக் கொள்ளல்.

காதல் உறவும் சுயம்வரமும்

காப்பிய மாந்தர் எவரும் காதலித்துக் காலங்கழிக்காமை- முறையான சுயம்வரம் -பயாபதி இருமனைவியருடனும் இனிய இல்லறம் நடத்தல் - ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பாட்டு வாழ்வு பின்பற்றப்படுதல் -காப்பியத்தின் தூய்மைக்களம்.

நன்மையும் தீமையும்

பயாபதி, சடிமன்னர்கள் நன்மைக்களன் - அச்சுவகண்டன் தீமைக்களன்- போராட்டம் - மரபிற்கேற்ப நன்மையின் வெற்றியும் தீமையின் தோல்வியும்.

துறவுக்களம்

பயாபதி துறவு மேற்கொள்ளும் விழா- வாழ்வாங்கு வாழ்ந்த பின் துறவு.

தொடக்கமும் நடுவும் முடிவும்.

திவிட்டனின் மணப்பேச்சு - சிங்கத்தைக் கொன்று அச்சுவகண்டனை வீழ்த்தல் - திவிட்டன் முடிசூடலும் பயாபதி துறவும்.

மந்திரமும் மாயையும்

அச்சுவகண்டன், அரிகேது மாயைச் செயல் -திவிட்டன் மாயச் செயல் செய்யாமை.

முன் உணர்த்தும் முறை

பிற காப்பிய மரபுகளைப் போல இக்காப்பியத்திலும் பின்வருவன்வற்றை முன்னரே வெளிப்படையாக உணர்த்தும் போக்கு.

பாத்திரங்களின் பிணைவு

பாத்திரங்கள் குறைவு- பாத்திரங்களின் செயல்காப்பியக் கட்டுக் கோப்பிற்கும் நீட்சிக்கும் துணையாக நிற்றல்

இடையறவு படாமை

சருக்கங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடைய கதையோட்டம்- சீயவதைச் சருக்கம், அரசியல் சருக்கம் கட்டுக்கோப்பைக் காத்தல்- அரசியல் சருக்கத்திற்குப் பின் சரிவு- சுயம்வரச் சருக்கம் பின்னைய தலைமுறைகளுக்கு இணைப்புச் சருக்கம்.

காப்பியத் தூய்மை

வாழ்வியல் ஒழுங்கு - ஒருவனுக்கு ஒருத்தி- இனிய இல்லறம்- பண்பாட்டு மரபு போற்றல் - வேந்தர்களின் மனப்பக்குவம் -அறக்கருத்துக்கள்.

முடிவுரை

மேற்சுட்டப்பெற்ற களங்கள், கட்டுக்கோப்புக்களினால் சூளாமணி பெருங்காப்பியத் தகுதி பெற்று உயர்தல்.

முனைவர் அ.நலங்கிள்ளி,
விரிவுரையாளர் தமிழாய்வுத்துறை,
பிஷப் ஹீபர் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி- 620 017.

பெண்ணுடைய மொழி

(அ)

பெண் உடல் -பெண் மொழி

பெண் பற்றிய சிந்தனைகள் பல்வேறு கோணங்களில் தீவிரமடைந்துள்ள இவ்வேளையில் பெண்மொழி நோக்கிய

சிந்தனையும் தீவிரமடைந்துள்ளது. ஆண், பெண் இருவரும் ஆண்டாண்டு காலமாகப் பயன்படுத்தி வந்த மொழி ஆண்மொழி என்பது பெண்ணியவாதிகளால் வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டுள்ளது. ஆணே உலகைச் சமைத்தான். அந்த ஆணே மொழியையும் சமைத்தான். ஆண் சமைத்த மொழி ஆணுக்குச் சார்பாகவும் பெண்ணுக்கு எதிராகவும் ஆயிற்று. சொல்- அதன் பொருள் என்ற நிலையில் நோக்கும்போது பொருளாக்கம் முழுக்க முழுக்க ஆணுக்கு மேன்மையையும் பெண்ணுக்குக் கீழ்மையையும் தருவதாகவே செய்யப் பட்டுள்ளது. இதற்கு ஏராளமான சான்றுகளை மொழியினின்று எடுத்துக்காட்ட முடியும். தமிழில் ஆண், பெண் ஆகிய சொற்களின் பொருள் தளத்தை நோக்கினால் இவ்வுண்மை விளங்கும். மொழியில் பெண்பாற் சொற்களின் பொருள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கொச்சைப் பொருண்மையிலேயே பயன்படுத்தப்படுகிறது.

ஆணுக்குச் சார்பாகவும் பெண்ணுக்கு எதிராகவும் ஆனமொழி யையே தன் அறியாமையின் காரணத்தால் காலங்காலமாகப் பெண் பயன்படுத்தி வந்துள்ளாள். அதாவது மொழிப் பயன்படுத்தம் என்ற நிலையிலும் பெண் தனக்குத் தானே எதிரியாகவும் ஆணுக்கு ஆவன செய்பவளாகவும் வாழ்ந்து வருகிறாள். பெண் யதார்த்தங்களுக்குப் புறம்பாகவே பெண் கருத்தாக்கங்கள் உருப்பெற்று மொழியில் பதிவு செய்யப் பட்டன. பெண் குழந்தை மொழியைக் கற்றுக் கொள்ளத் தொடங்கும் முதல் முயற்சியே அவளுக்கு எதிராக உள்ளது. அவளின் முதல் சிந்தனையே ஆண் கருத்துருவாக்கக் குறியீடு களால் கட்டுப்படுத்தப்படுகிறது. அவள் உச்சரிக்கும் முதல் மொழி ஆண்மொழி. உளஇயல் அடிப்படையில் ஒடுக்கப்பட்ட பெண் ஆணாகவே சிந்திக்கத் தொடங்குகிறாள். பெண் தன்னுடைய உடல், மன அறிதல் அனுபவங்களைப் பேச்சில் / எழுத்தில் வெளிப்படுத்துவதற்கு மாறாக அவள் மனத்துள்ளே திணிக்கப்பட்ட ஆண் கருத்துருவாக்க அடிப்படையிலேயே தனது உடல், மன அறிதல் அனுப வங்களைத் தனது பேச்சில்/ எழுத்தில் வெளிப் படுத்துகிறாள்.

இந்த மொழி பெண்ணுக்கு உதவாது என்பதும், இந்த மொழியினால் பெண் தன் யதார்த்தத்தைப் பேச/ எழுத முடியாது என்பதும் புலப்படுத்தப்பட்டுள்ள இவ்வேளையில் பெண்ணுக்கான புது மொழியைத் தேடிப் பெண்ணிய வாதிகள் பயணப் பட்டுள்ளனர். இதில் பல்வேறு சிந்தனைகள் முன் வைக்கப் பட்டுள்ளன. அவற்றுள் குறிப்பாக இரண்டைச் சுட்டலாம்.

1. ஆண் பொருளை (அர்த்தம்) மட்டும் வெளிப்படுத்தி வாழும் இம்மொழிக்குப் பெண் பொருளையும் தந்து பெண், மொழியைப் பயன்படுத்தல்.

2. பெண் தன்உடல், மன அடிப்படைகளில் ஆண் கருத்துருவாக்கங்களினின்று முழுக்க விடுபட்டுமுழுக்க முழுக்கப் பெண் உடல், மன அனுபவங்களுடன் புதுப்பொருள் தளத்தில் பெண் தன்னைப் பேசுதல்/எழுதுதல்

இவ்விரண்டுள் முதலாவது சீர்திருத்தப் பான்மையது. இரண்டாவது புரட்சிப் பான்மையது. இந்நூற்றாண்டின் எழுபதுகளுக்குப் பிறகு சீர்திருத்தப் பெண்மொழி உதவாது என்பது புரிந்த வேளையில் புரட்சிப் பான்மையிலான பெண்மொழி பற்றிய எண்ணங்கள் முன்வைக்கப்பட்டன.

புதிய பெண் மொழி என்பது பெண்பாலியல் கடலினின்றே பிறப்பெடுக்கவேண்டும் என்பதும் பெண் தன் பாலியலை எந்தத் தடங்கலுமின்றி பேச/எழுத முனையும் வேளையில் அது பெண் பொருளையும் பெண் அனுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டிலங்குமாகையால் அதுவே புதிய பெண்மொழியாகும் என்பதும் விளக்கப்படுகிறது. சுருங்கக் கூறின் பெண் உடலினின்றே பெண் மொழித் தோற்றம் பெறும் என்பது தீவிரப் பெண்மொழியாளர் கருத்து. பெண்ணின் பூப்பு அனுபவம், பாலியல் மற்றும் தாய்மை அனுபவங்கள் ஆகியவற்றைப் பெண் பேச முனையும் வேளையில் பெண் மொழி கடல்போல் பொங்கிப்பெருகும். பெண் பொருள் விரிந்து பன்முகப் பான்மயுடையதாக வெளிவரும். அந்த மொழி உறுதியாகச் சொல், பொருள், தொடர் ஆகிய நிலைகளில் முற்றிலும் இன்றைய ஆண் மொழியினின்று வேறுபட்டு விளங்கும். இந்தப்

புதுப் பெண்மொழி ஃபிரெஞ்சு மண்ணில் பெண்ணிய வாதிகளால் உருவாக்கப்பட்டு வருகிறது.

முனைவர். அரங்க. நலங்கிள்ளி,

விரிவுரையாளர், தமிழ்த்துறை,

புதுவைப் பல்கலைக்கழகம்,

புதுச்சேரி- 605 014.

புதிய கல்வெட்டுகளில் பண்பாட்டுக் கூறுகள்

கடந்த சில ஆண்டுகளாகத் தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் டாக்டர் மா.இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தால் கண்டறியப்பட்ட நூற்றுக்கணக்கான புதிய கல்வெட்டுகள் தமிழக வரலாற்றிற்குப் பல அரிய செய்திகளைத் தருமாறு அமைந்துள்ளன. அவற்றுள் சில கல்வெட்டுகள் அந்நாளைய தமிழ்ச் சமுதாயத்தில் நிலவிய பல்வேறுவிதமான பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்துகின்றன.

அவனிமங்கலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு கல்வெட்டுகள் அன்னதானக் கொடை பற்றிக் கூறுகின்றன. கொடையாகத் தரப்பட்ட இடத்தில் கொடைக்குரிய கல்வெட்டுகள் காணப்படுவது மிக அருமையாகும். அவனிமங்கலக் கல்வெட்டுகள் இரண்டுமே கொடையளிக்கப்பட்ட நிலப்பகுதியில் அமைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. இது போலவே கல்பாளையம் என்னும் சிற்றூரில் கிடைத்திருக்கும் கல்வெட்டும் கொடையளிக்கப்பட்ட நிலப்பகுதியில் சி ந்துள்ளது. போசன அரசிற்குட்பட்ட குறுவத்துக் கோயிலொன்றிற்கு இந்நிலப்பகுதி கொடையாகத் தரப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

மக்களிடையே பக்தி இலக்கியங்களுக்கிருந்த செல்வாக்கை மெய்ப்பிச்கும் விதத்தில் நான்கு கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. திருப்பைஞ்ஞீலியில் கிடைத்த கல்வெட்டு, சுந்தரர்

இக்கோயிலைப் பாடிய பதிகவரியொன்றைப் பின்பற்றி இக்கோயில் முகத்தலளவைக்குப் பெயரிடப்பட்டிருந்த தகவலைத் தருகிறது. இதே ஊரில் கிடைத்த மற்றொரு கல்வெட்டு திருத்தொண்டத்தொகை நல்லூரை அடையாளம் காட்டுகிறது. திருப்புத்தூரில் கிடைத்த இரண்டாம் பேரரசுக் காலப் பாண்டியர் கல்வெட்டு திருத்தொண்டத்தொகையான் திருமடத்தை அறிமுகப்படுத்துகிறது. இங்குக் கிடைத்த, ஏறத்தாழ இதே காலகட்டத்தைச் சேர்ந்த மற்றொரு கல்வெட்டு பதினொரு திருமுறைகளுக்கும் கோயிலில் கிடைத்த மதிப்பை யும் மரியாதையையும் வெளிக்கொணர்கிறது. இக்கல்வெட்டால் அக்காலத்திலேயே பதினொரு திருமுறைகளும் தொகுக்கப் பட்டுவிட்ட செய்தி கிடைக்கிறது.

கொடை முதலில் இருந்து கிடைக்கும் வட்டிக்குக் கொடை நோக்கே பெயராக அமைந்துள்ள தகவலைத் திருத்தான் தோன்றீசுவரத்துப் புதிய கல்வெட்டு வழங்குகிறது. இதுவரை கேள்விப் பட்டிராத இசைக்கருவியொன்றின் பெயரைத் திருவிசலூர்க் கல்வெட்டு தர, இசைக் கலைஞர்களின் காணி பற்றித் திருக்கோளக் குடிக் கல்வெட்டு பேசுகிறது. ஆடலில் தேர்ந்த தலைக்கோலியர் பலரைத் திருவாசி மாற்றுரைவரதீ சுவரர் கல்வெட்டால் அறிகிறோம். பல்லவர் காலத்தில் மாமல் லபுரத்துத் தளிகளில் ஆடலரசியர் இருந்த உண்மையை, 'ஸ்ரீ இத்தளிக் கூத்திகள்' என்ற கல்வெட்டு முன்வைக்கிறது. பிசாசு பற்றித் திருக்கோளக் குடிக் கல்வெட்டும் பித்தும் பிராந்தும் அமனியானது பற்றி மலையடிப்பட்டிக் கல்வெட்டும் தகவல் தருகின்றன.

கல்வெட்டு வெட்டத் தரப்பட்ட கூலி, கோயில் கூரைகளின் உட்புறத்தே ஓவியங்கள் தீட்டப்பட்ட முறை குறித்துச் சில புதிய கண்டுபிடிப்புகளால் தெரிந்து கொள்ள முடிகிறது. அக்காலக் குற்றங்களும் தண்டனைகளும் குறித்துக் கீழப்பழுவூர், திருப்புத்தூர், கருந்திட்டைக்குடிக் கோயில் கல்வெட்டுகளால் அறிகிறோம்.

இப்புதிய செய்திகள் வரலாற்று வரவுகளாக இளைய

தலைமுறையினரைச் சேர்தல் வேண்டும்.

மு.நளினி,

மதிப்புறு கல்வெட்டாய்வாளர்,

டாக்டர் இராஜமாணிக்கனார் வரலாற்று ஆய்வு மையம்,

48, புத்தூர் நெடுஞ்சாலை,

திருச்சிராப்பள்ளி- 620 017.

தமிழ்ச் சிறுகதைகளில் பாலின வேறுபாடுகள்

இன்றைய சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளையும், அடக்கு முறைகளையும் இனங்கண்டு கொள்வதும், அவற்றைக் களைவதற்கான முயற்சிகளை ஆராய்வதும் பெண்ணியத் திறனாய்வாகும். அவ்வகையில், ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே இயல்புகள், பண்புகள், மரபுகள், பண்பாட்டு நெறிகள், கடமைகள் போன்றவற்றின் அடிப்படையில் வேறுபாடுகள் காட்டப்படுகின்றன. பெண்ணுக்கு மட்டுமே வலியுறுத்தப்படும் பாகுபாடுகள் அவ்வினத்திற்கு மிகுந்த சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. அச்சிக்கல்களின் பின்புலமாக அமையும், பாலின வேறு பாடுகளைப்பற்றி, தமிழ்ச் சிறுகதைகளில் ஆராயுமுகமாக இக்கட்டுரை அமைகிறது. 'தமிழ்ச் சிறுகதைகளில் பாலின வேறுபாடுகள் எனும் தலைப்பிலமைந்த இவ்வாய்வில், பாலின வேறுபாடு பற்றிய விளக்கமும், அது, கருத்துருவம், நெறியியல் கூறுகள் ஆகியவற்றில் வெளிப்படுத்தப்படும் பாங்கும் விளக்கப்படுகின்றன. கருத்துருவத்தில், இயல்புகள், பண்புகள் ஆகிய வகைகளின் வழி பாலின வேறுபாடுகள் சிறுகதைகளில் சுட்டப்படுகின்றன. நெறியியல் கூறுகளில் நெறிமுறைகளாகப் பிறப்பு, வளர்ப்பு, கல்வி, மணத்திற்கு முன், திருமணம் ஆகியவற்றில் இழையோடும் பாலின வேறுபாடுகள் புலப்படுத்தப்படுகின்றன. விழுமியங்களில் பெண் குறித்த சமூக மதிப்பீடு பற்றிய பாலின வேறுபாடுகள் சிறுகதைகளில்

ஆராயப்பட்டுள்ளன. மேற்கண்ட, கருத்துருவம், நெறியியல் கூறுகளான, நெறி முறைகள், விழுமியங்கள் ஆகியவற்றில் குறிக்கப்படும் பாலின வேறுபாடுகள், பெண்ணடிமைத் தனத்தையும், ஆணாதிக் கத்தையும் அழுத்தமாகத் தெளிவுபடுத் துவது புலப்படுத்தப் படுகின்றது.

வீ. நிர்மலாராணி,
விரிவுரையாளர்,
தமிழ்த்துறை, கிராமியப் பல்கலைக்கழகம்,
காந்திகிராமம்.

செய்திப் பரவலில் அறிவியலின் பங்கு

அறிவியல் வளர்ச்சி இன்று விண்ணை எட்டும் அளவிற்கு வளர்ந்துள்ளது. அறிவியலே அனைத்தும் என்ற அளவிற்கு விஞ்ஞான அறிவு பரந்து பெருகிக் கிடக்கின்றது. செய்திப் பரவலின் பரப்பும் பெருகியுள்ளது. மிகப் பழங்காலத்தில் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செய்திகள் சென்று சேர நாட்கள், மாதங்கள் பல ஆயின. இன்று ஒலி ஒளி சாதனங்கள் உலகை ஒரு கிராமமாகச் சுருக்கி விட்டன. நுண்ணியச் செய்திகளைக் கூட நுண்ணலைகள் உலகம் முழுவதும் நிமிட நேரத்திற்குள் பரப்பி விடுகின்றன.

இதழ்கள்

சாதாரண மக்களிடம் சாதாரண நிலையில் இருந்த செய்திப் பரவல் 14-ஆம் நூற்றாண்டை ஒட்டி அச்சு எழுத்துகளும், எழுதுதாளும், அச்சு இயந்திரமும் கண்டு பிடிக்கப்பட்டதால் மிக எளிதாக, விரைவாகப் பலரிடம் சென்றடைந்தது. 1870-இல் திரைப்படம் பற்றிய செய்திகள் மக்களை ஒரு புதிய உலகிற்கு அழைத்துச் சென்றன. தந்தியும் தொலைபேசியும் ஒரு புதிய அத்தியாயத்தைப் படைத்துக் காட்டின. 1844-இல் முதல் தந்தி பரிமாறப்பட்டது.

வானொலி-தொலைக்காட்சி

வானொலியும் தொலைக்காட்சியும் இரட்டைக் குழல் துப்பாக்கிப் போலச் செயல்படுகின்றன. இவை மக்களை நேரடியாக உடனடியாகச் சென்றடைகின்றன. செய்தியில் விரைவும் நம்பகத்தன்மையும் காணப்படுகின்றன. தொலைக் காட்சி படத்துடன் செய்தியைத் தருவதால் நம்பகத்துடன் தெளிவும் காணப்படுகின்றது. தொலைக்காட்சி 82.4% மக்க ளையும் 62.9% இடப்பரப்பினையும் சென்றடைகின்றது. சிறிய அங்கமாகத் தொடங்கப்பட்ட தொலைக்காட்சி இன்று இமாலய அளவில் வளர்ந்து நிற்கின்றது. இதற்குக் காரணம் இதனோடு தொடர்புடைய அறிவியல் வளர்ச்சியே ஆகும்.

தொழில் நுட்ப இயந்திரங்கள்

இன்று தொலைபேசி, தொலைவரி, கணிப்பொறி, தேசிய தகவல் நுட்ப மைய இணைப்பகம், தொலைப்பனுவல் (teletext) பேஃக்ஸ் மேல் கம்ப்யூட்டர் & பேக்ஸ் (Fax) டெலிபிரிண்டர் ரேடியோ டெலகிராப், ட்ரான்ஸ்மிட்டர் (Transmitter) இவை மட்டுமல்லாது விரும்பிய நேரத்தில் விரும்பிய செய்தியை அறியும் வண்ணம் கணிப்பொறி செய்தி சேகரிப்பு முறையும் வளர்ந்துள்ளன.

செயற்கைக் கோள்கள்

செய்திப் பரவலில் இன்று டெலிகான்ப்ரன்ஸ் முறையோடு கோள்கள் செய்தி அனுப்பப் பயன்படுகின்றன. தகவல் தொடர்புக்காக 1981-இல் ஆப்பிள், 1982-இல் இன்சாட் 1-ஏ, 1983-இல் இன்சாட் 1-பி, அக்னி, ஏ.எஸ்.எல்.வி.டி-4, பி.எல்.எஸ்.வி. போன்ற செயற்கைக் கோள்கள் விண்ணில் ஏவப்பட்டுள்ளன. செயற்கைக் கோள் வழி 24 மணி நேர ஒலிபரப்பு ஏற்பட்டுள்ளது. செய்திகளைப் பதித்து, பகுத்து, ஆய்வு செய்து முடிவுகளை அறிவிக்கும் மல்டி மீடியா கம்யூட்டர்களும் வளர்ந்துள்ளன.

நெட் வொர்க்ஸ்

பல்வேறு செய்தித் தொடர்பு இணைத்திட்டங்கள் இன்று வளர்ந்துள்ளன. இதனை நெட்-ஒர்க் சிஸ்டம் (Net Work System) என்பர். எஸ்.டி.டி., ஐ.எஸ்.டி., நிக்நெட் (NICNET) இண்டோ நெட் (INDONET)ஐ.சி. எம்.ஆர்.(ICMR)எர்நெட், சிர்நெட், விட்யாநெட் போன்ற நெட் ஒர்க் முறைகள் இன்று வளர்ந்து பல்கிப் பெருகி செய்திப் பரவலின் உயர்நிலையை அடைந்துள்ளன.

புதிய நிலை

இன்னும் செய்திப் பரவலின் புதிய நிலைகளை நாள்தோறும் எட்டி வருகின்றோம். எலக்ட்ரானிக் மெயில் சிஸ்டம், பேஜிங் சிஸ்டம் போன்றன புதிய சித்தாந்தத்தை வகுத்துக் காட்டியுள்ளன.

விஞ்ஞானம் வளர்வதோடு விஞ்ஞான தொழில் நுட்பமும் வளர்ந்து பெருகி வருகின்றது. சங்கு, ஒலிக்குறிப்பு என வளர்ந்த செய்தித் தொடர்பு இன்று நினைக்க முடியாத தூரத்தை எட்டி நிற்கின்றது. தூரத்தையும் நேரத்தையும் செய்திப் பரப்பும் சாதனங்கள் சுருக்கி உள்ளன. நிகழ்வுகள் அதே நொடியில் அனைவரது கவனத்திற்கும் வருவது இன்றைய அறிவியலின் சாதனையே ஆகும்.

முனைவர் தா.நீலகண்டன் பிள்ளை,
விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
தெ.தி.இந்து கல்லூரி,
நாகர்கோவில்-629 002.

பண்டைத் தமிழரின் கூர்தலறக் கோட்பாடும் தாவரவியலும்

உலகில் இன்று எண்ணற்ற உயிரினங்கள் வாழ்கின்றன. நிற்பன, ஊர்வன, நடப்பன, பறப்பன என்ற நான்கு நிலைகளில் அடங்கும் இவ்வுயிரினங்களின் தோற்றம் பற்றி ஆய்ந்த காலை, இவையாவும் ஒன்றிலிருந்து ஒன்றாகப் படிப்படியாகத் தோன்றி வளர்ந்துள்ளன; அவ்வகையில் இவ்வுயிரினப் படிநிலை வளர்ச்சியில் இறுதி நிலையாக மனித இனம் உள்ளது என்பது அறியப் பெற்றது. டார்வின் என்ற மேனாட்டறிஞரால் உருவாக்கப்பெற்ற இக்கோட்பாடு கூர்தலறக் கோட்பாடு என்றழைக்கப் படுகிறது.

சங்கத்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் ஓரறிவு முதல் ஆறறிவு வரைப் படிநிலை வளர்ச்சி நோக்கில் உலக உயிர்களை வகைப்படுத்துகின்றது. இடைக்காலத்தில் தோன்றிய மாணிக்கவாசகரின் திருவாசகம் பிறவி நோக்கில் உலக உயிர்களைத் தாவரத்தில் தொடங்கி மனிதப் பிறவிக் கடந்து, தேவர் வரைப் படிநிலையில் வைத்துப் பேசுகின்றது. சங்ககாலம் தொடங்கி இடைக்காலம் வரை, வளர்ச்சி பெற்று வந்துள்ள திருமால் அவதாரக் கருத்துகளைத் தொகுத்து நோக்க, அவற்றுள்ளும் படிநிலை வளர்ச்சியிலான உயிரின வகைப்பாடு மீனில் தொடங்கி தெய்வம் வரை வந்துள்ளதை அறிய முடி கின்றது. இவற்றை நோக்க நிலைத்திணையிலிருந்து இயங்கு திணை தோன்றிப்படிப்படியே வளர்ச்சியுற்றதைத் தொல் காப்பியமும் திருவாசகமும் காட்டுகின்றன. திருமால் அவதாரம் கடவுளின் ஆற்றலையே அடிப்படையாகக் கொண்டதால் இயங்கு திணையிலிருந்தே தன் பரிணாமப் பார்வையைத் தொடங்குகிறது எனலாம்.

தொல்காப்பியம், திருவாசகம் இரண்டுமே பரிணாம வளர்ச்சியில் தாவரத்தை முதலாவதாக வைப்பதோடு, ஒவ்வோரினத்தி னுள்ளும் தனித்தனியே அமையும் படிநிலை வளர்ச்சியையும்

தாவர வகையைக் கொண்டே விளக்குகின்றன. இவற்றுள் தொல்காப்பியம் வளரியல்புக்கு அப்பாற்பட்டு, 'புல், மரம்' என்ற வகைப்பாட்டைச் சுட்ட, திருவாசகமோ வளரியல்பு அடிப்படையிலான வகைப்பாட்டையே சுட்டுகின்றது. மேலும் மணிவாசகர் காட்டும் வகைப்பாட்டில் புல், பூடு, மரம் இவற்றுக்கிடையே இடம் பெறும் 'புழு' என்ற சொல், ஊர்வன இனத்துக்குரியது என்பதை விட, 'புதல்' என்ற தாவர இனச்சுட்டின் திரிபு எனக் கொள்வதே ஏற்புடையது என்பது ஆய்வின் மூலம் பெறப்படுகின்றது.

முனைவர் வே.நெடுஞ்செழியன்,
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
குருநானக்கல்லூரி,
சென்னை-600 032.

இந்தியப் பண்பாட்டுப் பரப்பில் வடக்கும் தெற்கும்

மானிட இனத்தின் பண்பாட்டுப் படிமலர்ச்சியைப் (Evolution) பசும் போதெல்லாம் இந்தியத் தீபகற்பப் பகுதி ஒரு முதன்மையான இடத்தைப் பெறுகின்றது. மிகப் பழமையான மண்ணியல் காலம் எனக் கருதத்தக்க ஆர்க்கியன் (Archaen)காலத்தில் தோன்றிய இப்பகுதியில் பழங்கற்காலம் முதல் இன்று வரை பண்பாட்டுத் தொடர்ச்சி காணப்படுவது இப்பகுதிக்கான தனித்தன்மைகளுள் ஒன்று. அதோடு புதிய கண்டங்களையும் நிலப்பகுதிகளையும் கண்டுபிடிக்கும் முயற்சிகளுக்கு முன்னரே ''பழைய உலகப் பகுதி''களில் தோன்றிய முதன்மையான நாகரிகங்களுள் ஒன்று இப்பகுதியில் உயர்நிலையில் இருந்தது.

இந்நீண்ட பண்பாட்டுக் காலகட்டத்தில் இம்மண்ணுக்கான திணைப் பண்பாடுகளின் அறுபடா தொடர்ச்சியும், அயற் பண்பாடுகளின் பரவலும், இவற்றிற்கிடையிலான கொண்டு-

கொடுத்தலும் நிகழ்ந்துள்ளன. திணைப் பண்பாடுகளாலும் அயற்பண்பாடுகளாலும் பல நூற்றாண்டுகாலம் தொடர்ந்து நிலவிய பன்மைப் பண்பாட்டுச் சூழல் இன்றைய இந்தியப் பகுதியின் பண்பாட்டு அமைவிற்கு அடித்தளமாய் அமைகிறது.

எனினும் மானிடவியல் ஆய்வு வழி நோக்கும்போது இன்றைய இந்தியப் பகுதியின் பண்பாட்டு அமைவில் வடக்கு, தெற்கு என்ற இரண்டு தனித்தன்மை வாய்ந்த பண்பாட்டுப் பகுதிகள் வரையறை கொள்கின்றன. இவ்விரண்டு பகுதிகளுக்கு மான நீண்டகாலப் பண்பாட்டு உறவு சில களங்களில் பொதுத் தன்மைகளைக் காட்டுகின்றன என்றாலும், இரண்டிற்குமான தொல் மூலப்படிவ (Archetypal)வகையிலான வேறுபாடுகள் திருமணம். உறவுமுறை, சமயம், மொழி போன்ற களங்களில் இன்னும் தெளிவாக இறுக்கம் பெற்றுள்ளன. இத்துணைக் கண்டத்தின் பண்பாட்டு வரலாற்றை இனங்காணவும் மீட்டுரு வாக்கம் செய்யவும் உதவக்கூடிய மிக முதன்மையான களங்க ளாக இவை அமையும் என்பதில் ஐயமில்லை. இக்கட்டுரை திருமணம் என்னும் நிறுவனத்தை மட்டும் ஆய்வுக்குட்படுத்தி ''வடக்கு'' ''தெற்கு'' ஆகிய இரண்டு பண்பாட்டுப் பகுதிகளின் தனித்துவத்திற்கான நிலைப் பாட்டினை நிறுவும்.

பக்தவத்சல பாரதி,
புதுவை மொழியியல் பண்பாட்டு,
ஆராய்ச்சி நிறுவனம்,
19,சின்ன சுப்பராய பிள்ளை தெரு,
பாண்டிச்சேரி-1.

வகரக்கிளவி நான்மொழி ஈற்றதா?

''வகரக் கிளவி நான்மொழி ஈற்றது''

(தொல்.எழு. 81)

''சுட்டுமுதல் வகரம் ஐயும் மெய்யும்

கெட்ட இறுதி யியில்திரி பின்றே''

(தொல்.எழு.184)

''ஏனை வகரம் இன்னொடு சிவணும்''

(தொல்.எழு.185)

என்ற மூன்று நூற்பாக்களும் காணக் கிடைக்கின்றன. இவற்றிற்கு உரையாசிரியர்கள் அவ்,இவ்,உவ்,தெவ் என்ற நான்கும் வகரவீற்றுச் சொற்களாகும் என்றும் அவற்றுள் முன்னைய மூன்றும் வேற்றுமை உருபோடு புணரும் போது வற்றுச்சாரியைப் பெற்று முடியும் என்றும் இறுதியில் வரும் தெவ் என்னும் சொல் இன் சாரியை பெற்று முடியும் என்றும் உரை வகுத்திருக்கின்றனர். இக்கட்டுரை, சுட்டுமுதல் வகரவீற்றுச் சொற்களாகக் காப்பியர் குறிப்பிடும் அவ், இவ், உவ் என்ற மூன்று சொற்களையும் பெயர்ச்சொற்களாகக் கருத முடியுமா என்பதைத் தொடரியல் நோக்கில் ஆராய முற்படுகின்றது. மேலும் காப்பியர் ஏன் அவற்றைப் பெயர்ச் சொற்களாகக் கொண்டார் என்பதற்கும் விடைகாண முயல்கின்றது.

முனைவர் ப.பத்மநாப பிள்ளை,
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
கிராமியப் பல்கலைக்கழகம்,
காந்திகிராமம்.

தொல்லியல் நோக்கில் சதுக்க பூதம்

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சதுக்கபூதம் என்றொரு தெய்வம் பற்றிக் கூறுகின்றன. நீதி தெய்வமாகக் காட்சியளிக்கும் இத்தெய்வம் பூதம் என்ற பெயரில் அழைக்கப்படுவதேன்?

இத்தெய்வம் புகாரில் மட்டுமின்றி, காஞ்சி, கரூர் போன்ற தலைநகர்களாகவும் வணிகத் தலங்களாகவும் திகழ்ந்த ஊர்களில் இருந்தது.

வேதநூல்களிலும் பிராம்மண நூல்களிலும் தீமை செய்வோரைத் தண்டிக்கும் பூதவுரு பற்றியும், இப்பூதவுரு

சாலைகளிலும் குறுக்குச் சாலைகளிலும் அமைக்கப்பட்டு, அதற்குப் பலி கொடுக்கப்பட்டதையும் கூறுகின்றன.

வட இந்திய மதுராவில் சிற்பங்களிலும், தக்க சீலம், உஜ்ஜயினியில் கிடைத்த நாணயங்களிலும் சதுக்கங்கள் காணப்படுகின்றன.

குடிமல்லம் என்ற ஊரில் நடைபெற்ற அகழாய்வுகள் சதுக்கம் பற்றிய உண்மையை எடுத்தியம்பியிருக்கின்றன.

எனவே தொல்லியல் நோக்கில் சதுக்க பூதம் என்ற தெய்வத்தை இனங்காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

முனைவர் ஆ.பத்மாவதி,
கல்வெட்டாய்வாளர்,
அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை,
தரமணி,
சென்னை-600 113.

தமிழில் வரிவடிவப் பிழைகள்

மாணவர்கள் செய்கின்ற எழுத்துப் பிழைகளை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று வரிவடிவப் பிழைகள், மற்றொன்று வரிவடிவத்தில் வெளிப்படுகின்ற ஒலியனியல் பிழைகள். இந்த இரண்டு வகைப் பிழைகளுக்கும் இடையே தெளிவான வேறுபாடுகள் உள்ளன. XY என்பது பிழையானால் அது வரிவடிவப் பிழையாக இருக்குமானால் Xஎன்பது Y ஆக எழுதப்படுகிறது. ஆனால் அது ஒலியனியல் பிழையாக இருக்குமானால் அங்கு Xற்குப் பதிலாய் Y எழுதப்படுகிறது. வரிவடிவப் பிழைகள் வடிவ ஒற்றுமையுள்ள எழுத்துகளிடையே மட்டும் ஏற்படும் .ஒலியனியல் பிழைகள் பெரும்பாலும் ஒலிப்பு ஒற்றுமையுள்ள எழுத்துகளிடையே ஏற்படும். வரிவடிவப் பிழைகள் வாசிப்போருக்குத் தவறான எழுத்தை உணர்த்தும். ஆனால் எழுதியவர்கள் அவற்றைச் சரியாக வாசிக்கக்கூடும். ஒலியனியல் பிழைகள் வாசிப்போருக்குத்

தவறான எழுத்தை உணர்த்துவதோடு எழுதியவர்களாலும் சரியானவற்றை உணர முடியாது.

ஒரு மாணவன் குறிப்பிட்ட சில வரிவடிவங்களில் பிழை செய்கிறான் என்பதால் மற்ற வரிவடிவங்களை மிகச் சரியாக எழுதுகிறான் என்பதில்லை. அதாவது நாம் எல்லாருமே எழுதும்போது பெரும்பாலும் அச்சு வடிவத்தைப் போன்று முழுதும் சரியாக எழுதுவதில்லை, மாற்றங்களுடனேயே எழுதுகிறோம். ஆனால் இந்த மாற்றங்களால் ஓர் எழுத்து மற்றோர் எழுத்தாகத் தோன்றும்போது அது பிழையாகிறது. சுருங்கக்கூறின் ஒவ்வொரு வரிவடிவத்திற்கும் குறிப்பிட்ட சில மாற்றங்கள் அனுமதிக்கப்படுகின்றன. இந்த எல்லையை மீறும்போது அங்குப் பிழை ஏற்படுகிறது.

இந்தக் கட்டுரை புதுவைப் பள்ளி மாணவர்கள் செய்துள்ள வரிவடிவப் பிழைகளை ஆராய்கிறது. பிழைகளில் ஏற்படுகின்ற மாற்றங்கள் பிழை அமைப்பு எனும் தலைப்பிலும், எந்தப் பிழை அதிகமாக ஏற்பட்டுள்ளது எது குறைவாக ஏற்பட்டுள்ளது போன்ற விவரங்கள் பிழை அளவு எனும் தலைப்பிலும் விவரிக்கப்படுகின்றன. இவற்றின் அடிப்படையில் வரிவடிவப் பிழைகளைக் களையவும் தடுக்கவும் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் விளக்கப்படுகின்றன.

முனைவர் த.பரசுராமன்,

புதுவை மொழியியல் பண்பாட்டு,
ஆராய்ச்சி நிறுவனம்,
19, சின்ன சுப்பராய பிள்ளை தெரு,
பாண்டிச்சேரி-1

பவழத்தின் பயன்கள்

குழிக்குடலிகள்(Phylum-Coelenterata)என்னும் தொகுதியில் வகைப்படுத்தப்பட்டுள்ள பவழங்களும் (Corals)கடற்

சாமந்திகளும் (Sea anemones); நுங்கு அல்லது சொறி மனகளும் (Jelly Fishes) மருத்துவ, வணிக மற்றும் பொருளாதாரப் பயன்மிக்கவையாக விளங்குகின்றன. மென் பவழங்களும் (Soft corals); கடின பவழங்களும் (Horny corals); கற் பவ்ழங்களும் (Stony corals); கறுப்பு அல்லது முட்பவழங்களும் (éranched corals); பொதுவாகக் காணப்படும் பவழ வகைகளாகும். இவற்றுள் மெய்ப் பவழ வகைகளைச் (True or madreporatian corals) சார்ந்த பவழங்களே தனிச்சிறப்புப் பெறுகின்றன.

பவழ உயிரிகளால் உருவாக்கப்பட்ட சுதயம் (சுண்ணாம்பு) அல்லது கால்சியம் கார்பனேட் (Calcium Carbonate) படிவுகளால் பவளப் பாறைத் தீவுக் கூட்டங்கள் பல உருவாகி க்கடற்பரப்புக்கு மேலே எழும்பியுள்ளன. ஆஸ்திரேலியாவின் வட கிழக்கிலுள்ள பசிபிக் கடற்பகுதியைப் ''பவழக் கடல்'' (Coral Sea) என்றே சிறப்புறக் குறிப்பிடுகின்றனர். தமிழகத்தில் தூத்துக்குடி, இராமேஸ்வரம் மற்றும் குருசடைத் தீவுப் பகுதிகளில் பவழப் பாறைத் திட்டுகள் பல காணப்படுகின்றன.

தமிழ் இலக்கியங்கள் கூறும் ஐம்பெரும் கடல்படு செல்வங்களுள் பவழமும் ஒன்றாகும்.

''ஓர்க்கோலை சங்கமொளிர் பவழம் வெண் முத்த நீர்ப் படு முன்பினோரைந்து'' என்னும் செய்யுளடிகளால் பவழத்தின் சிறப்பை அறியலாம். வெப்ப மண்டலக் கடற்பகுதிகளில் மட்டுமே வளரும் தன்மையுள்ள நற்பவழங்கள் நவரத்தினங்களுள் ஒன்றெனச் சிறப்பிக்கப் படுகின்றது.

"இலங்கு நீர் முத்தமொடு வார் துகிர் எடுக்கும் தண் கடற் படப்பை..."

(பதிற்றுப்பத்து 30: 5-6)

என்னும் சங்க இலக்கியப் பாடல் வரிகள், குளிர்ந்த கடல் பரப்பிலுள்ள நெய்தல் நில மக்கள் முத்துக்களுடன், பவழக் கொடிகளையும் வாரிக் குவித்தனர் என்னும் செய்தியினை எடுத்தியம்புகின்றன.

''வாருதி தண்டு வளைந்த செந்தண்டுதான்

நேருதுக் கொடியோன் நேர் பிரவாளமாந்

தாருரு வேளை சாத்திய பெண் மாலை

பாருதி நாமம் பவழத்தின் பேருமே''

என்னும் ''சட்டை முனி நிகண்டு'' பாடலொன்று பவழத்தின் பல்வேறு பெயர்களை எடுத்துரைக்கின்றது.

விலையுர்ந்த பவழங்களைக் (Precious Corals) கொண்டு, சித்த, யுனானி, ஆயுர்வேத மருத்துவத்தில் பலவிதமான மருந்துப் பொருள்களைத் தயாரித்துப் பயன்படுத்தி வந்த செய்திகளைப் பல நூல்கள் வழி அறிந்திட முடிகின்றது. இன்றளவும், பவழப் பற்பங்களும், பவழச் செந்தூரங்களும் இந்திய மரபு சார்ந்த மருத்துவத்தில் பயன்பாட்டில் உள்ளதை ஆய்வுகள் வழி அறிகிறோம். ஆனால் இச்செம்பவழங்கள் இந்தியப் பகுதியில் காணப்படுவதற்குரிய சான்றுகள் ஏதும் கிடைக்கப்பெறவில்லை.

பவழத்தைத் தூய்மைச் செய்யும் வழிமுறைகளும், பவழப்பற்பங்கள் மற்றும் பவழ்ச் செந்தூரங்கள் தயாரிக்கும் பல முறைகளும், இப்பற்பத்தை உண்ணும் அளவும் காலமும், அவற்றால் தீரும் நோய்கள் குறித்தும் பல்வேறு செய்திக்ள் ''திருமூலர் திருமந்திரத் திரட்டில்'' தரப்பட்டுள்ளன.

''சுரதோடம் ஐயமுத் தொடசுரங் காசம்

அருசிகி டத்தாலாம் ஆலம்-பெருவித்து

நட்டம் அதிதாகம் நாவறட்சி போயொளியுங்

கிட்டும் பவழத்தாற் கேள்''

என்னும் பாடல், பவழத்திற்குச் சுரத்தினால் உண்டாகும் தோடம், கபம், சன்னிகரம், இருமல், அதிதாகம், நாவில் உண்டாகும் வறட்சி, தாது தட்டம் இவ்வற்றைக் குணப்படுத்தும் தன்மையுண்டு என்றுரைக்கின்றது.

பிறிதொரு பாடல் உடலுக்குக் குளர்ச்சியையும் வலிமை

யையும் தருகின்ற பவழப்பற்பத்திற்கு நரம்புத்தளர்ச்சியை நீக்கும் தன்மையும், சிறுநீரைப் பெருக்கும் தன்மையும் உண்டென்று உரைக்கின்றது.

மேலும்

''பவழத் தடலைக்குப் பாரினிக ரில்லை
கவளக் களிற்றின் கறியஞ்சளவை
தவளத்தை யுண்ணத் தனுதென் மீனாகா
கவளப் பனையே சுகமாம் வசிக்கவே''

என்னும் மற்றொரு பாடல், பவழப் பற்பத்தின் சிறப்பினை, விளக்கி இப்பற்பம் மலமிளக்கி, துவர்ப்பி போன்ற தன்மைகளைப் பெற்றுள்ளது என்று கூறுகின்றது.

இவ்வாறு, பவழத்தின் பல வகைகளையும் அவற்றின் பயன்களையும் குறித்த அன்றைய மற்றும் இன்றைய செய்திகளைத் தொகுத்தளிப்பதே இந்த ஆய்வுக் கட்டுரையின் குறிக்கோளாகும்.

முனைவர் ச.பரிமளா,
விரிவுரையாளர்,
துறைத் தலைவர்,
தொல்லறிவியல் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்-613 005.

சங்க நூல்களின் தொகையாக்கம்

சங்க நூல்களான எட்டுத் தொகையும் பத்துப் பாட்டும் தொகை நூல்கள். பாடல்கள் பாடப்பட்ட காலத்திற்கும் தொகுக்கப்பட்ட காலத்திற்கும் இடையில் ஒரு பெரிய

இடைவெளி இருந்தது. எந்தக் காலக் கட்டத்தில் இவை தொகுக்கப்பட்டன? ஏன் இவை தொகுக்கப்பட்டன? எந்தெந்த அடிப்படைகளில் தொகுக்கப்பட்டன? தொகுப்புப் பணியில் ஈடுபட்டோர் யார்? யார்? என்பன போன்ற வினாக்களுக்கு விடை காண இக்கட்டுரை முயல்கின்றது.

முனைவர் அ.பாண்டுரங்கன்,
பேராசிரியர்,
பாண்டிச்சேரிபல்கலைக்கழகம்,
பாண்டிச்சேரி.

சூடாமணியின் சிறுகதைகளில் ஏற்காமைச்சிக்கல்

உளவியல், மனிதனையும், மனிதனுக்கு ஏற்படும் சிக்கல் களையும், சிக்கல்களுக்கான காரண காரியங்களையும் ஆராய் கிறது. அதே சிக்கல்களை, அவற்றுக்கான பின்புலத்தை, தீர்வுகளை இலக்கியமும் வெளிப்படுத்துகிறது. படைப்பாளர் சூடாமணி தனிமனிதச் சிக்கல்களை, அவற்றின் ஆழம்வரை சென்று வெளிப்படுத்தக் கூடியவர். பலவகை வேடமிடக்கூடிய மனத்தின் உண்மைக் காட்சியை 'விசுவரூபமாக'க் காட்டும் எழுத்து அவருடையது. அவருடைய 'அம்மா' 'சுவரொட்டி' என்ற இரு சிறுகதைத் தொகுதிகளிலுள்ள தனிமனித உளவியல் (individual psychology)சார்ந்த பதினொரு சிறுகதைகள் இக்கூற்றை மெய்ப்பிக்கின்றன.

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட கதைகளில் ஒருகதை மட்டும் (ஒரு கூட்டுக் கடிதம்) ஏற்றலைக் கருவாக உடையது; ஏனைய பத்தும் தன்னை, தன் சூழலை, பிறரை ஏற்க இயலாதோரையும், ஏற்காமைக்கான காரணங்களையும், ஏற்காமையில் ஏற்படும் பாதிப்புகளையும் எடுத்துக் காட்டுகின்றன. அவற்றுள் தனிமனிதத் தளத்தில் எட்டுக் கதைகளும், சமூகத்தளத்தில் மூன்று கதைகளும் அமைகின்றன.

ஏற்காமை, தன்னை ஏற்காமை பிறரை ஏற்காமை என்றஇரு நிலைகளில் அமைகிறது. ஏற்காமைக்கான காரணங்கள்:

பிறரை ஏற்காமை: குடும்பத் தளத்தில், பெற்றோர் - பிள்ளை, கணவன்-மனைவி மற்றும் சகோதர உறவு நிலைகளில் நிலவும் ஏற்காமை காட்டப்பட்டுள்ளது. பெற்றோருடைய உயர்வு மனப்பான்மையும், சுமைகளை ஏற்க விரும்பாமல் ஒதுங்கும் மனநிலையும் இரு கதைகளில் காட்டப்பட்டுள்ளன (அம்மா, தனிமைத்தளிர்).

குழந்தையில்லாத ஒரு பெண்ணின் தாழ்வு மனப்பான்மை, தன் திருமணத்திற்குப் பின் பிறந்த தன் தம்பியை, ஒருமனித் உயிர் என்று மதிக்காமல், தேவையற்ற பிற்சேர்க்கை என்று ஒதுக்கத் தூண்டுவது, என் தந்தையின், என் தாயின், என் மகன், என்ற கதையில் காட்டப்பட்டுள்ளது. இக்கதையில், தாழ்வு மனப்பான்மை, உயர்வு மனப்பான்மையாய் வேடமிட்டு வருகிறது.

கணவன்-மனைவி உறவில், சமூகம், ஆணுக்குக் கற்பிக்கும் தனி உயர்வு, ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் ஏற்றும், அன்பு செய்தும், மதித்தும் வாழ வேண்டிய இல்லறத்தில் ஏற்காமை குறுக்கிடக் காரணமாதல், 'இன்னொரு முறை' என்ற கதையால் உணர்த்தப்படுகிறது.

சமூகத் தளத்தில், சாதி, பொருளாதார உயர்வு என்பனவற்றின் அடிப்படையில் சமூகம் கற்பிக்கும் உயர்வு மனப்பான்மை, ஒரு சாரார் மற்றொரு சாராரைத் தம்மையொத்த மனிதராய் மதித்து நட்பு பூணத் தடையாய் இருத்தல் நெருப்பு, நன்றி என்ற இருகதைகளிலும், மன நிலை பிறழ்ந்து குணமான ஒருவனைச் சமூகம் ஏற்க மறுத்தல் 'நீளும் நிழல்' என்ற கதையிலும் காட்டப்படுகின்றன.

தன்னை ஏற்காமை: விபத்து, மரணம் என்பவற்றால் உறவுகளை இழக்க நேர்தலும், உறுப்புக் குறைபடுதலும் காரணமாய்ப் பாதிக்கப்படும் மனம், 'மாற்றுத்தேடல்' (Substitution) என்ற ஆழ்மனத் தற்காப்பு முயற்சி(Defensive Mechanism)மூலம், உண்மைக்கு எதிரான கற்பனையில் தன்னை ஏமாற்றிக் கொள்ள

முயலுதல் மூன்று கதைகளில் காட்டப்பட்டுள்ளது. (செல்லப் பிராணி, கனவு தொடர்கிறது, கதாநாயகன்) மூன்றிலும், உண்மைக்கு எதிரான கற்பனை, இறுதியில் அதிகமான வேதனையைத் தருவதே கதை முடிவுகளாய் அமைகின்றன.

தன்னை ஏற்காமை, பிறரை ஏற்காமைக்கு அடிப்படை யாதலைப் 'பெயர்கள்' என்ற கதை உணர்த்துகிறது.

படைப்பாளர் சூடாமணியின் கதைகள், தனிமனிதரை மையமிட்டு அமைந்தாலும், குடும்பம், சமூகம் என்ற இருதளங்களிலும் காணப்படும் தனிமனித ஏற்காமைக்கு, சமூகத்தையே வலுவான காரணியாய் எடுத்துக்காட்டுகின்றன.

ஜே.பாத்திமா,
விரிவுரையாளர் தமிழ்த்துறை,
பாத்திமாக் கல்லூரி,
மதுரை-18

புலனாய்வுச் செய்தி

நாட்டு நடப்புகளை அறிந்து கொள்ள வேண்டும் எனும் உந்துதல் மக்களிடையே மிகுந்துள்ளது. அதிலும் அரசியல் சார்புடையச் செய்திகளை மக்கள் அறிய விரும்புகின்றனர். புலனாய்வு இதழாக வெளிவரும் ஜுனியர் விகடன் ஒரு செய்தியின் அடிப்படையிலிருந்து அச்செய்தி மக்களை எவ்வாறெல்லாம் பாதிக்கிறது என்பதை நுணுகி ஆராய்ந்து வெளியிடுகிறது. வேலூர் சிறையிலிருந்து புலிகள் தப்பிய செய்தியை ஜுனியர் விகடன் எவ்வாறு புலனாய்வு முறையில் தந்துள்ளது என்பதை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

கிராமத்துப் பிரச்சினைகளையும் அரசியல் நிலைமை களையும் மக்களுக்குத் தெரிவிப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டு புலனாய்வு அடிப்படையில் ஜுனியர் விகடன் வெளிவந்தது. (தமிழ் வார இதழ்களில் இதழியல் உத்திகள், ஆய்வேடு, ப.22) இதற்காக இவ்விதழ் நிருபர்களைக் கொண்டு

செய்திகளைச் சேகரித்து நிருபர்கள் பெய்யரிலும், கழுகு, ஆந்தைய்யார் என்ற புனை பெயர்களிலும் வெளியிட்டு வருகிறது. மிஸ்டர் கழுகு அரசியல் செய்திகளை முன் கூட்டியே அறிந்து வந்து வாசகர்களுக்குத் தெரிவிக்கிறது. சில செய்திகளைப் படங்களோடு விரிவான கட்டுரையாகவும், 1/2 பக்க, 1/4 பக்க செய்தித் துணுக்குகளாகவும் வெளியிட்டு வருகிறது.

ஆகஸ்ட் மாதம் 14ஆம் தேதி நள்ளிரவில் வேலூர் சிறைச்சலையிலிருந்து நான்கு பெண்கள் உட்பட நாற்பத்து மூன்று விடுதலைப் புலிகள் தப்பி ஓடிவிட்டனர். வேலூர் சிறைச்சாலைக்குள் 153 அடி நீளமுள்ள சுரங்கப்பாதையை அச்சிறையில் தங்கியிருந்த எழுபத்து ஏழு விடுதலைப்புலிகள் சேர்ந்து தோண்டியுள்ளனர். அதன் வழி நாற்பத்து மூன்று விடுதலைப் புலிகள் தப்பிச் சென்றது மறுநாள் காலை 7 மணிக்கு ஆள் எண்ணிக்கை சரிபார்ப்பு பணி (Roll call)நடந்த போது தான் சிறைக் காவலர்களுக்குத் தெரிய வந்துள்ளது. ஏறத்தாழ ஆறுமாத காலமாகச் சிறையினுள் இருந்த விடுதலைப் புலிகள் சுரங்கப்பாதையைத் தோண்டியதைச் சிறைக் காவலர்கள் அறியாது இருந்துள்ளனர் என்பதே ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட அரசியல் செய்தியாகும்.

புலனாய்வு இதழான ஜூவிமற்ற வார இதழ்களினின்றும் மாறுபட்ட இச்செய்தியைப் புலனாய்வு செய்து 20/8, 23/8, 27/8, 30/8, தேதிகளில் வெளிவந்த ஜூனியர் விகடனில் கட்டுரையாகவும், செய்திகளாகவும், படத்துடன் கூடிய கட்டுரைகளாகவும் தந்துள்ளது. ஜூனியர் விகடன் இச்செய்தியை மட்டும் தராமல் விடுதலைப் புலிகள் வேலூர் சிறையில் ஏன் அடைத்து வைக்கப்பட்டனர்? அவர்கள் செய்த குற்றங்கள் என்ன? ஆறுமாத காலமாகத் தோண்டி அமைக்கப்பட்ட சுரங்கப் பாதையைக் காவலர்கள் அறிந்து கொள்ளாமல் இருந்ததற்குரிய காரணங்கள் யாவை? விடுதலைப் புலிகள் தப்பிச் செல்வதற்கு யார் யார் உதவினார்கள்? தப்பிச் சென்ற விடுதலைப் புலிகளின் நோக்கங்கள் யாவை? பாரத தேசத்தின் பிரதம மந்திரி இச்செய்தியைக் கேட்ட பின்பும் நடவடிக்கை 'எடுக்காமல் இருந்ததற்குரிய

காரணங்கள் யாவை? போன்ற கேள்விகளை எழுப்பும் விதத்தில் கட்டுரைகளையும் செய்திகளையும் படங்களையும் தந்துள்ளது.

20/8 ஜூனியர் விகடன் அட்டைப் படத்தில் புலிகளைப் பற்றிய செய்திகள் மூன்று தலைப்புகளாகத் தரப்பட்டுள்ளன. 'புலிகள் பெப்பே', 'ஓடுவோமே தப்பி ஓடுவோமே, ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று', 'விளைவுகள் பயங்கரம்' எனும் மூன்று தலைப்புகளும், அதே இதழில் ''ஓடியவர்களின் சதித்திட்டம்' என்ற தலைப்பில் பிகாஷ் எம் ஸ்வாமி எழுதிய கட்டுரையும் புலிகள் தப்பி வந்த தன்மையையும், தப்பி வந்த புலிகள் சென்னையை நோக்கி வந்ததற்கான காரணங்களையும் விளக்குகின்றன. ''பிடிபட்ட விடுதலைப் புலிகளுள் குணசீலன் என்பவன் சாமர்த்தியமாகத் தப்பிப் போனான்'' என்று 20/8 ஜூவியில் தந்த செய்தியைப் புலனாய்வு செய்து 'குணசீலன் தப்பித்துச் செல்வதற்குப் போலீஸ்காரர்களின் பணத்தாசையே காரணம்'' என 27/8 ஜூவியில்கழுகார் வழி எடுத்துரைக்கிறது.

ஜூனியர் விகடன் இச்செய்திக்கு மற்ற வார இதழ்களை விட எத்தகு முக்கியத்துவம் தந்துள்ளது; எவ்வாறு புலனாய்வு செய்துள்ளது என்பதை இக்கட்டுரை விரிவாக ஆராய்கிறது.

முனைவர் ப.பார்வதி,
விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி,
குற்றாலம்.

தமிழ் அகராதிகளில் முன்னுரைப்பகுதி-வளர்ச்சி வரலாறு

மொழி காலந்தோறும் மாறிவருகின்ற தன்மை உடையது. மொழிச் சொற்களிலும் அச்சொற்கள் காட்டும் பொருள்களிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. சொற்களின் பொருள்களைப் புரிந்து

கொள்வதற்கும் மொழியின் வளர்ச்சியைத் தெரிந்து கொள் வதற்கும் நோக்கு நூல்களாக அகராதிகள் பெரிதும் பயன் படுகின் றன. அகராதி அமைப்பு தொல்காப்பியம் முதல் தற்காலம் வரை பல்வேறு நிலைகளில் வளர்ச்சி அடைந்து வந்துள்ளது. அகராதிக ளின் நோக்கத்தையும், அமைப்பையும், உள்ளடக்கத்தையும் தெரிந்து கொள்வதற்குத் துணை நிற்பது முன்னுரைப் பகுதியா கும். இக்கட்டுரையில் தமிழ் அகராதிகளில் (ஒரு மொழி, இருமொழி) முன்னுரைப் பகுதியின் அமைப்பு, வளர்ச்சி நிலை, செய்திகளின் வெளிப்பாடு என்பன விளக்கப்படுகின்றன.

பழங்காலத் தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் காப்பியங்க ளிலும் முன்னுரைப்பகுதி பாயிரமாகவே கொடுக்கப்பட்டது. பாடியோன் வரலாறு, பாடப்படும் நூல் வரலாறு போன்றவை அப்பாயிரத்தில் காணப்பட்டன. முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்திலும் முன்னுரைப் பகுதி பாயிரமாகவே அமைந்தது. தொல்காப்பியத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின் வெளிவந்த சொற்பொருள் கூறும் நூற்களான நிகண்டு களிலும் முன்னுரை பாயிரமாகவே அமைந்துள்ளது. நிகண்டு களின் அமைப்பு முறை மட்டுமே அப்பாயிரத்தில் கூறப்பட் டுள்ளதே அன்றி சொற்பொருள் பற்றிய விளக்கம் ஏதுமில்லை. நிகண்டுகளை அடுத்து வெளிவந்த முதல் அகராதியான சதுரகராதியில் முன்னுரைப்பகுதி காணப்படுகின்றது. இதனை அடுத்து வெளிவந்த பல அகராதிகள் முன்னுரைப் பகுதியில் படிப்படியான வளர்ச்சி நிலைகளோடு வெளிவந்தன.

முன்னுரைப்பகுதியின் வளர்ச்சி வரலாறு பல பிரிவுகளாகப் பிரித்து ஆராயப்படுகின்றது. அகராதிகளின் நோக்கம், அமைப்பு, தரவு சேகரிப்பு, உத்திகள் போன்றவை ஒவ்வொரு அகராதி களிலும் எவ்வாறு தரப்பட்டுள்ளன என்பதும் முன்னுரைப் பகுதியின் முக்கியத்துவம், முன்னுரைப்பகுதி கொடுக்கப் படாததால் ஏற்படும் சிக்கல்கள் போன்றவைகளும் விளக்கம் செய்யப்படுகின்றன.

மா.பார்வதி,
தொகுப்பியல் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்-5.

சட்டமும்-தீர்ப்பும் அன்றும்-இன்றும்

திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், காத்தல், சட்டம் (நீதி) இவை நான்கும் நடைமுறைச் சமுதாயத்தில் ஆட்சி நெறிப்படுத்தப்பட்டுள்ளது. ஆங்கிலேயர் நுழைவுக்கு முன் இம்முறைகள் பின்பற்றப்படவில்லை. இக்கட்டுரையில் சட்டம் குறித்த கருத்துகள் 'மனம்' பற்றிய கோட்பாட்டின் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டு உள்ளது.

தமிழர் இலக்கியம்

சங்கம் தொடங்கி இன்று வரையிலான இலக்கியங்களில் விரவிக் கிடைக்கும் சட்டம்-நீதி-தீர்ப்பு ஆகியவை மக்கள் போக்கான சமுதாயப் போக்கோடும் படைப்பாளரின் மனப் பார்வையோடும் ஒப்பு நோக்கப்படுகின்றன.

''மனம் உண்டானால் மார்க்கமுண்டு''

இது ஒத்த பழமொழிகள் அதிகமுள்ள தமிழகத்தில் அம்மனத்தின் போக்கு முடிந்த வழக்கின், தீர்ப்பின் நிலையை உண்டாக்கியது எப்படி? என்பதே முக்கிய நோக்கமாய் கொள்வதும் நடைமுறைக்கு எங்ஙனம் கொள்வது என்ற வழிமுறையினையும் கூறுகிறது.

அன்று

நன்னன் தீர்ப்பு, கண்ணகி வழக்கும் பாண்டியன் செயலும், ஆராய்ச்சி மணி அடித்த 'ஆ'வும் மனுநீதியும், திருநாவுக்கரசு புராணத்தில் மன்னராணை, சுந்தரர் வாழ்வு மறையவர் வழக்கு, மணிமேகலை கற்பு, பெருங்கதைப் பெண் கற்பு-போன்ற நிகழ்வுகளில் மனத்தின் பங்கும்...பொருந்தும் வகையும்.

இன்று

சட்டம், தீர்ப்பு, நீதியை இன்றைய இலக்கியங்களும், மக்கள்

நடைமுறையும் முறையாக நடத்தாததன் காரணத்தில் மனம பெறும் ஈ பாடு இழிவான போக்கு ஏன் வந்தது.

அன்ை ய நீதி முறைப் போக்கு முன்னோடியாக அமையவும் இன்றைய நீதி முறை இழிவாகப் பேசவும் முறைப்படுத்தப் படாமைச் ம் காரணம் - மனத்திறனே!

பாலசீனிவாசன்,
வழக்குரைஞர்,
3, ஜோதிநகர் முதல் தெரு,
சிட்லப்பாக்கம்,
சென்னை-600 064.

திருக்குறளில் சமுதாயச் சிக்கல்களும் தீர்வுகளும்

தமிழிலக்கிய வரலாற்றில் சங்கம் மருவிய காலத்தியதாய் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாக அமைவது திருக்குறள். இது இனம் மொழி மதம் கடந்த உலகளாவிய நிலையில் உலகப் பொதுமறை என ஏத்தப்படுகிறது. எளிமை, தெளிவு, புரிதல், பொதுமறை, பயன்பாடு என்ற நிலைகளில் இலக்கிய வட்டத் திலும் சமுதாய நடைமுறையிலும் திருக்குறள் ஆளுமை செலுத்துகின்றது. அறநூலாக இன்று நோக்கப்படும் இத் திருக்குறள் அறம் பொருள் இன்பம் எனும் முப்பால் பகுப்பானது.

மானுட வாழ்வின் செம்மை வேண்டி எண்ணம் சொல் செயல் என்ற அடிப்படையில் குறள் கருத்துக்கள் எடுத்தியம் பப்பட்டுள்ளன. நூலில் அகச் செய்திகள் நீங்கலாக உள்ளவை அறம் பொருள் பற்றியன. இவை முதலிரண்டு பால்களில் (செயலளவில் உள்ள) நடைமுறை விதிகளாகவும் விளக்கங் களாகவும் இடம் பெறுகின்றன.

கட்டுரை திருக்குறளில் சமுதாயச் சிக்கல்கள், காரணங்கள், தீர்வுகள் என அமைகிறது. கட்டுரையுள் தனிமனித சமுதாயச் சிக்கல்கள் விமர்சன நோக்கில் வள்ளுவர்வழி காட்டப் படுகின்றன.

இரவு, குற்றம் கடிதல், கொலை, கள்ளுண்ணல், சூது, களவு, பிறனில் விழைதல், பெண் வழிச்சேரல், கொடுங்கோன்மை, சிற்றினம் சேரல் என்பன சிக்கல்களாகவும் அவா, அறியாமை முதலியன காரணங்களாகவும் அமைகின்றன.

மேற்குறித்த சிக்கல்கள் போக்கும் வழிமுறைகளாக வாய்மை, வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினை செயல்வகை, காலமறிதல், இடனறிதல், பொருள் செயல் வகை, அடக்க முடைமை, ஒழுக்க முடைமை, நாணம் உடைமை, சான்றாண்மை, குடிமை, குடிசெயல்வகை, பெரியாரைத் துணைக் கோடல், உழவு, வாழ்க்கைத் துணை நலம், புதல்வரைப் பெறுதல், சுற்றந்தழாஅல், மன்னரைச் சேர்ந்தொழுகல், ஒற்றாடல், தூது, மருந்து என்பன அமைகின்றன.

பொருளின் மேலோங்கிய ஆதிக்கத்தால் அறத்தின் மதிப்பு பொருட்படுத்தப்படாத போக்கு இன்றைய நிலையில் நோக்கப்பட வேண்டியதாகிறது. காலம் கடந்து நிற்கும் நிலையில் நீதி, அறக் கருத்துக்கள் இலக்கியங்களாக அமைவது முதன்மைப் பயனுடைத்ததாகப் போற்றப்படத்தக்கதாகும்.

பு.பாலாஜி,

ஆய்வாளர்,

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,

தரமணி, சென்னை-600 113.

கல்யாண முருங்கையில் (பாலகுமாரனின் குறுநாவல்)

விஜயலட்சுமி பாத்திரப் பண்பு

நாவல்கள்-சமூக நாவல்கள்- பாத்திரப் படைப்பின் இன்றியமையாமை- புதியனங்களில் சமுதாயப் பிரச்சினைகளின் தாக்கம்- தி.ஜானகிராமன்- செயகாந்தன் புதினங்கள்- பாலகுமாரனின் தனித் தன்மை.

கல்யாண முருங்கை- குறுநாவல் முதிர்கன்னிகளின் பிரச்சினைகள்- கதைக்கரு வரதட்சணைக் கொடுமை- கல்யாண முருங்கை- பெயர்ப் பொருத்தம் - கதைத் தலைவி விஜயலட்சுமி பாத்திரப் படைப்பு- சுயவிமரிசனம்- புரட்சிப் பெண்- புதுமை நோக்கம் - உண்மை பேச - உந்துதல் - திருமணம் ஏற்படுத்திய மாற்றம் - பெண் சுதந்திரம் - பல்வேறு சமுதாயச் சிக்கல்களை இப்பாத்திரம் வழியே வெளிப்படுத்துதல் - துணைப் பாத்திரம் ரங்கா- தலைமைப் பாத்திரப் பண்பு வெளிப்படத் துணை நிற்றல் - முதிர்கன்னிகளின் பிரச்சினைக்குத் தீர்வு - சமுதாய உணர்வு கொண்ட பாத்திரப் படைப்பாக்கம்.

முனைவர். பு.பிரகாசம்,
தமிழ்த்துறை பச்சையப்பன் கல்லூரி,
சென்னை.

குமரி மாவட்ட மீனவர் நாட்டுப்புறப் பாடல்களில் சமுதாயப் பண்பு

குமரி மாவட்ட மீனவரிடையே தொழிற் பாடல்கள், தாலாட்டு, ஒப்பாரி, பக்திப் பரடல்கள், சடங்குகள்ளக் குறித்த பாடல்கள், கதைப்பாடல்கள், களியல் பாடல்கள் ஆகிய நாட்டுப்புறப்பாடல்கள் வழங்கி வருகின்றன. இப்பாடல்கள்

சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடிகளாகத் திகழ்வதை விளக்குவதே இவ்வாய்வுரையின் நோக்கமாகும்.

ஏலாப்பாடல்கள் மீனவர்க்கே உரிய தொழிற்பாடல்களாகும். இப்பாடல்கள் மீனவர்க்குக் கடல் தொழிலில் ஏற்படும் துன்பங்கள், அவர்கள் தம் உறவினரிடம் காட்டும் அன்பு, மதுவின் கொடுமை, சமய உணர்வு, நம்பிக்கைகள், பழக்கவழக்கங்களைப் புலப்படுத்துகின்றன.

ஆடவர்கள் ஆடிக் கொண்டே பாடும் களியல் பாடல்கள் பெண்கள் நிலை,ஆங்கில அரசின் கொடுமை ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றன.

ஒப்பாரிப்பாடல்களால் விதவைகளின் துயரையும் மகனை இழந்த தாயின் துயரையும் அறிய முடிகின்றது. கணவன் இறந்தால் பெண், சமுதாயத்தில் மதிப்பை இழப்பதை ஒப்பாரிப்பாடல் தெளிவாக உணர்த்துகிறது.

தாலாட்டுப் பாடல்களால் கோயிலுக்குக் காணிக்கை செலுத்தினாலும் தெய்வத்தை வேண்டி விரதமிருந்தாலும் குழந்தைப் பேறு கிடைக்கும் என்ற நம்பிக்கை புலனாகிறது.

சமய உணர்வு பாடல்களால் மக்களின் சமய உணர்வை உணரலாம். பெரும்பாலோர் கத்தோலிக்க சமயத்தவராதலால் அவர்கள் கன்னி மேரியையும் அவர் குமாரர் ஏசு கிறிஸ்துவையும் வழிபடுவதை அறியலாம். கிறிஸ்தவர்கள் தங்களைப் பாவிகள் என்று குறிப்பிடுவதையும் காண முடிகிறது.

முற்காலத்தில் அவர்கள் இந்துக்களாயிருந்திருக்க வேண்டும் என்பதை அவர்கள் பாடல்களில் இடம் பெறும் முருகவழிபாடு, பகவதியம்மன் வழிபாடு ஆகியவற்றால் அறியலாம்.

இந்து மீனவர்கள் முருகன், சபரிமலை ஐயப்பன், மதுரை மீனாட்சி, குமரிப்பகவதி ஆகிய தெய்வங்களை வழிபடுவதை அறிய முடிகின்றது.

மீனவர்கள் நாவிதர் இனத்தவரைத் தங்களை விடக் குறைந்த இனத்தவராகக் கருதி வந்ததைப் பாடலொன்றால் அறியலாம்.

கடலுக்குச் சென்ற கணவன் குறித்த காலத்தில் வராததற்காகப் பெண் வருந்துகிறாள்.

ஓர் இளம் பெண் ஆடவனின் பெரிய மீசையையும பற்களையும் கண்டு அஞ்சுவதாகக் குறிப்பிடுகிறாள்.

மீனவர் இயல்பாகவே உணர்ச்சி வயப்படுபவர்கள். பல பாடல்கள் கிராமங்களிடையே நடந்த சண்டைகளைக் குறிப்பிடுகின்றன. ஒரு பாடல் தங்களிடம் சண்டைக்கு வரும் அடுத்த ஊராரைச் சந்திக்கவா போலீசைச் சந்திக்கவா என்று வினாக்களை எழுப்புகின்றன.

நாட்டுப்புறப்பாடல்கள் குறிப்பிடும் மேற்குறித்த சமுதாயப் பண்புகள் மீனவ சமுதாயத்தை மேல் நிலைக்குக் கொண்டு வர வழிகாட்டிகளாக அமையும் என்பதில் ஐயமில்லை.

முனைவர். சிவ. பிரதாப சிங்,

பேராசிரியர், வி.ஓ.சி. கல்லூரி, தூத்துக்குடி.

சித்த மருத்துவ நூல் - பதிப்புகள் - ஒரு சிறப்புப் பார்வை

சித்தமருத்துவம் செய்முறைகள் செவி வழிச் செய்தியாகவே பலகாலமாக இருந்து வந்துள்ளது. மன்னராட்சிக் காலத்தில் இவை ஏடுகளை அடைந்துள்ளன.அதன் பின்னர் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் அச்சுக்கலை இந்தியாவில் நுழைந்ததால் சித்த மருத்துவ நூல்கள் அச்சாகி வெளிவரத் துவங்கின. சித்த மருத்துவ நூல்களை அதன் பதிப்பு முறையைக் கொண்டு 9 வகையாகப் பிரிக்கலாம். அவை. 1. மூலநூல், 2. மூலமும் உரையும், 3. உரைநடை நூல்கள், 4. தொகுப்பு நூல்கள், 5. பாடநூல்கள், 6.திருத்திய பதிப்புகள், 7. மொழி பெயர்ப்பு நூல்கள், 8. அகராதிகள் -நிகண்டுகள், 9. மலிவுப் பதிப்புகள் ஆகியனவாகும்.

சுவடிகள் நூலகங்களில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள சுவடிகளில் 60 விழுக்காடு சித்தமருத்துவச் சுவடிகளேயாகும்.

இவற்றில் ஏறக்குறைய 10 விழுக்காட்டுச் சுவடிகளே அச்சு நூல்களாக வெளிவந்துள்ளன. இவற்றிலும் பாதி நூல்கள் வணிக நோக்கில் அச்சிடப்பட்டுள்ளனவே, அவை திருந்திய பதிப்புகளாக அமையவில்லை. சித்த மருத்துவச் சுவடிகள் வைத்தியம், வாதம், யோகம், ஞானம் என நான்கு பெரும் பிரிவுகளில் அடங்கும். இவை அனைத்தும் ஒரே சுவடி களாகவோ, அன்றி தனித்தனி வெவ்வேறு சுவடிகளாகவோ காணப்படுகின்றன. சித்தர்கள் பெயரால் உள்ள சுவடிகளை ஆய்வு செய்யுங்கால் சித்தர்களை மருத்துவம் அறிந்தவர், யோகம், ஞானம் இவை மட்டும் அறிந்தவர் என இரு வகைப் படுத்தலாம். வைத்தியச் சுவடிகள் பெரும்பாலும் பாடல்களாக உள்ளவை. பாடலும் உரைநடையும் விரவிய நடையில் அமைந்துள்ளவை என இரண்டாகப் பிரிக்கலாம். நோய்கள் பற்றிக் கூறும் சுவடிகள் அதிகம் கிடைக்கவில்லை. 4448 வியாதிகள் என வகைப்படுத்தப்பட்டிருந்தாலும் கூட அவை பற்றிய விவரங்கள் முழுமையாகக் கிடைக்கப் பெறவில்லை. ஆனால் நோய்களுக்கான மருந்துகள் பற்றிய குறிப்புகள் மிக அதிகமான அளவில் காணப்படுகின்றன. உரைநடையில் உள்ள சுவடிகள் சுவடி எழுதியவரின் அனுபவ மருத்துவ முறை யாகவோ அல்லது பிறரிடமிருந்துஅவர் அறிந்து கொண்ட வையாகவோ அமைந்துள்ளன.

சித்த மருத்துவ நூல்கள் பதிப்புகள் ஆரம்ப நாட்களில் எவ்விதம் அமைந்திருந்தன. பின் நாட்களில் எவ்வாறு பதிப்பிக்கப்பட்டன. வருங்காலத்தில் சித்த மருத்துவ நூல்கள் பதிப்பிக்கப்படவேண்டிய முறை பற்றியும் இக்கட்டுரை விவரிக்கிறது.

மரு. சே.பிரேமா,
இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர்,
சித்தமருத்துவத்துறை,
தமிழ்ப்பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்- 613 001.

நாட்டுப்புறச் சடங்கியலில் 'திணை'-'வெளி'-'எல்லை'

பண்பாடுகள், பல்வேறு வாழ்வனுபவங்களையும், வாழ் தளத்தின் பருமையான மெய்யியல்களையும் அடிப்படையாகக் கொண்டு தமது இயங்கியலுக்கான அடிப்படைகளைக் கட்டமைத்துக் கொள்கின்றன. பண்பாடுகளின் அனைத்து இயங்கு தளங்களும் அவை இயங்கும் இடப்பரப்புச் சார்ந்தும் கட்டமைக்கப்படுகின்றன. தமிழ்ப் பண்பாட்டுச் சூழலில் சங்க இலக்கியம் அதன்நிலவியல் இடப்பரப்பினை ஐந்திணைகளாகப் பாகுபடுத்தியுள்ளது. தற்கால அரசியல், பொருளாதார, நிர்வாக, சமூகச் சூழலில் இடப்பரப்பு என்பது'ஊர்' என்னும் மிகச்சிறிய தன்னிறைவுடைய அலகினால் ஆன ஒன்றாகச் செயல்பட்டு வருகிறது. ஊர் என்னும் ஒவ்வொரு நிலவியல் குறு உலகமும் தமது நிலவியல் பரப்பினை 'நாடு''காடு' என அதன் சமூகப் பண்பாட்டுச் சடங்கியல் தளங்களில் வகைமைப் படுத்தப்பட்டிருப்பது காணக்கிடைக்கிறது. இவ்விரு இடம் சார் வகைமைப்பாடுகளும், அந்நிலப்பரப்பின் அனைத்துச் செயல் பாடுகளினது அடிநாதமாய் விளங்குகின்றன. அவற்றின் மீது அப்பண்பாடு கட்டமைத்திருக்கும் கருத்தமைவுகள் அதன் பல்வேறு செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துவனவாகவும் அமைந்துள்ளன.

இவ்விரு இடம் சார் களங்களையும், ஒரு மெல்லிய இடைவெளி பிரித்து நிற்கிறது. இவ்விடைவெளியே 'எல்லை' என்றழைக்கப்படுகிறது. இவ்வெல்லைக் களம், அப்பண் பாட்டுச் சமூகத்தின் வாழ்வியல் தளங்களில் குறிப்பிடத்தக்க சிறப்பிடம் பெற்றிருப்பது தெரிய வருகிறது. இக்களம் அதன் பௌதீக ரீதியிலான பொருண்மை தாண்டி சமயம், சடங்கியல் ஆகிய தளங்களில் இன்றியமையாத பொருண்மைகளையும், கருத்தமைவுகளையும் கொண்டு செயல்படுகின்றது.

நாட்டுப்புறச் சமயத்தின் சடங்குகள்,வழிபாடுகளில், எல்லைக் களம் பெறும் சிறப்பிடம் யாது? இக்களம் மீதான

பண்பாட்டுக் கருத்தாக்கங்கள் யாவை? என்பன போன்ற வினாக்களுக்கு விடைதரும் முகமாக இக்கட்டுரை அமைகிறது.

ச.பிலவேந்திரன்,

புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்,
19, சின்னசுப்பராய பிள்ளை தெரு,
புதுச்சேரி- 605 001.

தற்காலத் தமிழ் இலக்கியத்தில் படைப்பியக்கமும் ஜனரஞ்சகமும்

தற்காலத் தமிழிலக்கியத்தில் நூற்றாண்டுகளாக நீடித்து வரும் சிக்கல் ஜனரஞ்சக எழுத்துக்கள். வணிகப் பத்திரிகைகளின் தோற்றம் கொண்ட அசுரப்பிறவிகள் இவை. நகர வாழ்வின் விரிவும், மத்தியதர மக்களின் பெருக்கமும் இவற்றின் அபரிமிதமான வளர்ச்சிக்குக் காரணங்களாகின்றன.

சக திராவிட மொழிகளிலும் இந்நிலை தான். ஆனால் அவற்றோடு தமிழை ஒப்பிட்டுக் காண வேண்டும். அம்மொழிகளில் இவை இலக்கிய அங்கீகாரம் கோருவது மில்லை பெறுவதுமில்லை. தமிழில் தான் இலக்கியம் என்ற அங்கீகாரம் தரப்படுகிறது. பெரும்பாலான கல்விவட்ட ஆய்வுகள் இலக்கியம் என்ற நோக்கில் இவற்றை ஆராய்ந் திருக்கின்றன. இதன் மூலம் கலாச்சார வாழ்வில் ஊடுருவல் நிகழ்கிறது. மதிப்பீடுகளின் சரிவிற்குக் காரணமாகின்றன.

'ஜனரஞ்சகம்' என்ற சொல்லை மக்கள் விருப்பம் என மொழி பெயர்த்தல் கூடாது. மக்கள் யுகத்தில் இலக்கியம் மக்களைத் தான் சார்ந்திருக்க இயலும். இது இதன் நேர்மையான பொருள். ஜனரஞ்சகம் இதற்கு மாறாக எதிர்மறை பொருளையே சுட்டுகிறது. மக்கள் மீது செலுத்தும் ஒருவித போலி கவர்ச்சியையே குறிக்கின்றது. திறனாய்வு அடிப்படையில் 'ஜனரஞ்சகம்' என்பதை ஒரு கலைச்சொல்லாகப் பயன்

படுத்துதல் முறையானதே. பாதுகாப்பானதும் கூட.

பெருவாரியான மக்களால் விரும்பப்படுதல் 'ஜனரஞ்சகம்' என்பதைத் தீர்மானித்து விடாது. ரஷிய படைப்பாளி 'டால்ஸ்டாஸ்க்கி'யின் எழுத்துக்கள்பெருவாரியான மக்கள் படிக்கும் இதழ்களில் வெளியானவை தான். வணிக அடிப்படையில் அவை நூல் வடிவம் பெற்றன. ஆனால் பெருவாரியான வாசகர்களைப் பெறும் வண்ணம் எதிர்மறையான குணங்கள் எதனையும் பெற்றிருக்கவில்லை.

தமிழில் வெளியாகும் ஜனரஞ்சக எழுத்துக்கள் இவ்வகையானவை அல்ல. இவற்றை ஆராய்வதின் மூலம் ஜனரஞ்சகத்திற்கான குணங்களைப் பிரித்தறிய முடியும். படைப்பிலக்கியத்தில் வாழ்வு மறு உருவாக்கம் செய்யப் படுகிறது. வாழ்வு குறித்தான உணர்தல்களே இங்கு நோக்கமாக அமைகிறது. ஜனரஞ்சக எழுத்துக்களில் உணர்ச்சி தூண்டப்படுகிறது. இதற்கு வசதியாகப் போலி வாழ்வு செயற்கையாகக் கட்டமைக்கப்படுகிறது. இது வாழ்வின் உண்மைகளுக்கு முற்றிலும் அன்னியமானது. தூண்டப்படும் உணர்ச்சி வாழ்வில் கனவுகளை வழியவிட்டோ, அல்லது மேலோட்டமான பிரச்சாரத்தை, அறபோதனையை நிகழ்த்தியோ நடைமுறை வாழ்வின் நெருக்குதலிலிருந்து தற்காலிக விடுதலை என்ற மயக்கத்தைத் தருகிறது. இந்த மயக்கமே ஜனரஞ் சகத்திற்குக் காரணமாக அமைகிறது.

தமிழில் ஜனரஞ்சக எழுத்துகளின் தோற்றம், வளர்ச்சிக்கான காரணங்களை ஆராய வேண்டும்.

தமிழில் பெருமளவிற்கு ஜனரஞ்சக எழுத்துகளைக் கல்கியே முதலில் உருவாக்கி இருக்கிறார். இதற்கு இலக்கிய, சமூக அந்தஸ்து என்ற விபத்தும் அவர் காலத்தில் தான் நிகழ்ந்திருக்கிறது.

'ஜனரஞ்சக' போக்கின் மீதான படைப்பியக்கத்தின் எதிர்வினை 'மணிக்கொடியில்' தான் முதன் முதலாகத் தோற்றம்

கொள்கிறது. 'கற்பனை விற்பனைப் பொருள் அல்ல' என முதல். இதழிலேயே அது கொள்கைப் பிரகடனம் செய்திருக்கிறது.

1948-இல் தேன் ஜனரஞ்சக எழுத்துக்கள் மக்கள் இலக்கிய ம் அல்ல என கடுமையாக விமர்சித்திருக்கிறது. இக்கால முதல் ஜனரஞ்சக எழுத்துக்களைப் படைப்பியக்கம் தொடர்பான இதழ்களும் படைப்பிலக்கியத்தை வணிகப் பத்திரிகைகளும் முழுமையாக விலக்கி விட்டிருக்கின்றன. இரண்டிற்கும் இடமளித்த 'கலைமகள்' தொடர்ந்து இப்பணியை ஆற்ற வில்லை என்பதையும் குறிப்பிடவேண்டும்.

ஐம்பதுக்களில் க.நா. சுப்பிரமணியம் ஜனரஞ்சக எழுத்துக்கள் மீதான தீவிர எதிர்ப்பியக்கத்தைத் தோற்றுவித்திருக்கிறார். எழுத்து இதழைத் தொடர்ந்து இலக்கிய சிற்றிதழ் மரபு இன்றுவரை தொடர்கிறது.

தமிழ்ப் படைப்பியக்கத்தின் வளர்ச்சியே இந்த எதிர்ப்பியக்கத்தின் அடிப்படையில் தான் நிகழ்ந்திருக்கிறது. இதன் தீய விளைவையும் புறக்கணிக்க இயலாது. தமிழ்ப்படைப்பிலக்கியங்கள் மிகச் சுருங்கிய வாசக எண்ணிக் கையை முன்னிறுத்தி நிகழ்வதாக மாறிவிட்டிருக்கிறது. படைப்பிலக்கியங்கள் வாசகக் கவர்ச்சியைப் பெருமளவிற்கு இழந்துவிட இது காரணமாகிறது.

ஜனரஞ்சக எழுத்துகள் பிரித்தறியப்பட்டு அவை இலக்கியம் என்ற சமூக அங்கீகாரத்தைப் பெற இயலாமல் தடை செய்யப்படல் வேண்டும். ஒரு வகையில் இது கல்வி வட்டத்தினரின் சமூகக்கடமை என்றே கூற வேண்டும்.

பேராசிரியர் ப.பூதலிங்கம்,
தலைவர்- தமிழ்க்கலை ஆய்வகம்,
தெ.தி.இந்துக்கல்லூரி,
நாகர்கோவில் – 629 002,
கன்னியாகுமரி மாவட்டம்.

காலந்தோறும் சிலப்பதிகாரம்

காலந்தோறும் சிலப்பதிகாரத்தின் ஏற்பு(ரிசப்ஷன்) நிகழ்ந்துள்ள முறை பற்றி ஆராயும் கட்டுரை இது-தோற்றக் காரணிகள் - பழங்காலத்திலிருந்த நாட்டார் கதைகளிலிருந்து ஒரு மொசைக் தோற்றம் கொண்ட காப்பிய உருவாக்கம் -இதற்கான அரசியல் தேவை- சிற்றரசுகள் ,சிறுதலைவர்களிலிருந்து பேரரசின் தோற்றம், வடக்கு-தெற்கு மோதலை அடிப்படை யாகக் கொண்ட தமிழ்த் தேசியத்தின் தோற்றம் -சிலப்பதி காரக்கதை மக்களால் ஏற்கப்படுதல் கதைத் தலைவி கண்ணகி மக்கள் வழிபாடு செய்யும் நாட்டார் தெய்வம் ஆனால் இலக்கிய உலகில் நாயன்மார் ஆழ்வார்கள் தோற்றத்தின் பின் சிலப்பதிகாரம் மறைந்துவிடுதல்-ஏறத்தாழ பன்னிரண்டு நூற்றாண்டுக்கால இருண்மை -இதற்கான காரணங்கள் சிலப்பதிகாரம் மீண்டும் வெளிப்பட்டுப் பதிப்பிக்கப் பெற்றவுடன், மீண்டும் பழமைவாதம், மீட்புவாதம், தமிழ்த்தேசியம் (புதிய மாறுதலுற்ற சூழலில்) ஆகியவற் றிற்கான குறியீடாதல்-திராவிட இயக்கம் அதனை அரசியல் பிரதியாகப் பயன்படுத்தியமை- பாரதிதாசனின் கண்ணகி புரட்சிக்காப்பியம்- மக்களிடையே சிலப்பதிகாரக்கதையின் செல்வாக்கு நாடகமும் திரைப்படமும் -கலைஞர் மு.கருணாநிதி சிலப்பதிகாரத்தினை அரசியலோடு வெளிப்படையாகவே இணைத்தல்-கலைஞரின் சிலப்பதிகாரம்-உலகத் தமிழ் மாநாட்டில் கண்ணகி சிலைசேரன் செங்குட்டுவனின் 'பேரடி(PARODY)யாகக் கலைஞரின் வெளிப்பாடு கள்-பூம்புகார் நிறுவப்பட்டமை-பழைய கண்ணகிக் கோட்டமும் புதிய கண்ணகிக் கோட்டமும் -பிராமணத் துவத்திற்கும் திராவிட இயக்கங்களுக்கும் உள்ள அடிப்படை ஒற்றுமையைக் கண்ணகி ஏற்பு காட்டுதல் -பட்டிமன்றங்களின் தோற்றமும் பரவலும் -மௌன சமூகத்தின் ஒலிவெளிப்பாட்டு முறை -இதுவரை சிலப்பதிகாரம் ஓர் அரசியல் பிரதியாகவே ஏற்கப்பட்டு வந்துள்ள நிலை- சிலப்பதிகாரத்தின் ஒற்றைப் பரிமாணப் படைப்பு முறை அதற்கு ஏற்றதாக இருத்தல்-

கலைப்படைப்பாகச் சிலப்பதிகாரத்தின் தகுதியும் ஏற்பும்.

முனைவர் க.பூரணச்சந்திரன்,
பேராசிரியர்,
தமிழ்த்துறை,
பிஷப் ஹீபர் கல்லூரி,
திருச்சி- 620 017.

தமிழர் மரபு கண்ட நாட்டு ஒற்றுமையும் தேசியப் பாதுகாப்பும்

தமிழ் வரலாற்றில் தேசியப் பாதுகாப்பு என்பது தனி மனிதனில் உருவாகி, குடும்பம், குடியிருப்பு, ஊர், மண்டலம், நாடு என சென்றுள்ளது. தன் நாடு, தன் மக்கள், தன் பாதுகாப்பு மட்டுமே முக்கியம் என்று சுய நல தேசிய மக்களாக அவர்கள் இருக்க வில்லை. உலக நாடுகளின் மனிதப் பண்பை மதித்து அடுத்தவர்களையும் தங்களைப் போல நடத்தியுள்ள உண்மை வெளிப்படுகிறது. அண்டை நாடுகளுக்கும் , உலக நாடு களுக்கும், அமைதியை ஏற்படுத்துவதற்கு உறுதுணையாக இருந் திருக்கிறார்கள் என்பதைப் பல்வேறு தமிழ் போரியல் சார்ந்த நூல்களும், குறிப்புகளும் வெளிப்படுத்துகின்றன. இவ்வாறாகத் தமிழ் இனத்தின் தனித்தன்ம அவர்கள் தாங்கள் ஒற்றுமையாக வாழ்ந்ததால் தங்களின் பாதுகாப்புக்கு அரணாக இருந்து, அடுத்த மக்களின் பாதுகாப்பிற்கும் எத்தகைய தீங்கும் விளைவிக்காத சிறப்பு இந்தத் தமிழ் இனத்தின் இராணுவ முறையின் சிறப்பு இயல்பாக உள்ளது. மேலும் தமிழ் வரலாறு மிகப் பழமையானது. அதே போன்று தமிழ் கலாச்சாரத்திலும், மிக சீரிய தன்மையே காணப் படுகின்றது. அயல் நாட்டினரையும் அண்டை நாட்டினரையும், உலகில் பல்வேறு நாடுகள் மனிதர்களாக மதிக்காமல் அடிமைகளாக நடத்திய காலகட்டத்தில் தன்னைப் போலவே தன் எதிரியைக் கூட மதித்த பெருந்தன்மை தமிழ் இராணுவ வரலாற்றுக்கு மட்டுமே உரித்தானது. உலக இராணுவ வரலாற்றில் பழந்தமிழர்கள்,

பெரும் படைகள் வைத்திருந்த போதிலும் அந்தப் படைகளைத் தற்பாதுகாப்புக்காகவும், தன் குடி மக்களின் மானத்தைக் காப்பதற்கும் மட்டுமே பயன்படுத்தினர் என்பது புலப்படுகிறது. இப்பின்னணியில் இக்கட்டுரை, தமிழ் மரபு கண்ட, நாட்டு ஒற்றுமையையும், தேசிய பாதுகாப்பையும், ஆய்வு செய்ய விழைகிறது.

முனைவர். மு.பெரிய கருப்பு,

பாதுகாப்பியல் துறை
ரேக்னிக்கோ ஆராய்ச்சி மையம்,
சென்னை- 600 106.

முதலியார் ஓலைச் சுவடிகள் சமூகப் பார்வை

நாஞ்சில் நாட்டின் வரலாற்றில் கி.பி. 15 ஆம் நூற்றாண்டி லிருந்து கி.பி.19 ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலகட்டங்களின் சமூக வரலாற்றை அறிய முதலியார் ஓலைச்சுவடிகள் மிகவும் உதவுகின்றன. நாஞ்சில் நாட்டில் பழம்பெரும் கிராமமான அழகிய பாண்டியபுரத்தில் - ஆறு ஆண்டுகளாக வாழ்ந்த முதலியார்களின் வீட்டில் அகப்படும் சுவடிகள் முதலியார் ஓலைச்சுவடிகள் எனப்படும்.

சைவவேளாள மரபைச் சார்ந்த அழகிய பாண்டியபுரம் முதலியார்கள் நாஞ்சில் நாட்டு அரசியல் நிர்வாகத்தைப் பொறுப்பேற்க பிற்காலப் பாண்டியர்களால் குடியேற்றப்பட் டவர்கள். முதலியார்களின் வீட்டில் பரம்பரையாய் போற்றிப் பாதுகாக்கப்பட்ட ஓலைக்சுவடிகளில் 19 ஆவணங்களின் அடிப்படையில் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அவர் 94 சுவடிகளைப் பிரதிசெய்து வைத்துள்ளார். கவிமணியின் முயற்சியால் திருவிதாங்கூர் அரசு 107 ஆவணங்களின் மூலங்களை மட்டும் வெளியிட்டுள்ளது. இந்த 220 ஓலைகளின் அடிப்படையில் இக்கட்டுரை அமைகிறது.

முதலியார் ஓலைகளில் 220 ஆவணங்களின் அடிப்படையில் உள்ள செய்திகளை

1. நிலம் குறித்த விலைப்பத்திரங்கள், வாடகை, கடன், குத்தகை, பத்திரங்கள், ஸ்ரீதனப்பத்திரங்கள் குறித்தவை

2. நாஞ்சில் நாட்டுக் கூட்டங்களின் தீர்மானங்கள்

3. திருவிதாங்கூர் அரசர்கள் அனுப்பிய உத்தரவுகளும் தனிப்பட்ட கடிதங்களும் குறித்தவை

4. அந்நியப்படை எடுப்புகளாலும், அதிகாரிகளின் அடக்கு முறையாலும் ஏற்பட்ட அழிவுகளால் நிலங்களின் வரிக்குறைப்பு குறித்த விண்ணப்பங்கள்

5. அடிமை விலை, ஒற்றிப்பத்திரங்கள்

6. நீதிமன்றத் தீர்ப்புகள், விண்ணப்பங்கள்

7. வேளாள சமூகம் குறித்த பிணக்குகள், கலகங்கள் குறித்தவை என வகைப்படுத்த முடிகிறது.

இவற்றில் சமூகத்தின் பொது நிலை குறித்தும், அடிமை நிலை குறித்தும் மட்டும் இக்கட்டுரை ஆராய்கின்றது. இந்தச் செய்திகள் குறிப்பிட்ட ஆவணங்களில் மட்டுமன்றிப் பொதுவாக எல்லா ஆவணங்களிலும் கலந்தும் இருப்பதால் இவ்வாய்விற்கு எல்லா ஆவணங்களும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

கி.பி.13 ஆம் நூற்றாண்டிற்கும் 19ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் திருவிதாங்கூர் கோவில்களில் மலையாள பிராமணர்களின் ஆதிக்கம் நிறையவே இருந்தது. 1812 வரை கோவிலை நிர்வகித்தவர்களிடம் வருமானவரித் துறை பொறுப்பும் இருந்தது . எனவே தென் திருவிதாங்கூரில் ஒட்டுமொத்தமாக மலையாள பிராமணரைத் தவிர எல்லோருமே ஒரு வகையில் அடிமைகளாக இருந்தனர். இந்தக் கருத்தை நிறுவ முதலியார் ஓலைச்சுவடிகள் உதவுகின்றன.

மலையாள பிராமணர்களுக்கு அடுத்த படியாக இருந்த வேளாளர்கள் தங்களின் செல்வாக்கு குறைந்தபோதோ-மரபுவழி வழி வழக்கத்தைக் கோவில் சார்ந்த மடங்கள் உடைத்தபோதோ மடங்களை நெருப்புவைத்துக் கொளுத்தினர். அதே சமயத்தில் தங்களுக்குக் கீழ் இருந்த தாழ்த்தப்பட்ட சாதியினர் தங்கள் சடங்குகளில் சேவகம் செய்யவேண்டும் என்பதிலும் கவனமாக இருந்தனர். ஜாதி மரபைக் காப்பாற்ற வேண்டிய நிலையில் மதமும் கடவுளும் இரண்டாம் இடத்திற்கு ஒதுங்கும் பொதுநிலை எல்லா காலத்திலும் ஒரு கருதுகோளாக இருந்ததை நிறுவ முதலியார் ஓலைகள் உதவுகின்றன.

பொதுவாக இடைக்காலச் சமூகத்தில் சூத்திரன் என்ற சொல் பிராமண வேளாளர்கள் அல்லாதவர்களைக் குறிக்கவே பயன்பட்டது என்பதை முதலியார் ஓலைகள் நிறுவுகின்றன. பறையன், சாம்பான், புலையன், சாணான் ஆகிய சமூகங்களைச் சார்ந்தவர்களைக் குறிக்க ஆட்பெயருக்கு முன்பே அச்சாதிகளின் பெயர்கள் இடப்பட்டன.

அடிமை விலைப் பிரமாணம் அன்றைய அரசினரால் அங்கீகரிக்கப்பட்டு அதற்குரிய பதிவுப் பணத்தையும் நிர்ணயித்தது. அடிமை விலைப் பிரமாணங்கள் நிலவுடைமையாளர் பரம்பரை அடிமைகளைப் பிறருக்கு விற்பது, வறுமையடைந்தவர்கள், தங்களை அடிமைகளாக ஆக்கிக் கொள்வது, வாங்கின கடனை அடைக்க முடியாத நிலையில் அடிமையாவது என்ற மூன்று நிலைகளில் வருகின்றன.

அடிமைகள் பெருமளவு விவசாயக் கூலிகளாவே இருந்து வந்தனர் என்ற சமூகவியலாளரின் கருத்தை மறுக்கக் காரணங்கள் முதலியார் ஓலையில் உள்ளன. வீட்டு வேலைகளுக்கு அடிமைகள் பயன்படுத்தப்பட்டமை, பெண் அடிமைகளின் விலை ஆண் அடிமைகளை விட அதிகம் இருப்பது, இளம் பெண் அடிமைகளின் விலை எல்லா அடிமைகளைவிட அதிகம் இருப்பது ஆகியன முன் குறித்த கருத்தை மறுக்கின்றன.

முனைவர். அ.கா. பெருமாள்,

தமிழ்த்துறை,
அறிஞர் அண்ணா கல்லூரி,
ஆரல்வாய்மொழி- 629 301.

மேகநோயும்- மருத்துவ முறைகளும்

மேகநோய் என்பது பாலியல் தொடர்பான நோயாகும். இந்நோயின் தோற்றம் பற்றியும் இந்நோய் குறித்து அல்லோபதி மருத்துவம் (Allopathy), ஆயுர்வேத மருத்துவம், சித்தமருத்துவம், யுனாநி மருத்துவம் ஆகிய நான்கு மருத்துவ முறைகளும் கூறுகின்ற மாறுபட்ட மருத்துவ முறைகள் பற்றியும் இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

பல்வேறு பெண்களின் சேர்க்கை உட்பட்ட பாலியல் காரணங்களாலும், மிகுந்த பட்டினி கிடத்தல் உட்பட்ட உணவுமுறை காரணங்களாலும் இந்நோய் ஏற்படுகிறது.

பித்தம் மிகுந்து உடலின் பாகங்களில் கனல் ஏற்படுத்தி நரம்பு போன்ற பகுதிகளின் வழியாக நீர்த்துவாரத்தில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. வெள்ளையென்னும் வெட்டைநோயான இதற்கு உடனடி மருத்துவம் செய்யாவிடில் கடுமையான பின்விளைவுகளை ஏற்படுத்தும்.

இந்நோயானது அலோபதி மருத்துவமுறையில் 1)வெள்ளை அல்லது வெட்டை (Yonorrhoe) 2)கிரந்தி (syphilis), 3)ஷங்க்ராய்ட்(chancroid),4) மேக இழைய வளர்ச்சி(Venereal Granuloma) எனப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்நான்கு வகையான மேகங்களுக்குமுரிய அறிகுறிகள் மற்றும் மருத்துவ முறைகள், ஆயுர்வேத மருத்துவம், சித்தமருத்துவம், யுனாநி மருத்துவ முறைகளில் மாறுபட்டு அமைகின்றன. இம்மூன்று மருத்துவ முறைகளும் வாதத்தால் நான்குவகை, பித்தத்தால் ஆறுவகை, கபத்தால் பத்துவகை என இருபது வகை மேகங்கள் உருவாவதைக் கூறுகின்றன. வகைப்பாட்டு அடிப்படையில் இவை ஒன்றுபட்டு நிற்பினும் கூறப்படும் பெயர்கள் மாறுபட்டு அமைகின்றன.

மேகப்புண்(Soyt sore), அரையாப்புக்கட்டி-(Lymhogra), கொறுக்குப்புண், வாய்நாற்றம், மலட்டுத்தன்மை போன்ற மேகநோயோடு தொடர்புடைய நோய்களும் இருக்கின்றன. இவை வராமல் தடுப்பதற்கும் வந்தபின் குணப்படுத்துவதற்கும்

உரிய எளிய மருத்துவ முறைகள் உண்டு. கொடிய பக்க விளைவுகளைக் கொண்ட கடினமான நோய் மேகநோய் என்று அலோபதி, ஆயுர்வேதம், சித்தம், யுனாநி போன்ற மருத்துவ முறைகள் குறிப்பிட்டு மருத்துவ முறைகள்ளைக் கூறுகின்றன.

பொ. பொன்ரதி,

ஆய்வாளர்,

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,

தரமணி, சென்னை- 600 113.

மெய்ப்பாடும் உளவியல் அணுகுமுறையும்

மெய்ப்பாடு- விளக்கம் தொல் கோட்பாடு-உரையாசிரியர்கள் விளக்கம்- உணர்ச்சியும் மெய்ப்பாடும் - உளவியல் அணுகுமுறை -கோட்பாடுகள் உணர்ச்சி-உள்ளக் கிளர்ச்சி -மெய்ப்பாடு - உளவியல் உடலியல் கோட்பாடுகள் - நகை- பொருத்தமின்மைக் கோட்பாடு (Incongruity Theory)- அழுகை - இளிவரல் - உளவியல் விளக்கம் -மருட்கை -அச்சம் -பெருமிதம் -வெகுளி- மனமுறிவு (Frustration) விருப்பத் தடையும் வெகுளியும்- உவகை -சங்க இலக்கியச் சான்றுகளுடன் உளவியல் விளக்கம்- மெய்ப்பாட்டு ஆய்வில் உளவியல் அணுகுமுறை பெறும் இடம் - அறிவன.

டாக்டர் - மு.பொன்னுசாமி,

இணைப்பேராசிரியர்,

தமிழ் மொழித் துறை,

சென்னைப் பல்கலைக்கழகம்,

சென்னை- 5.

தமிழ் ஆசிரியர் கையேடுகள்: மதிப்பீடு

இக்கட்டுரை தற்போது நடைமுறையில் இருந்துவரும் உயர்நிலைப்பள்ளித் (ஒன்று முதல் பத்து வகுப்புகள் வரை) தமிழ்பாட நூல்களுக்கான ஆசிரியர் கையேடுகளின் அமைப்பு முறையை மதிப்பீடு செய்வதாக அமைகின்றது. இதன் வாயிலாக இக்கையேடுகளின் தயாரிப்பில் காணலாகும் நிறைகுறைகள் சுட்டிக் கூறப்பட்டு, இப்பணி மேலும் ஆக்க வழியில் அமையப் பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன.

இன்றைய பள்ளிக் கல்வி முறையில் கற்பிக்கும் கருவிகளுள் தலையாய இடத்தை வகிப்பவை பாடநூல்கள் ஆகும். இவற்றிற்குத் துணையாக அமைந்து பாடத் திட்டம், பாடநூல்களின் நோக்கம், பாடநூலின் அமைப்புமுறை, பாடக்குறிப்புகள், அவற்றை மாணவர்களுக்குக் கற்பிக்கும் முறை, ஏற்ற துணைக் கருவிகள், ஆகியவற்றைப் பற்றி ஆசிரியர்களுக்கு எடுத்துக் கூறி அவர்களது கற்பித்தல் பணியை மேலும் சிறப்படையச் செய்பவை ஆசிரியர் கையேடுகளாகும்.

தமிழ்நாட்டில் தாய்மொழிப் பாடநூல்களான தமிழ்ப் பாட நூல்களும் அவற்றிற்கான ஆசிரியர் கையேடுகளும், தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் வாயிலாக வெளியிடப் பட்டுவருகின்றன. அவை மால்கம் ஆதிசேசையாவின் தலைமை யில் சீரமைக்கப்பட்ட பாடத் திட்டத்தின்(1987) அடிப்படையில் மூன்று படிநிலைகளில் வெளியிடப்பட்டுள் ளன.

பாடநூல்களும் ஆசிரியர் கையேடுகளும் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்படும் முதலாவது ஆண்டின் இறுதியிலேயே மதிப்பீடு செய்யப்படவேண்டும் என தேசியக் கல்விக் கொள்கை வலியுறுத்துகின்றது. எனினும் இப்பாட நூல்களும் ஆசிரியர் கையேடுகளும் இதுகாறும் அரசாலோ அன்றிப் பிற நிறுவனங்களாலோ, ஆய்வாளர்களாலோ மதிப்பீடு செய்யப் படவில்லை.எனவே இக்கட்டுரை உயர்நிலைப் பள்ளித்

தமிழ்ப்பாட நூல்களுக்கான ஆசிரியர் கையேடுகளை (ஒன்று முதல் பத்து வகுப்புகள் வரை) மதிப்பீடு செய்வதாக அமைகின்றது.

ஆசிரியர் கையேடுகளின் அமைப்பு முறையை அடிப் படையாகக் கொண்டு அவற்றைப் பின்வரும் ஏழு பகுதிகளில் பகுத்துக் காணஇயலும். அவையாவன:-

1. முன்னுரை

2. மொழித்திறன்கள் மற்றும் வாழ்வுசார் திறன்கள் பற்றிய செய்திகள்

3. முந்தைய வகுப்பில் மாணவர்கள் பெற்ற திறன் வளர்ச்சிகள்

4. இவ்வகுப்பில் மாணவர்கள் பெறவேண்டிய திறன் வளர்ச்சிகள்

5. பாடநூலின் நோக்கம் மற்றும் அமைப்பு முறை

6. பாடக்குறிப்புகள்

7. துணைக்கருவிகள்

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பத்துத் தமிழ் ஆசிரியர் கையேடுகளும் மேற்கூறப்பட்ட ஏழு பகுதிகளின் அடிப்படை யில் சிறப்புற அமைக்கப்பட்டுள்ளனவா என்பதை இக்கட்டுரை மதிப்பீடு செய்கின்றது. இம்மதிப்பீட்டின் படி உயர்நிலைப் பள்ளித் தமிழ் ஆசிரியர் கையேடுகளுள் பெரும்பாலானவை மேற்கூறிய பண்புகளுள் பலவற்றைத் தாங்கி அமைந்துள்ளன என்பதும் ஒரு சில கையேடுகள் இப்பண்புகளுள் சிலவற்றை இழந்து காணப்படுகின்றன என்பதும் அறியப்படுகின்றது. பொதுவாக இக்கையேடுகள் பாடநூலின் நோக்கம் அதன் அமைப்புமுறை, பாடக்குறிப்புகள் ஆகிய பகுதிகளைக் கொண்டுள்ளன. எனினும் பாடத்திட்டத்தின் குறிக்கோள்கள், சென்ற வகுப்பின் திறன் வளர்ச்சிகள், எதிர் பார்க்கப்படும் திறன் வெளியீடுகள், துணைக் கருவிகள் போன்ற செய்திகளைத்

தருவதில் இவற்றிடையே குறைபாடுகள் சில காணப்படுவது அறியப்படுகின்றது. இத்தகைய நிறைகுறைகள் வரிசைப் படுத்தப்பட்டு அவற்றிற்கான காரணங்களும் வரிசைப் படுத்தப்படுகின்றன.

இப்பகுதியில் நிறைகள் மேலும் வளர்க்கப்படவும், குறைகள் களையப்படவும் ஏற்ற பரிந்துரைகள் வழங்கப்பட்டு, தமிழ் ஆசிரியர் கையேட்டுத் தயாரிப்பு மேம்பாட்டுக்கான கருத்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

முனைவர் சொ. மகாதேவன்,

தமிழ் விரிவுரையாளர்,
சர் தியாகராயர் கல்லூரி,
சென்னை- 600 021.

சோதிடமும் யோகமும்

தற்காலத்தில் வெளிவருகின்ற ஆய்வுகள் மக்கட் சமுதாயத்தை நோக்கியதாக, அதன் குறைபாடுகளை நீக்கி நிறைவுகளைப் பெருக்கி, புத்துணர்ச்சி அடையச் செய்வதாக அமைதல் இன்றியமையாதது. அவ்வகையில் மக்களிடையே செல்வாக்குப் பெற்றுத் திகழும் சோதிடக் கலைக்கும், யோகக் கலைக்குமுள்ள ஒற்றுமைக் கூறுகள் சில இதில் எடுத்தியம்பப்படுகின்றன. இவ்வாய்வு தொடர் முயற்சியாக மேற்கொள்ளப்படும் போது, அறிவியல் உலகம் வியக்கின்ற பல உண்மைகள் வெளிவரும்.

சோதிடம், யோகம், சரசாஸ்திரம் என்பதன் விளக்கம், சரசாஸ்திரத்தின் வழி பலனறிதல், சோதிடமும் சரசாஸ்திரமும் ஒன்றுபடும் முறைமை, சோதிடவியலிலுள்ள பல நுட்பமான கணக்கிடு முறைகளுடன், சித்தர் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள கணக்கிடு முறைகள் (கர்ப்பக் கணக்கிடு முறைகள், கருவளர்ச்சிக் காலம், குழந்தை பிறக்கின்ற நேரம், ஆயுட்காலம், ஆயுட்சோதனை) ஒத்து அமைதல், சோதிட விதிகள் பொருள்

மாற்றமின்றி அப்படியே சித்தர் இலக்கியங்களில் இடம் பெறுதல், யோக நெறிகளை மேற்கொள்ள நல்லநாள், ஆகாதநாள் முதலியவற்றைச் சோதிடவிதியின் உதவியுடன் தேர்ந்தெடுத்தல், சோதிடக் கூறுகள் யோக நெறியோடு தொடர்பு படுதல், மனித உடம்பையும், உள்ளத்தையும், வாழ்வையும் அண்டத்திலுள்ள கோள்களின் இயக்கங்கள் பாதிக்கின்றன என்ற அண்டம் பற்றிய ஆய்வான காஸ்மோ பயாவாதி வெளிப்படுத்து கின்ற அறிவியல் உண்மைகள் சோதிடவியலிலும், சித்தர் இலக்கியங்களிலுள்ள பல உண்மைகளை வெளிப்படுத்தி நிற்றல் என்பன போன்றவ்வ தெளிவுபடுத்தப் பெறுகின்றன.

இத்தகு ஆய்வுகள் மிகுதிப் பொருட் செயலின்றி அறிவியல் உண்மைகளை வெளிப்படுத்துவதோடு இன்றைய அறிவியல் ஆய்வுகளுக்குத் துணை நின்று, அவ்வாய்வுகள் கண்டுபிடித்த சில உண்மைகளை அறுதியிட்டு நிறுவுதவதற்கும் பயன்படும்.

முனைவர் டி.மகாலட்சுமி,

ஆய்வு உதவியாளர்,

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,

சென்னை.

திரு.வி.க.வின் கருத்தியலில் இயற்கை நெறி

'தமிழ்த்தென்றல்' திரு.வி.க. வின் சிந்தனைகளிலும் வாழ்வு முழுவதிலும் இழையோடி நின்று ஆற்றலுடன் திகழ்வது 'இயற்கை நெறி' எனலாம். திரு.வி.க.வின் தொண்டு பரவிய துறைகளிலெல்லாம் இயற்கையின் மாண்பை இணைத்தே பேசுவது திரு.வி.க.வின் தனிச்சிறப்பு என்றால், மிகையாகாது. தனிமனித வாழ்வு- அரசியல்-சமூகம் -சமயம் -இளைஞர் இயக்கம் என எத்துறைக் கருத்தை விளக்கினும் திரு.வி.க. இயற்கை நெறியினை இணைப்பதும், அந்நெறி நின்று கணிப்பதும் அவருடைய 'மதம்' எனவே குறிப்பிடலாம்.

இயற்கை நெறியின் மேன்மை -இயற்கை வாழ்வின் நுட்பம் -உடலோம்பல் -இயற்கை உணவுமுறை -இயற்கைக்கு மாறுபட்ட பழக்கங்களின் தீமை - இயற்கை வாழ்வும் நல்லொழுக்கமும் -இயற்கை மருத்துவம் -இயற்கைக் கல்வி இயற்கைத் தொழில் முறைகள் -செயற்கையால் விளையும் சுற்றுப்புறச் சீர்கேடுகள் -செயற்கை சேர் நகர வாழ்வின் துன்பமும் இயற்கை தோய் கிராம வாழ்வின் நன்மையும் என்ற கருத்துக்களின் அடிப்படையில் நடைபோடுகிற திரு.வி.க. வின் சிந்தனைகள் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன.

'இயற்கை வாழ்வே', மனித சமுதாயத்தின் இனிய இல்லற வாழ்வுக்கு வழிவகுத்து, உலக அமைதிக்கு இட்டுச் செல்ல வல்லது என்பது திரு.வி.க. வின் உறுதியான நம்பிக்கை; இதுவே திரு.வி.க.வின் இயற்கை நெறிக் கோட்பாடாக வெளிப் படுகிறது. எனவே, இயற்கை நெறிக் காவலராக, திரு.வி.க. வை உணரமுடிகிறது.

டாக்டர் ப.மகாலிங்கம்,
விரிவுரையாளர், தமிழ்த் துறை,
மாநிலக் கல்லூரி,
சென்னை- 5.

விளம்பரங்கள் வாயிலாக அறியலாகும் சமூக மதிப்புகள்

சமூக மதிப்பு என்றால என்ன? இன்றைய வாழ்வில் விளம்பரங்கள் பெறும் இடம் -பெருகி வரும் விளம்பரங்களின் எண்ணிக்கை மதிப்புகள் மாற்றம் பெற்று வருவதை வானொலி, தொலைக்காட்சி விளம்பரங்கள் உணர்த்தி நிற்றலைச் சான்றுகளுடன் நிறுவுதல்

மதிப்புகள்(Values)

1. மனித நேயம்: Love your Neighbour as Yourself! (Luke

10:27) ஒனீடா தொலைக்காட்சிப் பெட்டி விளம்பரம் மனித நேயத்தைச் சிதைத்து நிற்றல்

2. தன்னிறைவு: 'தன் கையே தனக்குதவி' என்பது பழமொழி பிறருக்கு உதவுதல் பிறவிப் பயன் எனல் முந்தைய மதிப்பு- இன்று அந்நிலை மாறல்- வேலைக்குச் செல்லும் மகளிர் வேலைக்காரர்களை எதிர்நோக்கி நிற்றல் ஏண்டி முனியம்மா என்ற வானொலி விளம்பரம் சான்று.

3. சமூக ஒழுக்கம் பேணல்: தன் தேவைக்கு மீறி வைத்திருத்தல் சமூக விரோதச் செயல். ஆனால் இதயம் நல்லெண்ணெய் விளம்பரம் பதுக்கலுக்கு வழி கூறல்

4. இயந்திரம் போன்ற வாழ்க்கை:'எதிலும் வேகம் கூடாது; வேகம், கொண்டவனையும், பிறரையும் கெடுக்கும்' என்பது விதி. ஆயின் இன்றைய வாழ்வு பரபரப்பு மிக்கது. அதைப் பெருமையாக எண்ணும் போக்கு இதயம் நல்லெண்ணெய் வானொலி விளம்பரம், இதற்குத் தகுந்த சான்று.

5. கவர்ச்சிக்கு முதலிடம்: 'ஆள்பாதி: ஆடைபாதி' என்ற நிலை மாறி, ஆடையே முதன்மை என்றாகிவிட்ட நிலை - நூற்றுக்கு அறுபது விழுக்காடுகள் ஆடை பற்றிய விளம்பரங்களே. வானொலி, தொலைக்காட்சி விளம்பரங்கள் பல இதற்கு சான்று.

6. தமிழைப் புறக்கணித்தல்: விளம்பரங்களில் தமிழ்ச் சொற்கள் மிகுதியாக இடம் பெறல் இல்லை- பேசுவது போல் அமைத்தல்- ஆங்கிலச் சொற்களைக் கலந்து விளம்பரம் செய்தல்

7. ஊட்டச் சத்து பானங்கள்: தமிழ் மண்ணுக்கே உரிய இயற்கையோடு ஒத்துச் செல்லும் வாழ்க்கை முறை மாறி செயற்கைத் தன்மைக்கு அடிமையாதல் -நாகரிக வாழ்வின் அடையாளங்களாய்க் 'காபி,டீ', என்ற பானங்களை ஏற்றுக்கொண்டது போல், இன்று ஹார்லிக்ஸ், காம்ப்ளான்,

போர்ன்விடா ஆகியவற்றைச் சிபாரிசு செய்தல்

8. ஊர்திகளின் பயன்பாடு: இன்றைய யுகம் அவசர யுகம்- ஒரே வீட்டில் பல ஊர்திகளின் பயன்பாட்டு நிலை- ஊர்திகளின் தன்மை - வண்ணம் - உழைப்பு ஓட்டம் பற்றி விளக்கமாய்க் கூறல்

9. பெண்கல்வியில் முன்னிலை வகித்தல்: பெண்கல்வியில் முன்னால் வருவதோடு மட்டுமின்றி, ஆண்மகனின் ஐயத்தைத் தீர்க்குமளவு அறிவு வளர்ச்சி பெறுதல்- கடலா? காதலா ஷாம்பு விளம்பரம் இதற்குச் சான்று

10. உடல்நலம் பேணல்: பல்பசை பற்றிய விளம்பரங்கள்- உடல்வலி தீர்க்கும் மருந்துகள் பற்றியவை- முடி வளர எண்ணெய் பயன்படுத்தல்

மரபான வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்கள் பல அவற்றை விளம்பரங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டல்- மாற்றம் வளர்ச்சி என முற்றிலும் உரைத்தல் இயலாது.

முனைவர் மங்கையர்கரசி மயில்வாகனன்,
விரிவுரையாளர்,
சாராள்தக்கர் கல்லூரி,
பாளையங்கோட்டை,
திருநெல்வேலி- 7.

பாண்டியநாட்டு வைணவக் கோயில்களில் விஷ்ணு -அவதாரச் சிற்பங்கள்

இந்தக் கட்டுரையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கோயில்கள் அழகர் கோயில், தாடிக்கொம்பு, ஸ்ரீவில்லிபுத்தூர், திருமோகூர், திருக்குறுங்குடி, நாங்குநேரி, ஸ்ரீவைகுண்டம் ஆகியவைஆகும். இங்குள்ள மண்டபங்கள் செவ்வகவடிவில் அமைக்கப்பட்டுள்ளன-விஷ்ணுவின் சம்ஹாரக் கதைகளுக்கும்,

இதிகாசக் கதைகளுக்கும் இம்மண்டபச் சிற்பங்களில் முக்கியத்துவம் தரப்பட்டுள்ளன. இவற்றை நோக்குங்கால் இம்மண்டபங்கள் நாடக அரங்குகள் போல் அமைக்கப் பெற்றிருப்பது தெளிவாகத் தெரிகின்றது. இங்கு அமைக்கப் பட்டுள்ள தொன்மச் சிற்பங்கள் இடம்பெறும் நிலை இக்கட்டுரையில் விரிவாக்கப்பட்டுள்ளது. இத்தொன்மங்க ளுக்குத் தொடர்புடைய குறியீட்டுப் பொருள் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. இம்மண்டபங்களில் உள்ள சிற்பங்களில் நரசிம்மர் ஹிரண்ய காசிபுவை விரட்டுவது போன்றும், பின் அவனைக் கொல்லுதல் போன்றும் தொடர்க் காட்சிகள் காட்டப்பட்டுள்ளது நாடகத்தை நினைவூட்டுகின்றன. இது போன்றே ஒவ்வொரு சிற்பத்தொகுதியும் ஒன்றோடொன்று தொடர்புபடுத்தப்பட்டிருப்பதும் கட்டுரையில் காட்டப் பட்டுள்ளது. இச்சிற்பங்களில் ஏனோ தானோ என்றில்லாமல் மெய்ப்பாடுகளும் காட்டப்பட்டுள்ளன என்பது எடுத்துக் கூறப்பட்டுள்ளது. எவ்வாறு சிற்பம் கூறும் கதைக்குத் தொடர்புடைய ஏனைய துணைச் சிற்பங்களும் நிறுவப் பட்டுள்ளன என்பதும் எடுத்தியம்பப்பட்டுள்ளது. மண்டபங் களையோ சிற்பங்களையோ அமைக்கும் போது மன்னர்களின் மனநிலை எவ்வாறு செயல்பட்டிருக்கக் கூடும் என்பது தொகுப்புரையில் தரப்பட்டுள்ளது.

லோ.மணிவண்ணன்,

ஆய்வாளர் கலைவரலாற்றுத்துறை,

மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-21.

திருக்குறளில் கால்நடை மருத்துவ அறிவியல்

திருக்குறளில் கூறப்படும் கால்நடைகள் பற்றிய செய்திகளைக் கால்நடை மரபியல், கால்நடை உடற்கூறியல், கால்நடை பாங்கியல் மற்றும் கால்நடை உடலியங்கியல் ஆகிய தலைப்புகளில் பகுத்து ஆய்வதே இக்கட்டுரை.

'ஏறுபோல் பீடு நடை' என்ற அடியின் மூலம் மரபியல்

கருத்தை அறிய முடிகிறது. ''பரியது கடாங் கோட்டது'' என்பதன் வழி கால்நடை உடற்கூறியல் புலப்படுகிறது. பொருதகர், பகடு, கல்லாமா, சாக்கை மற்றும் பிணையேர், ஆகியவற்றின் பாங்கியலையும் திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் கூகை, முதலை, குறிப்பாக 'கவரிமா' ஆகியவற்றின் உடலியங்கியலையும் நுட்பமாக அறிய முடிகிறது. மேலும் வள்ளுவர் குறிப்பிடுகின்ற கவரிமா மானினமா அல்லது வேறு விலங்கா? மானத்திற்கும் கவரிமாவுக்கும் தொடர்பு உண்டா? ஒரு மயிர் நீங்கினால் உயிரிழந்துவிடுமா அல்லது முடிமிகுதியும் நீங்கினால் உயிரிழக்குமா ? என்பது போன்ற ஐயப்பாடுகளுக்கும் விடைபெறும் வகையில் சங்க இலக்கியங்கள், காப்பிய இலக்கியங்கள், மேலும் இடைக்கால இலக்கியங்கள் ஆகிய வற்றில் காணப்படும் கவரிமா பற்றிய செய்திகளையும் அறிவியல் நூல்களில் உரைக்கப்பட்டுள்ள செய்திகளையும் ஒப்பு நோக்கி ஆய்ந்து ஆழ்ந்து கவரிமா என்பது மானினம் அன்று, அது மாட்டினத்தைச் சேர்ந்தது. உடலில் உள்ள முடியில் பெரும்பகுதி இழந்தால் குளிர்தாங்காமல் உடல் வெப்பநிலை பாதிக்கப்பட்டு இறந்துவிடும். மானத் திற்கும் கவரிமாவுக்கும் தொடர்பு இல்லை என முடிவு உரைக்கப்படுகிறது.

டாக்டர் பெரு. மதியழகன்,
துணைப் பேராசிரியர்,
விரிவாக்கத்துறை,
கால்நடை மருத்துவக் கல்லூரி,
மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
நாமக்கல்– 637 001.

நாட்டுப்புற விழாக்களில் படுகளம்

நாட்டுப்புற விழாக்களானாலும், பெருந்தெய்வ விழாக்களானாலும் அவற்றுள் பல கூறுகள் உள்ளன. இக்கூறுகள் அனைத்துமே விரிவான ஆய்வுக் களத்தைக் கொண்டுள்ளன. தெய்வங்களின் வரலாறுகளை மற்றும் புராணச் செய்திகளை

அடிப்படையாகக் கொண்டு விழாக்கூறுகள் அமைந்துள்ளன. அவ்வகையில் இக்கட்டுரை திருச்சிராப்பள்ளி மாவட்ட நாட்டுப்புற விழாக்களில் இடம்பெற்றுள்ள 'படுகளம்' எனும் கூறினை ஆய்வுப் பொருளாகக் கொண்டுள்ளது.

'படுகளம்' என்பதன் விளக்கம், இப்படுகளம் எந்தெந்த சூழலில் நிகழ்ந்தது என்பவற்றை இக்கட்டுரை ஆய்கிறது. படுகள வழிபாட்டு வகைகளை விளக்கி இப்படுகள வழிபாடு தொடர்வதற்கான காரணங்களை விரிவாக நோக்கி யுள்ளது. எதிர்காலத்தில் இப்படுகள விழாக்கூறு எத்தன்மையில் வழிபாட்டில் இடம்பெறும் என்பதும் சிந்திக்கப்பட்டுள்ளது.

'படுகளம்' எனும் கூறு நாட்டுப்புற விழாக்களில் இடம் பெற்றுள்ளமைக்கான சமுதாய காரணங்கள் இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன. இன்றைய விழாக்கூறுகளில் படுகளம் எனும் கூறு நாட்டுப்புற மக்களிடையே வழிபாட்டுணர்வில் பெறும் சிறப்பினை இக்கட்டுரை நோக்கியுள்ளது. நாட்டுப்புற விழாக்கூறுகளும் பெருந்தெய்வ விழாக்கூறுகளுக்கிணையாக அமையும் தன்மையினை இக்கட்டுரை நோக்கியுள்ளது. சமூக வரலாறு நோக்கில் படுகளம் எவ்வாறு நிகழ்ந்தது; அதன் விளைவுகள் என்ன? வழிபாட்டில் அதன் பங்கு என்ன? என்பனவற்றை இக்கட்டுரை களப்பணியில் பெறப்பெற்ற தரவுகளினடிப்படையில் நோக்கியுள்ளது.

முனைவர் அரு.மருததுரை,
விரிவுரையாளர்,
தமிழியல் துறை,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சிராப்பள்ளி- 620 024.

மாற்றுத்தொடர்பியல்
(Alternative Communication)

'இரண்டாம் தொழிற்புரட்சி' (நார்பர்ட் வைனா, 1950)

'தகவல்யுகம்' (மார்ஷல் மக்லூஹன், 1960) என்ற சொல்லாடல்களின் உச்சரிப்பைப் பொருள் பொதிந்ததாக்கும் வகையில் தொழில் நுட்பம் சிறப்பாகத் தொடர்பியல் தொழில் நுட்ப வளர்ச்சி விண்ணுக்கும் மண்ணுக்குமாய் வியாபித்து உலகையே சிற்றூராகச் (Global Village) சுருக்கிவிட்டது. செய்தித்தாள் முதல் அதிநவீன மின்னணுவியல் தொலைத் தொடர்பு ஊடகங்களான செயற்கைக்கோள், கணினி வலைப்பின்னல்கள், தகவல் பெருநெடுஞ்சாலைகள், மின்னணு அஞ்சல், செல்லுலார் வானொலி என நாளும் புதிதாய்ப் பல்கிப் பெருகி மனிதனின் சமூகச் செயல்பாட்டை வெகுவாகப் பாதித்துள்ளன. இத்தகைய ஊடகச் சமுதாயத்தில் மிகக் கவனமாக உருவாக்கப்பட்டுள்ள உலகளாவிய ஒற்றைப் பண்பாட்டுக் கருத்தாக்கத்தில் சிறுபான்மைக் குழுக்களின் பண்பாடு அடித்துச் செல்லப்படுவது இயற்கை.

அரசு / பணம் என்ற அதிகார, ஆதிக்க அமைப்புக்களால் மையத்தை நோக்கித் கட்டமைக்கப்பட்டுள்ள தகவல் சமுதாயத்தில் தகவல் ஓட்டம் செங்குத்தாக அஃதாவது மேலிருந்து கீழாக அஃதாவது ' அவர்களிடமிருந்து நமக்கு' என்கிற ரீதியில் ஒருவழிப்பாதையில் செலுத்தப்படுகிறது. இங்கு ஆதிக்க மையத்திலிருப்பவர்களின் தேவைக் கேற்பவும், விருப்பத்திற்கேற்பவும் ஒரே திசையை நோக்கியே தகவல்கள் உற்பத்தி செய்யப்பட்டு, சார்நிலைப் பண்புள்ள வெகுஜனத்தை நோக்கி விநியோகிக்கப்படுகின்றன. இருப்பினும் இங்ஙனம் தாராளமயமாகியுள்ள தொடர்பியல் ஊடகங்களிலிருந்து தள்ளி நிறுத்தப்பட்டுள்ள அல்லது புறக்கணிக்கப்படுகின்ற சமூகக் குழுக்களும் உண்டு. ஏனெனில் இவ்வூடகங்களின் பெரும்பான்மையான தகவல்கள் நகரிய, மேல் நடுத்தர மற்றும் மேல்மட்டத்தினரை நோக்கிக் கட்டமைக்கப்படுகின்றன. இத்தகைய சூழலில் ஒற்றை ஆதிக்க மரபிற்கு மாறான 'பன்மைக்' கருத்தியலும் செயலூக்கம் பெற்றுள்ளது. மாற்றம், விடுதலை, பன்முகப்பிரிவு, குழுநிலை, இவற்றினடிப்படையில் மையப் படுத்தப்படாத தகவல் மூலங்களிலிருந்து 'நம்மிடமிருந்து நமக்கே' என்ற அடிப்படையில், இருவழிப்பாதையில் பங்கேற்பு

முறையில், பன்முகப் பிரிவுகளான ஒவ்வொரு உள்ளூர் மக்கள் குழுவை நோக்கியத் தொடர்பியல் முறை பற்றியும் உரக்கப் பேசப்படுகிறது. *1960* களில் வித்திடப்பெற்ற மாற்றுத் தொடர் பியல் கருத்தியல் இன்று லத்தீன் அமெரிக்கா, ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளில் முழு வீச்சைப் பெற்றுள்ளது. இந்தியாவிலும் மாற்றுத் தொடர்பியல் சிந்தனை பரவலாகியுள்ளது. இந்நிலை யில் மைய நீரோட்டத் தொடர்பியலுக்கு மாறாக மக்கள் சமூகத்திலிருந்து முகிழ்க்கின்ற தொடர்பியல் முறைகளையும் ஊடகங்களையும், மாற்றுச் சிந்தனையாளர்களையும், செவி மடுப்போரையும் ஆராய்வது இன்றியுமையாததாகிறது. மாற்றுத் தொடர்பியல் மற்றும் ஊடகங்களின் செயல்பாடு மற்றும் நிலைப்பாடு பற்றியும், அவற்றின் பயன்பற்றியும் பொது மக்களின் ஏற்பையும் மதிப்பீடு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தொ.மனோன்மணி,

விரிவுரையாளர்,

தொடர்பியல் துறை,

ம.கா.பல்கலைக்கழகம்,

மதுரை– 21.

முருகவழிபாடு: ஓர் ஆய்வு

இந்தியா முழுவதிலும் சிவவழிபாடு பரவியிருக்கிறது. அச்சிவ வழிபாட்டின ஒரு கூறே முருக வழிபாடு. முருக வழிபாடு என்பது முருகனை வணங்குவதைக் குறிக்கும். அம்முருக வழிபாட்டினை ஆய்வதே இவண் நோக்கம்.

முருகு என்ற சொல், அன் என்ற விகுதி பெற்று முருகன் என வழங்கப்படுகிறது. இச்சொல், சங்க இலக்கியங்களில் கையாளப்பட்டுள்ளது. முருகு என்பது அழகு, இளமை, மணம், தெய்வம் ஆகிய நான்கு பொருள்களின் ஒருமித்த வடிவமாகும். சங்க இலக்கியங்களில் வரும் முருகு என்ற சொல்,

தெய்வத்தையே குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அவன் உவமையாகவும் சுட்டப்பட்டு உள்ளான்.

முன்னோர் காட்டிய அல்லது வகுத்த வழியில் செல்லுதலே வழிபாடு என வழங்கப்படுகிறது. பேரின்ப நிலையை அடைய இறைவனை வழிபட வேண்டும் எனும் பொருளினையும் வழிபாடு என்ற சொல்லுக்குக் கொள்ளலாம்.

குறிஞ்சி நிலக்கடவுளாக முருகன் சுட்டப்படுகிறான். வெறியாடல் என்பது தெய்வம் ஏறி ஆடலைக் குறிக்கும். இவ்வெறியாடல், முருகனால் நோய் வந்தது என்ற காரணத்திற்காக ஆடப்படுகிறது.

முருகனை வணங்கும் முறையைத் திருமுருகாற்றுப்படைத் தெரிவிக்கிறது. முருகனுக்குக் கோயில்கள் இருந்ததைச் சங்க இலக்கியம், சிலப்பதிகாரம் போன்ற நூல்களால் அறிய முடிகிறது.

சங்கப்பாடல்களில் தலைமைத் தன்மை வாய்ந்த முருகன், பக்தி இயக்கக் காலத்தில் அத்தன்மையை இழந்தான். அக்காலத்தில் சிவவழிபாடு முதன்மை பெற்றது. பின்னர், சோழர் காலத்தில், திருமுறைகளில் முருகன் பாடல்கள் சேர்க்கப்பட்டன. இதனால், முருகன் மீண்டும் முதன்மை நிலையை அடைந்தான்.

அத்தகைய முருகனை, வளர்பிறைச் சட்டித் திதியிலும், நட்சத்திரங்களில் கார்த்திகை நட்சத்திரத்திலும், அவன் பிறந்த விசாக நட்சத்திரத்திலும் மக்கள் வழிபடுகின்றனர். ஐப்பசி மாத சட்டித் திதியன்று முருகன் சூரனை அழித்தான். அவ்விழா, திருச்செந்தூரில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டதால் முருகன் கார்த்திகை நட்சத்திரத்தன்று மக்களால் வழிபடப்படுகிறான். அவன் பிறந்த விசாகநட்சத்திரத்தன்றும், சிறப்பு வழிபாடுகள்

நடைபெறுகின்றன. மக்கள் கண்கண்ட தெய்வமாம் கலியுக வரதனாம் கந்தனைக் கண்டு களிக்கின்றனர்.

டாக்டர்.(மு.அ. மாணிக்கவேலு,
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
சிந்திக் கல்லூரி,
சென்னை.

வேளாளர் பேச்சுவழக்கில் எதிரொலிச் சொற்கள்

கன்னியாகுமரி மாவட்டத்து நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி வேளாளர் பேச்சுவழக்கில் காணலாகும் ஓரெழுத்துச் சொற்களுக்கான எதிரொலிச் சொற்களே ஆய்வுப் பொருள்.

1.1 பலவெழுத்துச் சொற்களும் எதிரொலிச் சொற்களும்

ஒரு சொல்லை அடுத்தமையும் பொருளற்ற வெற்றுச் சொல்லே எதிரொலிச் சொல். இதில் முதற்சொல்லின் முதலெழுத்து மாறிக் காணப்படும். பெரிதும் பேசப்படும் எச்சொல்லும் எதிரொலிச் சொல்லைப் பெறும். (அன்பு கின்பு; ஆசை கீசை; ஐயர் கிய்யர்; கௌவி கிவ்வி).

1.2 ஓரெழுத்துச் சொற்களுக்குரிய எதிரொலிச் சொற்கள்

ஓரெழுத்துச் சொற்களுக்கான எதிரொலிச் சொற்கள், இரட்டித்தல் தவிர்ந்த நிலைகளில் புதியனவேயாம். அவை எதிரொலிப்போடும், எதிரொலிப்பின்றியும் அமையும்.

1.2.1 எதிரொலிப்போடு அமைவன

எதிரொலிப்போடு அமைவனவற்றில் எதிரொலிப்புத் தன்மை முழுமையாகவோ ஓரளவாகவோ காணப்படும்.

1.2.1.1 முழுமையாகப் பெறுவன

மிகக் கூடிய அளவில் எதிரொலிப்பினைப் பெறுவன, முழு மையாகப் பெறுவனவாம் (தீ=த்+ஈ X க்+ஈ=கீ; பூ=ப்+ஊ X க்+ஊ=கூ). இவை தொட்டிசைத்தும் விட்டிசைத்தும் ஒலிக் கப்படுவனவாயும், விட்டிசைத்தே ஒலிக்கப்படுவனவாயும் அமையும்.

1.2.1.1.1 தொட்டிசைத்தும் விட்டிசைத்தும் ஒலிக்கப்படுவன

முதற்சொல்லுடன் சேர்த்து இடைவெளியின்றி எதிரொலிச் சொல் ஒலிக்கப்படுவது தொட்டிசைத்தலாம்; சற்று இடைவெளியிட்டு ஒலிக்கப்படுவது விட்டிசைத்தலாம். இரண்டையும் பெறுவனவும் உள.

எதிரொலிச் சொற்களாகும், கீ-'ஹீ', 'கீ (Gee) எனவும்; ஈ-'யீ' எனவும்; கூ- 'ஹு' எனவும் தொட்டிசைப்பில் ஒலிக்கப்படும்.

தீ < தீ × கீ → தீஹீ / தீ கீ
தீ × ஈ → தீயி / தீ ஈ

Tea [Tee < Tee × கீ → Tee ஹீ/ Tee கீ
Tee × ஈ → Tee யீ/ Tee ஈ
டீ × கீ → டீகீ (Gee) / டீ கீ

ஈ < ஈ × கீ → ஈஹீ / ஈ கீ
ஈ × ஈகி (ஈயீ → யீயீ) / ஈ ஈ

Key - கீ × ஈ → கீயீ/ கீ ஈ
பூ× கூ - பூஹு / பூ கூ

1. 2. 1.1.2 விட்டிசைத்தே ஒலிக்கப்படுவன

நீ × கீ → நீ கீ

1.2.1.2 ஓரளவாகப் பெறுவன

எதிரொலிப்புத் தன்மையை முழுமையாகப் பெறாதவை, ஓரளவாகப் பெறுவனவாம் (கை = க் + ஐ × க் + இ = ய் =கிய்).

கை × கிய் → கை கிய்

Tie [Ty × கிய் → Ty கிய்
டை × கிய் → டை கிய்

1.2.2 எதிரொலிப்பின்றி அமைவன

எதிரொலிப்புத் தன்மையைப் பெறாதும் எதிரொலிச் சொல்லான, 'கீ' ஓரெழுத்துச் சொற்களுக்கும், ஓரெழுத்துச் சொற்களாகும் ஈரெழுத்துச் சொற்களுக்கும் அமையும்.

தா × கீ → தா கீ

காய் - கா × கீ → கா கீ

ஓரெழுத்துச் சொற்களுக்கான எதிரொலிச் சொற்கள் - கீ, ஈ, கூ, கிய். எதிரொர்லிப்புத் தன்மை, ஈகார ஊகாரங்களால் முழுமை யாகவும், 'கிய்'-யால் ஓரளவும் உருவாகும். 'கிய்' தவிர்ந்தன தொட்டிசைப்பில் மாறி ஒலிக்கப்படும். அனைத்துச் சொற்களும் தொட்டிசைக்கப் பெறுவதில்லை. கை-'கய்' என ஒலிக்கப்படும் போது தொட்டிசைக்கப் பெறும். நேர் கூற்று நிலையிலேயே எதிரொலிச் சொற்களை ஏற்கும் முதற்சொற்களும் உள. ஓரெழுத்துச் சொற்களுக்கு எதிரொலிப்புத் தன்மை இல்லாதும் எதிரொலிச் சொல் அமையும். எதிரொலிச் சொல், முதற்சொல்லை அடுத்தல்லாது விலகியும் அமையும் (கை நீட்டி கிய் நீட்டி). விட்டிசைக்கும் நிலையில், அடுத்து வரும் சொற்களால் எதிரொலிச் சொல் முதற்சொல்லோடு தொடர்புடைய வேறொரு பொருளைச் சுட்டிடும் தன்மை பெறும் (டீயோ கீயோ; டீ கீ எல்லாம்).

முனைவர் கு.மாதேவன் பிள்ளை,
ஆய்வகம்-தமிழ்க்கலை,
தெ.தி.இந்துக்கல்லூரி,
நாகர்கோவில்.

தொன்மச் சொற்களும், அகராதிப் பொருள் விளக்கமும்

சொற்பொருள் தருதல் என்பதே அகராதி உருவாக்கத்திற்கான அடிப்படை. இச்சொற்பொருள் சொற்களின் இயல்பான சமூகப் பயன்பாட்டை அடிப்படையாய்க் கொண்டு தரப்பெறும். ஒரு அகராதிக் கலைஞர், தான் விரும்பும் பொருளைப் பதிவில் தந்துவிட இயலாது. அகராதி உருவாக்கத்தில் மிகவும் சிக்கல் வாய்ந்த இப்பொருள் வரையறை பல்வேறு பொருட்புலச் சொற்களுக்கு ஏற்ப அமையும் இயல்பினது. இக்கட்டுரையில், தொன்மம் (myth) எனும் பொருட்புலம் சார்ந்த சொற்களின் அகராதிப் பொருள் விளக்கம் (lexicograhic definition) ஆய்வுப் பொருளாய்க் கொள்ளப் பெறுகின்றது.

தொன்மச் சொற்றொகுதியில் அடங்கும் சில சொற்கள் அறிவியல் சார்ந்தனவாயும், பல மதம், இறைநெறி சார்ந்தனவாயும் உள்ளன. இவ்விருவகைச் சொற்களுமே இயல்பான சொற்களின் பதிவமைப்பு நெறிமுறைகளிலிருந்து சற்றே வேறுபட்டுப் பதிவுகளாய்த் தரப் பெற வேண்டும். இந்நெறிமுறைகள் தமிழின் கடந்தகாலத்தே உருவாக்கப்பட்ட அகராதிகளின் தொன்மச் சொற் பதிவமைப்பை அடிப்படை யாய்க் கொண்டு

1. அகராதிச் சொற்பொருள் வரையறை.

2. தமிழ் அகராதிகளின் தொன்மச் சொற்பதிவுகள்

3. தொன்மச் சொற்களின் பொருள் வரையறையும், பதிவமைப்பும்

எனும் மூன்று பகுதிகளில் இக்கட்டுரையில் ஆராயப் பெறும்.

1. முதலாவது பகுதியில் அகராதிச் சொற்பொருள் பற்றிய விளக்கம், விளக்கச் சொற்பொருளும் அது அகராதியில் அமைய

வேண்டிய இயல்புகளும் ஆராயப் பெறும்.

2. இரண்டாவது பகுதியில் சதுரகராதி (1732) தொட்டுக் கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (1992) வரையிலான ஒரு மொழி, இரு மொழி அகராதிகளில் கிரகணம் (சூரிய, சந்திர கிரகணம்) திரிபுரம், இராகு, கேது, அவதாரம், சுவர்க்கம், நரகம், வானவில் என்பன போன்ற சில தொன்மச் சொற்கள் பதிவாய் அமைந்துள்ள இயல்பும், பொருள் வரையறையும் விளக்கப் பெறும்.

3. மூன்றாவது பகுதியில் தமிழ் அகராதிப் பதிவுகளில் நேர்ந்துள்ள குறைபாடுகள் ஆராயப்பட்டு, கிரகணம் என்பது போன்ற அறிவியல் சார்ந்த சில சொற்களுக்கு இயல்புத் தகவல்களையும், தொன்மத் தகவல் களையும் பொருளாய்த் தரவேண்டிய நிலை, இயல்புச் சொற்களைப் போலன்றித் தொன்மச் சொற்கள் தொன்மம் எனும் தகவலுடன் பொருள் விளக்கம் செய்யப்பட வேண்டிய இயல்பு, அகராதி வகைமைக்கேற்ப தொன்மச் சொற்பொழிவுகள் தரப்பட வேண்டிய நெறி என்பன விளக்கப் பெறும்.

பெ.மாதையன்,

விரிவுரையாளர்,

தமிழ்ப் பல்கலைக்கழகம்,

தஞ்சாவூர்-5.

வரலாற்று நோக்கில் பேகன் கண்ணகி குறித்த பாடல்கள்

அகம், புறம் என்று வகைப்படுத்தப் பெற்ற சான்றோர் பாடல்களில் புறத்தில் அமைந்த தொகுப்பு புறநானூறு. ஆனால், தனிப்பட்டவர் வாழ்க்கைத் தொடர்பாக அமைந்துள்ள நக்கண்ணையார் பாடல்களும், பேகன்-கண்ணகி பற்றிய பாடல்களும் இதில் இடம் பெற்றுள்ளன. இவை சுட்டி ஒருவர் பெயர்

கொள்ளப்பட்ட காரணத்தால் புறத்தில் அமைந்தன என்று கூறி, அவற்றுக்கென வகுக்கப் பெற்ற திணை துறைகள் எந்த அளவு பொருத்தமுடையன என்று ஆராய்ந்து கண்டது தமிழறிஞருலகு.

இந்நிலையில் பேகன்-கண்ணகி குறித்த பாடல்கள் புறத்தில் வைக்கப் பெற்றமைக்கான காரணத்தைச் சமுதாய மற்றும் அரசியல் வரலாற்று நோக்கில் ஆராய்கிறது இக்கட்டுரை. இருவரின் இணைவு, வரலாற்று நோக்கில் எத்தகைய சிறப்பிடம் பெறுகிறது என்பதையும், அதில் புலவர்கள் பங்கு என்ன என்பதையும் விளக்குகிறது.

முனைவர் நா.மார்க்சிய காந்தி,

கல்வெட்டியல் உதவிக் கண்காணிப்பாளர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை,
சி.பி.டி.வளாகம், தரமணி,
சென்னை-600 113.

ஆண்டாள் பிரியதர்சினியின் கதை இலக்கியங்கள்-ஓர் ஆய்வு

சமுதாய வாழ்வைத் துல்லியமாகப் பிரதிபலித்துக் காட்டும் திறன் இலக்கியத்திற்கு உண்டு. காலந்தோறும் மனிதனை-அவன் வாழ்வைக் குறித்த செய்திகளை மையமாகக் கொண்டே பல வகைகளில், வடிவங்களில் இலக்கியங்கள் தோன்றி வளர்ந்து வந்துள்ளன. இலக்கியம் ஒரு பொழுதுபோக்கு என்ற நிலையினைக் கடந்து, இலக்கியம் வாழ்க்கையின் பல நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் களம் என்ற அளவிற்குத் தன் உருவைப் பெருக்கிக் கொண்டு வளர்ந்துள்ளது. இத்தகைய வளர்ச்சியின் சாதனைகள் இன்றைய இலக்கியங்களில் பரவலாகக் காணப்படுகின்றது.

இன்றைய இலக்கியங்கள் என்ற வகையில், கதையிலக்கி யங்களின் பங்கும் பணியும் பயனும் தனித்தன்மை கொண்டிருக்

கக் காணலாம். ஏனெனில் மனித வாழ்க்கை குறித்த பல நுட்பமான செய்திகளை எதார்த்தமாக வெளிப்படுத்தவல்லவையாகக் கதையிலக்கியங்கள் இருப்பதாலேயேயாகும். கதையிலக்கியங்கள் என்று சொல்லப்படுகின்ற சிறுகதைகள் மற்றும் நாவல்களில் மனித வாழ்க்கையே கருப்பொருளாகின்றது. இக்கதை இலக்கியங்கள் மனித வாழ்க்கையின் பல்வேறு பரிமாணங்களைச் சித்திரித்துக் காட்டும் திறனுடையன. மனிதனுக்குள்ளே உலவுகின்ற மனம், அதன் வெளிப்பாடாக அமைந்த செயல்களும் அதன் விளைவுகளும் ஆகியன குறித்த வாழ்க்கை விமரிசன்ங்களாக இக்கதை இலக்கியங்கள் அமைந்துள்ளன.

அண்மைக்காலக் கதை இலக்கியப் படைப்பாளர்களில் ஒருவராக, ஒரு குறுநாவல் படைப்புடன் இலக்கிய உலகில் அடியெடுத்து வைத்துள்ளவர் ஆண்டாள் பிரிதர்சினி. கல்லூரி நாட்களிலேயே பத்திரிகைகளில் சில சிறுகதைகள் எழுதிப் பழகியவர் எனினும், 'சுருதி பிசகாத வீணை' என்ற குறுநாவல் படைப்பு தான் இவரை முழுமையாக ஒரு கதை இலக்கியப் படைப்பாளியாகத் தமிழிலக்கிய உலகம் அறிந்து கொள்ள உதவிற்று. முதன் முதலாக 1987இல் இந்தக் குறுநாவல், பதினைந்து சிறுகதைகளுடன் நூல் வடிவம் பெற்று வெளி வந்தது. அதனையடுத்துச் சில ஆண்டுகள் இடைவெளிக்குப் பின் 1991 இல் வெளிவந்த 'நூலிழைபந்தம்' மற்றும் 'தாளம் தப்பிய தாலாட்டு' ஆகிய இரண்டு குறுநாவல்களும் இவருடைய படைப்புத் திறனின் நுட்பத்தை வெளிப்படுத்தின.

ஆண்டாள் பிரியதர்சினி என்ற தன் இயற்பெயரிலேயே கதை இலக்கியங்களைப் படைத்து வருகின்ற இந்த இளம் எழுத்தாளர், சமுதாய வாழ்க்கையின் பல அம்சங்களைப் பேசுகிறார் என்பதைவிட, பெண்ணையும் அவளைச்சார்ந்த வாழ்க்கையைப் பற்றியுமே மிகுதியும் கதைகளாகச் சித்திரித்துள்ளமையைக் காணலாம். நடைமுறை வாழ்க்கையின் சிக்கல்களுக்குக் காரணமாகவும், சிக்கலில் மாட்டிக் கொண்டும், சிந்தனைத் திறனுடன் சிக்கலை நீக்கவும் தவிர்க்கவும் முயன்றும் வருகின்ற

பெண்களை இனம் காட்டுகின்ற முறையில் இவரது கதைப் படைப்புகள் அமைந்து உள்ளன.

இன்றைய கதை இலக்கியப் படைப்பாளிகளில் ஆண்டாள் பிரியதர்சினி என்ற படைப்பாளரின் படைப்புத் திறனை அதாவது படைப்பின் நோக்கையும் அதன் வெளிப்பாட்டு முறையினை யும் ஆராய்ந்தறிவதாக இவ்வாய்வு அமைகின்றது. நூல் வடிவில் வெளிவந்துள்ள இவரது மூன்று குறுநாவல்களும் பதினைந்து சிறுகதைகளும் ஆய்வுப் பொருளாகின்றன. கதையாசிரியர் கதை இலக்கியங்களை முழுமையாக ஆராயும் முதல் முயற்சியாக இவ்வாய்வு அமைகின்றதென்பது அறியத்தக்கது.

இந்தியப் பண்பாட்டிலும் அதன் கலாச்சாரங்களிலும் ஆழ்ந்த ஈடுபாடுடைய இவர், வரம்பு மீறாத பெண்ணின் முன்னேற்ற வாழ்க்கையை வரவேற்றும், அதே நேரத்தில் முன்னேற்றம் என்ற பெயரில் பெண்ணின் வாழ்க்கைத் தடுமாற்றம் அடைவதைச் சுட்டிக்காட்டியும் தன் இலக்கிய மற்றும் வாழ்க்கை நோக்கங்க ளைத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்.

கதைப் பொருள், அதற்கேற்ற தலைப்பு, ஆர்வமூட்டும் தொடக்கம், உச்ச நிலையையே கதையின் முடிவாக்குதல் ஆகிய கதைத் திறனுடன் அமைந்த இவரது படைப்புகளில் மொழி நடையின் பங்கும் குறிப்பிடத்தக்க இடம் பெறுகின்றதெனலாம். படைப்புலகில் இவரது பங்கும் பணியும் குறித்து ஆராய்வதை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு அமைகின்றது.

முனைவர் மீனாகுமாரி கனகராஜ்,
பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி,
குற்றாலம்.

பெருகி வரும் தொலைக்காட்சித் தொடர்புகள்

மக்கட் தொடர்புச் சாதனங்களில் ஒன்றாகிய தொலைக் காட்சியின் வருகையும், வரவேற்பும், வாழ்வும் இன்று தனக்கென ஓரிடத்தைப் பெற்று விளங்கும் திறமும் கவனத்தில் கொள்ளத்தக்கவை. 1959-இல் நமக்குக் கிடைத்த இச்சாதனம் தொடக்க நிலையில், மக்களிடம் உள்ள அறியாமையை நீக்குதல் என்பதற்காகவே செயல்பட்டது. ஆனால் நாளடைவில் வணிக ரீதியான சிந்தனைகளும் செயல்பாடுகளும் இடம் பெற்ற பொழுது இதன் நோக்கிலும் போக்கிலும் மாற்றங்கள் ஏற்பட்டன.

1.0 தொடர்புச் சாதனங்களின் பணிகள் மூன்று: 1. அறிவித்தல், 2. அறிவுறுத்தல், 3. பொழுதுபோக்கு. இதில் இன்றைய நாளில் ஒலியுணர் தட்டின் (dish antenna) கண்டுபிடிப்பினால், மூன்றாவது பணி மட்டுமே மிக முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது.

2.0 தொலைக்காட்சியைப் பார்ப்பதிலும் அதில் பங்கு பெறுவதிலும் மக்கட்கு மிகுந்த ஈடுபாடு உள்ளது. ஏனென்றால், தெரிந்தெடுத்த கருத்து (selective perception) தெரிந்தெடுத்த வெளிப்பாட்டில் (selective exposture)விரும்பிப் பார்க்கும் வடிவில் (form) ஒளிபரப்புச் செய்யப்படுகிறது. செய்திகளின் ஒட்டு மொத்த கருத்துச் சேகரிப்புக் கிடைக்கிறது. இவைய னைத்தும் நடைமுறை வாழ்வியற் பணிகளுக்கு வளம் சேர்க்கும் வகையில் அமையின், சிக்கல்கள் இல்லை.

3.0 உணவு, உடை, உறைவிடம், மொழி, பழக்கவழக்கம் என்ற பல நிலைகளிலும் கலப்பினைப் பெறுவதற்குக் காரணியாக உள்ள இத்தொலைத் தொடர்புகளின் பாதிப்புக்கள், தாக்கங்கள் இக்கால கட்டத்தில் சிந்திக்க வேண்டியவை.

முனைவர் முத்து இலக்குமி,
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
மீனாட்சிக் கல்லூரி,
மதுரை-2.

சிங்காரவேலர் கண்ணோட்டத்தில் மதம்

மதங்களைப் பற்றிய மக்களின் இருவகைக் கணிப்பு-

விலங்குகளுக்குத் தேவையற்ற மதம் மனிதனுக்கு எதற்காக? கடவுள் மதத் தொடர்பு- மதம் மனிதனுக்குத் தேவையானது தானா?

மதத்தின் பெயரால் எதனையும் மனிதர் தொழல்-மதம் இறுக்கமானது-மதமின்றி மனிதன் வாழ முடியும்-மதம் குறிப்பிடும் வழிபாட்டுப் பொருள்கள்- எதைத் தொழுவது? தொழாமலிப்பது? மதங்களால் கொல்லப்பட்ட அறிஞர்கள் மதத்தால் மக்களுக்கு வரும் தொல்லைகள் கொடுமையானவை:

மதங்கள் யாவும் கற்பனையே-எந்த மதத்தை மனிதன் எதற்காக நம்புவது? பயனற்றவற்றைத் தொடர்ந்து வணங்கு வதால் என்ன பயன்? மதம் முதலாளிகளின் அரண்- இவ்வுலகில் மதத்தால் பயனென்ன? மக்களை மயக்க உண்டானவை மதங்கள்-மதமாற்றத்தால் என்ன பயன்? அம்பேத்கார் மதமாற விரும்புதல்-அதனால் வரும் பயனின்மையை விளக்கல்-

மற்ற மதத்தவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களைத் தங்களின் மதங்களுக்கு அழைப்பது எதற்காக? பொருளாதார விடுதலையே உண்மையான விடுதலை என உணர்த்தல்.

முனைவர் முத்துகுணசேகரன்,
தமிழ் இணைப் பேராசிரியர்,
அஞ்சல் வழிக்கல்வி நிறுவனம்,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை-600 005.

தமிழிலும் வங்காளத்திலும் பழமொழி ஒப்புமை

நாடுகள் தோறும் மொழியும், பழக்க வழக்கங்களும், பண்பாடுகளும், சூழல்களும் வேறுபட்டிருந்தாலும் மக்களின் அடிப்படைச் சிந்தனைகள் பெரும்பாலும் ஒன்றாகத்தான் உள்ளன என்னும் அறிவைப் புகட்டுபவையாகப் பழமொழிகள் விளங்குகின்றன.

தமிழும், வங்காளமும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மொழிகள் அல்ல. அதனால் இரு மொழிகளிலும் ஒரே கருத்துள்ள பழமொழிகள் மிகவும் அருகிக் காணப்படுகின்றன. ஆயின் ஒத்த கருத்துள்ள பழமொழிகள் கணக்கிலடங்காது காணப்படு கின்றன. தமிழிலும், வங்காளத்திலும் காணப்படுகின்ற பழமொழிகள் அனைத்தையும் இக்கட்டுரையில் ஆராய்ந்து விடுவதற்கில்லை. எனவே கட்டுரை விரிவஞ்சி ஒருபானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்னும் பழமொழிக்கேற்பத் தமிழ்ப் பழமொழிகளோடு வங்காள மொழி உயிர் எழுத்து அகர நிரலில் காணப்படும் பிரபலமான சில பழமொழிகள் மட்டும் இக்கட்டுரையில் ஒப்பிட்டுக் காட்டப்படுகின்றன.

முனைவர். சொ.முத்தையா,
பேராசிரியர்,
தமிழ்த் துறை, விசுவ- பாரதி நடுவண்
பல்கலைக்கழகம், சாந்திநிகேதன் – 731 235,
மேற்கு வங்காளம்.

தமிழகத்தில் பிறத்தியாரை நோக்கிய கிறித்தவ உரைகள் (கி.பி. 1605 முதல் 1900 வரை)

கிறித்தவத்தின் பணிக்காலத்தைத் தமிழகத்தைப் பொறுத்து ஐந்து பகுப்பாக்கலாம். புனித தோமையர் (கி.பி.82)காலம் முதல் கோவா, கொழும்புவில் திருச்சபை ஏற்பட்ட (கி.பி.1505) காலம்

வரை, புனித பிரான்சிஸ் சேவியர் (கி.பி. 1541) காலம் முதல் ராபர்ட் டிநொபிலி (கி.பி. 1605) வருகை வரை, ராபர்ட் டிநொபிலி காலம் முதல் அபேதூபாய் (கி.பி. 1800) காலம் முடிய, இரேனியஸ் (கி.பி. 1820) காலம் முதல் கால்டுவெல் காலம் (1890) முடிய, கால்டுவெல்லிற்குப் பிறகு முதல் தற்காலம் வரை என்பன அந்தப் பகுப்புகளாகும். கிறித்தவம் இங்குப் பிறத்தியாரை நோக்கி உரைத்தவைகளை முன்னிட்டுப் பகுக்கப்பட்டது. இக்கட்டுரை ராபர்ட் டிநொபிலி முதல் கால்டுவெல் முடிய கிறித்தவம் உரைத்தவைகளைப் புலப்படுத்த முனைகிறது.

புனித பிரான்சிஸ் சேவியர், பிரிட்டோ காலங்களில் சமயப் பரப்பலும், திருப்பலும் நடந்தன. பரதவர் பஞ்சமர் பொருட்டுத் தம்பிரான் வணக்கம், கிறித்தியானி வணக்கம், ஏழு வணக்கம், மதுரை மந்திரம் அச்சிடப்பட்டன. அரூபமான ஒரே கடவுள், பரதவர், பஞ்சமர் தம்மைப் பிழையாளி என உணர்தல், இயேசுவை ஏற்று அனுசரிப்பவரது விசுவாசம், பாவ மன்னிப்பு போதிக்கப்பட்டன. பாரம்பரியமான சொந்தக் கலாசாரம், குடும்ப, குல உறவுகளை விடத் திருச்சபை உடனான உறவு சிறப்புப் படுத்தப்பட்டது.

ராபர்ட் டிநொபிலியின் திருச்சபைப் பணி திருப்பத்தை ஏற்படுத்தியது. மதுரைமந்திரம் குறிப்பிட்ட சர்வேசுவரனின் பண்புகள், ஆத்ம சுதந்திரம், ஒன்றும் இல்லாதிருக்கையில் உலகின் படைப்பு, அறிதலியலில் பிரதிபிம்ப நிலை ஆகியன கொண்டு அப்போதைய சைவம், வைணவம், அத்வைதம், உலகாயதம், பல தெய்வ வணக்கம், அனைத்திறை, விக்கிரக வழிபாடுகளை அவர் மறுத்தார். சமூக வேறுபாடு, ஏற்றத்தாழ்வுகளுக்குப் பிரயோசன வாதத்தைக் கொண்டு விளக்கம் தந்தார். மேலும் சாஸ்திரம், சடங்குகள், விழாக்களை ஒழுக்கம் மற்றும் அப்போதைய விஞ்ஞானத் தகவல்களோடும், நேராக உற்றுப்பார்த்து, பரிட்சை பண்ணலோடும், கூடவே பைபிள் சார்புடைய வரலாற்று உணர்வோடும் ஆபாசம் என மறுப்பது அவருக்குப் பிறகு முன்னிலைக்கு வந்தது. மேலும் இங்குள்ள புராணங்கள், இதிகாசங்கள், ஆகமங்கள், வேதங்கள்,

தத்துவங்கள் தப்பறை, அபத்தம் என நிராகரிக்கப்பட்டன. ஆனாலும் அபேதுரபாய் காலத்தில் செயல்களில் சோர்வு ஏற்பட்டது.

1820 களில் பிறத்தியாருடைய சாஸ்திரம் முதல் தத்துவம் வரையான திருச்சபைகளின் முந்தைய மதிப்பீடுகள் மேலும் தொடர்ந்தன. அந்தத் தப்பறை, அபத்தங்கள் பிராமணர் செல்வாக்கால் விளைந்தவை என இப்போது உரைக்கப் பட்டன; இரேனியஸ், பவர் காலங்களில் இது தொடங்கியது; ஷ்மிட், கால்டுவெல் ஆரியர், வடமொழி மேலாண்மை என உரைத்தனர். மேலும் பிரயோசன வாதத்தை மையமாகக் கொண்டு நேர்க்காட்சி வாதம் இங்குப் பரவியது; ஆதிமூல ஒரு காரணம், பலவான வேறு வேறு தனித்தனி காரியங்கள் என்ற அணுகுமுறை, நேரடிக் காட்சி, அனுபவம், பகுத்தறிவு நோக்கு இங்குப் பயிற்சிக்கு வந்தது. ஆதிமூலகாரண வாதத்தை மேற்கொண்டு கால்டுவெல் திராவிட மொழிகளுக்கு ஒப்பியல்பு விளக்கி, சமஸ்கிருதத்தினின்று வேறுபடுத்திப் பேசி, விடுதலை பெற வேண்டும் என உரைத்தார்.

1853 இல் ஜான் பனியனின் இரட்சணிய யாத்திரிகம் நூல் தமிழில் திருப்பப்பட்டது. முற்றுருவகம், கற்பனை (அபத்தம், தப்பறை) தவிர்த்த இயல்புநிலை, நரஸ்துதி செய்யாமை, காமம் நிராகரிப்பு ஆகியனவற்றை *1895*-இல் பேசுவதற்கு அது வழிவகுத்தது. வேதம், ஆகமம், இதிகாசம், புராணம், சாஸ்திரம், தத்துவம் ஆகியவற்றின் மறுப்புரை இவை. கிறித்தவ நோக்கும், நேர்க்காட்சி வாத இயல்பும் இந்த மறுப்புரையில் பொலிந்தன.

முனைவர் கி.முப்பால்மணி,

தலைவர்,

தமிழ்த்துறை,அரசு கலைக்கல்லூரி,

கோயம்பத்தூர்-18.

மேலை இலக்கியக் கோட்பாடுகளின் வழி கணையாழிக் கவிதைகள்

18-ஆம் நூற்றாண்டின் முடிவிலும் *19*ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் நிகழ்ந்த புத்துணர்வுப் புரட்சி (Romantic Revolution) யின் விளைவான பழமையை எதிர்த்துப் புரிந்த பொதுவான கலகம், இறுகிப் போன செய்யுளின் நிறுவனத் தன்மையையும் நிராகரிக்கத் தூண்டியது. இத்தூண்டலின் காரணமாகவும், அறிவியலின் அபரித வளர்ச்சியாலும் இலக்கியத் துறையில் தோன்றிய புதிய வடிவம் புதுக்கவிதைகள். தமிழில் இன்று படிக்கப்பட்டும், ஆரா்யப்பட்டும் வருகின்ற உயர்தன்மையைப் பெற்றுவிட்டது புதுக்கவிதைத் துறை. இக்கட்டுரையில் இதன் வரலாறு நிகழ்காலச் சூழலோடு ஆராயப்பட்டும். தமிழில் வெளிவருகின்ற கணையாழி இதழ்க் கவிதைகளைத் தரவுகளாகக் கொண்டும் ஆராயப்பட்டுள்ளன.

நடப்பியல்:

இன்று நடக்கின்ற பிரச்சனைகளைப் பாடுபொருளாகக் கொண்டு (உலகியலோடு) படைப்பது நடப்பியலாகும். இதன் வகைகளான மெய்ம்மையியல் (Realism) மீமெய்ம்மையியல் (Sur-realism) இருத்தலியல்(Existentialism) இயங்கியல் (Diatection) பான்றவற்றை முன்னிருத்திக் கணையாழியின் கவிதைகள் ஆ்ராயப்பட்டு விளக்கப்பட்டுள்ளன. மேலும், பல மேலை இலக்கியக் கோட்பாட்டு அணுகுமுறைகளிலும் இவை ஆராயப்படுகின்றன.

மேலே கூறப்பட்ட இலக்கியக் கோட்பாட்டு முறைகளில் வெளிவந்த இக்கவிதைகளின் பொது நிலைகளும் ஆராய்ந்து விளக்கப்பட்டுள்ளன.

ஆறு. முருகேசன்,
ஆய்வாளர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி,
சென்னை- *600 113*.

பத்துப்பாட்டில் இடைச்சொற்கள்

தமக்கெனப் பொருள் இல்லாமல் தான் சார்ந்து நிற்கும் பெயரையோ வினையையோ இடமாகப்பெற்று வருபவை இடைச்சொ ்கள். இஃது ஏழு வகைப்படும். இந்த இடைச் சொற்கள் காலந்தோறும் இயல்பு, மாற்றம், வளர்ச்சி என்னும் மூன்று நிலைகளில் சொல் நிலையிலும் பொருள்நிலையிலும் முறையே பயின்று வந்துள்ளன.

சங்க இலக்கிய வகையில் பத்துப்பாட்டில் இடைச் சொற்களின் பயன்பாடு, பயன்பாட்டில் மாற்றம், வளர்ச்சிநிலை ஆகியன பற்றி இக்கட்டுரை ஆராய்கின்றது.

பத்துப்பாட்டில் உவம உருபுகளின் செல்வாக்கு பல பாட்டில் ஒரே நிலையில் பயின்று வருதல் வேற்றுமைகளின் நிலை சாரியைப் போக்கு இன்ன பிற செய்திகள்.

பத்துப் பாட்டில் ஆக- ஆகல் என்பது பிரிவில் அசைநிலை யாய்ப் பயின்று வருவதைச் சுட்டிக்காட்டுதல்

மு.மூர்த்தி,
ஆய்வாளர்,
தமிழ் மொழித்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை- 600 005.

இராயணமும் ஆளுமையும்

ஆளுமை விளக்கம்- ஆளுமையை அமைப்பவை இராமாயணத்தில் ஆளுமையால் உயர்ந்தவர்கள் - ஆளுமை இருந்தும் ஒதுக்கப்பட்டவர்கள்.

கைகேயியைக் கம்பன் படைத்த தன்மை - வால்மீகிக்கும்

கம்பனுக்கும் உள்ள வேறுபாடு - கைகேயி இராமனிடத்துக் கொண்ட அன்பு தசரதனுக்கு உதவிய கைகேயிக்கும் சடாயுவுக்கும் உள்ள வேறுபாடு.

மந்தரையின் ஆளுமை - கைகேயியிடத்தில் தன்னல உணர்வை ஊட்டியமை- வாலியின் ஆளுமை - அவனது பொறுமையின்மை, சிந்திக்க மறந்தது - இராவணன் ஆளுமை - ஆளுமையின் செயல் இழப்பு.

இராமன் ஆளுமை படிப்படியே உயரல் - சமுதாயத்தின் பங்களிப்பு - இராமனின் இளமை நிகழ்வுகள் - அவனுடைய முதிர்ந்த நிலை - பிறரை உயர்த்தியமை.

ஆளுமைப் பண்பிற்கு நான்கு அடிப்படை ஆற்றல்கள் - இராமனுடைய சோதரர்கள் - அவர் தம் பெயரும் பொருளும் ஆளும் திறனுக்கு அவை உதவும் தன்மை.

டாக்டர் கி.மைதிலி,

சி.கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரி,
அண்ணாநகர்,
சென்னை-102.

தமிழ்ச் சிறுகதைகளில் குழந்தை உளவியல்

வளர்ச்சி உளவியலார் (Developmental Psychologist) குழந்தைப் பருவத்தினைத் தொடக்க நிலை (Early childhood), பின்னை நிலை (Late childhood) என இரண்டாகப் பகுப்பர். இரண்டு முதல் ஆறு வயது வரை உள்ள குழந்தைகள் தொடக்க நிலையில் அடங்குவர்; ஏழு முதல் பதின்மூன்று, பதினான்கு வயது வரைஉள்ள குழந்தைகள் பின்னை நிலையில் அடங்குவர்.

கோபம், அச்சம், பொறாமை, ஆர்வம், மகிழ்ச்சி, துன்பம், அன்பு என்னும் உணர்வுகள் தொடக்க நிலையில் உள்ள

குழந்தைகளிடம் காணப்படுவன ஆகும். பொதுவாக, இந்நிலையில் உள்ள குழந்தைகள் போலச் செய்தலில் ஆர்வம் காட்டுவர்; தூண்டித்துருவி வினாக்களை எழுப்புவர்; படைப்புத்திறன் மிக்கவராக விளங்குவர்; விளையாட்டு மனப்பான்மை கொண்டவராகத் திகழ்வர்.

குழந்தைப் பருவத்தின் பின்னை நிலையில் குழந்தைகளின் அனுபவ எல்லை விரிகிறது. பல வகையான மனிதர்களோடு பழகும் வாய்ப்பு ஏற்படுகிறது; உடல்நிலை, சமூக, பொருளாதார நிலை, அறிவு நிலை போன்றவை இப்பருவத்தில் குழந்தைகளின் ஆளுமையில் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

மேற்குறித்துள்ள உண்மைகளின் ஒளியில், தமிழ்ச் சிறுகதைகளில் குழந்தை உலகச் சித்திரிப்பினை ஆராய முற்படுகின்றது இக்கட்டுரை. தமிழ்ச் சிறுகதை ஆசிரியருள், பி.எஸ்.ராமையா, கு.அழகிரிசாமி, சி.சு.செல்லப்பா, புதுமைப் பித்தன், ஜெயகாந்தன் ஆகியோர் குழந்தை உலகையும் உணர்வையும் சித்திரிப்பதில் தனித்திறன் பெற்றவர் ஆவர். குழந்தைகளைக் குழந்தைகளாகப் படைப்பதில் -குழந்தைகளின் எண்ணங்களையும் உணர்வுகளையும் செயல்களையும் இயல்பாக எடுத்துக் காட்டுவதில் - இச் சிறுகதை ஆசிரியர்கள் பெற்றுள்ள வெற்றி சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

உளவியல் நோக்கில் தமிழ்ச் சிறுகதைகளில் இடம் பெற்றுள்ள குழந்தைச் சித்திரிப்பினை ஆராய்வது என்பது ஒரு சுவையான ஒப்பீட்டுக் கல்வி ஆகும்.

முனைவர் இரா.மோகன்,
பேராசிரியர்,
ஒப்பிலக்கியத்துறை,
தமிழியற்பள்ளி
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை- 625 021.

தமிழ் இலக்கியத்திற்கும் பண்பாட்டிற்கும் தஞ்சை வேதநாயக சாஸ்திரியாரின் பங்களிப்பு

தமிழிலக்கியப் பரப்பில் திறனாய்வாளர்கள் பலரால் வியந்து போற்றப்படும் அரிய இலக்கியக் கொடைகளை வழங்கிய மாபெரும் கிறித்தவ அருட்கவிஞர் தஞ்சை வேதநாயக சாஸ்திரியார்.

நெல்லையில் பிறந்தும், தம்தமிழ்த்தொண்டால் தஞ்சையில் சிறந்த வேதநாயகர் சுவிசேடக் கவிராயர், வேத சிரோமணி,மகாஞான கவிச் சக்ரவர்த்தி, வேத சாஸ்திரியார் முதலிய பட்டப் பெயர்களால் அக்கால கிறித்தவப் பெருங்குடி மக்களாலும், தம் அன்புக்குரிய அரசவைப் புலவராக மராட்டிய மன்னன் சரபோஜியாலும், மாபெரும் அருட்கவிஞராக ஜி.யு.போப், கால்டுவெல், ரா.பி. சேதுப்பிள்ளை, க.கைலாசபதி உள்ளிட்ட தமிழறிஞர்களாலும் போற்றிப் புகழப்பட்டவர். எண்ணிக்கையில் நூற்றுக்கும் மேற்பட்ட அருட்கவிதை நூல்களைப் படைத்தளித்தவர் என்ற பெருமையும் கவிதை நூல்கள், இசைப்பாடல்கள், நாட்டுப்பாடல் பாங்கு நூல்கள், உரைநடை, தியான உரைகள் எனப் பல்வேறு துறைகளிலும் தம்படைப்பாற்றலை வெளிப்படுத்திய வித்தகர் எனும் புகழும், தமிழில் மிக நீண்ட காலம் - அதாவது 90 அகவை வரை வாழ்ந்த கவிஞர் என்ற சிறப்பும் இவருக்கே உரியன. அத்தகு பெருமைக்குரிய கவியரசர் தமிழிலக்கியத்திற்கும் தமிழ்ப் பண்பாட்டிற்கும் வழங்கிய பங்களிப்புகளுள் முக்கியமான சிலவற்றை மட்டும் சுட்டிச்செல்வது இக்கட்டுரையின் நோக்கம்.

(அ). சிற்றிலக்கிய மரபுகளில் கிறித்துவ நெறிச் செய்தி

வேதநாயகரது இலக்கியப் படைப்புகளுள் விரல்விட்டு எண்ணத்தக்க மிகச்சிலவற்றைத் தவிர பிறவனைத்தும் கிறித்தவ பெருமானையும், கிறித்தவ நற்செய்தியையுமே மையமாகக்

கொண்டன. எனினும், அக்கிறித்து நெறிச் செய்தியை அவர் பல்வேறு வடிவங்களில் கலைநயம்குன்றாமல் அதே நேரத்தில் விவிலியக் கருத்து வளம் குறையாமல் எடுத்துரைக்கும் பாங்கே போற்றுதற்குரியது. இவ்வகையில் குறவஞ்சி, நொண்டி நாடகம், தூது, உலா, மாலை முதலிய சிற்றிலக்கிய வடிவங்களில் அருமையான இலக்கியங்களை அவர் படைத்திருப்பதை இக்கட்டுரை விரித்துரைக்கும். இச் சிற்றிலக்கிய மரபுகளில் கிறித்தவச் செய்திகளையும் திறமாகச் சொல்ல இயலும் என்பதை நிறுவுவதோடு கிறித்தவத்தை ஒரு தமிழ்ச்சமயமாக வெளிப்படுத்துவன இவ் விலக்கியங்கள்.

(ஆ). நாட்டிலக்கியப் பாங்குகளில் கிறித்து நெறிச் செய்தி

வேதநாயகர் தாம் சொல்ல விழைந்த கிறித்தவ நற்செய்தியைச் சொல்வதற்குச் செவ்விலக்கிய மரபுகளை மட்டுமின்றி ,கும்மி, சித்தர் பாடல் நடை, தாலாட்டு முதலிய நாட்டுப்புற இலக்கிய மரபுகளையும்நன்கு கையாண்டுள்ளார். மக்கள் கவிஞராக வாழ்ந்த அவர்தம் படைப்புகள் பலவற்றிலும் மக்கள் மொழியாம் பேச்சுமொழியைப் பயன்படுத்தவும் அவர் தயங்கவில்லை.

(இ). இசை மரபுகளில் கிறித்து நெறிச் செய்தி

இசைப் பேரறிஞர் தியாகய்யர் வாழ்ந்த மண்ணுக்கும் காலத்துக்கும் மிக நெருக்கமாகவே வாழ்ந்த வேதநாயகர் தமிழிசை நெறிகளிலும் எபிரெய பக்தி பாடல் மரபுகளிலும் கிறித்தவ பக்திப் பாடல்கள் பலவற்றைப் புனைந்து தமிழ்த் திருச்சபை வழிபாடுகளில் தம் பாடல்களை இன்றளவும் நின்று நிலைக்கச் செய்துள்ளார்.

(ஈ). தமிழ்க்கலை, பண்பாட்டு வடிவங்களில கிறித்துநெறிச்செய்தி

தாம்கூற முற்பட்ட கிறித்துநெறிச் செய்திகளைப் பல்வகை இலக்கிய வடிவங்களால் பகர்ந்தோதியது மட்டுமன்றி, தமிழ் மக்கள் போற்றிய கலை வடிவங்களான நாடகம், நடனப்

பாடல்கள், திருமணம் முதலிய குடும்ப நிகழ்ச்சிகளில் பாடப்படும் வாழ்த்துப்பாக்கள், அக்கால கிறித்தவர் பயன்படுத்திய சதுர்பிரசங்க முறை முதலிய பல்வேறு கலை, பண்பாட்டு வடிவங்களையும் தம் நோக்கத்துக்கேற்ப கையாளுவதில் அவர் வெற்றி பெற்றார்.

(உ). சமய இலக்கியங்களில் சமுதாயச் சீர்திருத்தக் கருத்துகள்

சமுதாயச் சீர்திருத்தக் கருத்துகளை முன்னெடுத்து வைப்போர் கடவுள் மறுப்பாளராகத்தான் இருப்பர் என்ற கருத்தினைப் பொய்ப்பிக்கும் வண்ணம், தமிழ்ச் சித்தர்கள் வழியில்- சமய இலக்கியங்கள் எனப்படத்தக்க இறையிலக்கியங்களிலேயே தீவிரமான சமுதாயச் சீர்திருத்தக் கருத்துகளை விதைத்தும் விரித்தும் காட்டிய பெருமையும் வேதநாயகருக்கு உரியது.

இதுகாறும் சுட்டிய கருத்துகளுக்குரிய அகச்சான்றுகளை வழங்கி, தஞ்சை வேதநாயக சாஸ்திரியார் தமிழிலக்கியத்திற்கும் பண்பாட்டிற்கும் வழங்கியுள்ள பங்களிப்பைத் தெளிவுபடுத்தி நிற்கிறது இக்கட்டுரை.

முனைவர் மோசஸ் மைக்கேல் பாரடே,

விரிவுரையாளர், தமிழ்த்துறை,

சென்னைக் கிறித்தவக் கல்லூரி,

சென்னை- 600 059.

தமிழிலக்கிய மரபும், சித்த மருத்துவ நூல்களும் - ஓர் ஆய்வு

தொன்மையான தமிழ்மொழியின் மரபு, இலக்கண இலக்கியங்களைப் பல நூற்றாண்டுகளாகச் சிற்சிறு மாறுதல் களுடன் ஆட்சி செய்து வருகின்றது. சித்த மருத்துவ நூற்களும், இம்மரபின் வழி அமைந்துள்ளன.

சங்க காலப் புலவர்களின் பெயர்களை, பிற்காலத்தில் சித்த மருத்துவர்கள் சூட்டிக்கொண்டுள்ளனர். இடைக்காடர், வான்மீகி, தேரையர், வள்ளுவர், மூலர் பெயரில் சித்த மருத்துவ நூல்கள் அமைந்துள்ளன.

சங்க இலக்கியங்களைப்போல சித்த மருத்துவ நூல்களும், தொகைநூற்களாகும். சான்றாக இல்லரைக்கோவை, 18 சித்தர் நாடிசாத்திரம், பெரிய ஞானக்கோவை என்பனவற்றை எடுத்துக்கூறலாம்.

மரு. ச.ரங்கராசன்,

சித்த மருத்துவ அலுவலர்,
அரசு ஆரம்ப சுகாதார நிலையம்,
மெலட்டூர்.

சமூக-பொருளாதார வளர்ச்சியில் அக்கசாலை

மனித சமுதாயத்தின் நாகரிக வளர்ச்சியில் அளவுகோலாகத் திகழ்வது கட்டடங்களும், கலைப்பொருட்களும், உற்பத்திக் கருவிகளுமாகும். இவற்றை உருவாக்கித் தரும் ஆக்கபூர்வமான தொழிலில் ஈடுபட்ட கலைஞர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் பஞ்ச கம்மாளர்கள் ஆவர். உலோகங்களையும், மரங்களையும், கற்களையும் தங்கள் கைவண்ணத்தால் சந்தைப்பொருளாக்கினர். இத்தகைய படைப்பாளிகளாகத் திகழ்ந்த இவர்கள், வணிகக் குழுவில் முக்கிய இடம் பெற்றிருந்தனர்.

சாதவாகன மன்னர்கள் காலத்தில் பிற வணிகர்களுடன் இவர்கள் செல்வாக்கு மிக்க வணிகக் குழுவினராகத் திகழ்ந்திருக்கின்றனர்.

சிலப்பதிகாரம் எழுந்த காலத்தில் பூம்புகாரிலும் பிற வணிகர்க்குழுவினருடன் பஞ்ச கம்மாளர்களும் குறிப்பிடத் தக்கவர்களாகக் காணப்படுகின்றனர்.

இவர்களில் தங்க வேலை செய்யும் பொன் தட்டார்கள் அக்கசாலையர் என்றும் இவர்கள் வாழ்ந்த தெரு அக்க சாலை என்றும் அழைக்கப்பட்டன.

இந்த அக்கசாலைகளில் தான் காசுகள் அச்சடிக்கப்பட்டன.

அக்கம் என்றால், பொன், காசு என்று பொருள்.

தமிழ்நாட்டில் பல இடங்களில் அக்கசாலை பற்றிக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இக்கல்வெட்டுகள் உள்ள ஊர்கள் அனைத்தும் வணிகர்கள் குடியிருப்புக்களாகத் திகழ்ந்த நகரங்களாகும்.

வணிகக் குழுக்கள் சமண பௌத்த மதங்களைத் தழுவி செல்வாக்குடன் திகழ்ந்தது போலவே பஞ்ச கம்மாளரும் அம் மதங்களைத்தழுவியிருந்தனர். பின்னர் அம்மதங்களின் வீழ்ச்சிக்குப்பின் சைவம் எழுச்சி பெற்ற போது இவர்களும் தீவிர சைவர்களாயினர். இவர்கள் வாழ்ந்த ஊர்களில் இவர்களுக்கென்று தனிநிர்வாக அமைப்பு இருந்தது.

இவர்கள் காசுகள் அச்சடித்தது அரசின் சார்பிலா அல்லது தங்கள் சொந்த செல்வாக்கிலா என்று பலர் ஆய்வு நடத்தியுள்ளனர்.

ஆனால் சரக்கு உற்பத்தியின் வளர்ச்சிப் போக்கில் தோன்றிய காசுகளும், சரக்கு மாற்றத்திற்கான தேவையின் பொருட்டு அக்கசாலையினரால் ஒரு சரக்காகவே அச்சிட்டு வெளியிடப்பட்டது என்று ஆய்கிறது இக்கட்டுரை.

முனைவர் ஆர். ரங்கராஜ்,
தமிழ்த்துறை, சிக்கய்யநாயக்கன் கல்லூரி,
ஈரோடு- 4.

புகைக்கொடிகள் பற்றிப் பழந்தமிழ் நூல்கள் கூறும் செய்திகள்- ஓர் ஆய்வு

பழந்தமிழ் நூல்கள், தமிழ்ப்பண்பாட்டை எடுத்துரைக்கும் கண்ணாடிகள் இங்குப் பொதிந்திருக்கும் செய்திகள் பல்வேறு துறைகளின் தமிழர் அறிவிற்குச் சான்றாக விளங்குகின்றன. தமிழ் மக்கள் இன்றைய அறிவியலாளருக்குத் துணையாகும் வகையில் பல அறிவியற் செய்திகளையும் தம்பாடல்களில் எடுத்துக்

கூறியுள்ளனர். குறிப்பாகச் சங்கப் பாடல்களில் இவ்வகை அறிவியற் செய்திகள், உவமைகளாகவும், எடுத்துக்காட்டுச் செய்திகளாகவும், அறிவியற்செய்திகளாகவும், கையாளப் பட்டுள்ளன. இக்கட்டுரையில் புகைக்கொடிகள் எனவும் தூமகேது, மைமீன் என்றும் அழைக்கப்படும் விண்ணின் விந்தை குறித்துப் பழந்தமிழ் நூல்கள் எவ்வாறு விளக்குகின்றன என்பது பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முனைவர் ரங்கராஜன் விஜயலட்சுமி,
முதுநிலை ஆராய்ச்சியாளர்,
பன்மொழித்துறை,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி,
சென்னை- *600 113.*

மகாகவி பாரதியின் இலக்கியக் கொள்கை

இலக்கியத்தின் நுவல்பொருளை, இலக்கியக்கொள்கை யினைக் கண்டறிவதற்கு அதனை நன்கு திறனாய்வு செய்ய வேண்டும். திறனாய்வின் பயனாகக் கிடைப்பது தான் இலக்கியக் கொள்கையாகும். மக்கள் இலக்கியம்- முற்போக்கு இலக்கியம் படைத்த மகாகவி பாரதியின் மனப்பாங்கினையும், இலக்கியக் கொள்கையினையும், நடுவுநிலையில் நின்று, திறனாய்ந்து கண்டுமொழிவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

இலக்கு+ இயம்= இலக்கியம், இலக்கு= நோக்கம், விளக்கம், கொள்கை, குறிக்கோள். இயம்= இயம்புவது, கூறுவது, ஒலிப்பது, வெளிப்படுத்துவது.படைப்போனின் குறிக்கோள், கொள்கை ஆகியவற்றைக் கூறுவது.

இது வாழ்வின் திறனாய்வு, மதிப்பீடு, படப்பிடிப்பு, வழிகாட்டி, கலங்கரை விளக்கம், சமுதாயத்தின் புலப்

பாடு, "LITERATURE IS THE EXPRESSION OF SOCIETY"- DE BONALD.

மக்கள் குலத்தின் மேன்மைதான் இலக்கியத்தின் இலட்சியம்.

மக்களைப் பற்றி -மக்களுக்காக எழுதப்படுவது மக்கள் இலக்கியம் - அதுவே முற்போக்கு இலக்கியம்- இது மக்களுக்குச் சொந்தமானது. சமுதாயத்தின் சொத்து. யதார்த்த வாழ்விலிருந்து தோற்றம் கொள்கிறது. மக்கள் வாழ்வை உள்ளது உள்ளவாறே பிரதிபலிப்பது. மக்கள் அபிலாஷைகளின் கலை வடிவம். மக்கள் முகம் தான் மக்கள் எழுத்தாளனின் முகம் பார்க்கும் கண்ணாடிகள் என்பர் வ.ரா.

சமுதாய நீதி, சமுதாய முன்னேற்றம் ஆகியவை முற்போக்கு இலக்கியத்தின் அடிப்படைகள்.

இது ஓர் சமூக அழகியல் நிகழ்வு. அறிவுறுத்துவதும் (INSTRUCT) இன்புறுத்துவதும் (DELIGHT) இதன் செயற்பாடுகள்.

''நமக்குத் தொழில் கவிதை, நாட்டுக்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல்'' என்று முழங்கிய முற்போக்காளனின் இலக்கியம் நாட்டு மக்கள் நலமுற்று வாழவும், நானிலத்தவர் மேனிலை எய்தவும் பயன்படுவது.

மக்கள் இலக்கியம் - முற்போக்கு இலக்கியம் படைத்த மாமேதை பாரதி தன் உள்ளத்தில் தோன்றிய சலனங்களை அவன் இலக்கியமாக்கியுள்ளான்.

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற பிரெஞ்சுப் புரட்சியின் கோட்பாடுகளே, இச்சமுதாயச் சிற்பியின் மாபெரும் இலட்சியம்.

தயிர் கடைந்து வெண்ணெய் எடுப்பதுபோல, இவன் தன் படைப்பிலிருந்து வாழ்க்கை உண்மைகளை , மக்களுக்காகத் திரட்டித்தருகிறான்.

17

அவன் தன் படைப்பிலே புதிய புதிய செய்தி, புதிய புதிய யோசனை, புதிய புதிய உண்மை, புதிய புதிய இன்பம் ஆகியவற்றைத் தெளிந்த தமிழில் தெளிவுற மொழிந்துள்ளான். இவனது சொல், பொருள், சுவை ஆகிய எல்லாமே புதியவை.

எல்லாம் மனிதனுக்காக -மனித குலத்தின் மேன்மைக்காக என்பதே இவன் பெருங்குறிக்கோள்.

கலியின் வலிதொலைக்கும் கிருதயுகத்தை- சத்ய யுகத்தை- கேடின்றி நிறுத்த விரதம் கொண்ட மாபெரும் முற்போக்காளன்- அவன் திறம் பாட வந்த மறவன்- புதிய அறம் பாட வந்த அறிஞன்- ஒப்பிலாத சமுதாயம் கண்ட உயர் தனிப்புலவன்.

''கவிதை எழுதுபவன் கவியன்று. கவிதையை வாழ்க்கையாக உடையவன், வாழ்க்கையைக் கவிதையாகச் செய்பவன் அவனே கவி'' என்ற அவனது பொன்மொழிக்கு அவனே பெருஞ்சான்று.

''நமது பாட்டு மின்னல் உடைத்தாகுக;
நமது வாக்கு மின்போல் அடித்திடுக''
என்று உரைத்த வசனகவிஞன் இவன்.

''கலை கலைக்காகவே'' என்ற கொள்கையை ஏற்காது, கலை மக்களுக்காகவே என்று கொள்கை முழக்கம் செய்தவன்.

இவ்வாய்வுக் கட்டுரையின் முற்பகுதி மக்கள் இலக்கியத்தின் தனிச்சிறப்புகள் பற்றியும், பிற்பகுதி மக்கள் கலைஞன் முற்போக்காளன் பாரதியின் கவிதைகளில் காணப்படும், மக்கள் இலக்கியக் கூறுகள், அவற்றால் புலப்படும் உளப்பாங்கு, இலக்கியக் கொள்கை ஆகியவை பற்றியும் விளக்கம் தருகிறது.

கு.அ.ராஜாராம்,
பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்,
அரசு விக்டோரியா கல்லூரி,
பாலக்காடு- 678 001,
கேரளமாநிலம்.

விளம்பரமும் குழந்தைகளும்

ஒரு காலத்தில் 'நல்ல பொருளுக்கு விளம்பரம் தேவை யில்லை' என்று கூறினோம். ஆனால் இன்றோ 'விளம்பரம் இல்லாப் பொருளுக்கு விற்பனை இல்லை' என்று சொல்கிறோம்.

தகவல் தொடர்புச் சாதனங்கள் வளர்ச்சியும், அறிவியல் வளர்ச்சியும் விளம்பரங்களில் இன்று எவ்வளவோ மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றன. விளம்பரங்கள் பொதுவாகப் பொருள், நிறுவனம் அல்லது பணி இவைகள் பற்றி அறிவிக்க வெளியிடப் படுகின்றன. விளம்பரங்களை அவை வெளியிடப்படும் நோக்கத்தின் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

1. இல்ல நுகர்பொருள் விளம்பரம் (Domestic consumer product advt)

2. தொழில்சார் பொருள் விளம்பரம் (Industrial product advt)

3. பணி பற்றிய விளம்பரம் (Service oriented advt)

விளம்பரங்களை வெளியிடச் சாதனத் தேர்வு மிகவும் முக்கியமானதாகும். சாதனத் தேர்வு பொருளின் தன்மை, பயனீட்டாளரின் இயல்பு, விளம்பர நோக்கம் இவைகளின் அடிப்படையில் அமைய வேண்டும்.

இவ்வாறு பல்வேறு காரணங்களுக்காக வெளியிடப்படும் விளம்பரங்கள், சமுதாயத்தில் பல நன்மைகளையும், தீமைகளையும் செய்து கொண்டு இருக்கின்றன. நன்மைகள் எனில் நாகரிக வளர்ச்சி, தொழில் நுட்பம், போட்டியின் காரணமாகத் தரமான பொருட்கள் போன்றவை கிடைக்க வழிவகை செய்கின்றன. தீமைகள் எனில் தேவையில்லாதப் பொருட்களை வாங்கவும், தேவையில்லாத வழிகளில் மக்களின் உணர்வுகளைக் கிளறி அவர்கள் பொருட்களை வாங்கவும் தூண்டுகின்றன.

விளம்பரங்கள் பொதுவாக அனைத்துத் தரப்பு மக்களையும் கவரக்கூடியன; முக்கியமாகவளரும் சிறார்களை அவை மிகவும் கவர்ந்து இழுக்கின்றன. சிறுவர்கள் மனநிலையில் ஒரு நல்ல பக்குவப்படுத்தப்பட்ட தன்மை உடையவர்கள் அல்ல. அப்படிப்பட்ட சூழலில் இவ்விளம்பரங்கள் அவர்களை எவ்வாறு கவர்ந்து இழுக்கின்றன. அதற்கான காரணங்கள் என்ன? போன்றவற்றை மனோதத்துவ ரீதியாக ஆராய்வதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

முனைவர் பெ.ராஜேந்திரன்,

மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை.

வேதியியல் கலைச் சொற்கள் ஓர் ஆய்வு (1875-1940)

வேதியியல் கலைச் சொற்களைப் பற்றி ஆய்வுக் குறிப்புகள் அதிகம் கிடைக்கவில்லை. முதன்முதலாகக் கலைச் சொற்கள் வெளிவந்தத் துறைகளாக மருத்துவத்தையும் வேதியியலையும் குறிப்பிடலாம். இலங்கையிலிருந்த மேனாட்டு அறிஞர் கிறீன் தாமே மொழிபெயர்த்தும் மேற் பார்வையாளராக இருந்தும் பலமொழிபெயர்ப்பு நூல்களையும் கலைச் சொற்தொகுதி களையும் வெளியிட்டுள்ளார். அறிவியல் கலைச் சொற்களின் முன்னோடிகளாக விளங்கும் கிறீனின் மொழிபெயர்ப்பு நூலான *'கெமிஸ்தம்' (1875)* என்ற நூலும், *'செய் முறைவேதி நூல்'(1949)* என்ற நூலும் இக்கட்டுரைக்குரிய ஆய்வுத் தரவுகளாகும்.

கிறீன், தமது மொழிபெயர்ப்பு நூலான 'கெமிஸ்தம்' என்னும் நூலில் ஆங்கிலக் கலைச் சொற்களுக்கு இணையாகத் தமிழ்ச் சொற்களைக் கூடுமானவரையில் உருவாக்கியும் மற்றவற்றைத் தமிழ் ஒலிப்பிற்கு ஏற்றாற்போல் சில விதி முறைகளை இட்டும் ஒலிபெயர்த்துள்ளார். இந்நூலில் கூறப்பட்டுள்ள தமிழ் ஆங்கிலச் சொற்கள் ஏறக்குறைய மூவாயிரத்து முந்நூறு ஆகும். ஆங்கில - தமிழ்ச் சொற்கள் ஏறக்குறைய ஆயிரத்தி ஐந்நூறு

ஆகும்.

இரண்டாவது நூலான செய் முறைவேதி நூல் இடைநிலை வகுப்பிற்குரிய பாடநூல். இந்நூலில் உள்ள பெரும்பாலான ஆங்கிலச் சொற்களுக்கு வடமொழி, தமிழ்ச் சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்நூலில் கலைச் சொற்களை அகர வரிசைப்படுத்திக் கூறும்இடத்தில் ஆங்கிலச் சொற்களை நடுவில் கொடுத்து, அதற்கு முன்னும் பின்னும் தமிழ்ச் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ள தமிழ்-ஆங்கில கலைச்சொற்கள் ஏறத்தாழ எழுநூற்றி இருபது ஆகும். ஆங்கில-தமிழ்ச் சொற்கள் ஐந்நூற்றி ஐம்பத்தாறு ஆகும்.

இவ்விரு நூல்களில் உள்ள சொற்களைப் பற்றிய விரிவான கருத்துக்களோடு, முன்னொட்டு, பின்னொட்டு, வட மொழிகலப்பு முதலியவற்றின் தன்மைகளும் ஆராயப் படுகின்றன. அரை நூற்றாண்டிற்கும் மேற்பட்ட, இடைவெளியில் தோன்றிய 'செய் முறை வேதிநூல்', 'கெமிஸ்தம்' என்ற நூலிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது என்பது பற்றியும் ஆய்வு செய்யப்படுகிறது.

சு.லதா,
ஆய்வாளர்,
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,
தரமணி,
சென்னை-600 113.

புலவர்புராணத்தில் உவமைகள்

திக்கெலாம் புகழும் திருநெல்வேலியில் 1839இல் பிறந்த வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் எட்டு வயதிலேயே கவிபாடும் வல்லமை பெற்று விளங்கியவர். பத்தொன்பதாம் நூற்றாண்டுப் புலவர்களில் எண்ணிக்கையிலும் வகைகளிலும் மிக அதிகமான பாடல்களைப் பாடிய பெருஞ்சிறப்புக்குரியவர்

அவர் எழுதிய 'புலவர் புராணம்' சாதி, சமய வேறுபாடு கருதாமல் தமிழகப் புலவர்கள் பலருடைய வரலாற்றைத் தெரிவிக்கும் அரிய நூலாக விளங்குகிறது. அப்புராணம் மூலமாக அவர் வெளிப்படுத்தும் அழகுகள் பலவற்றுள் உவமை முக்கிய இடம் பெறுகிறது. அவ்வுவமைகள் பலதிறத்தன.

புராண, இதிகாசக் கதைகள்

புராணங்களிலிருந்தும் இராமாயணம், பாரதம் போன்ற இதிகாசங்களிலிருந்தும் சம்பந்தர், காரைக்காலம்மையார் பற்றிய வரலாற்றுச் செய்திகளிலிருந்தும் பற்பல கருத்துகளை எடுத்தாளுகிறார் ஆசிரியர்.

கடைச்சங்கத்தோர் பெருமை குன்றியமைக்குச் செல்வச் செருக்குடைய தேவேந்திரன் சீர் அழிந்தமையையும் (966) அரிமர்த்தன பாண்டியன் சபை மணிவாசகரால் விளக்க முற்றமைக்கு இராகவன் சபை வசிட்டரால் விளக்க முற்றமையையும் (174) அண்ணன், தம்பியராய் வாழ்ந்த உடன்பிறந்தார் ஒற்றுமை வரலாற்றை விளக்கும்போது இர்ாமலக்குவரையும் (1179) திருமங்கையாழ்வாருடைய வெற்றிக்கு அருச்சுனன் வெற்றியையும் (367) கண்ணில்லாத கவிப்பாணன் குழந்தைகளுக்குத் திருதராட்டிரன் குழந்தைகள் போன்றின்மையையும் (2790) திருஞானசம்பந்தரும் அவரைச் சார்ந்தோரும் உய்ந்தமைக்குக் கல்லால மரத்தின் கீழ் சனகராதியர் உய்தி பெற்றமையையும் (322) ஔவையார் இளமை நிலை நீங்கி மூப்படைந்தமைக்குக் காரைக்காலம்மையார், சிவபெருமானை வேண்டிப்பேயுருப் பெற்றமையையும் (446) ஒப்பிட்டு விளக்குகிறார்.

மொழி, புலவர்

தமிழ் மொழிக்கு முப்பழச்சாறு, பாலொடு தேன், கழைதருசாறு, அமிழ்தம் பாகு, பால், தேன், அமுது ஆகியவற்றையும் புலவர்களுக்கு நான்முகனையும் மலை, யானை, ஆளி, புலி, அமுதம் ஆகியவற்றையும் அவர்கள் செய்யுளியற்றும் சிறப்புக்கு யானைக்கன்று பாம்பு உமிழும்

மாணிக்கம், சர்க்கரைப் பந்தலில் தேன்மழை ஆகியவற்றையும் உவமை கூறியுள்ளார். புலவர்களின் சிறப்பைக் கற்பனை நயம் தோன்ற விளக்கும் பகுதிகளும் நூலுள் காணப்படுகின்றன. சடகோபர் சிறு குழந்தையாய் இருந்தபோது ஆதிசேடன் உருவமாக விளங்கும் புளியமரப் பொந்தில் உறைந்து ஒளிர்ந்தமையை விளக்குமிடத்துப் பூரணசந்திரன் ஒன்று தென் திசை நோக்கி, பதுமாசன நிலையில் அமர்ந்து வலக்கையில் சின்முத்திரையுடன் கூடி விளங்கியது போன்று இருந்தது என்று இல்பொருளுவமையில் கூறுவது இதற்குச் சான்றாகும்.

ஒரு பாடல் பல உவமை

ஒரு பாடலில் பல உவமைகளைப் பயன்படுத்தி நூல் செய்யும் இலக்கிய அமைதிக்கேற்ப இவ்வாசிரியரும் சிற்சில இடங்களில் அம்முறையைப் பின்பற்றியுள்ளார். ஒரே பாடலிலேயே பல்வேறு உவமைகள் மூலம் பொதிய மலையின் சிறப்பை உணர்த்துகின்றார். அவ்வாறு உணர்த்தும்போது காமுகருள் இந்திராணி போன்றும், கடவுளரில் முருகனைப் போன்றும், கலைமேம்பாட்டில் தமிழ் போன்றும் கொடைச்சிறப்பில் சிவன் போன்றும் படைக்கருவிகளில் வேல் போன்றும் கொடிகளில் சேவற்கொடி போன்றும் முனிவர்களுள் அகத்தியன் போன்றும் மலைகளுக்குள்ளே பொதியமலை சிறந்து விளங்குகிறது என்று கூறுகின்றார்.

திருமங்கையாழ்வார் சருக்கத்தில் பல்வேறு கோட்பாடுடையவர்களைப் பற்றிக் கூறுமிடத்துப் பெண்ணின் நிலைகளான கன்னி, குமரி, தாய் ஆகியவற்றை அவர்களுக்கு உவமையாகக் காட்டியுள்ளார். வெவ்வேறு பொருள்களைத் தனித்தனியே ஒப்பிடாமல் ஒன்றன் பல்வேறு நிலைகளை ஒரே பாடலில் ஒப்பிட்டு உரைத்திருப்பது சிறப்பாக அமைகிறது.

ஆடவர், மகளிர் அழகுநலன்

தண்டபாணி சுவாமிகள் நூலின் பல்வேறு பகுதிகளிலும் ஆடவர், மகளிர் அழகுச் சிறப்பை விரிவாகவும் தெளிவாகவும் விளக்குகிறார். அவ்வாறு விளக்கும்போது அனைவரும் நன்கறிந்த பொருள்களையே உவமையாக்குகிறார். ஆண்களை

வருணிக்கும்போது உவமைகள் பலவற்றைப் பொருத்தமுறக் கையாளுகின்றார். ஆணின் வலிமைக்குக் குன்று, யானை ஆகியவற்றையும் அழகுக்கு முருகன், மன்மதன், அருச்சுனன் ஆகியோரையும் உவமையாக்கியுள்ளமையைக் காண்கிறோம்.

பழங்காலப் புலவர்களைப் போன்றே பெண்களின் கற்புக்கு அருந்ததியையும் அழகுக்குத் திருமகளையும் கூறும் ஆசிரியர்

''வடமீன்நேர் மனையவளும் வாய்க்கப் பெற்றிட்டு''(239)

''பழுதில் கற்புடை அருந்ததி அனையள்'' (1956)

என உரைக்கின்றார். இது, கண்ணகியின் அழகையும் பண்பையும் ஒருங்கேவிளக்க வந்த இளங்கோவடிகளின் கூற்றை நினைவூட்டுவதாக உள்ளது. சாயலுக்கு மயிலையும் கூந்தலுக்கு மேகம், ஆற்றுமணல் ஆகியவற்றையும் கண்களுக்கு மானின் கண்கள், வண்டு, மீன் ஆகியவற்றையும் மார்புக்குக் குவட்டையும் இடைக்கு மின்னலையும் மொழிக்குக் கிளி, குயில், பால், தேன் ஆகியவற்றையும் நடைக்கு அன்னத்தையும் உவமையாக்குகிறார்.

இயற்கை

இயற்கைப் பொருள்களான சூரியன், சந்திரன், வெயில், குன்று, அருவி, செக்கர்வானம்,இரவு, கடல்நீர், புழு ஆகியவற்றைத் தாம் கூறும் உவமைகளில் கையாளுவதைக் காண முடிகிறது. இவற்றில் சூரியன், சந்திரன்,வெயில் ஆகியவை ஒப்பிட்டுரைக்கப்படும் பொருள்களின் பேரொளிக்கு உவமையாகவும் மேகம், மழை, பனி ஆகியன அப்பொருள் களின் அளிக்கு உவமையாகவும் செக்கர்வான் நிறத்திற்கு உவமையாகவும் கூறப்பட்டுள்ளன. ஒளி மிகுதியைப் புலப் படுத்த ஞாயிறு, திங்கள் இணைவதையும் முன்னரே இருந்த ஒன்று புதிய தொன்றன் வரவால் கெடுவதற்குப் பரிதியின் ஒளி வர பனியும் இருளும் கெடுவதையும் உவமையாக்குகிறார்.

முனைவர் து.லலிதா,
இணைப்பேராசிரியர் - தலைவர்,
தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம்,
கோயம்பத்தூர்- 43.

அப்பர் சார்ந்தொழுகிய மதம் - ஆஜீவகம்

நம் நாட்டில் வைதீக மதத்தை எதிர்த்தெழுந்த மதங்களுள் குறிப்பிடத்தக்கவை ஜைனம், பௌத்தம் மற்றும் ஆஜீவகம் என்பனவாம். இந்திய வரலாற்றில் இம்மதங்கள் பற்றிய குறிப்புகள் ஒரு சேரக் கிடைக்கின்றன. அவ்வகையில் தமிழ் நாட்டில் ஜைனமும் பௌத்தமும் கி.மு. 4-ஆம் நூற்றாண்டி லிருந்தே மக்கள் வாழ்க்கையில் சிறப்பிடம் பெற்றிருந்தன என்பதற்குக் கல்வெட்டு, இலக்கியச் சான்றுகள் உள்ளன. அதே போல் ஆஜீவக மதக்கோட்பாடுகள் (அ) எண்ணங்கள் மக்கள் வாழ்வோடு கலந்துவிட்ட நிலையினையும் சங்கப்பாடல்கள் பலவற்றால் உணர்கிறோம்.

கி.பி. 2-3 ஆம் நூற்றாண்டு தொட ங்கித் தமிழக மக்களின் வாழ்வோடு இயைந்து, இணைந்து உயர் நிலையை அடைந்திருந்த ஜைன, பௌத்த மதங்கள் கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் அப்பர், சம்பந்தர் நிகழ்த்திய சமயப் புரட்சி என்ற கடும் புயலைச் சமாளிக்க வேண்டியிருந்தது. பக்தி இயக்கம் வேரூன்றி இருந்த இந்த நேரத்தில் மூன்றாவது மதமான ஆஜீவக மதத்தைப் பற்றியும் அவர்கள் பாடினரா? சாடினரா? என்பது ஆய்வுக்குரிய ஒன்று.

மகாவீரரின் சமகாலத்தவராய் அவருடன் ஞானம் தேடியலைந்த மக்காலி கோசாலர் என்பவரால் ஏற்படுத்தப்பட்ட மதம் ஆஜீவகம். மகாவீரரின் உடனிருந்த காரணத்தால் அவர்தம் கொள்கை கோட்பாடுகளையும் ஏற்றுக்கொண்டு நியதி என்ற கோட்பாட்டையும் சேர்த்துத் தனியொரு மதமாக வளர்த்தார்.

பகவதி சூத்திரத்தின்படி நியதி என்ற தத்துவக் கோட்பாடு தவிர ஆஜீவக சமண மதங்களுக்குள் வேறுபாடே காண இயலாது. இந்த அடிப்படையில் தான் சமணத்தின் ஒரு பிரிவே ஆஜீவகம் என்று அறிஞர் கூறி வந்துள்ளனர். ஆனால் இவ்விரண்டும் தனித்தனி மதங்களே என்ற கருத்து தற்போது

நிறுவப்பட்டுள்ளது.

இந்த வரலாற்றுப் பின்னணியில் தேவாரப் பாடல்களைக் கூர்ந்து நோக்கிய பொழுது சமண(ஜைன) சாக்கியர் (பௌத்தம்) என்பாரோடு குண்டர் என்ற 'சொல் விரவி வருவதைக் காண்கிறோம்.

இக்குண்டர்களைச் சமண சமயத்துள் ஒரு பிரிவினர் என எண்ணுதலை விடுத்துத் தனியொரு மதமாய் வளர்ந்து சமணம் போன்றே தோற்றந் தந்த ஆஜீவக மதத்தவராக இருக்கலாம் என்று நோக்கின் தெளிவு பிறக்கும்.

சேக்கிழாரின் சைவப் பெருநூலான பெரியபுராணத்தில் தான் அப்பர் பெருமான் சமண மதத்திலிருந்து சைவத்திற்கு மாறிய செய்தி அழகிய வரலாறாகச் சொல்லப்பட்டுள்ளது. இவ்வர லாற்றை முதனிலையாக்கி இன்றுவரை இக்கருத்தே நிலை நிறுத்தப்பட்டுவிட்டது. அப்பர் மதம் மாறினார் என்பது வரலாற் றுண்மை. ஆயின் எந்த மதத்திலிருந்து சைவத்திற்கு வந்தார் என்பதே ஆய்வுக்குரிய செய்தியாம்.

வெள்ளைவாரணர் அவர்களின் கருத்தையும், ஆஜீவக மதக் கோட்பாட்டுக் கொள்கைகளையும மனத்திற்கொண்டு அப்பர் தம் தேவாரப் பாடல்களை ஆய்வு செய்த பொழுது தேவாரப் பதிகங்களிற் கூறப்பட்ட குண்டர் என்ற பிரிவினர் ஆஜீவகராயிருக்கலாம் என்பதும் அப்பர் அக்குண்டர் சமயமான ஆஜீவக சமயத்தைச் சார்ந்தொழுகினர் என்பதும் பெறப்படும். இக்கருத்து அப்பர் தம் திருவாக்காலேயே தெளிவுறக் கூறப்பட்டுள்ளதும் நோக்கத்தக்கது.

எனவே அப்பர் பெருமான் ஆஜீவக சமயத்தைச் சார்ந்திருந்து பின்னர் சைவ சமயத்திற்குமாறினார் என்று கருதஇடமுள்ளது.

ஆர். வசந்தகல்யாணி,
கல்வெட்டாய்வாளர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை,
தரமணி,
சென்னை-600 113.

சக்ரராயன் பாடல் கல்வெட்டுக்கள்

தமிழக வரலாற்றை அறிய உதவும் ஆதாரங்களுள் சிறப்பிடம் பெறுபவை கல்வெட்டுக்கள். கல்வெட்டுக்கள் தமிழகத்தின் வரலாறு, அரசியல், பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றை விளக்குவதோடு மட்டுமல்லாமல், அவை சிறந்த இலக்கியங்களாகவும் திகழ்கின்றன. பாடல் வடிவில் அமைந்துள்ள பல கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன.

சைவர்களால் 'கோயில்' என்று சிறப்பித்துக் கூறப் படுவது சிதம்பரம். அதுபோல வைணவர்களால் கோயில் என்று அழைக்கப்படும் சிறப்புடையது திருவரங்கம். நூற்றியெட்டு வைணவத் தலங்களுள் ஒன்று.

'திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி
திரைக்கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக் கண்டுகொண்டென்
கண்ணிணைகள் என்று கொலோ களிக்கும் நாளே'

என்று ஆழ்வார்கள் காதலாகிக் கசிந்துருகிக் கண்ணீர் மல்கப் பாடிப் பரவிய தலம்.

இத் திருவரங்க நாதர் கோயிலில் முதலாம் ஆதித்த சோழன் காலமுதல் நாயக்கர்கள் காலம் வரையிலான கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. விசய நகர மன்னர்களான முதலாம் தேவராயர், இரண்டாம் தேவராயர் காலத்தில் (கி.பி.1406 முதல் 1446 வரை) திருவரங்கத் திருக்கோயில் ஸ்ரீ காரியங்களைக் கவனித்து வந்த உத்தம நம்பி என்பாரும் அவரது சகோதரர் சக்ரராயன் என்பாரும் இக்கோயிலில் பல திருப்பணிகளைச் செய்துள்ளனர். அத்திருப்பணிகளை, அக்கோயிலின் இரண்டாம் பிரகாரத்திலும் மூன்றாம் பிரகாரத்திலும் வட மொழியிலும், தமிழிலும் உள்ள பாடல் கல்வெட்டுக்கள் விளக்குகின்றன.

தமிழில் வெண்பா, ஆசிரிய விருத்தம்ஆகிய பாவகைகளைச்

சேர்ந்த பதின் மூன்று பாடல் கல்வெட்டுக்கள், திருவரங்கக் கோயிலில் சக்ரராயன் கருடாழ்வாரைப் பிரதிட்டை செய்தது, திருக்காவணப் பத்தி சமைத்தது, நரசிங்கப் பெருமாள் கோயில் கட்டியது, அன்னாதி எம்பெருமான் சன்னிதி முன்னாக மண்டபங்கட்டி மாருதியைத் தாபித்தது போன்ற செய்திகளை விளக்குகின்றன. சக்ரராயன் செய்த திருப்பணிகளையும், திருப்பணிகளை விளக்குகின்ற பாடல் கல்வெட்டுக்களையும் ஆராய்கின்றது இக்கட்டுரை.

ந.வள்ளி,
விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
இராமசாமி தமிழ்க்கல்லூரி,
காரைக்குடி-3.

கம்பனில் சட்ட நுணுக்கம்

சட்டமும் சட்ட நுணுக்கமும் - அரசியல் நிலை - சமகால இலக்கியம் - பெரிய புராணத்தில் காணும் வழக்கு - நீதி வழங்கும் முறை - நீதிக்கு அடிப்படையான சான்றுகள் - ஆட்சியில் ஆவணத்தில் அயலார் தம் காட்சியில் நீதி அடங்கியுள்ளமை - கம்பன் இம்மூன்று சான்றுகளையும் பதிவு செய்து இருத்தல் - வாலி வதைப்படலம் - ஆவணச் சான்று ஆட்சிச் சான்று - மிதிலைக் காட்சி - வில்லை வளைத்தல் - முறிதல் - கம்பனின் சட்ட நுணுக்கம்.

மந்தரை சூழ்ச்சிப்படலம் - கூனியும் கைகேயியும் உரையாடல் - இளையவன் யார் என சட்ட நுணுக்கத்துடன் விளக்குதல் - ஆட்சியில் முன்னரே இருந்த சான்று - கைகேயி பெற்ற இருவரம் - அவ்வரங்களைக் கொண்டு இராமனைக் கானகம் அனுப்புதல் - பதினான்கு ஆண்டுகள் - இளமைப் பருவம் - சராசரி வயது - ஆயுள் தண்டனை - கைகேயியின் வரம் கேட்ட தசரதன் - தடுமாற்றம் - கம்பன் அதைப் புலப்படுத்தும் அழகு -

இராமனிடம் கைகேயி முதலில் உணர்த்திய போது காணும் சட்ட நுணுக்கம் - வாலி இராமன் உரையாடல் - இராவணனுடைய மந்திரா லோசனை - சிறையிருந்த செல்வியின் பேச்சு - வீடணன் கும்பகர்ணன் உரையாடல் ஆகியவற்றிலும் கம்பனின் சட்ட நுணுக்கம்.

டாக்டர் சா.வளவன்,

பச்சையப்பன் கல்லூரி,

சென்னை- 30.

நல்லிசை நிறுத்தல்

நிர்ணயிக்கப்பட்ட இசைச்சுர ஒலிகளை அளவு கோலாகக்கொண்டு, தேவைப்படும் இசைக்கருவியில் இசைச்சுர ஒலியை எழுப்பிச் சரி செய்தல் 'சுருதி சேர்த்தல்' என்றும் 'நல்லிசை நிறுத்தல்' என்றும் அழைக்கப்படுகிறது. இந்திய இசை வகைகளில் இசைச்சுர ஒலி அதிர்வு எண் நிர்ணயம் செய்யப்படவில்லை என்றும், மேற்கத்திய நாடுகளிலிருந்து வந்த சுர நிர்ணயக் குழல் (Pitch Pipe) தான் இந்திய இசைக்கு அடிப்படைச் சுர ஒலி நிர்ணயத்தை ஏற்படுத்தியது என்றும், 'சங்கீத ரத்னாகரம்', 'கருணாமிர்த சாகரம்' ஆகிய இசை ஆய்வு நூல்கள் தெரிவிக்கின்றன.

இசை இயற்பியல் தொடர்பான விதிகளைப் பயன்படுத்தி, 'பஞ்ச மரபு' குறிப்பிடும் வங்கியத்தில் எழும் முதல் இசைச்சுர ஒலி 'குரல்' எனப்படும் 'ச' வின் அதிர்வு எண் மதிப்பு 265.5 என இவ்வாய்வில் பெறப்பட்டது. பல்வேறு குழப்பங்களுக்குப் பின் 1939-இல் இலண்டனில் கூடிய சர்வதேச இசை மாநாடு 'ச'வுக்கு நிர்ணயித்த அதிர்வு எண் மதிப்பு 264.

குழலிசையின் குரலை அடிப்படையாகக் கொண்டு யாழ் போன்ற நரம்பிசைக் கருவிகளிலும், தண்ணுமைபோன்ற முழவுக் கருவிகளிலும் எவ்வாறு நல்லிசை நிறுக்கப்பட்டன என்பதை இலக்கியச் சான்றுகள் மற்றும் இயற்பியல் விதிகள் துணையுடன் இவ்வாய்வு நிறுவுகிறது. குழலிசைக் குரலைக் கொண்டுநேரடியாக முழவுக் கருவிகளில் நல்லிசை நிறுக்கப்

பட்டதையும் இவ்வாய்வு விளக்குகிறது.

தமிழிசையில் குழலின் அடிப்படையில் இசைச்சுர ஒலி நிர்ணயிக்கப்பட்டு, நல்லிசை நிறுத்தல் நடைபெற்றது என்ற முடிவு, உலக இசை வகைகளில் தமிழிசையின் தனிப்பெருமையை நிலைநாட்டும் முடிவாகும்.

செ.அ. வீரபாண்டின்,

பேராசிரியர்,

இயற்பியல் துறை,

மாநிலக் கல்லூரி,

சென்னை- 600 005

பெண் விடுதலையும் சமயமும்

